# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 01 சனிக்கிழமை (15.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 050


# ஐ.நா. நிபுணர்கள் குழுவின் கால எல்லை மீண்டும் நீடிப்பு

## இன்றுடன் நிறைவடைய இருந்த நிலையில்

கொழும்பு,ஜனவரி15

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் கால எல்லை பெப்ரவரி மாதம் இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி தெரிவித்துள்ளார் என ஐக்கிய நாடுகள் சபையின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ- மூன் நியமித்த நிபுணர் குழுவின் காலமே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நெசர்கி செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபுணர் குழு கடந்த செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி செயற்பட ஆரம்பித்தது. நான்கு மாதங்களில் இதன் பதவிக்காலம் முடிவடைந்து ஜனவரி 15ஆம் திகதி ஐ.நா. செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டது.

பதவிக்காலம் இன்றுடன் நிறைவடையவிருந்த நிலையில் இந்த நிபுணர் குழுவின் காலத்தை ஐ.நா.செயலாளர் நாயகம் பெப்ரவரி மாத இறுதி

(23ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் வெள்ளம் வடிந்தபோதும் மாலைவேளை மீண்டும் பெய்தது மழை

கொழும்பு, ஜன. 15

கிழக்கு மாகாணத்தில் வெள்ள நீர்மட்டம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. அம்பாறை மாவட்டத்தில்நேற்று சிறிது மழை பெய்தது என்றும், ஒரு சில நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டு. மாவட்டத்தில் இன்று அவ்வப்போது சிறிது மழை பெய்த போதும் காலநிலை சீராக இருந்தது. வெள்ள நீர் மட்டம் குறைந்த போதிலும் மக்கள் இன்னும் வீடுகளுக்குத் திரும்பவில்லை என்று அங்குள்ள எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்கள் மீது சூடு; விசாரணைக்கு மஹிந்த உத்தரவு

கொழும்பு,ஜன.15

இந்திய மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடற்படைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இந்திய மீனவர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இந்தியா தனது ஆட்சேபத்தை இலங்கையிடம் தெரிவித்திருந்தது. (23ஆம் பக்கம் பார்க்க).




## நீர்வேலியில் அதிகாலை வீடு புகுந்த இராணுவ சார்ஜன்ட் சிக்கினார்

### அவருக்கு 7 நாள்கள் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.15

நீர்வேலி தெற்கில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று அதிகாலை வேளையில் அத்துமீறி நுழைந்ததாகக் கூறப்படும் இராணுவ கனிஷ்ட அதிகாரி ஒருவரை ஏழு தினங்கள் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

கோப்பாய் பொலிஸாரால் பிரஸ்தாப இராணுவ சார்ஜன்ட் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நீர்வேலி தெற்கு, முருகையன் கோயிலடியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று அதிகாலை 2 மணியளவில் நபர் ஒருவர் பெண் போல் வேடம் தரித்து நுழைந்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன உரும்பிராய் வாசியின் சடலமே கோப்பாயில் மீட்கப்பட்டது

### கொலைசெய்து கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.15

கோப்பாயில் பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் உரும்பிராய் யோகபுரத்தில் கடந்த முதலாம் திகதி காணாமற்போன ம.அமிர்தராஜன் (வயது 35) என்பவரது என்று அவரது தாயார் நேற்று அடையாளம் காட்டினார்.

அவர் அணிந்திருந்த சாறம், கைத்தொலைபேசி இலக்கம், முகத்தில் இருந்த காயம், உடைந்திருந்த முன் பற்கள் ஆகியவற்றைக் கொண்டே அது தனது மகனுடைய சடலம் என்பதை

(23ஆம் பக்கம் பார்க்க)

## வனவிலங்கு பூங்கா ஆயுதங்கள் அபகரிப்பு

கொழும்பு,ஜன.15

மின்னேரியா பொலிஸ் பிரிவில் கௌடுள்ள தேசிய வனவிலங்குப் பூங்காவின் 'ஆயுத அறை' நேற்றுமுன்தினம் இரவு உடைக்கப்பட்டு ஆயுதங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

பூங்காவின் ஆயுத அறைக்குள் நுழைந்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்து ரி56 ரக துப்பாக்கி ஒன்று, தானியங்கி துப்பாக்கி ஒன்று, மூன்று மகஸின்கள், 16 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். இதயைடுத்து அந்தப் பூங்கா தற்காலிகமாக நேற்று மூடப்பட்டது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் இருந்து உதவிப் பொருள்கள் 5 லொறிகளில் கிழக்கே விரைகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ். குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட உணவு வகைகள் மற்றும் அத்தியாவசிய உதவிப்பொருள்கள் நேற்று 5 லொறிகளில் கிழக்குப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் திரட்டிய பொருள்கள் 3 லொறிகளிலும் யாழ்.அரச செயலக ஏற்பாட்டில் சேகரிக்கப்பட்ட பொருள்கள் 2 லொறிகளிலும் நேற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசரமாக விநியோகிக்கக் கொண்டுசெல்லப்பட்டன.

கிழக்கில் பாதிக்கபட்ட மக்களுக்கு அவசர உதவியாக 16 லட்சம் ரூபா பெறுமதியான உதவிப் பொருள்கள் யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டில் அனுப்பப்பட்டுள்ளன.

யாழ்.செயலக ஊழியர்கள், பிரதேச செயலக ஊழியர்கள் தமது ஒரு நாள் வேதனமாக வழங்கிய 15 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவில் பொருள்கள் பெறப்பட்டு அவை இரண்டு லொறிகளில் அனுப்பப்பட்டுள்ளன.

தண்ணீர்போத்தல்கள், பால்மா வகைகள், உடனடி உணவுகள், தலையணைகள், பாய்கள் உட்பட அத்தியாவசிய பொருள்களே அனுப்பப்பட்டுள்ளன.

மின்னேரியாவுக்கு இந்தப் பொருள்களை எடுத்துச் சென்று அங்கிருந்து லொறிகள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பொருள்கள் எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

கிழக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ ஊழியர்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்குமாறு கோரி பிரதேச செயலகங்களுக்கு சுற்றுநிருபம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

(23ஆம் பக்கம் பார்க்க)


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021 2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933
021-5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021-5677222




CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை யாழ்ப்பாணம்
தை 14, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7032.60 ↑
மிலங்கா(MPI) 7301.09 ↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1706.82Mn
பங்குகளின் அளவு(No.) 128.14Mn
வியாபாரம்(No.) 16814
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
குட் கோப் 590.00
ஏசியா கபிற்றல் 70.50
புான்ஏசியா பவர் 4.70
பெ(கு)ஸ்ர் கபிரல் 26.00
லேக்கவுஸ் பிரிண்டேர்ஸ் 144.60
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஆசிரி சென்றல் 151.00
கொழும்பு பார்மசி 1750.00
ரீ சிமோல் கோல்டர் 53.70
இகியூரி வன் 53.70
லாபஸ் (X) 33.60
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# கூட்டமைப்பு-அரங்கம் இன்று கூட்டறிக்கை

கொழும்பு, ஜன. 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இடம்பெறும் நான்கு கட்சிகளுக்கும் இடையில் இன்று இடம்பெறும் இறுதிக் கட்டப் பேச்சுக்கள் வெற்றி பெறும்பட்சத்தில் கூட்டறிக்கை வெளியிடப்படும்.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் மேற்கண்ட தகவலை நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா), தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டணி ஆகியன ஓரணியாக உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்த பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

நாலாம் கட்டப் பேச்சுக்கள் நேற்றுப் பிற்பகல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் இடம்பெற்றது.

**கூட்டமைப்பு – அரங்கக் கட்சிகள் இடையிலான ஐந்தாவது பேச்சு வெற்றி பெற்றால் கூட்டறிக்கை இன்று வெளியாகும்.**

இப்பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுக்களில் இரு தரப்புக்கும் இடையில் பல்வேறு விடயங்களில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் இணக்கம் காணப்பட வேண்டிய சில விடயங்கள் குறித்து இறுதிக் கட்டப் பேச்சு இன்று இடம் பெறும் என்றும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பேச்சுக்கள் வெற்றி பெற்று இணக்கம் ஏற்பட்டால் இன்று சனிக்கிழமை - பொங்கல் நாளன்று- கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். ஏற்கனவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் விவகாரத்தில் அரங்கத்துடன் சேர்ந்து செல்ல முடியாது எனத் தெரிவித்து ஈ.பி.டி.பி. கட்சி அரங்கத்தில் இருந்து வெளியேறி இருந்தது. (ஒ-ஐ)

# எதிர்க்கட்சித் தலைவரின் வாழ்த்து

கொழும்பு, ஜன.15

தைப்பொங்கல் பெருநாள் இலங்கை உட்பட பரந்துபட்ட உலகு வாழ் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் சிறந்த நன்னாளாக அமையப் பிரார்த்திக்கின்றேன் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தாம் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்த் தின பஞ்சாங்கத்தின் பிரகாரம் வருடத்தின் முதல் மாதம் தை ஆகும். தை மாதத்தின் முதல் தினமான தைத்திருநாளில் தங்கள் செழிப்பிற்கு ஒத்தாசைகளை வழங்கிய படைப்பினங்கள் அனைத்துக்கும் செஞ்சோற்றுக்கடன் செலுத்தும் பண்டிகையாக இந்துக்கள் இதனைக் கொண்டாடி வருகின்றனர்.

இந்துக்கள் தமது இல்லங்களைச் செழிப்புறச் செய்து சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொடுத்த சூரிய பகவானுக்கு நன்றிக்கடன் செலுத்துவதும், தமது விவசாய அறுவடைகளுக்கு ஒத்தாசைகளைப் பெற்றுக்கொடுத்த கால்நடைகளைக் குளிப்பாட்டி துப்புரவு செய்து அவற்றுக்கும் நன்றி செலுத்துவ்தும் தைப்பொங்கல் தினத்தின் சிறப்பம்சமாகும். அதே போன்று எதிர்காலம் குறித்து புதிய எதிர்பார்ப்புகளையும் அவற்றை வெற்றிகொள்வது சம்பந்தமாகவும் இத்தினத்தில் திடசங்கற்பம் கொள்கின்றனர்.

செஞ்சோற்றுக் கடன் செலுத்தும் கடப்பாட்டுடன் செயற்படுவது மனித நேயம் கொண்ட குணாம்சங்களாகும். புரிந்துணர்வு, வேற்றுமையில் ஒற்றுமை, நன்றிக்கடன், அமைதி, சுபீட்சம் போன்ற படிப்பினைகளையே தைத்திருநாள் எங்களுக்குக் கற்றுத் தருகின்றது. செஞ்சோற்றுக்கடன் மறந்து எதேச்சாதிகாரம் கொண்ட மனப்பாங்குடன் செயற்படும் இக்காலகட்டத்தில் சாந்தி, சமாதானம், கை நழுவிச் செல்கின்ற சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன - என்றுள்ளது.

# தைத்திருநாளில் மக்களிடையே நல்லுறவு வலுப்பெறவேண்டும்

ஜனாதிபதியின் வாழ்த்து



கொழும்பு, ஜன.15

இனிய தைத்திருநாளில் மக்களிடையே நல்லுறவு வலுப்பெற்று பயம், சந்தேகம் இல்லாமல் நம்பிக்கை, புரிந்துணர்வு என்பன நீடித்து நிலைக்க வேண்டுமென்ற நல்மனங்களின் பிரார்த்தனையில் நானும் இணைந்து கொள்கின்றேன் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழ் இந்துக்களின் தனிப் பெரும் பாரம்பரியத்தையும் கலாசார விழுமியங்களையும் வெளிப்படுத்துகின்ற இன்றைய தைப் பொங்கல் உழவர்களின் திருநாள், இந்துக்களின் பெருநாள், சூரியபகவானுக்கு நன்றி தெரிவிக்கும் நன்னாள். சூரிய நமஸ்காரம் மூலம் தனிச்சிறப்புடன் உழவுத் தொழிலுக்கு நன்றி தெரிவிக்கும் உன்னத நாளாக தைப்பொங்கல் போற்றப்படுகின்றது. அபிவிருத்தி எனும் பொற்கதிரோனை நோக்கி வீறு நடை போடும் இலங்கைத் திருநாட்டில் வாழ்கின்ற இந்துக்கள் இன்று உலக இந்துக்களுடன் இணைந்து கொண்டாடும் உவகைத் திருநாள்.

தைத்திருநாளில் மக்களிடையே நல்லுறவு வலுப்பெற்று பயம், சந்தேகம் இல்லாமல் நம்பிக்கை, புரிந்துணர்வு என்பன நீடித்து நிலைக்கவேண்டும் என்ற நல்மனங்களின் பிரார்த்தனையில் நானும் இணைந்து கொள்கின்றேன்.

எமது நாட்டில் நிரந்தர சமாதானம், சகவாழ்வு, சமத்துவம், சுபீட்சம் ஆகியன நீடிக்க நாம் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படுவோமென இந்தத் தைப் பொங்கல் தினத்தில் அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன். 'தை பிறந்தால் வழி பிறக்கும்'

- இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிகழ்வுகள்

## இன்றைய பொங்கல் விழாக்கள்

கோப்பாய் இராஜ வீதியில் அமைந்துள்ள சிறுவர் மகிழ்வகம் என்ற உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்தில் முற்பகல் 10.30 மணிக்கு தைப்பொங்கல் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நிறுவன முகாமையாளர் ச.குகபாலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் போது நிறுவனத்தால் நடத்தப்பட்ட கணினி, நுண்கலைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (ற-14)

* * *

நவாலி ஸ்ரீநாக ராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவிலில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் கலாசாரப் பெருவிழா இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் எஸ். உதயபாலனும், கௌரவ விருந்தினராக காரை. எம்.பி. அருளானந்தனும் சைவப்புலவர் க.நித்தியதசிதரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இன்று காலை 9 மணிக்கு பொங்கல் விழாவும் பிற்பகல் ஒரு மணிக்கு தமிழரின் பாரம்பரிய வீரவிளையாட்டும் இடம்பெறும்.(ற-253,302)

* * *

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்தும் உழவர் விழா நண்பகல் 12 மணிக்கு அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும். கழகத் தலைவர் கே.துஸ்யந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழா விற்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவர் காரியாலயத்தின் அலுவலர் வி.மகா லிங்கமும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரனும் கலந்து கொள்வர். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ற-86)

* * *

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் நாராயணர் தேவஸ்தானத்தில் அதிகாலை 5 மணிக்கு தைப் பொங்கல் வழிபாடு நடைபெறும். காலை 9 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவும் முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவும் இடம் பெறும். (ற-160)

* * *

புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தின் பொங்கல் விழா காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடை பெறவுள்ளது.(ற)

* * *

இணுவில் அண்ணா சனசமூக நிலையம் நடத்தும் தைத் திருநாள் விழா முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினராக பேராசிரியர் நித்தி கனகரட்ணமும் சிறப்பு விருந்தினராக பசுபதி ஜீவரட்ணமும் கிராமிய வலுப்படுத்தும் இணையத்தின் இணைப்பாளர் வி.பத்திநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-302)

* * *

சித்தங்கேணி ஸ்ரீ நாக கன்னியம்மாள் ஆலயத்தில் நண்பகல் 12 மணிக்கு [illegible] பொங்கல் [illegible] விழாவும் தீ மிதிப்பும் இடம்பெறவுள்ளன. ஆலய பிரதம சித்த ஞான குரு இந்திரன் ஐயா சிறப்புக் கிரியைகளை நிகழ்த்துவார். அத்துடன் காரைச் செல்லப்பா குழுவினர், சுழிபுரம் அம்பாள் வில்லிசைக் குழுவினர் ஆகியோரின் பஜனைப் பாடல்களும் சமய வாழ்வியல் என்னும் தலைப்பில் சைவப் புலவர் க. நித்தியானந்தனும் கோயிலும் திருவருளும் என்னும் தலைப்பில் செ. கந்தசத்தியதாசன் ஆகியோரின் சொற்பொழிவும் இடம்பெறும். (ற-313)

* * *

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பொங்கல் விழா முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலையில் அமைந்துள்ள ஞான வைரவர் ஆலயத்தில் அதிபர் வீ. கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தப் பொங்கல் விழாவில் பாடசாலை மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இந்து இளைஞர் கழகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-15)

* * *

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கீழைத் தேயக் கல்விக் கல்லூரியின் பொங்கல் விழா காலையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வஸ்திரி அலன்ரின் பங்கேற்பார். (ஒ-ஐ)

### பொங்கல் விழா ரத்து

வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலயத்தில் திட்டமிட்டவாறு இன்று இடம்பெறவிருந்த தைப் பொங்கல் விழா நடைபெறாது என்று ஆலய நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார். ஆலயலத்தில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்படாததால் விழவை நடத்த முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன்
# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2011

15-01-2011 உதயன் பக்கம் 03

## இன்று இனிய தைப்பொங்கல் திருநாள்



தமிழர்களின் பிரதான பண்டிகைகளுள் இந்தத் தைப்பொங்கல் விழா மகிமையும் மங்களமும் நிறைந்த ஒரு பெருவிழாவாகும். தைமகளை வரவேற்றுபசரித்துப் பொங்கிப் படைத்து மகிழும் பொன்னான பெருநாள் இன்றாகும்.

நெல் விளைச்சலுக்குப் பெரிதும் துணைபுரிந்த சூரியபகவானுக்கு நன்றி செலுத்துகின்ற பாரம்பரிய நல்விழா இந்தத் தைப்பொங்கலேயாகும்.

அதிசிறந்த கிரணங்களை அள்ளிவீசி வயலிலே நெல் மணிகள் உற்பத்தியாகப் பொற்கிரணம் மூலம் சூரியக்கதிர்களைப் பரப்பி உதவுகின்ற ஆதித்தனான உதய சூரியனுக்கு இனிப்பான சுவை மிகுந்த பொங்கலைப் பொங்கிப் படைத்து வழிபாடியற்றுவது தமிழ் மக்களின் பாரம்பரிய மரபு. ஆதலால் இன்றைய தைப்பொங்கல் விழா நன்னாளிலே ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் சிறப்பான மங்கள கரமான நல்வாழ்வு வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றோம். இற்றை நாள்வரை பட்ட துன்ப துயரங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று இனியாவது இன்பம் மிகுந்த இனிய நல்வாழ்வு வாழ வேண்டு மென்னும் நம்பிக்கைக் கீற்றுக்கள் சூரியனுடைய பொற் கதிர் வீச்சின் மூலம் தமிழ் மக்கள் முகங் களிலே பிரதிபலிக்கின்றது.

ஆதலால் எல்லோரது வாழ்வும் சிறக்க வேண்டுமென்று நல்லைக் குருமணியை வணங்கி, தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனுடைய பாதபங்கஜம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து நல்லாசிகள் நல்கி மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஆதீன குரு முதல்வர்,*<br>
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**<br>
*இரண்டாவது குருமஹா சந்நிதானம்.*<br>
*நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ம், யாழ்ப்பாணம்.*

## இந்திர விழா எனப்படும் பொங்கல்



பொங்கல் பண்டிகையை ஒவ்வொரு ஆண்டும் மூன்று நாள்கள் மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இது சங்க காலம் முதல் நடைபெற்று வருகின்ற பண்டிகை. பண்டைய நூல்களில் இந்த பண்டிகையை 'இந்திரவிழா' என்று குறிப்பிட்டுள்ளார்கள். பொங்கல் பண்டிகையை முதல்நாள் விவசாயிகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்து, அதனால் கிடைத்த நெல்லையும், அரிசியையும் கொண்டு சர்க்கரைப் பொங்கல் செய்து, மழையைக் கொடுத்து பயிர்களை விளைவித்த சூரிய நாராயணனுக்குப் படைத்து வழிபடுகிறார்கள்.

இரண்டாம் நாள், வாழ்நாள் முழுவதும் உழைத்த பசுக்கள், காளைகள் மூலம் கிடைத்த அரிசியை பொங்கலாக்கி மாடுகளுக்குக் கொடுத்து வழிபடுவர். மூன்றாம் நாள் அதிகாலையில் சிற்றுயிர்களுக்கு எல்லாம் உணவளித்து பொங்கல் பண்டிகையை கொண்டாடும் உயர்ந்த வழக்கம் நம்மிடையே தொன்று தொட்டு இருந்து வருகிறது.

இப்படிப்பட்ட உயர்வான தைப்பொங்கலை அனைவரும் ஒன்றாகக் கொண்டாடி, இறைவன் அருள்பெற ஆசீர் வதிக்கிறோம்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

*''பிரதிஷ்டா சிரோமணி''*<br>
**சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர்,**<br>
*சிவாச்சார்ய பீடாதிபதி,*<br>
*அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.*

## அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் வாழ்த்து!

தைப்பொங்கல் தை மாத முதல் திகதியில் சூரியன் மகர இராசியில் பிரவேசிக்கின்ற காலத்தில் வருகின்றது. அதனால் இதனை மகரசங்கிராந்தி எனவும் அழைப்பார்கள். இத் திருநாளில் உலகினை வாழ வைக்கின்ற சூரியபகவானுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகப் புதுப்பானையில் பச்சையரிசிப் பொங்கலிட்டுப் படைத்து வழிபடுவார்கள். அத்தகைய நன்றியறிதலினை வெளிப்படுத்து கின்ற இந்நாளில் நாமும் நன்றி உணர்வோடு வாழ்ந்து மகிழ்வான வாழ்வினைப் பெறவேண்டும். எனவே தான் இத் தைப்பொங்கலோடு மனிதர் களது வாழ்விலும் மகிழ்ச்சி பொங்கிட கலைஞர்கள் சார்பாக, அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொன்.சுகந்தன் (தலைவர்),**<br>
*அகில இலங்கை கலை இலக்கிய சங்கம்.*

## எங்கும் பொங்குக மங்களம்



உத்தராயன புண்ணிய காலமாகிய இன்று (15.01.2011) சனிக்கிழமை காலை விநாயகப் பெருமானின் வழிபாட்டுடன் சூரிய பொங்கல் பூசைகள் நடைபெறுவது எங்கள் சமயாசார விதிமுறைக்கு அமைவாகத் தமிழ் மக்களாகிய சைவசமயிகள் வழிபாடு செய்வது மரபு வழியாகும். இத்தினம் உழவர்கள் தினமாகவும் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் நாம் பழையனவற்றை மறந்து புதிய நற்சிந்தனையுடன் நல்நோக்குடன் செயலாற்ற வேண்டும். இனிப்புப் பதார்த்தங்களை உண்டும் ஏனையோருக்கும் பகிர்ந்து இன்புற்று இனிய வாழ்வு தொடர வேண்டும் என உலகம் வலம் வரும் சூரியப் பெருமானை வணங்கி எல்லோரும் இன்புற்றிருக்க எனது பொங்கல் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் உதயன் மூலம் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

''சர்வே ஜநகஃ சுகினோ பவந்து<br>
சமஸ்த்த சன் மங்களானி பவந்து''

**சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள்.**<br>
*சர்வதேச இந்து மத*<br>
*குரு பீடாதிபதி.*

## உறவை வளர்க்கும் உன்னத நாள்



தைத்திருநாள் தமிழர்தம் வாழ்வின் பெருநாள். உழுதுண்டு வாழும் உழவர் பெருமக்களின் நன்றித் திருநாள் இயற்கை வடிவமாக விளங்கும் சூரியக் கடவுளை மதித்துப் போற்றும் தெய்வீகத் திருநாள். இத்திருநாளை பொங்கிப் படைத்து விருந்தோம்பல் செய்து உறவை வளர்க்கும் உன்னத நாளாக முன்னோர் பேணிக் காத்தனர். நற்காரியங்களைத் தொடங்குவது முதல் நன்றிக்குரிய பணிகளைச் செய்யும் நாளாகப் பயன்படுத்தினர். தமக்குக் கிடைத்த செல்வங்களை ஏழைகளுக்கும் இந்நாளில் பகிர்ந்து வழங்கி திருப்தி கொள்வர்.


பாடு பட்டு உழைக்கும் உழைப்பாளிகளின் உன்னத பணியை இந்நாளில் வாழ்த்துவர். ஆடல் பாடல்களால் தம் பண்பாட்டுக் கலை வடிவங்களை அரங்கேற்றி மகிழ்ந்தனர். உடல் உள ஆளுமையை நிரூபிக்கும் விளையாட்டுக்களை கிராமங்கள் தோறும் நடத்தினர். இத்திருநாளை வரவேற்றுக் காத்திருக்கும் பண்பாடு இன்றும் எம்மிடையே நிலவுகிறது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். மன வேதனைகளைக் கைவிட்டு தைத்திருநாளை அனைவரும் வரவேற்போம். குறிப்பாக எம் மண்ணில் அச்சம் விலகி மக்கள் ஆறுதலாக வாழ ஆதவனை மன்றாடுவோம். கண்கண்ட கடவுளாகிய கதிரவன் நீதியை நிலைநாட்ட வேண்டுவோம். தமிழ் மக்கள் ஒன்றுபட்ட உணர்வோடு தமக்குள் பகைமைகளை வளர்க்காது அன்பால் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கப் பிரார்த்திப்போம். அறவழியை நாடுவோம்; அறம் தோற்றதில்லை என்ற உண்மையை உணர்வோம். தைத்திருநாள் அனைவர்க்கும் நன்நாளாக அமைய வாழ்த்தி அமைகிறேன்.

*யாவர்க்குமாம் இன்னுரைதானே*

**ஆறு.திருமுருகன்,**<br>
*தலைவர்*<br>
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*<br>
*தெல்லிப்பழை.*

## பொங்கல் திருநாள் மகிழ்ச்சிகரமாக அமையட்டும்



தமிழ் மக்களின் பாரம்பரிய விழாக்களில் பொங்கல் திருநாள் முக்கியமான தொன்றாகும். சூரிய பகவானை வழிபட்டு நம் வாழ்வு சிறப்பானதாக அமையவேண்டும் என வேண்டுதல் செய்து பொங்கலிட்டு அனைவரும் மகிழ்சியுடன் இருக்கும் திருநாளாக பொங்கல்விழா அமைகின்றது.

நாமனைவரும் பொங்கல் திருநாளுடன் சாந்தி சமாதான சகோதரத்துவத்துடன் ஒரு தாய் மக்கள் போல் வாழ்வோமாக. அனைத்து அன்புள்ளங்களுக்கும் பொங்கல் திருநாள் மகிழ்ச்சிகரமாக அமைய பிரார்த்தித்து, நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

**[illegible] குருக்கள்,**<br>
*இந்துமத குரு பீடாதிபதி''*

## மக்கள் வேதனைத் தீரப் பிரார்த்திபுங்கள்

வையகத்தை வாழவைக்கும் தெய்வமாக விளங்கும் சூரிய பகவானைப் போற்றித் துதித்து வழிபாடு செய்யும் பாரம்பரிய மிக்க திருநாளாக தைப்பொங்கல் அமைகிறது. இந்து மக்களின் தனித்துவ மிக்க பண்டிகையாக முக்கியத்துவம் பெறும் இந்நாள் தைமாதப் பிறப்பாகவும் தமிழர் திருநாளாகவும் சிறப்புப் பெறுகிறது.

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்ற பாரம்பரிய சொற்றொடரின்படி பலவித எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கைகளையும் வைத்து தைத்திங்கள் வரவேற்கப்படுகிறது. அந்த வகையில் மக்களது வாழ்வில் துன்பங்கள் நீங்கி இன்பம் மலரும் வகையில் தைத்திங்கள் அமைய வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும்.

கடந்த பல வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்து வந்த வேதனைகளும், சோதனைகளும் வார்த்தைகளால் சொல்லமுடியாது. அத்தகைய துரதிர்ஷ்டவசமான நிலைமைகளின் தாக்கம் இன்னமும் முழுமையாக நீங்காத நிலையில் மழை வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களால் மேலும் அவர்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டு வரு வது உண்மையிலே வருத்தத்திற்குரியது.

இத்தகைய நிலைமையில் எங்கள் உடன் பிறப்புகளுக்கு உதவவேண்டியது எங்கள் கடமையாகும். கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக எங்கள் சகோதர சகோதரிகள் பலவித இன்னல்களை அனுபவித்து வந்த போது அகில இலங்கை இந்து மாமன்றம் இயன்றவரையிலான நிவாரண உதவிகளை வழங்கி வந்திருப்பதுடன் அவர்களுக்காக மாமன்றத்தின் சார்பாக தயங்காது குரல் கொடுத்தும் வந்திருக்கிறோம். இத்தகைய சமூகநலப் பணிகளை இனிவரும் காலங்களிலும் மாமன்றம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சூரியோதயம் காணும் கிழக்கில் இன்று வெள்ள அனர்த்தங்களினால் மக்கள் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நிவாரணங்களை வழங்கி உதவிக் கொண்டிருக்கிறோம். ஆலயங்களும், இந்து நிறுவனங்களும், இந்து மக்களும் தங்களால் இயன்ற வகையில் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு உதவ வேண்டும் எனவும் இந்தச் சந்தர்ப்பத்தில் அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

எங்கள் சகோர சகோதரிகளின் துயரங்கள் முற்றாகவே நீங்கி எந்தவிதமான அனர்த்தங்களாலும் பாதிக்கப்படாத வகையில் நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தைப் பொங்கல் நாளில் இறையருள் வேண்டி பிரார்த்தனையில் ஈடுபடுமாறு மாமன்றம் இந்து மக்களைக் கேட்டுக்கொள்கிறது. எங்களது மக்கள் வாழ்வில் என்றென்றும் மகிழ்ச்சி பொங்கும் வகையிலான ஒளிமயமான எதிர்காலம் உதயமாக வேண்டும் என்று அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானைப் பிரார்த் திக்கிறோம்.

*அகில இலங்கை இந்து மாமன்றம்.*

## சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் தைப்பொங்கல் வாழ்த்து



உழவர் திருநாளாம் தைத்திங்கள் முதல் நாளில் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. உயிர் வளர்க்க உதவும் உழவரைப் போற்றுவோம். இறையருள் வளர்ப்போம். மாணவரின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அதிக கவனம் எடுப்போம். இளையவர்களின் கடந்தகால கனவாக இருந்தவைகளைப் பொங்கிடும் மகிழ்வோடு நனவாக்க முயற்சிப்போம். அமைதியான பாதுகாப்பான மக்கள் நல்வாழ்வுக்கு இறை துணையை நாடுவோம். மதத் தலைவர்களுக்குக் கௌரவத்தைக் கொடுப்போம். பெற்றோருக்கு மதிப்பளிப்போம். உற்றார், உறவினரை அரவணைப்போம். இயலாதோருக்கு உதவுவோம். நம் கலை கலாசாரத்தைப் பேணுவோம். துன்புறும் மக்கள் வாழ்வுக்கு ஒளி கிடைக்க உதவத் தயாராவோம். வெள்ளத்தின் பாதிப்பால் பரிதவிக்கும் கிழக்கிலங்கை மக்களின் மறுவாழ்வின் உயர்வுக்கு உதவிக் கரம் நீட்டுவோம். ஒன்றுபட்டு வாழ்வோம். ஆனந்தமாய் வாழ்வோம். இனிய நன்னாளில் எல்லா நலன்களும் சித்திக்க எமது தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**சிவஸ்ரீ. சா.வாஸுதேவக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கி மகிழ்வது எவ்வாறு? வெதும்புகிறார் மாவை

கிழக்கில் எமது உறவுகள் வெள்ளதில் மூழ்கிக் கிடக்கும் நிலையில் எப்படி பொங்கி மகிழுமாறு வாழ்த்த முடியும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள பொங்கல் செய்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மைக் காலங்களில் 2004 மார்கழியில் ''சுனாமி'' எனும் பேரலையால் நாட்டு மக்கள் ஆயிரம் ஆயிரமாய் உயிரிழந்தனர். சொத்துடைமையெல்லாம் இழந்தனர். இன்னும் அதன் விளைவால் மீளாத மனிதர்களாய் வீழ்ந்து கிடக்கின்ற மக்கள் ஒரு பக்கம்.

2009 போரின் விளைவால் அரை லட்சத்துக்கும் அதிகமானோர் பலி கொள்ளப்பட்டனர். பல இலட்சம் மக்கள் அரை குறை உயிருடன் அங்கவீனர்களாய் வீழ்ந்து கிடக்கின்றனர். இப்பொழுதோ இருக்கின்ற உயிருடன் விதைத்த நெல்லை அறுவடை செய்யத்தான் இயற்கை விட்டதா? வெள்ளப் பேரழிவு- இதனால் உயிர் பிழைத்தோர் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். இத்தனையையும் தாங்கி நிற்க எம்மிடம் இதயம் வேண்டுமே! இந்நிலையில் தை பிறந்தால் வழி பிறக்குமென்று பொங்கி மகிழ, தைப் பொங்கல் விழாவெடுக்க மண்ணில்லா மனிதர்களாய், மனமில்லா உடல்களாய் பரிதவிக்கின்ற எம் மக்களிடம் பொங்கி மகிழுங்கள் என்று வாழ்த்தினால் அதன் அர்த் தம் என்னாகும் என்று ஏங்குகின்றேன்? இருந்தாலும் என் மனத்தை ஒரு கணம் திடமாக்கி விட்டு, கிடைக் கின்ற உழைப்பில் ஒரு படி பச்சரிசி யேனும் கரும்புடன் சர்க்கரையிட்டு, பொங்கிடும் தைப்பொங்கலை நன்றியுடன் படைத்துவிட்டு ''தை பிறந்தால் வழிபிறக்கும்'' என்றதொரு நம்பிக்கை யைக் கட்டியெழுப்பி வாழுவோம், ஆளுவோம் என்று இத யம் பொங்கிநிற்கின்றேன். பெரு வெள்ளத்தில் மூழ்கி அகதிகளாய்ப் போன எம் மக்களுக்கு ஏதேனும் உதவிடுங்கள். ஒரு பிடி உப்பேனும் ஒரு வாய்ப் பொங்கலேனும் கொடுத்திடுங்கள் உயிர் வாழும் உரிமைக்காக.

# ஒளியமயமான எதிர்காலம் அமைய தைத்திருநாள் வழி சமைக்கட்டும்

- அமைச்சர் டக்ளஸ் -

கடந்த கால யுத்தம் மற்றும் இயற்கை இடர்கள் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் அமைதியான சூழலில் சமமான அதிகாரங்களையும் உயர்ந்த வாழ்க்கை நிலைமையும் பெற்று வாழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அச்செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அழிவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஆக்கங்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற இவ்வேளையில் ஒரு சில சமூக சீர்கேடுகளும் அசம்பாவிதங்களும் எம்மை வேதனை கொள்ளச் செய்கின்றன.

அதேநேரம் கடந்தபால பாதிப்புகளின் வடுக்களில் இருந்து மீள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வந்த வேளையில் அண்மைக் கால இயற்கை இடர் காரணமாக மீண்டும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கும் கிழக்கு மாகாண உறவுகளின் துயரங்களை நானும் எனது கட்சியினரும் பகிர்ந்து கொள்வதுடன் அவர்களுக்கான உதவும் திட்டங்களையும் நாடளாவிய ஆரம்பித்துள்ளோம்.

இழப்புகளின் வேதனையிலும் இயற்கை பேரிடர்களின் சோதனையிலும் இருந்து எமது மக்கள் மீண்டு ஒளிமய மானதொரு எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவதற்கான வாய்ப்புகளை இத் தைத்திருநாள் நிச்சயம் உருவாக்கித் தரும் என்ற நம்பிக்கையுடன் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# இயற்கை இடரில் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பப் பிரார்த்திப்போம்

இயற்கை இடரின் சீற்றத்தின் மத்தியில் இம்முறை தைத்திரு நாள் பிறந்துள்ளது. வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் பெய்து வரும் அடை மழையினால் 11 லட்சம் மக்கள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் அடிப்படை வசதிகளின்றி இடம்பெயர்ந்து அல்லல்பட்டு வருகின்றனர். இவர்களின் துன்ப, துயரங்கள் தீரவேண்டும் என்று இன்றைய பொங்கல் திரு நாளில் நாம் அனைவரும் பிரார்த்திப்போம். என்று ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

அவரின் செய்தி வருமாறு:-

உழவர்கள், சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் தினமான பொங்கல் தினத்தில் இயற்கை இடரினால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வரும் நிலை காணப்படுகின்றது.

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் வெள்ளத்தினால் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளனர். இவர்களுக்கு உதவ வேண்டியது சகல தரப்பினரதும் கடமையாகும்.

எனவே பொங்கல் கொண்டாட்டங்களைத் தவிர்த்து இந்த மக்களுக்கு உதவுவதற்கு நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

அத்துடன் இந்த மக்களின் வாழ்க்கை சகஜ நிலைக்கு விரைவில் மாற வேண்டும் என இன்றைய பொங்கல் திருநாளில் நாம் அனைவரும் பிரார்த்திப்போம்.

**STR TRAVELS**
45A, Adiyapatham Road, Thirunelvely.
Araly East, Vaddukoddai. 0779257488

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளப் பெருமக்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.

யாழ்–கொழும்பு சேவை
021-4921921
011-4341415




சுற்றுலா மற்றும் திருமண விஷேட சேவைகளுக்கு வான், பஸ், கன்ரர் போன்ற வாகனங்களைப் பெற்றுக் கொள்ளலாம். Mob: 0777570150

**PERSONAL CLASS**
(Near DMI)
364, Stanly Road, Jaffna
BA - I JAFFNA
Revision & Paper
தமிழ் - K.நடராஜா (12 -1)
Pol.Sci.-[illegible](9-12)
Hin.Cul.-[illegible]
Drama - [illegible]
ENGLISH (9-12)
ஆரம்பம் நாளை 16.01.2011

## யாழ்ப்பாணம், மாநகரசபை

**பண்ணை மீன்சந்தை பகிரங்க ஏல விற்பனை**

பண்ணை மீன்சந்தையினை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் 2011.01.18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதி முன்றிலில் நடைபெறவுள்ளது.

(திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா)
மாநகர முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### பசுபதிப்பிள்ளை இராசம்மா

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக கொண்ட பசுபதிப்பிள்ளை இராசம்மா நேற்றுமுன்தினம் (13.01.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

0212225934,
கோண்டாவில்.

தகவல்:
கி.வைகுந்தநாதன்
(மருமகன்).

### அருணாசலம் சிவானந்தன்

(இளைப்பாறிய களஞ்சியக் காப்பாளர், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், தர்மகர்த்தா, உரும்பிராய் சிவன் ஆலயம்)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அருணாசலம் சிவானந்தன் நேற்று (14.01.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலாம்பிகையின் அன்புக் கணவரும் நந்தகுமாரின் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, அச்சுவேலி) அன்புத் தந்தையும் வாணியின் அன்பு மாமனாரும் சிவதர்சனின் (சென். ஜோன்ஸ் கல்லூரி) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் கிழக்கு இளங்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பிகை வாசம், சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
சி.நந்தகுமார் (மகன்).

### தம்பு நடேசு

அச்சுவேலி வடக்கு, மடத்தடியை பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, நெல்லியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடேசு நேற்று (14.01.2011) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் உமாபதி (மகேஸ்வரி) யின் பாசமிகு கணவரும் கணேசலிங்கம் (சுவிஸ்), அகலிகை, லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), அருந்ததி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேந்தினி (சுவிஸ்), சிவனேஸ்வரி (பிரான்ஸ்), தர்மலிங்கம் (சுன்னாகம்), ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
ச.தர்மலிங்கம்
(தர்மு-மருமகன்).

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள தொழில் ஸ்தாபனமொன்றுக்கு கீழ்க்காணும் துறைகளில் அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் தேவை.
1.மேசன்மார் 2.வர்ணம் பூசுபவர்
3. தச்சு வேலையாள்கள்.
4. பெண் வரவேற்பாளர்-இவர் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

விவரங்களுக்கு:- தொலைபேசி இல:- 0750415428, ராஜ் என்பவரைத் தொடர்பு கொள்ளவும்.

## உதவியாளர் தேவை

எமது வைத்தியசாலையில் பணிபுரிய முன் அனுபவம் உள்ள / இல்லாத உதவியாளர் தேவை. (பயிலுனரும் விண்ணப்பிக்கலாம்)

நேரில் வரவும்.(12.00-2.00 பி.ப)

லாவா வைத்தியசாலை
இல. 75, கோவில் வீதி,யாழ்ப்பாணம்.

## வெள்ள நிவாரண உதவியை விரைந்து வழங்கி உதவுங்கள்

எமது அமைப்பானது கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிப்படைந்த மக்களுக்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய எண்ணியுள்ளது. அதற்கு தங்களால் இயன்ற உதவிகளை புரியும் வண்ணம் அன்புடன் வேண்டு கின்றோம். குழந்தைகளுக்கான உடைகள் (கொலோன் முதலிய) படுக்கை விரிப்புக்கள், உலர் உணவுகள்-பொரிமா, பால்மா வகைகள், குடிதண்ணீர் முதலியவற்றினை எங்கள் பிரதேச தொடர்பாளர்கள் மூலம் 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை நண்பகலுக்கு முன்னதாக தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம்.

யாழ். தலைமைச் செயலகம், பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, நல்லூர் -பா.காந்தன் சர்மா-சட்டநாதர் கோயிலடி, விக்னேஸ்வரக் குருக்கள்- கொக்குவில், வலி.மேற்கு, வலி.தென்மேற்கு- ச.வாசுதேவக் குருக்கள் - சித்தன்கேணி, காரைநகர் - கு.சரவணபவானந்தசர்மா, வலி.தெற்கு - வடக்கு - வ.உமாசுதக்குருக்கள்- சுன்னாகம், வலி.கிழக்கு ப.சண்முகராஜக் குருக்கள் - கோப்பாய், வடமராட்சி- ரா.சபாநாதக்குருக்கள்- அல்லையம்பதி, தென்மராட்சி- இ.குகதாசேஸ்வரசர்மா- சங்கத்தானை, தீவகம்- வா.கைலாசராஜக் குருக்கள்- நயினை, ம.பிரபாகரக் குருக்கள்- வேலணை, வவுனியா- ஸ்ரீகாந்தக்குருக்கள் (மகோற்சவ குரு) கந்தசாமி கோயில் வவுனியா.

சிவஸ்ரீ. ச.ஸ்ரீகாந்தக்குருக்கள்
செயலாளர்,
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், ஆனைப்பந்தி

T.P:0215101110

## ஐக்கியா பாம் சென்ரர்

IKEA FARM CENTER

தரமான இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்து பெற்றுக்கொள்ள லாம்.
புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது - 420/=
கல்பேட் சுத்தம் செய்யப்பட்டது - 550/=

தொடர்புகளுக்கு:- 0729827024

முகவரி-ஐக்கியா பாம் சென்ரர்
இல. 816, கண்டி வீதி (A9 வீதி)
அரியாலை,யாழ்ப்பாணம்.

## தைப்பொங்கல் வாழ்த்துகள்



இயக்குநர்,
இணைப்பாளர்,
உதவிஇணைப்பாளர்,
விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்

JAFFNA TECHNICAL INSTITUTE
46, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், 0215670345

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு, ஊர் எல்லைத் தெருவில் டச்சுவீதிக்கு சமீபமாக 5 பரப்பு, 11 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு

தொடர்பு:
0776185235,0771011883

## வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில், துரையப்பா விளையாட்டு அரங்கு, நீதிமன்றம் ஆகியவற்றுக்கு அண்மையில் பாதுகாப்பான சூழ [illegible] ஸ்ரோர், லொட்ஜ் ஆகியவற்றுக்கு உகந்தது.

தொ.பே: 0772912244

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

**COLOMBO ESSENCE HOUSE**





Dealers in: All Kinds of Essence Liquids Powder Colour, Scent Etc.

No.123, Grand Bazaar,
(Power House Road) Jaffna.
Phone: 021 2228463

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஆடம்பரம் வேண்டாம் அடக்கமாக கொண்டாடுவோம்

பொங்கல் பெருவிழா தமிழ்கூறும் நல்லுலகம் எங்கினும் இன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். அவ்வாறு கொண்டாடுவது மரபு. அதுவே தமிழருக்குரிய சிறப்புமாகும்.

காடு வெட்டி, கழனி திருத்தி, பயிர் செய்து பலன் கண்ட உழவன் தன் உழவுக்கும், உழைப்புக்கும் அதன் மூலம் கிடைத்திட்ட பலாபலன் களுக்குமாக அதற்கு கருணை செய்த இறைவனுக்கும், இயற்கைக் கும் நன்றிசெலுத்தும் நன்னாள் இந்த தைப்பொங்கல் திருநாள். தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் இந்த நாளை மிகப் புனிதமாகவும் பொலி வோடும் கொண்டாடுவார்கள்.

விடியற் பொழுதிலேயே குளித்து முழுகி புத்தாடை புனைந்து, வீட்டின் முகப்பிலே கோலமிட்டு அதன் நடுவில் அடுப்பு வைத்து புதுப் பானையில் பொங்கி இயற்கையின் மூலசக்தியான ஆதவனுக்குப் படைத்து மகிழாத தமிழ்க் குடும்பமே இருக்கமுடியாது. அந்த அள வுக்கு இந்தப் பண்பாடு தமிழ் மக்களிடம் ஊறிப்போயுள்ளது.

அம்மாதிரியான கொண்டாட்டங்களை எல்லாம் இலங்கைத் தமி ழர்கள் கடந்த பல் ஆண்டுகாலமாகவே தம் மரபு மறந்துபோகா வண் ணம் சிறிய அளவிலும் சிறார்களைத் தேற்றிக்கொள்ளும் முறையி லுமே நடத்திவருகிறார்கள். எங்கோ ஒருவர் அல்லது சிலர் வசதியும் வாய்ப்பும் இருக்கும் காரணத்தினால் பெரும் எடுப்பில் கொண்டாடு வதுண்டு. கொண்டாடினாலும் அவர்களின் அடிமனங்களில் ஓர் அழுத் தம், இந்த நாட்டில் தமிழ் இனத்துக்கு ஏற்பட்டுவிட்ட துரதிஷ்ட சூழ் நிலைகளின் வலி - இருக்காமல் போகாது.

ஆம், கடந்த, பல தசாப்தங்களாக இந்த மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவருவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. ஆட்சிக்குவந்த அரசுகள் எல்லாமே பேரினத்தின் ஆதிக்கத்துக்குள்ளா னவையாகவே இருந்துள்ளன. அதனால் தமிழரின் கோரிக்கைகள் பெரும்பாலும் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

இவைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தமிழர் தரப்பு இயக்கங் களும் முறையாக ஆட்சியாளர்களுடன் பேச்சுக்களில் இறங்காமலும் தமக்குள் போட்டாபோட்டிகளை உருவாக்கிக் கொண்டு ஒன்றை யொன்று விழுங்கும் நிலைக்குப் போய்விட்டன. பல இயக்கங்களை முறியடித்துவிட்டு தனி ஆதிக்கத்தை மேற்கொண்ட இயக்கமும் போரில் முழுமூச்சாக கவனம் செலுத்தியதேயன்றி மக்களின் கஷ்ட நஷ்டங்களைப் புறம்தள்ளிவிட்டது. அதன் விளைவினை இன்று பார்க்கின்றோம்.

மக்கள் சொத்துக்களை இழந்தும் சொந்தங்களை இழந்தும், நிற் கிறார்கள். இந்த முப்பது வருடகால போரில் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படாத மக்கள் - குடும்பம் - இருக்கும் என்று சொல்லமுடி யாது. இடம் பெயர்வுகள், புலம் பெயர்வுகள், நோய்க்கொடுமைகள் என்று மக்கள் படாத பாடுகளைப்பட்டுவிட்டார்கள். போதாக் கொடு மைக்கு தடுப்புமுகாம் வாழ்க்கை, தறப்பாள் வாழ்க்கை - இப்பொழுது இவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் மழை வெள்ளம் அப்பப்பா! - மனிதன் தனக்குத்தானே விளைவித்துக்கொண்ட கொடு மைகள் அனந்தம். அவைகளுக்குமேலே இயற்கையின் கொடுமை இப்பொழுது.

வழக்கத்துக்குமாறாக இம்முறை பருவகால மழைவெள்ளம் மக்களை பெரும்பாடுபடுத்தியுள்ளது. வடக்கின் சில பகுதிகள் பெரும் தாக்கத் துக்குள்ளாகாமல் போனாலும் நாட்டின் ஏனைய எல்லா பகுதிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் நெஞ்சை துணுக்குற வைப்பவையாக உள்ளன.

கொடிய போரின் விளைவுகளை எதிர்கொண்டு ஓரளவு நிம்மதியை அனுபவிக்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் மக்களை இயற்கைக் கொடுமை வேறு அல்லோலகல் லோலப்படுத்தியுள்ளது.

மரங்களின் கொப்புகளில் ஏறியும் வீடுகளின் கூரைகளில் ஏறியும் வெள்ளத்திலிருந்து மக்கள் பலர் தப்பியிருக்கிறார்கள். இவர்களில் வயதானவர்கள், சிறுவர்கள், நோயாளிகள் எத்தனை பாடுபட்டிருப்பார் கள் என்று சொல்லவும் வேண்டுமா?

ஹபரணை என்ற இடத்தில் யானையொன்றே வெள்ளத்தின் கொடுமை காரணமாக 15 அடி உயரமான மரத்தில் சிக்கியிருக்கிற தென்றால் சாதாரண மக்களின் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று விளங்கிக்கொள்ளலாம். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் துரிதகதியில் அவசரமாக மேற்கொள்ளப்படுவது அவசியமாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த சீரற்ற கால நிலை மேலும் சில நாள் களுக்கு நீடிக்கலாம் என்று வளிமண்டல ஆய்வாளர்கள் அறிவித் துள்ளனர். எனவே வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்கள் தொடர்ந் தும் இக்கட்டுக்களை எதிர்கொள்ளவே செய்வார்கள்.

இந்த நிலைமை காரணமாக அடுத்துவரும் சில மாதங்களில் கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் அதனை எதிர்கொள்ள ஆயத்தமாய் இருக்கும்படியும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களையும் அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்று செய்திகள் கூறுகின்றன.

எந்த வகையில் பார்த்தாலும் தைத் திருநாள் பிறக்கின்ற இந்த நாளில் எதிர்காலம் பிரகாசமாக தெரிவதாக இல்லை. இருந்தாலும் மழை பெய்தால் ஓயத்தான் செய்யும், வெள்ளம் பெருகினால் வடியத்தான் செய்யும் - எனவே துன்பங்கள் யாவும் படிப்படியாகக் குறையும். கிழக் கில் மழை ஓய்ந்திருப்பதாக செய்திவந்துள்ளமையால் அம் மக்களுக் கும் விடிவும் நிம்மதியும் விரைவில் வந்துசேரும் என்றே நம்புவோம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது அனுபவ மொழியாகும். அந்த நம்பிக்கையுடனும் பிரார்த்தனையுடனும் இன்றைய பொங்கல் திருநாளை பெரிய எடுப்பின்றி அடக்கத்துடன் கொண்டாடுவோம்.

# 40 லட்சம் தென்னைகளை நாடு முழுவதும் நடத்திட்டம்

தென்மராட்சி, ஜன.15

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க நாடு முழுவதும் 40 இலட்சம் தென்னம் கன்று கள் நடப்படவுள்ளன. அதற்கென 2 ஆயிரத்து 280 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள் ளது. அத்துடன் தென்னை மரங்களுக்கு இடப்படும் உரவகைகள் மானிய விலையில் தென்னம் செய்கையாளர்களுக்கு வழங்கப் படவுள்ளன.

தற்போது 5 ஆயிரம் ரூபாவுக்கு விற் பனை செய்யப்படும் 50 கிலோ கொண்ட தென்னை உரப் பை ஒன்று ஆயிரம் ரூபா மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. உர வகைகளைப் பெறவுள்ள தெங்கு செய்கை யாளர்கள் தத்தமது பிரிவு சமுர்த்தி அபி விருத்தி அலுவலர்கள், கிராம அலுவலர் களிடம் விவரங்களைப் பெற்றுக்கொள்ள வும். கடந்த வாரம் கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கமநல சேவைகள் அமைச்சினால் ஏற் பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

தென்னை அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார தலைமையில் நடை பெற்ற இக் கூட்டத்தில் கமநல சேவைகள் ஆணையாளர்கள், உதவித் துணையாளர் கள், சமுர்த்தி முகாமையாளர்கள், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தெங்குச் செய்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அண்மையில் நாட்டில் தேங் காய்க்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்தியாவில் இருந்து அதனை இறக்குமதி செய்யவும் ஆலோசிக்கப்பட்டது. (உ-207)

## கிழக்கில் நோய்த் தொற்று அபாயம்

கொழும்பு, ஜன.15

கிழக்கு மாகாணத்தில் வெள்ளம் வடிந்தோடாத நிலையில் நுளம்புப் பெருக் கமும் ஏனைய நோய்க்கிரு மிகளும் பெருக்கமடைய லாம் என அஞ்சுவதால் பொதுமக்கள் அவதானத்து டன் இருக்க வேண்டும் என கிழக்கு மாகாண சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கடந்த இரு வாரகாலமாக பெய்த அடைமழை காரணமாகப் பெரும்பாலான பகுதிகள் வெள்ளக் காடாகவே காணப் படுகின்றன. நேற்று முன் தினம் ஓரளவு மழை தணிந் திருந்ததனால் வெள்ளம் வடிய ஆரம்பித்த போதிலும் அதிகமான இடங்களிலுள்ள நீர் வடிந்தோட முடியாத நிலை காணப்படுகின்றது.

வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பிரதேசங்களிலுள்ள மலசலகூடங்கள் நிரம்பிய நிலையில் காணப்படுவதால் மக்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் பலவித மான கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையி னால் வழங்கப்படும் நீரினை பருகுவதோடு அதனையும் கொதித்து ஆற வைத்துப் பருகுமாறும், ஏதாவது தொற்று நோய்க்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலையில் வைத் தியரின் ஆலோசனைகளைப் பெறுமாறும் கிழக்கு சுகா தார அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (சி)

## வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு லிபியா நிதி உதவி

கொழும்பு, ஜன. 15

வடக்கு, கிழக்கு அபிவிருத்திப் பணிக ளுக்காக லிபிய அரசு 50 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கத் தீர்மானித்துள்ளது.

வடக்கு, கிழக்கு பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்தல், தொடர்பாடல் மற் றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றை அபிவி ருத்தி செய்வதற்காக இந்த நிதி உதவி பயன்படுத்தப்படவுள்ளது.

குறித்த திட்டங்களை முன்னெடுப்பதற் காக இரு நாடுகளுக்கும் இடையில் விரை வில் மூன்று புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது எனத் தெரிய வருகிறது. (சி)

## அதிபர் தாக்கி மாணவன் காயம்

வலி.வடக்கு, ஜன.15

மாணவனைத் தாக்கிக் காயப்படுத்தி னார் என்று அதிபர் ஒருவருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெற்றோரால் முறையிடப்பட்டுள்ளது. வசாவிளான் பாடசாலை ஒன்றில் தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவனே தாக்கப் பட்டு காயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

அதிபர் தாக்கியதில் மாணவனுக்குக் காதில் காயம் ஏற்பட்டது என்று பெற்றோர் தெரிவித்தனர். தெல்லிப்பழை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டான். இந்த முறைப்பாடு தொடர்பாக சுன் னாகம் பொலிஸாரும் விசாரணை செய் கின்றனர். (ஒ-86)

## அஞ்சல் மூலம் வாக்களிக்க கால நீடிப்பு

கொழும்பு, ஜன. 15

நடைபெறவுள்ள உள் ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பிலான அஞ்சல் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள் ளது.

ஏற்கனவே அஞ்சல்மூல வாக்களிப்பு விண்ணப்பங் களைப் பெற வழங்கப்பட் டிருந்த கால அவகாசம் இன்றுடன் நிறைவடையும் நிலையிலேயே இந்த கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அஞ்சல் மூலம் வாக் களிப்பதனை மேற்கொள் வதற்கு தகுதி உடையவர் கள், தமது விண்ணப்பங் களை தாமதிக்காது விண் ணப்பங்களைச் சமர்ப்பிக் குமாறு தேர்தல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை, ராஜகி ரியவில் உள்ள தேர்தல்கள் தெரிவத்தாட்சி அதிகாரி களிடம் ஒப்படைக்க வேண் டும்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நிர்வா கத்துக்கு உட்பட்ட விண் ணப்பதாரிகள், யாழ்ப்பாண தேர்தல் தெரிவத்தாட்சி அதி காரிகளிடம் தமது விண் ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட நிர்வாகத்துக்கு உட்பட்ட வாக்காளர்கள், வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரியி டம் தமது அஞ்சல் வாக் களிப்பு விண்ணப்பங்களை வழங்குமாறு கோரப்பட் டுள்ளது.

ஏனைய அனைத்து மாவட் டங்களின் அஞ்சல் வாக்கா ளர்களும், தமது விண்ணப் பங்களை அந்தந்த மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் எனத் தேர்தல் கள் திணைக்களம் தெரிவித் துள்ளது. மற்றொரு கால நீடிப்பு வழங்கப்படாது என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடிகுண்டு குளஅபிவிருத்திக்கு உதவ யுனிசெவ் முன் வருகை

யாழ்ப்பாணம், ஜன15

நவாலி - கட்டுடை இடி குண்டுக் குளம் திட்ட அபி விருத்தி தொடர்பாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் முன்வைத்த முன் மொழிவை யுனிசெவ் நிறுவ னம் இந்தாண்டுக்கான வேலைத் திட்டத்தில் சேர்த்து அபிவி ருத்தி செய்ய முன்வந்துள்ளது.

இதேவேளை கடந்த 200 வருடங்கள் பழமை வாய்ந்த அபிவிருத்தித் திட்டத்துக்கே யுனிசெவ் நிறுவனம் முன்னு ரிமை கொடுத்ததுடன் அதற் கான மதிப்பீட்டை வழங்கு மாறு அந்த நிறுவனம் யாழ். அரச அதிபரைக் கோரியுள்ளது.

இத்னையடுத்து -யாழ்.செய லக மாவட்ட திட்டமிடல் பிர திப் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் யாழ். நீர்ப் பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் க.கருணாநிதி யிடம் இருந்து கட்டுடை நவா லிக் குளத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டை வழங்குமாறு கோரி யுள்ளார்.

இதேவேளை - யாழ்.நீர்ப் பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் க.கருணா நிதி 2005 ஆம் ஆண்டில் மானிப்பாய் பிரதேச சபையு டன் இணைந்த வகையில் கட்டுடை - நவாலி இடி குண்டுத்திட்டம் தொடர்பான ஆய்வை மேற்கொண்டிருந் தார்.

வலி. தென்மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட் டத்தில் யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் கட்டுடை- நவாலி இடி குண்டு அபிவிருத் திக்கு 14 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கித்தருமாறு கோரியிருந் தமை இங்கு குறிப்பிடத்தக்கது (201-302)

# நவாலி அட்டகிரி வித்தி. விரைவில் தரமுயரும்

யாழ்ப்பாணம் ஜன 15

நவாலி அட்டகிரி சைவ வித் தியாசாலை விரைவில் தரம் உயர்த்தப்படவுள்ளது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் இதற்கான நடவடிக்கையை மேற் கொண்டுள்ளார்.

அரை நூற்றாண்டுக்கு மேலாக பல கல்விமான்களை உருவாக் கிய நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை தரம் 8 வரையே கல்விப் பணியாற்றி வந்தது.

தற்போது நவாலியில் உள்ள பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள், கல்விமான்கள் மற்றும் மதப்பெரியார்களின் வேண்டுகோளுக்கு இணங்க தரம் 9 வரை கல்விப்பணியாற்ற தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இதற்கான சகல ஆவணங்களைத் தொகுத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை-நவாலியில் 50ஆண்டுகாலமாக கல்விச்சேவை வழங்கும் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலைக்கு நவீன தரம் கொண்ட கட்டடத் தொகுதி இல்லாதது பெருங்குறையாக இருப்பதுடன், சுற்றுமதில் இன்றிப் பாதுகாப்பற்ற நிலையில் உள் ளமை பெரும் கவலை தரும் விடயமாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (201-302)

# தற்காலிக பாலத்தை புனரமைக்கக் கோரல்

யாழப்பாணம், ஜன.15

ஐந்து கண் (சண்டிலிப்பாய்) மதகு பால புனரமைப்பு இடம் பெறுவதற் காகத் தற்காலிகமாகப் போடப்பட்ட தகரப் பாலம் முற்றாகச் சேதமடைந் துள்ளது.

தினமும் அந்தப் பாலத்தின் ஊடா கச் செல்லும் பயணிகளின் கால்கள், அங்கு போடப்பட்டுள்ளத் தகரங்களி னால் வெட்டப்பட்டு இரத்தம் வழிந்த நிலையிலேயே செல்கின்றனர்.

நேற்றைய தினம் மட்டும் 4 பயணிகள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இவர் களில் இரண்டு பெண் ஆசிரியர்கள் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வீதி அபிவிருத்தி அதிகாரச் சபை பால புனரமைப்புக்கு முதல் தற்காலிக பாலத்தை முதலில் வினைத்திறனாக அமைத்து உதவினால் மேற்படி அபி விருத்திக்குச் சிறந்ததாகும் என அந்தப் பகுதி ஊடாகச் செல்லும் மக்கள் தெரி வித்துள்ளனர். (201-302)

## சேவைக்குப் பாராட்டு...



வெளியீடு: தேசிய கல்வி நிறுவனத்தின் ஆசிரிய கல்வித்துறையின் பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்கவின் மணிவிழா யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியில் அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் 'லிலானி அம்மா' என்ற மணிவிழா மலரை வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தேசிய கல்வி நிறுவக முன்னாள் பணிப்பாளர் உபாலி சேதர பெற்றுக் கொள்கிறார்.

# பசும்பால் வழங்க சுற்றறிக்கை

அச்சுவேலி,ஜன. 15

சிறுவர்களுக்கு பசும்பால் வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் பாலர் முன்பள்ளி மற்றும் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலை யங்களில் உள்ள அனைத்துச் சிறார்க ளுக்கும் பசும்பால் வழங்குவதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிறு வர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச் சின் செயலாளர் நாமணி குணசேகரா சுற்றறிக்கை மூலம் சகல பிரதேச செய லாளருக்கும் அறிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு ஒரு நாளைக்கு 150 மி.லீ அளவில் மாதாந்தம் 20 தினங்களுக்கு பசுப்பால் வழங்கப்படவுள்ளது. சிறுவர் களுக்கு பால் விநியோகிக்கும் திட்டத் தின் கீழ் பாலர் முன்பள்ளிகள் மற்றும் ஆரம் பச் சிறுபராய அபிவிருத்தி நிலையங்களில் உள்ள சிறுவர்களுக்கு ஒரு மாதத்தில் 20 தினங்களுக்கு 150 மில்லி லீற்றர் பால், வரு டத்தில் 9 மாதங்களுக்கு வழங்கப்படவுள் ளது. இந்த வகையில் 180 தினங்களுக்கு பால் வழங்கப்படவுள்ளது. (201-11)

# அதிபர்களுக்கும் தீர்வையற்ற கார்கள்

## ஜனாதிபதி வாக்குறுதி

அச்சுவேலி,ஜன. 15

இலங்கை தரம் பெற்ற அதி பர் சேவை சங்கம் பாடசாலை அதிபர்களுக்கு இறக்குமதித் தீர் வையற்ற கார்களைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்தது.

மேற்படி சங்கத்தின் கோரிக் கையை ஏற்று கார்களைப் பெறு வதற்கான நிதிதொடர்பான நிலைமைகளைப் பரிசீலனை செய் வதற்கு ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியிருப்பதாக இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங் கத்தின்தலைவர் அன்பு ஜவ கர்ஷான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அதி பர் சேவை தரம் I ஐச் சேர்ந்த வர்களுக்கு 1999 ஆம் ஆண்டு இறக்குமதித் தீர்வையற்ற கார் களைப் பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இந்த வகை யில் ஒரு தொகுதி அதிபர்கள் கார்களைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு இது இடை நிறுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஜனாதிபதி யின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது யுத்த சூழ்நிலை யில் பாதுகாப்பு செலவீனத்துக்கு பெருமளவில் நிதி தேவையாக இருப்பதால்நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு நிறுத்தப் பட்டது.

அத்துடன் யுத்தம் முடிவ டைந்து இயல்பு நிலை ஏற்படும் போது அதிபர்கள் கார்களைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய் யப்படும் என ஜனாதிபதி கூறி யிருந்தார்.

இதனையடுத்து தற்போதைய அமைதியான சூழலில் கார்களை அதிபர்கள் பெறுவதற்கு ஏற் பாடுகள் செய்ய வேண்டும் என இலங்கை தரம் பெற்ற அதிபர் கள் சேவைச் சங்கம் ஜனாதி பதியிடம் மீண்டும் கோரிக் கையை வலியுறுத்தியுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக இலங்கை தரம்பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்தின் கலைவர் தகவல் தெரிவிக்கையில்.

இலங்கை அதிபர் சேவையாக தரம் I இல் உள்ளவர்கள் இறக்கு மதித் தீர்வையற்ற கார்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை யுண்டு. இந்த வகையில் ஒரு தொகுதி அதிபர்கள் 1999 ஆம் ஆண்டு கார்களை பெற்றுக் கொண்டனர்.மீண்டும் ஜனாதி பதியிடம் கோரிக்கையை வலி யுறுத்தினோம்.

எமது கோரிக்கையை ஏற் றுக் கொண்ட ஜனாதிபதி, அதி பர்களுக்கு இறக்குமதித் தீர்வை யற்ற கார்களைப் பெற்றுக் கொள் வதற்கான நிதி தொடர்பான ஏற் பாடுகளை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு பணிப் புரைகளை விடுத்துள்ளார். அதே வேளை அதிபர் இறக்கு மதித் தீர்வையற்ற கார்களைப் பெற் றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு" எனவும் கூறியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (201-11)

# கிழக்கு மக்களுக்கு செ.சங்கம் உதவி

யாழ்ப்பாணம்,ஜன.15

கிழக்கு மாகாணத்தில் இடம் பெறும் அனர்த்தங்களுக்காக இலங்கை செஞ்சிலுவைச்சங் கம் - யாழ். கிளையினால் வெள்ள நிவாரணப் பொருள்கள் அனுப் புவதற்கு ஆவன செய்யப் படுகின்றது.

இதற்காக மேலதிகமாக மக் களிடமும் நிவாரணப் பொருள் கள் பெற்றுக்கொள்ளப்படவுள் ளன. நிவாரண உதவிகளை வழங்க முன்வருவோர் இல. 73, கண்டி வீதி, யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள எமது கிளை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வி.கே.கணே சலிங்கம் அறிவித்துள்ளார். (201-313)

# அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு பல்லூடக எறிகருவி வழங்கல்

அச்சுவேலி மத்தியகல்லூரியின் மாணவர்களின் கற்றல் செயற் பாடுகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் வெளிநாடுகளில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்கள், எ.சீ.சீ வேன்ட் இணையத்தள நண்பர்களின் நிதியுதவியுடன் பல்லூடக எறிகருவியை கல்லூரிக்கு வழங்கியுள்ளனர்.

ஏ.சீ.சீ. வேன்ட் இணையத்தள நண்பர்களின் சார்பாக இந்தத் தளத்தை கல்லூரியின் பழைய மாணவி திருமதி தேவராசா பாமினி அதிபர் வே.அரசகேசரியிடம் கருவியை நேரில் கைய ளித்தார். இதேவேளை கல்லூரி மாணவர்களுக்கான கற்றல் செயற் றிட்டம் ஒன்றைத் தயாரித்து பழைய மாணவரான இராமச் சந்தி ரன் வசிகரன் பல்லூடக எறிகருவி மூலம் மாணவர்களுக்குக் காண்பித்து அதற்கான விளக்கங்களையும் வழங்கினார். (201-11)

# தேர்தலை நடத்தத் தயாராகிறது அரசு

யாழ்ப்பாணம் ஜன.15

எதிர்வரும் உள்ளூர் அதி கார சபைத் தேர்தலுக்கு நாட ளாவிய ரீதியில் அரச மாகாண சேவையில் உள்ள பெருமளவி லான அலுவலர்கள் பணிக்க மர்த்தப்படவுள்ளனர்.

அத்துடன் சகல வாகனங் களும் தேர்தல் கடமையின் பொருட்டு பாவனைக்குட் படுத்த வேண்டியுள்ளமை என்று தேர்தல் ஆணையாளர் தயா னந்த திசாநாயக்க சகல திணைக் களத் தலைவர்களுக்கும் தெரி வித்துள்ளார்.

அரச திணைக்களங்கள் ஒவ்வொன்றில் இருந்தும் உத வித்தெரிவத்தாட்சி அலுவலர் கள், சிரேட்ட தலைமை தாங் கும் அலுவலர்கள், கனிஸ்ட தலைமை தாங்கும் அலுவலர் கள், வாக்கெடுப்பு எழுதுநர்கள் எனப் பலதரப்பட்டோர் ஆள் சேர்க்கப்பட வுள்ளனர்.

திணைக்களத் தலைவர்கள் ஆண், பெண் ஆகிய இருபால ருக்கும் தனித்தனியான படி வங்கள் வழங்கப்பட்டு உரிய காலத்தில் பூரணப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டும்.

இதேவேளை அரச சேவை யில் கடமையாற்றும் பின்வரும் அலுவலர்களான நிறைமாத கர்ப்பிணிதாய், தாய்ப்பாலூட் டும் கைக்குழந்தை உள்ளதாய், அங்கவீன நிலையில் உள் ளோர், ஒப்பந்த சேவையில் உள்ளோர் ஆகியோர் மேற்படி மாதிரிப் படிவங்கள் பூர்த்தி செய்யத் தேவையில்லை என வும் அவர் மேலும் கூறினார். (201-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் ஊடுருவலை எதிர்த்து காரைநகரில் மீனவர்கள் போர்க்கொடி

காரைநகர், ஜன. 15

இந்திய மீனவர்கள் பாக்கு நீரிணையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி கடல் தொழிலில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காரைநகர் வாழ் மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் காரைநகர் மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை. மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டிருந்தது. மீன் சந்தைகள், மீன் கூறுவிலை கோரும் இடங்கள், கடற்கரை என்பன வெறிச்சோடிக் காணப்பட்டன.

தாம் தொழில் செய்யும் பகுதிகளுக்குள் ஊடுருவும் இந்திய ட்ரோலர் படகுகளும் மீனவர்களும் கடல் வளத்தைச் சூறையாடிச் செல்கின்றனர் என்று காரைநகர் மீனவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இந்திய மீனவர்கள் ட்ரோலர்கள் தமது பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அறுத்துச் செல்வதாகவும் அவற்றினால் தமது தொழில் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் காரை மீனவர்கள் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பதால் தாம் போராட்டத்தில் குதிக்க வேண்டி வந்தது என்றும் அவர்கள் கூறினர்.

நேற்றுமுன்தினம் நடந்த போராட்டத்தை காரைநகர் கடல் தொழிலாளர் சங்கங்களின் சமாசம் ஏற்பாடு செய்திருந்தது. போராட்டத்தைத் தொடர்ந்து தமது பிரச்சினைகளைத் தீர்க்க உடன் நடவடிக்கைகளை மேற்

**இந்திய ட்ரோலர்கள் தமது பல லட்சம் பெறுமதியான வலைகளை அறுத்து சேதமாக்குவதாக காரைநகர் மீனவர்கள் முறையிடுகின்றனர்.**

கொள்ளுமாறு கோரும் மனுக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கடற்படை மற்றும் சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கும் அனுப்பி உள்ளதாக சமாசத்தின் தலைவர் க.இராயச்சந்திரன் தெரிவித்தார்.

ஆழ்கடலில் தொழில் செய்துகொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் என்று தமிழக அரசு குற்றஞ்சாட்டிய அன்று காரைநகரில் இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

தமிழக மீனவர் மீதான இந்தத் தாக்குதல் குறித்து வழமைக்கு மாறாக இந்திய மத்திய அரசு கடும் போக்குடன் நடந்து கொண்டது. புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவாசத்தை அழைத்து சம்பவம் குறித்து விளக்கம் கோரி உள்ளது. அத்துடன் ஏற்கனவே இரு நாடுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மதித்து, இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதைத் தவிர்க்கும்படியும் அது இந்திய அரசு இலங்கைக்கு அறிவுறுத்தி உள்ளது. எனினும் இந்தச் சம்பவத்தை இலங்கை அரசு மறுத்துள்ளது. இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் ஏதும் நடத்தப்படவில்லை என்று அது தெரிவித்தது. இந்திய மீனவர்கள் தமது எல்லைக்குத் திரும்ப உதவீயதாகக் கடற்படை தெரிவித்தது. (உ-250)



நிம்மதியாக வாழவிடுங்கள்: இந்திய ட்ரோலர்களுக்கு எதிராக காரைநகர் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# 1,000 கிலோ அரிசியில் ஆனையிறவில் பாற்சோறு

கொழும்பு,ஜன.15

தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு 15 ஆம்திகதி அதிகாலையில் ஆனையிறவு நுழைவாயிலை அண்டி 1000 கிலோ அரிசியைப் பயன்படுத்தி பாற் சோறு தயாரிக்கப்படவுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவிக்கிறது.

அன்றைய தினம் காலை 8.00 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரையிலும் ஆனையிறவு நுழை வாயிலில் பிரதேசத்தில் வைத்து யாழ்.நோக்கிப் பயணிக்கும் மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து பயணங்களை மேற்கொண்டு வரும் அனைத்து மக்களுக்கும் பாற்சோறு விநியோகிக்கப்படவுள்ளதாக இராணுவ உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். பாதுகாப்புப்படைப் பிரிவுகளின் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் ஆலோசனைக்கு அமையவே இது செயற்படுத்தப்படுகிறது. இந்த மாபெரும் பொங்கல் பாற்சோற்றைத் தயாரிப்பதற்கு ஆயிரம் கிலோ அரிசி,ஆயிரம் தேங்காய்கள் ஐந்நூறு கிலோ சக்கரை பயன்படுத்தப்படவுள்ளதோடு இராணுவப் பிரிவுகளின் சமையற்காரர்கள் ஐம்பது பேர் வரையில் இப் பாற்சோறு தயாரிப்பில் ஈடுபடுவார்களெனவும் அந்த இராணுவ உயரதிகாரி தெரிவித்தார். (ஐ-22)

# மத்திய கல்லூரியில் இன்று பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 15

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் இன்று தைப்பொங்கல் கலாசார விழா நடைபெற உள்ளது.

இந்த விழாவில் அமைச்சினால் ஒரு கோடி 99 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகள் மக்களுக்கு வழங்கப்பட உள்ளன.

கடந்தகால யுத்தத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு, சுயதொழிலுக்கான கடன் உதவி, சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான கடன் உதவிகள் என இந்த உதவிகள் வழங்கப்பட உள்ளன என்று அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.சதீஸ்குமார் தெரிவித்தார்.

பொங்கல் விழாவில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் சந்திரசிறி கஜதீர இந்த உதவிகளை வழங்குவார். அத்துடன் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான 50 பேருக்கு தலா 5,000 ரூபா பண உதவியும் அமைச்சரால் வழங்கப்பட உள்ளது.



நாளைமறுதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சூரியப் பொங்கல் நிகழ்வுக்காக பல லட்சம் ரூபா செலவில் பெரும் 'கட்டவுட்'கள் யாழ். நகரில் தயாராகி வருகின்றன.

யாழ். கல்வி வலயத்தில் கற்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக மாதாந்தம் 500 ரூபா புலமைப் பரிசில் வழங்கும் திட்டமும் இன்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட உள்ளது என்று அமைச்சுச் செயலாளர் கூறினார். யாழ். பொதுசன நூலகத்திற்கு 4,500 புத்தங்களும் இன்றைய தினம் அமைச்சினால் கையளிக்கப்பட உள்ளது. இந்த நிகழ்வில் புனர்வாழ்வு மற் றும் சிறைச்சாலைகள் மறுசீர மைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, மனிதவள அபிவிருத்தி சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். கலாசார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொள்ள உள்ளனர். கொழும்பில் இருந்து வரும் இசைக்குழுவின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இந்த நிகழ்வில் வைத்து புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் 100 பேர் விடுவிக்கப்பட உள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு வடமாகாண சபை, இந்துசமய கலாசார திணைக்களம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் அனுசரணை வழங்குகின்றன. (உ)

# தென்மராட்சியில் பற்சிகிச்சைப் பிரிவு

தென்மராட்சி, ஜன.15

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரதி சனிக்கிழமைகளில் பல் வைத்திய நிபுணர் வீ.ஆர். டேவிற் சிகிச்சைப் பிரிவுக்கு வருகை தருகிறார்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வரும் பல் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து தென்மராட்சி கிழக்கு, பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச மக்களின் நலன்கருதி பிரதி சனிக்கிழமைகளில் இந்த வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை வேண்டி வருவது குறையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. பல் தொடர்பான அனைத்து சிகிச்சைத் தேவைகளுக்காகவும் மக்கள் இந்தப் பிரிவை நாட முடியும். (உ-207)

# யாழ்ப்பாணத்திலும் களம் இறங்குகிறது ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், ஜன. 15

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான முன்னேற்பாடுகளை ஜே.வி.பி. மேற்கொண்டுள்ளது.

தேர்தலில் தமது கட்சி போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்து யாழ்.தேர்தல் திணைக்களத்தில் வேட்பு மனுத்தாக்கலுக்கான விண்ணப்பங்களை அக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் பெற்றுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாக அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்ததையடுத்து தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரதான கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் ஆகியன வேட்பாளர்களைத் தெரிவு செய்வதிலும், ஏனைய செயற்பாடுகளிலும் மும்முர மாக ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஜே.வி.பி. கட்சி யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான விண்ணப்பங்களை நேற்றுப் பெற்றுச் சென்றுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் பிரதான கட்சிகளில் ஒன்றான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பத்தை யாழ். தேர்தல் திணைக்களத்தில் நேற்று பெற்றுச்சென்றுள்ளது.

தேர்தல் நெருங்கி வரும் வேளையில் வேட்பாளர்களைத் தேடும் பணிகளில் குடாநாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ஒவ்வொரு கட்சியும் பல வேட்பாளர்களைத் தேடிப் பிடிக்க வேண்டி இருப்பதால் சிறு கட்சிகள் தமது வேட்பாளர் பட்டியலை நிரப்புவதில் சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையே தேர்தலுக்கு முன்பாக கூட்டணிகளை அமைப்பது தொடர்பிலும் கட்சிகள் மும்முரம் காட்டி வருகின்றன. திரைமறைவுப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம், ஹெல உறுமய உள்ளிட்ட வேறுபல தெற்குக் கட்சிகளும் யாழ். மாவட்டத்தேர்தலில் போட்டியிட வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உடல் உள நலனில் கவனமெடுக்க வேண்டும்

வவுனியா, ஜன.15

வீட்டிலும், பாடசாலையிலும் சிறுவர்களைக் கற்றல் நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடுத்தாது அவர்களின் உடல் உளநல விடயங்களில் இயன்றளவு கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானது இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் வவுனியா மாவட்ட உள நல மருத்துவ நிபுணர் மருத்துவர் எஸ்.சிவதாஸ்.

கடந்த 6 ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் உள நலத் துறையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்ற பயிற்சிக் கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்று பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அழைத்துக்கொண்டு அவர்களின் நடத்தை, கல்வியில் அக்கறையின்மை, உரிய வளர்ச்சி விருத்தியின்மை தொடர்பான முறைப்பாடுகளுடன் வைத்தியசாலைக்கு வருவதை அவதானிக்க முடிகின்றது.

பிள்ளை வளர்ப்பு என்பதை எப்படியும் செய்யலாமெனப் பல பெற்றோர்கள் நினைக்கின்றனர். ஆனால் சில வேளைகளில் அது பல்வேறு விதங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கர்ப்பகாலம் முதலே பிள்ளையின் விருத்தி, வளர்ச்சி என்பன உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியன.

ஒருபிள்ளை பாடசாலைக்குச் செல்வதன் மூலம் ஆரம்ப சமூகமயமாதலில் இணைகிறது. பிள்ளைக்கு குடும்பம் என்ற நிலையிலிருந்து பிறிதொரு சூழலும் புரிய ஆரம்பமாகிறது. ஆனால் அந்தச் சூழலில் கல்வியை மட்டும் வழங்கினால் போதுமெனப் பல பெற்றோர் நினைக்கின்றனர். இதனால் பிள்ளைகளின் மீது கல்வியை அவர்கள் திணிக்கின்றனர். ஆனால் இது பிள்ளைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் சிறுவர்கள் எவ்வாறு இலகுவான வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்துவது, சிறுவர் நல சிகிச்சைகளை வாரத்தில் ஒருநாளாவது வழங்குவதன் தேவை குறித்தும் அவர் கருத்துக்களை வெளியிட்டார்.

இக்கலந்துரையாடலில் வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சிறுவர் நலனுடன் தொடர்புடையவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (க-501)

கோர முகம்...



காவுகொள்வது எப்போது?..:- வட்டக்கச்சி இராமநாதபுரம் செல்லும் பிரதான வீதியில் 'கோரமோட்டை' ஆற்றுக்கு மேலாக அமைந்துள்ள பாலம் பாதுகாப்புத் தூண்கள் உடைந்த நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. (405)

# பளையில் மின் வேலைகள் துரிதம்

கிளிநொச்சி,ஜன.15

பளைப் பிரதேசத்தில் மின்சாரத் திருத்தப்பணிகள் துரிதமாக நடை பெற்றுவருவதாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவரும் விசேட ஆணையாளருமான சி. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

மின்சாரத் திருத்தப்பணிகள் தொடர்பாக அவரிடம் வினவியபோது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனவரி மாதத்துக்குள் மின்சாரம் எமது பிரதேசத்திற்குக் கிடைக்கும் என எதிர்பார்த்தோம் ஆனால் கண்ணி வெடிகள் உள்ள இடங்களாக அல்லிப்பளை, கச்சார்வெளி, முகமாலை போன்ற பிரதேசங்கள் காணப்படுவதால் திருத்தப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஏனைய பிரதேசங்களில் தூண்கள் நடப்பட்டு கம்பிகளும் பொருத்தப்பட் டுள்ளன.

ஏ-9 வீதியில் அநேக புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து விட்டன. தற்போது அல்லிப்பளை, கச்சார் வெளிப்பிர தேசங்களில் திருத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுமக்களின் பாதுகாப்புக்கருதி பூரணமாகத் திருத்தப் பணிகள் முடிவடைந்த பின்னரே மின்சாரம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். பொதுமக்கள் தமக்கு மின்சாரம் வழங்கப்படும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.(313-311)

# பன்னங்கண்டிப் பாலத்தின் அவலத்தால் மக்கள் சிரமம்

கிளிநொச்சி,ஜன.15

கிளிநொச்சி கோரமோட்டை ஆற்றுக்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள பாலம் பாதுகாப்பற்ற நிலையில் உயிர்களைக்காவு கொள்ளக் காத்திருப்பதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பிரதான வீதியில் இரணைமடுக் குளத்திலிருந்து பாயும் கோரமோட்டை ஆற்றுக்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள பன்னங்கண்டி பாலமே இவ்வாறு ஆபத்தான நிலையில் காட்சியளிக்கின்றது.

மிக ஆழமான இப்பாலத்தின் கீழ்ப் பகுதியூடாகத் தற்போது வீதியை மேவி நீர்மட்டம் உயர்ந்து வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. இப்பாலத்தின் இருமருங்கிலும் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட துண்கள் உடைந்த நிலையில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றன.

நீர்மட்டம் உயர்ந்துள்ள நிலையில் ஏதாவது விபத்து நடந்தால் உயிர் பிழைப்பது கடினமானது. இதனால் மக்கள் தினமும் அச்சத்துடனேயே செல்கின்றனர்.

. ஆகவே மக்களின் உயிர்களுடன் விளையாடாது இந்தப் பாலத்தைப் புனரமைக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-405)

# சாமங்குளத்தில் முன்பள்ளி மரத்தின் கீழ் இயங்கும் அவலம்

முல்லைத்தீவு,ஜன.15

முல்லைத்தீவு மாவட்ட காதலியார் சமளங்குளம் பகுதியில் இயங்கிவரும் முன்பள்ளி, மரங்களின்கீழ் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தத்துக்கு முன்னர் பொது நோக்கு மண்டபம் ஒன்றில் இது இயங்கி வந்தது. போரினால் அந்த மண்டபம் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனைப் புனரமைப்பதற்கு எவரும் முன்வரவில்லை. இதனால் அழிவடைந்த இந்த மண்டபத்தினருகே மரங்களின் கீழ் தறப்பாள்கள் கட்டப்பட்டு அதன் கீழ் முன்பள்ளி இயங்கி வருகின்றது. சிறார்களும் வசதியீனங்களுக்கு மத்தியில் தமது கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மழைபெய்து வருவதனால் முன்பள்ளியில் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

தொண்டு நிறுவனங்களாவது இதனைக் களைவதற்கு முன் வரவேண்டும் என இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் பளையில் அதிகரிப்பு

பளை,ஜன.15

பளைப் பிரதேசத்தில் காய்ச் சலால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக சிறுபிள்ளைகளே அதிகமாக காய்ச்சளால் பீடிக்கப்பட்டு வருகின்றனர். இந்தப் பகுதியில் பெய்த அடைமழையினால் தற்காலிக வீடுகளும் தங்கியிருப்போர் பெருமளவில் காய்ச்சலின் பீடிக்கப்படுவதாக தெரிவிக்கப் பட்டது.

காய்ச்சலால் பீடிக்கப்படும் பெருமளவு வேலையாளர்கள் பளை பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் அப்பகுதிகளிலிருந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-207)

## மரண அறிவித்தல்

### செல்வன் செல்லையா யசோதரன்



(யாழ். இந்துக் கல்லூரி உயிரியல் பிரிவு மாணவன் -2007)

மாவடிப் பிள்ளையார் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் செல்லையா யசோதரன் (13.01.2011) வியாழக்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை செல் லையா (கிளி) - உமையம்மை தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும் கலாவதனி (கனடா, முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் - யாழ். வலயக் கல்விப் பணிமனை),சுகந்தினி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - யாழ். வலயக்கல்விப் பணிமனை), ஐங் கரன் (பொறியியலாளர், கலாநிதி பட்டப் படிப்பு மாண வன் U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயரூபன் (கனடா), மதியானந்தன் (விரிவுரையாளர் - தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), சிந்துஜா(பொறியியலாளர் கலாநிதி பட்டப்படிப்பு மாணவி U.K) ஆகி யோரின் பாசமிகு மைத்துனரும் சஜினி, அபிசன், கபிஷா, சதுர்சிகன் ஆகியோரது அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.01.2011) சனிக்கிழமை அமெரிக்கா, நயாக்றாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கிருஷ்ணசாமி - பெரியப்பா (ஐயா)
மாவடிப்பிள்ளையார் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தொ.இல. 0774747283,
0777485294 (இலங்கை)
+14162711763 (கனடா)
+07598124901(U.K)

(109073)

## கிழக்கு மக்களுக்கு உதவ மன்னாரிலும் பொருள்கள் சேகரிப்பு

வலி.வடக்கு, ஜன15

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நானாட்டான் பிரதேச செலயக ஊழியர் நலன்புரி சங்கம் ஒரு லட்சம் ரூபா நிதியை முதற்கட்டமாக உடனடியாக வழங்கியுள்ளது.

கடந்த பல நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக பாதிக்கப் பட்ட இம் மக்களுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொள்வதற்கு வசதியாக நானாட்டான் பிரதேச செயலக ஊழியர்கள் பொது அமைப்புக்களுடன் இணைந்து மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய பொருள்களை சேகரிக்கும் செயல்பாட்டையும் முன்னெடுத்துள்ளார்கள்.

இந்த உதவிப் பொருள்கள் யாவும் உரிய முறையில் கிழக்கு மாகாண வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட நடவடிக்கைகள் உரியவர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் எனவும் செயலக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ஐ-86)

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், மற்றும் பொதிகள் சேவை
Arrul Global Express
International Courier & Cargo Service
24 மணி, மற்றும் 72 மணிநேரத்தில் குறித்த முகவரியில் பொருட்கள் ஒப்படைக்கப்படும்
யாழ் மாவட்ட அங்கீகரிக்கப்பட்ட முகவர்
மிகக்குறைந்த கட்டணங்கள்
அதிவிரைவு சேவை Speed Courier Service
✔ லண்டன் 800/=
✔ கனடா, அமெரிக்கா, நோர்வே, சுவிஸ் , டென்மார்க் அவுஸ்ரேலியா, பிரான்ஸ், நெதர்லாந்து, ஜேர்மனி இத்தாலி 950/=
சாதாரண சேவை (Normal Service)
✔ லண்டன், சுவிஸ் 350/=
✔ கனடா 450/=
Arrul Global Express
இல.1, பிறவுண் வீதி,
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
0212226113
Arrul Global Express
டாம் வீதி
கொழும்பு 12
Arrul Global Express
மன்னார் வீதி
வவுனியா
E-mail : arrulexpress@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான வெள்ளப் பாதிப்புக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் தகவல்

கிளிநொச்சி,ஜன.15

கிளிநொச்சி உருத்திரபுரம் வடக்கு, சக்திபுரம், உருத்திரபுரி மற்றும் அவற்றை அண்டிய பகுதிக் கிராமங்கள் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட இடங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்ட அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிளிநொச்சி உருத்திரபுரம் வடக்கு, சக்திபுரம் உருத்திரபுரிக் கிராமங்கள் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நான் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று அங்குள்ள மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தேன். அவர்களின் வீடுகள் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. ஒரு வழிப்பாதையால் மட்டுமே அவர்கள் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால் அவர்கள் தமது வீடுகளுக்குச் செல்லமுடியாத அவல நிலை காணப்படுகின்றது. வீதிகள் சேறும் சகதியுமாக உள்ளன.

**கண்டாவளை, முரசுமோட்டை, பெரியகுளம், பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இரணைமடுக் குளத்தில் இருந்து திறந்து விடப்படுகின்ற நீரினால் சில கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.**

முறிப்புக் குளத்திலிருந்து பாய்ந்து வருகின்ற நீர் இப் பகுதியைப் பாரிய அளவில் பாதித்துள்ளது. அக்கராயன், வன்னோரிக்குளம் பகுதிகளில் குளங்களில் இருந்து மேலதிக நீர் வடிந்துவருவதால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுபெரும் அழிவுகள் நேரிட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாகக் கிளிநொச்சி அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். இது தொடர்பாகத் தனது கவனத்திற்குக்கொண்டு வரப்படவில்லை எனத்தெரிவித்த அவர் உடனடியாகச் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் மூலமாகத் தரவுகளைத் திரட்டிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இராமநாதபுரம் சம்புக்குளப்பகுதி, வட்டக்கச்சி, மாயவனூர்ப் பகுதிகள் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கண்டாவளை, முரசுமோட்டை பெரியகுளம் பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இரணைமடுக் குளத்தில் இருந்து திறந்து விடப்படுகின்ற நீர் கனகராயன் ஆற்றுப்படுக்கையில் உள்ள கிராமங்களை மோசமாகப் பாதித்துள்ளது. இதனால் பெரும் சொத்தழிவுகள் ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

(319)

## ஆரம்பப் பிரிவு தனியாக இயங்க முடிவு

முல்லைத்தீவு, ஜன.15

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் பிரிந்து தனியான பாடசாலையாக இயங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் இசுறு பாடசாலையாக மாற்றம் செய்யப்பட்டமைக்கான அறிவித்தல் வெளியானது.

இசுறு பாடசாலையொன்றில் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையான ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் இணைந்திருக்க முடியாது என்ற கொள்கையின் அடிப்படையில் இந்தப் பாடசாலையிலிருந்து ஆரம்பப்பிரிவு வகுப்புக்கள் பிரிந்து தனியான பாடசாலையாக இயங்கவுள்ளன.

இதற்கான ஆலோசனைக் கூட்டம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பங்கயச்செல்வன் தலை மையில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இவர்களிடமிருந்து ஆரம்பப் பிரிவு பாடசாலை அமைப்பதற்கான ஆலோசனைகள் பெறப்பட்டன.

இதில் பாடசாலைக்கான கட்டடம் கோட்டக் கல்விப் பணிமனைக்கு முன்பாக அமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய ஆறுமுகம் ஆசிரியர் நினைவாக இப்பாடசாலைக்கு ஆறுமுகம் வித்தியாலய எனப் பெயர் சூட்டப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய ஆரம்பப்பிரிவுப் பாடசாலைக்கு ஆசிரியர் பாஸ்கரனை அதிபராக நியமிக்க வேண்டுமென இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கான நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர். (க-500)

## தொடரும் மழையால் அல்லலுறும் அரை ஏக்கர் வீட்டுத்திட்ட மக்கள்

### நிரந்தர வீடுகளுக்கு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.15

நெடுங்கேணி வீதியில் அமைந்துள்ள அரை ஏக்கர் வீட்டுத்திட்ட மக்கள் தொடரும் மழையினால் பெரிதும் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கான தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்ட போதிலும் இவை பற்றைகள், காடுகள் என்பனவற்றிற்கு மத்தியிலேயே அமைக்கப்பட்டுள்ளதால் இந்த மக்கள் பல இன்னல்களைச் சந்தித்து வருகிறார்கள்.

இவர்களின் தற்காலிக இருப்பிடங்கள் யாவும் நீர்கசிந்து ஈரமான நிலையில் காணப்படுகின்றன.

இவர்கள் பயணிக்கும் பாதைகள் சேறும் சகதியுமாக மிக மோசமான நிலையில் காணப்படுவதால் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டிய நிலையில் இந்த மக்கள் உள்ளனர்.


அத்துடன் பற்றைகள் மண்டியுள்ளதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக உள்ளது.

இதனால் பல்வேறு நோய்த் தொற்றுக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதைவிட விஷ ஜந்துக்களும் பெருகிக் காணப்படுகின்றன.

இதனால் பாதுகாப்பற்ற வீடுகளில் வசிக்கும் இந்த மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழிக்கின்றனர். மேலும் தற்போது நிலவும் கடும் குளிரான காலநிலை இவர்களை மிகவும் பாதித்துள்ளது. குளிரில் இருந்து தம்மைப்பாதுகாக்கும் பெருட்டு கட்டைகளால் தீமூட்டி அதன் வெப்பத்தில் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தமக்குப் பாதுகாப்பான வீடுகள் அமைத்துக் கொடுத்தாலே ஓரளவு நிம்மதியுடன் தம்மால் வாழ முடியுமென இந்த மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். (க-500)

### இயற்கையின் சோதனை...



கடலுக்குள் வீதி:முல்லைத்தீவு - யாழ்ப்பர்ணம் பிரதான வீதியில் கேப்பாபுலவு என்னும் இடத்தில் வெள்ள நீர் கடல்போல வீதியை ஊடறுத்துப் பாய்ந்து செல்கின்றது. (555)

## வவுனியா தெற்கில் இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள்

### த. தே. கூட்டமைப்பு எம்.பிக்களிடம் முறையீடு

வவுனியா, ஜன.15

வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து 142 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமை முறைகேடானதும், நியாயமற்றதுமெனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் முறையிட்டுள்ளனர்.

இடமாற்றத்துக்குள்ளான ஆசிரியர்கள் வவுனியா நகர சபை மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது விடயம் தொடர்பாக சந்திப்பில் கலந்து கொண்ட போதுஆசிரியர்கள் தெரிவித்தவை வருமாறு:-

தமக்கு வழங்கப்பட்ட முதல் நியமனக் கடிதத்தின் பிரகாரம் ஐந்தாண்டுகள் நிறைவடையாத நிலையில் வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து வெளி மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஏக காலத்தில் முதல் நியமனம் வழங்கப்பட்டவர்களுக்குத் தற்போது இடமாற்றம் வழங்கப்படாமை, இந்த இடமாற்றம் முறை கேடாக இடம் பெற்றமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் யாழ்ப்பாணத்தைச் சொந்தமாவட்டமாகக் கொண்ட பெரும்பாலான ஆசிரியர்கள் மீண்டும் கிளிநொச்சி, மடு, முல்லைத்தீவு ஆகிய இடங்களிற்கு இடமாற்றப்பட்டமை தொடர்பாகத் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் இடமாற்ற விதிகளுக்கமைய இவ் இடமாற்றம் வழங்கப்பட்ட வில்லை எனவும் தெரிவித்த அவர்கள் வடமாகாணத்தில் உள்ள வலயங்கள் ஒவ்வொன்றிலும் ஆசிரிய இட மாற்றத்தின் போது வெவ்வேறு நியதிகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் இடமாற்றப்பட் டுள்ளார்கள்.

2006 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர்கள் மேலதிகம் என்றால், குறித்த ஆண்டின் பின்னர் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் மேலதிகமாகக் கணிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் குறித்த ஆண்டின் பின்னர் முதல் நியமனம் பெற்றவர்களில் சிலர் இந்த மாவட்ட இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படாமல் வவுனியா தெற்கு வலயத்திற்குள்ளேயே உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது எவ்வகையில் நியாயம் என்றும் கேள்வி எழுப்பினர்.

மேலும் இவ் இடமாற்றத்தில் ஆசிரியர்சங்கங்கள் கண்மூடித்தனமாகச் செயற்பட்டுள்ளதாகத் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

இதில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. ஜோசெப் ஸ்ராலின், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி முடிவெடுக்கலாம் எனவும், மேன்முறையீட்டுச் சபையில் சாதகமான முடிவுகள் எட்டப்படும் எனவும் பொய்யான வாக்குறுதிகளைப் பல தடவைகளில் கூறி ஆசிரியர்களை ஏமாற்றம் அடைய வைத்துள்ளதுடன்அத்துடன் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. எஸ்.மகாசிவம் பத்திரிகையில் இவ்விடமாற்றம் தவறான நியதிகளைக் கொண்டு இடம் பெற்றுள்ளது எனக் கட்டமான அறிக்கையினை வெளியிட்ட போதும் அதற்கான செயல்வடிவம் எதனையும் கொடுக்காமையு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களாகிய எம்மை ஏறமாற்றியதாகவே கருதுகின்றோம் என்றும், இடமாற்றம் என்பது கட்டாயமாக நடைபெறவேண்டும். அது நீதியான நியாயமான இடமாற்றமானதாக அமைய வேண்டும்.

அதுவே தமிழ்ச் சமூகத்தின் கல்விக்கு ஆரோக்கியமானதாகவும் அமையும் எனவும் ஆசிரியர்கள் தெரிவித்த கருத்துக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி சாதகமான முடிவொன்றைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளனர்.

(க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பில் 52வருடங்களுக்குப் பின்னர் தற்போது மீண்டும் ஓர் முகத்துவாரம் வெட்டப்பட்டு வெள்ள நீர் வடிந்தோட வைக்கப்படுகிறது. கிழக்கு மாகாண முதலமைச்சரின் வேண்டுதலின் பேரிலேயே மட்டக்களப்பு நகரைச் சூழவுள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற்காக மேற்படி முகத்துவாரம் அகழப்பட்டு தற்போது வெள்ள நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

# அரச ஊழியர்களுக்கு சம்பளதில் முற்பணம் வழங்கக் கோரிக்கை

## வெள்ளப் பாதிப்புக்களை சமாளிக்க

அம்பாறை, ஜன. 15

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள சகல அரச ஊழியர்களுக்கும் விசேட சம்பள முற்பணக்கொடுப்பனவு ஒன்று வழங்கப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங் கப்படும் உலர் உணவு நிவாரணம் உட்பட சகல நிவாரணங்களும் அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காரைதீவு புஸ்பா பொருளாதார, கல்வி, சமுக அபிவிருத்தி அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில் மேற்படி கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

அமைப்பின் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தருமான செல்லையா இராசையா இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளார்.

நிறைவேற்றுப்பணிப்பாளர் செல்லையா இராசையா அனுப்பி வைத்துள்ள இந்த மகஜரில் - மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. "வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் மேலும் சில மாவட்டங்களில் தொடரும் அடைமழை, வெள்ள அனர்த்தம் காரணமாக பெரும்பாலான அரச ஊழியர்களும் பாதிக்கப்பட்டுள்ள துடன், நலன்புரி முகாம்களிலும் தங்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கு சகல வெள்ள நிவாரணங்களும் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு சம்பள முற் பணம் ஒன்றையும் வழங்கப்பட ஆவன செய்யுமாறும் கோருகின்றோம். - என்றுள்ளது. (ஐ-30)

# தேர்தலை ஒத்திவைப்பதற்கு உலமாக்களும் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 15

கிழக்கு மாகாணம் வெள்ள அனர்த்தங்களுக்கு இலக்காகியுள்ள இத்தருணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வேட்பாளர் மனு ஒப்படைக்கும் திகதியைப் பிற்போடுமாறு அகில இலங்கை உலமாக் கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தது.

இது சம்பந்தமாக உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

கிழக்கு மாகாண மக்கள் பெரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அம்மக்களை மீட்பதற்குரிய முயற்சிகளை முன்னெடுக்கும் கடப்பாடுண்டு.

இந்நிலையில் இன்னும் சில நாள்களில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட வேண்டுமென்பது பொருத்தமான ஒன்றாகத் தெரியவில்லை.

இன்றைய நிலையில் மக்களை மீட்டெடுப்பதே நம் அனைவரினதும் செயற்பாடாக அமைய வேண்டும். இது தவிர தேர்தல்கள் அல்ல என்பதை மக்கள் நலனில் அதிக அக்கறையுள்ள தாங்கள் அறிவீர்கள். ஆகவே வேட்பு மனுத் தாக்கலுக்கான திகதி உட்படத் தேர்தல் திகதியையும் பிற்போடுமாறு உலமா கட்சி கேட்டுக்கொள்கிறது- என்றுள்ளது. இந்தத் தேர்தலைப் பின்தள்ளுமாறு கூட்டமைப்பும் கோரி உள்ளது. (எ)

# திருமலையிலும் மக்கள் இடப்பெயர்வு

திருகோணமலை, ஜன. 15

திருகோணமலையில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. இருப்பினும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வேறு பிரதேசங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

மூதூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 18,122 குடும்பங்களைச் சேர்ந்த 67,283 பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தில் மூழ்கிய கிராமங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதற்கு இலங்கை போக்கு வரத்து சபை பஸ்களும் தனியார் வாகனங்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் குட்டிக்கராச்சி. குறிஞ்சாக்கேணி பாலத்தின் மேலால் அள வுக்கு அதிகமாக நீர் பாய்கின் றது. இதனால் இப்பகுதி ஊடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் அடை மழையாலும், குளத்து நீர் திறந்து விடப்பட்டதனாலும் பெருமளவான விவசாய செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. 35,568 ஹெக்டெ யார் ஏக்கர் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் சேருவில, பிரதேச செயலாளர் பிரிவில் அரியமான் கேணி அணைக்கட்டு உடைப்பெடுத்ததால் அரியமான்கேணி, நிலாப் பொல, கங்குவேலி மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் துலிப் விஜயசேகர ஜனாதிபதியின் பணிப்பு ரைக்கமைய இம்மாவட்டத்தில் பல இடங்களுக்கு விஜயம்செய்து பாதிக்கப்பட்ட இடங்களையும்

INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD.




Hotline : 0777113777

- அடிப்படைத்தகமை G.C.E (O/L)
- IELTS - தேவையில்லை
- சிறந்த சட்டவல்லுனர்களின் ஆலோசனை
- நம்பகரமான Sponsorship

2011 மார்ச் மாதம் அமுலாகவுள்ள UK மாணவர் வீசா புதிய சட்ட அமுலாக்கலுக்கு முன்னர் உங்கள் வீசாவினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.....

IBt

No.538-3/1, Galle Road, Colombo 03, Branch : Kalmunai
E-mail : info@ibtedu.lk, academics@ibtedu.lk
Web : www.ibtedu.lk

we raise the limits to your Success...

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி இராதாகிருஷ்ணன் (நேசவு இராதா)

(முன்னாள் உரிமையாளர், நேசவு கைத்தறித் தொழிலகம்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மற்றும் தொல்புரத்திலுள்ள விக்ரோறியா முன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராதாகிருஷ்ணன் நேற்று (14.01.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியினரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - தெய்வானை தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற தனலட்சுமியின் அன்புக் கணவரும் ரதிதேவி, சூரியகுமார், லலிதாகுமாரி, சந்திரகுமார் (சுவிஸ்), ராஜ்குமார் (கனடா), வசந்தா, சிவகுமார், சூரியகலா (ஜேர்மனி), அகிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜகோபால், யசோதா தேவி, சிவராசசிங்கம், தேவராசமலர், ரஞ்சினி, சண்முகநாதன், ஜெயராம் ஆகியோரின் அன்பு மாமனும் ரஜினி, மகிந்தன், சுகந்தினி, சுலக்ஷனா, சகீலகன், வினூஷன், அஜித், அபிதா, ஜெயந்தன், தனுஷன், யதீசன், ரஷ்மிகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற வர்களான வள்ளியம்மை, காசுபதிதேவி, செல்வராணி, சண்முக நாதன் மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகாதேவா, சேனாதிராசா, குமாரசாமி, அழகுப்பிள்ளை மற்றும் பத்மலோசினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2011) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 11 மணிக்கு திருவடி நிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேற்கு,
சுழிபுரம்.

(109055)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டு. நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்தோர் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜன.15

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 32,641 குடும்பங்களைச் சேர்ந்த 1,22,047 பேர் இடம்பெயர்ந்து இந்த நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு காரணமாக 59,532 குடும்பங்களைச் சேர்ந்த 235,349 பேர் உறவினர்களினதும் நண்பர்களினதும் வீடுகளில் தங்கியுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று, ஏறாவூர்பற்று, மண்முனை வடக்கு, மண்முனை தென்னெருவில்பற்று ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மண்முனைப்பற்று பகுதியைச் சேர்ந்த ஒருவர் காணமல் போயுள்ளார் என மாவட்டச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3,944 குடும்பங்களைச் சேர்ந்த 14,136 பேரினது விவசாய நிலங்கள் வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளன.

1,220 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. 8,450 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

51,179 குடும்பங்களைச் சேர்ந்த 186,241 பேர் வாழ்வாதார தொழில்களை இழந்துள்ளனர் என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ம-21)



திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களினால் கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உணவுகளுமின்றி அவதிப்படுகின்றன. இதனால், கால்நடைகள் மேட்டு நிலங்களில் ஒதுங்கி வருகின்றன. கால்நடை உரிமையாளர்கள் சிலர் தமது கால் நடைகளை வள்ளங்களில் கொண்டு செல்கின்றனர்.

# கைதிகளுக்கு ஹெரோயின் விற்றவர் கைது

கண்டி, ஜன.15

கண்டி போகம்பறை சிறைச்சாலையில் கைதிகளுக்கு ஹெரோயின் போதைப் பொருளை விநியோகிப்பவர்கள் எனக் கூறப்படும் இருவரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து கணிசமான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் சிறையில் ஒன்றாக இருந்தவர்கள் அங்கே ஏற் பட்ட நட்புறவாகிய இவர்கள். சிறைக்குள்ளே இருக்கும் தமது சகாக்களுக்கு போதைப் பொருள் வழங்கும் வேலையில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பிரஸ்தாப நபர்களை பல கோணங்களில் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (சி)

## மழையின் கோரம்...



அவலம்: மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் அடைமழையால் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் பல பகுதிகளுக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களில்லை

அம்பாறை, ஜன. 15

அம்பாறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்கள் அத்தியாவசிய பொருள்களின்றி அவதிப்படுகின்றனர். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசினால் சமைத்த உணவுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. எனினும் படுக்கை விரிப்புகள், போர்வைகள், சிறுவர்களுக்கான பால்மா உணவுகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இவர்கள் முகாம்களில் சிரமப்படுகின்றனர்.

எந்த ஓர் அரச சார்பற்ற அமைப்பும் இந்தப் பிரதேசங்களில் இன்னும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக எந்தவித வசதிகளையும் செய்து கொடுக்கவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது. கல்முனைப் பொலிஸ் நிலையத்தால் மக்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது. (ளி)

# இந்தியர்களின் மாநாட்டில் இலங்கைக் குழு

## மலையகப் பிரச்சினைகள் எடுத்துரைப்பு

வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் 9 ஆவது வருடாந்த மாநாடு "அகில உலக இந்தியர்களை ஈடுபடுத்தல்" என்ற தொனிப்பொருளில் கடந்த 7ஆம்திகதி தொடக்கம் 9ஆம் திகதிவரை புதுடில்லி வித்தியா பவனில் நடைபெற்றது.

இதில் இலங்கைவாழ் இந்திய வம்சாவழி மக்களின் சார்பாக இ.தொ.கா. தலைவரும், பிரதியமைச்சருமான முத்து சிவலிங்கம் தலைமையிலான குழு கலந்துகொண்டுள்ளது.

இதன்போது, இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினரின் பிரச்சினைகள் தொடர்பாக, வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் நலத்துறை விவகாரங்கள் அமைச்சர் வயலார் ரவியை நேரடியாகச் சந்தித்து உரையாடினார் எனப் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பான அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வெளிநாடுகளில் பரந்து வாழும் இந்தியர்களின் பங்களிப்புகளைத் தாய் நாட்டின் அபிவிருத்திக்குப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் வெளிநாட்டு வாழ் இந்தியர்களின் விவகாரங்களின் அமைச்சும், இந்திய தொழிற்கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த மாநாட்டை இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங் ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மக்களின் சார்பாக கலந்து கொண்ட 20 பேர் கொண்ட குழு அக்குழுவின் தலைவர் முத்து சிவலிங்கம் தலைமையில் அமைச்சர் வயலார் ரவியைச் சந்தித்தது.

ஏனைய நாட்டுகளில் வாழும் இந்திய வம்சாவழி மக்களுக்கு அமைவாக இவர்களது பிரச்சினைகளும் கவனிக்கப்பட வேண்டும். ஏனையோர்களுக்கு வழங்கப்படும்சலுகைகள்இலங்கை வாழ் இந்திய வம்சவாழி மக்களுக்கும் வழங்கப்படவேண்டும். -என இந்திய அமைச்சர் வயலார் ரவியிடம் கோரிக்கை விடுத்தோம்.- என்றுள்ளது (ளி)

# தலைமறைவான டிப்போ ஊழியர்

மஸ்கெலியா, ஜன. 15

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஹட்டன் பஸ் டிப்போவுக்குச் சொந்தமான சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணத்துடன் டிப்போ ஊழியர் ஒருவர் தலைமறைவாகிவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பதினோராம் திகதி சேவையிலீடுபட்ட பஸ்களில் வசூலிக்கப்பட்ட பணத்துடனேயே மேற்படி ஊழியர் தலைமறைவாகியுள்ளார் எனக் கூறப்படுகின்றது. (ளி)

# கடுங்குளிரால் மட்டக்களப்பில் 5 பேர் மரணம்

## வெப்பநிலை 16.9 பாகைக்கு குறைந்தது

மட்டக்களப்பு, ஜன. 15

நாடு முழுவதும் அதிகரித்துள்ள கடும் குளிரால் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் மட்டும் ஐந்து பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதன்கிழமை மாலை தொடக்கம் நாட்டின் பல பகுதிகளிலும் குளிர் அலையின் தாக்கம் காணப்பட்டது. இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் வெப்பநிலை குறையத் தொடங்கியது.

மட்டக்களப்பில் 16.9 பாகை செல்சியஸாக வெப்பநிலை குறைந்தது. இதனால் வாகரைப் பகுதியில் நால்வரும் மட்டக்களப்பு நகரப்பகுதியில் ஒருவரும் குளிரில் விறைத்து உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதிக குளிரினால் உடல் வெப்பநிலை உயர்ந்ததாலேயே இவர்கள் மரணமாகினர்.

# பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புகள்

மஸ்கெலியா, ஜன.15

மலையகப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புகளைநடத்துவதில் ஈடுபட்டுள்ளனர் எனப் பெற்றோர் மற்றும் மாணவர்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற முக்கிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களே இதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் மேற்படி செயற்பாடு காரணமாகப் பாடசாலை செல்லும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது என்றும் பெற்றோர் ஆதங்கம் வெளியிட் டுள்ளனர்.

இது தொடர்பில் மலையகப் பெற்றோர், மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

மலையகப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பிரத்தியேக வகுப்புகளை நடத்தி வருகின்றனர். இதனால் அவர்கள் கிரமமாகப் பாடசாலைகளுக்கு வருவதில்லை. இதனால் மாணவர்கள்பாடசாலைகளில் பெரும்பகுதி நேரத்தை வீணடிக் கிறார்கள்.

மேலும் சில ஆசிரியர்கள் மாலை வேளைகளில் தாம் நடத்தும் பிரத்தியேக வகுப்புகளிலேயே பாடத் திட்டத்தைப் பூர்த்தி செய்கின்றனர். பாடசாலையில் உரிய பாடங்களைப் பூர்த்தி செய்வதில்லை. இதனால் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லாத மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, இது குறித்து கல்வி அமைச்சும், மத்திய மாகாணக்கல்வி அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு மலையகப் பெற்றோர் மற்றும் மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி

**மேடம்:**
புத்திசாலித்தனமாகப் பேசிக் காரியங்களைச் சாதிக்கும் நாள். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட்டுப் பணச்செலவுகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பல நாள்களாகத் தள்ளிப் போன விடயங்கள் சாதகமாக நடக்கலாம்.

**இடபம்:**
தொலைபேசி வழியில் முக்கியமான செய்தி கேட்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உறவினர்களுடன் சேர்ந்து நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள். நண்பர்கள் சிலருக்காகப் பிணை கொடுக்க நேரிடலாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சைத் தவிர்க்கவும்..

**மிதுனம்:**
இனிமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாகப் பார்க்காத உறவினர் ஒருவரைத் திடீரெனப் பார்க்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். நீங்கள் ஆசைப்பட்ட பொருள்களைச் சிலர் கொடுக்கலாம்.

**கடகம்:**
சொல்வாக்கைக் காப்பாற்றிச் செல்வாக்குப் பெறும் நாள். மற்றவர்கள் முடியாது என நினைத்துக் கைவிட்ட வேலை ஒன்றை நீங்கள் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பெற்றோர் உங்களிடம் அதிக அன்பு காட்டலாம். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். கலைஞர்கள் ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவர். நல்லது நடக்கும்.

**சிங்கம்:**
எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறக் கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்பீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை பல இடங்களுக்கு அலைந்து திரிந்து வாங்கலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சோம்பல் உண்டாகும்.

**கன்னி:**
பிள்ளைகளின் செயற்பாடுகளால் கோபம் அடையலாம். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். அயலார் இடையேயான பிரச்சினையைத் தீர்த்து வைப்பீர்கள். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று முடியாமல் போகலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

**துலாம்:**
ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். எதிர்பாராத இடத்தில் நண்பர் ஒருவரைச் சந்திப்பதால் பெருமை அடைவீர்கள். பழகிய சிலர் மூலம் உதவி கிடைக்கலாம். அலைச்சல், திரிச்சல் இல்லாமல் சில வேலைகளை இருந்த இடத்தில் இருந்தே முடிப்பீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**
புதிய சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள். பிரபல மாணவர் ஒருவரின் சந்திப்பு நிகழலாம். தாய் வழி உறவுகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகிப் பாசம் அதிகரிக்கும். நல்லவர், கெட்டவர் எனப் பார்க்காமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. தம்பதியர் இடையே பாசம் கூடும்.

**தனுசு:**
உங்களை நம்பி சிலர் முக்கிய வேலைகளை ஒப்படைப்பதால் அதிக சிரமங்களுக்கு ஆள்படலாம். ஒருவருக்கு ஆதரவாக நீங்கள் எடுத்த முடிவு பலருக்கும் பலன் தரலாம். நண்பர்களுக்கு நல்ல புத்திமதி சொல்வீர்கள். மருத்துவச் செலவுகளைத் தவிர்க்க உடல் நலத்தில் கவனம் அவசியம். திட்டமிட்ட வேலைகளில் தடை ஏற்படலாம்.

**மகரம்:**
நினைத்தது நடக்க வேண்டும் எனப் பிரார்த்தனை மேற்கொள்வீர்கள். சக ஊழியர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். சில விடயங்களில் எதிர்பார்த்ததை விட அதிக வருமானம் கிடைக்கலாம். உறவினர்களுக்காகச் சில செலவுகளைச் செய்யலாம். சோர்வு விலகிப் புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்:**
காலைமுதல் மாலைவரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். ஆடம்பரப் பொருள் ஒன்றை வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உங்களின் செயற்பாடுகளைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப் படலாம். பணத் தேவைகள் பூர்த்தியாகப் புதிய வரவுகள் வந்து சேரும். குடும்பத்தினர் மீதான பாசம் அதிகரிக்கும்.

**மீனம்:**
எதிலும் அதிக கவனமுடன் செயற்பட வேண்டும். சிறிய குடும்பப் பிரச்சினை ஒன்றை நினைத்துப் பெரியளவில் கவலைப்படுவீர்கள். பொது விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வரவுகளை விடச் செலவுகள் அதிகரிக்கும். வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். கடனாகக் கொடுத்த பணம் ஒன்று வரலாம்.

# டில்லியின் உறவுகள் பலப்படுகிறது கொழும்புடன்

அண்மைய நாள்களில் இந்தியாவின் அரச உயர்மட்டக் குழுக்களின் கொழும்புக்கான உத்தியோகபூர்வப் பயணங்கள் அதிகரித்திருப்பதானது, இலங்கையுடனான புதிய, பரந்துபட்ட இருதரப்பு உறவினை இந்தியா ஏற்படுத்த முனைகிறது என்பதையே காட்டுகிறது.

இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உயர்மட்டத் தூதுக்குழுக்கள் அடிக்கடி மேற்கொள்ளும் பயணங்களின் பின்னணிதான் என்ன?

அனைத்துலக வல்லரசுகள் ஆசியாவிற்கு குறிப்பாகச் சீனா மற்றும் இந்தியாவின் சார்பாகச் செயற்பட ஆரம்பித்திருப்பதன் விளைவுகள்தான் இவை.

கடந்த பல நூற்றாண்டுகளாகத் தாம் கொண்டிருந்த நிலைப்பாடு எதுவோ அதனை மாற்றும் வகையிலேயே அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் தற்போது செயற்பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட சில பிராந்தியங்களிலுள்ள சிறிய தேசங்களும் தமக்கானக் காத்திரமான அடையளங்களுடன் மிளிரும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தனது அயல் நாடாகிய சிறிலங்காவிற்குள் தன்னுடைய நெடுநாள் பகை நாடொன்று உள்நுழைவதை இந்தியா விரும்பவில்லை.

இந்தியாவின் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் கடந்த டிசெம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் இலங்கை வந்திருந்தார். இருதரப்புப் பாதுகாப்புப் பேச்சுக்கள், இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுக் கடற்படைப் பயிற்சிகள், கரையோரக் காவல் சேவைகளைப் பலப்படுத்துதல், இலங்கையின் படைத்துறைக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் வகையில் மேலுமதிக படைத்துறைப் பயிற்சிகள் மற்றும் உதவிகள் போன்ற பலதரப்பட்ட விடயங்கள் இந்தியப் பாதுகாப்புச் செயலாளரது கொழும்புக்கான பயணத்தின் போது கலந்துரையாடப்பட்டிருக்கிறன.

இலங்கையின் பாதுகாப்பு நடைமுறைகளை வலுப்படுத்தும் வகையிலேயே இந்தியா செயலாற்றுகிறது என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

இலங்கைக் கடற்படைத் தளபதி தேவையேற்படுமிடத்து இந்தியக் கடற்படைத் தளபதியுடன் நேரடித் தொடர்பாடல்களை ஏற்படுத்த முடியும் என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான கடல் எல்லையில் குறிப்பட்ட ஒரு மீனவர் தவறாக நடந்தாலும் அது இரண்டு நாடுகளினதும் இருதரப்பு உறவில் தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதால் இது அவசியமானதொரு தீர்மானமே.

குறிப்பட்ட இந்தப் புதிய அணுகுமுறையானது இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படும் ஆள்கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருள்கள் இலங்கைத் தீவுக்குள் கடத்தப்படுவதை இல்லாது செய்வதற்குமான வினைத்திறன்கொண்ட வழிமுறையாக அமையும் என்று நம்பப்படுகிறது.


இலங்கை இராணுவத்தின் யாழ். மாவட்டப் படைத்தளதியை 'அமைதியின் ஜெனரல்' என இந்தியா அங்கீகரித்திருந்ததும் தமிழ்நாட்டுக்கான இந்திய இராணுவத் தளபதி யாழ்ப்பாணத்திற்குப் பயணம் மேற்கொண்டதும் இலங்கைப் படைகளின் [illegible] கட்டியெழுப்பும் முதன்மையான அம்சங்களாகக் கருதப்படுகின்றன. இலங்கையில் அதிகரித்துச் செல்லும் சீனச் செல்வாக்கினைச் சமப்படுத்தும் ஒரு முனைப்பாகவே இலங்கைக்கான படைத்துறைசார் உதவிகளை வழங்க இந்தியா முன்வந்திருக்கிறது என ஆய்வாளர்கள் சிலர் நம்புகிறார்கள்.

எவ்வாறிருப்பனும், இந்திய பாதுகாப்புச் செயலாளரின் பயணத்தின் போது தோளில் வைத்துப் பயன்படுத்தும் ஏவுகணைகள் மற்றும் ராடார்கள் போன்ற படைத் தளபாடங்களை இலங்கைக்கு வழங்கும் இந்தியாவினது முடிவானது போர் இடம் பெற்ற காலத்தில் இந்தியா வழங்கிய படைத்தளபாட உதவிகளின் ஒரு அங்கமே என ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் நாட்டின் தென் பகுதியான அம்பாந்தோட்டையில் சீன நிதியுதவியுடன் துறைமுகம் உருவாக்கப்பட்டமை சூடான விவாதங்களுக்கு வழிசெய்திருந்தது.

இலங்கை இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் மத்தியில் அமைந்திருப்பதனால் தீவின் எந்தப் பாகத்திலும் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படுமிடத்து அது மூலோபாய முக்கியத்துவத்தினைப் பெற்றுவிடும். இலங்கையின் வரலாற்றில் நிலைமை இதுவாகத்தான் இருந்திருக்கிறது.

இரண்டாம் உலகப்போர் இடம்பெற்ற காலப் பகுதியில் தீவின் மேற்குப் புறத்தே கொழும்பில் அமைந்திருந்த துறைமுகம் யப்பானிய யுத்த விமானங்களின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது. அதே போல 1980களில் காங்கேசன்துறைத் துறைமுகமானது இந்திய அமைதி காக்கும் படையினருக்




நெருக்கம்: இலங்கை - இந்திய பாதுகாப்புச் செயலர்கள்

கான பிரதான பின்தள விநியோகத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தது. பனிப்போர் இடம்பெற்ற காலப் பகுதியில் கிழக்கே திருகோணமலைத் துறைமுகத்தின் மீது ஐக்கிய அமெரிக்காவின் கண் விழுந்திருந்தது.

அம்பாந்தோட்டைத் துறைமுகமானது இந்தியாவிலிருந்து குறிப்பட்ட தூரத்தில் இருந்தாலும் அது மிகவும் முதன்மையான அனைத்துலகக் கப்பல் போக்குவரத்துப் பாதைக்கு அருகாக உள்ளது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தினை அமைப்பதற்கான அழைப்பினை இலங்கை முதன்முதலில் இந்தியாவிடமே விடுத்திருந்தது. இந்தத் துறைமுகத்தினை அமைப்பதற்கான வாய்ப்பு சீனாவின் கைகளுக்குச் சென்று சேர்வதற்கு முன்னர் அமெரிக்காவிற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உறவுகள் பலப்படும் தருணம்: ஜனாதிபதி மஹிந்தவுடன் இந்திய பாதுகாப்புச் செயலாளர்

1970 மற்றும் 1980ம் ஆண்டுகளில் இடம்பெற்ற ஆயுத வழியிலமைந்த கிளர்ச்சிகளின் போது அம்பாந்தோட்டைப் பிராந்தியத்தில் ஆயிரக்கணக் கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. வறுமை மற்றும் மோசமான நிலைமையே இந்த ஆயுத வழி முறைக் கிளர்ச்சியின் முக்கிய காரணிகள். தற்போது இந்தப் பிராந்தியத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த நவீன துறைமுகம் அம்பாந்தோட்டைப் பிராந் தியத்திற்கு வளம் சேர்க்கும் என எதிர்பார்க்கப்படு கிறது.

நேற்று இலங்கை எவ்வாறிருந்ததோ அவ்வாறு இன்றில்லை. நாளுக்கு நாள் அது வளர்ச்சிப் பாதை யில் சென்றுகொண்டிருக்கிறது. தனது ஒரேயொரு அயல் நாடாம் இந்தியாவினைப் பகைத்துக்கொள் ளாமல் அதனுடனான உறவில் எந்தவிதமான பங் கத்திற்கும் இடமளிக்காமல் தனக்கு நன்மையளிக் கும் வகையில் அனைத்துலக உறவுகளை இதுவரை இலங்கை வினைத்திறனுடன் கையாண்டிருக் கிறது. குழப்பங்கள் பல நிறைந்த இந்தியாவிற்கு அருகேயிருக்கும் உறுதிமிக்க நாடு இலங்கை.

அந்தவகையில் இந்தியாவிற்கும் இலங்கைக் கும் இடையிலான இருதரப்பு உறவில் அம்பாந் தோட்டைத் துறைமுகம் ஒரு முக்கிய விடயமாகத் தெரியவில்லை.

''இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையி லான உறவினை வேறு எந்த நாடுகளின் நலன் களை விலையாகக் கொடுத்து வலுப்படுத்தும் எந் தத் தேவையும் இங்கில்லை. வளம் மிக்க, உறுதி யான இலங்கை உதயமாவதற்குத் துணை நிற்பது தான் எங்களது முழுமுதல் நோக்கம்'' என அண்மை யில் இலங்கைக்குப் பயணம் செய்திருந்த இந்தி யாவினது வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறுகிறார்.

அமைச்சர் கிருஷ்ணாவின் பயணத்தின் போது கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையில் முக்கி யமான சில வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத் திடப்பட்டன. அதேநேரம் இரண்டு துணைத் தூதர கங்களும் திறக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங் கிய யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு துணைத் தூதர கத்தையும் தென்முனையிலுள்ள அம்பாந்தோட்டை யில் பிறிதொரு துணைத் தூதரகத்தையும் இந் தியா அமைத்திருக்கிறது.

போருக்குப் பின்னான மீள்கட்டுமாணம், மின் விநியோகத் திட்டங்கள், தெற்குக்கும் வடக்குக் கும் இடையிலான ரயில் பாதை நிர்மாணம், இந்தி யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான கப்பல் சேவையினை மீளவும் ஆரம்பித்தல் உள்ளிட்ட பல திட்டங்களை இந்தியா முன்னெடுத்து வருகி றது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையி லான கப்பற் போக்குவரத்து இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான தொடர்பு களை அதிகரிக்கும்.

அதேசமயம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியது அவசியமா னது என்ற அமைச்சர் கிருஷ்ணாவின் கருத்துடன் ஒத்துப்போகாத வேறுபட்ட நிலைப்பாட்டினையே இலங்கையின் உயர்மட்டம் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது அரசியல் தீர்வினை ஏற்படுத்துவது எவ்வாறு என்பதிலேயே இரு தரப் புக்களுக்கும் இடையில் கருத்துவேறுபாடுகள் அதிக முள்ளன.

முன்வைக்கப்படும் அரசியல் தீர்வானது உள்ளி ருந்து உருவானதாக இருக்கவேண்டும் என இலங்கை அரசு விரும்புகின்ற அதேநேரம் 13ஆவது அரசிய லமைப்புச் சீர்திருத்தத்தின் அடிப்படையிலேயே தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என இந்தியா வாதிடுகிறது.

சரியாகக் கட்டமைக்கப்படாத தீர்வுகள் இனப் பிரச்சினைக்கு முன்வைக்கப்படுமிடத்து அது இலங்கை-இந்தியா இடையிலான இருதரப்பு உறவினைப் பெரிதும் பாதிக்கும் என்பதால் நிதா னமாகவும் மிகுந்த அவதானத்துடனும் கையாள வேண்டிய விடயமிது.

இன்றைய நிலையில் இலங்கையின் மொத்த சனத்தொகையில் வெறும் 15 சதவீதமானவர்கள் மாத்திரமே நாட்டினது வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் வாழ்ந்து வருகிறார்கள். வடக்கினை விடக் கிழக்கில் நிலைமை வித்தியாசமாக உள்ளது. இங்கு சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லீம் கள் ஆகிய சமூகத்தவர்கள் வாழ்ந்துவருகிறார்கள்.

இலங்கையின் ஏனைய மாகாணங்களில் குறிப் பிட்டுக் கூறக்கூடிய தொகையுடைய தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்ந்து வருகிறார் கள். கொழும்பினைப் பொறுத்தவரையில் சிங்கள வர்களல்லர், தமிழர்கள்தான் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகிறார்கள். ஆதலினால் இன அடிப் படையில் இரண்டு மாகாணங்களை ஒன்றிணைப் பது மாத்திரம் பிரச்சினையினைத் தீர்த்துவிடப் போதில்லை என்பது இலங்கை அரசின் வாதம்.

எவ்வாறிருப்பினும் இரு தரப்புக்களுக்கும் இடையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டியது மிக அவசியம். இந்த அதிகாரப் பகிர்வானது இலங் கையர்கள் அனைவர்களுக்கும் திருப்திதரும் வகையிலும் அமையவேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்கள் தேசிய ரீதியிலான அரசியலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் அதே நேரம் இன ரீதியிலான கருத்துக்களை முன்வைக் கும் அரசியல் கட்சிகளை ஒதுக்கி ஓரம்கட்டும் வகையில் இந்தத் தீர்வு அமையவேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் வாழ்வில், புலம்பெயர் வாழ் தமிழர்களின் அரசியல் முடிவுகள், விருப்புக் கள் திணிக்கப்படக் கூடாது.

நிலைமை சிக்கல் நிறைந்ததுதான். இருப்பி னும் இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை பெரும்பாலான விடயங்களில் அரசின் செயற்பாடுகளுடன் ஒத்துப்போவது நல்ல தொரு அம்சம். ஆதலினால் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு உள்ளிருந்து உருவாக்கப்படும் ஒரு தீர்வுதான் சாலப் பொருத்தமானது. இந்தத் தீர்வினை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இந்தியா தாராள ஆதரவினை வழங்கவேண்டும்.

இலங்கையுடனான இருதரப்பு உறவென்று வரும்போது இந்தியா நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய முதன்மையான விடயங்களில் ஒன்று. இலங்கை தனக்கு உதவி தேவையென முதலில் கேட்பது இந்தியாவிடம்தான். இந்தியா இந்த உதவிகளை வழங்க மறுக்கும் போதுதான் கொழும்பு வேறு நாடுகளிடம் செல்கிறது.

உதாரணமாக விடுதலைப் புலிகளுடனான போரின்போது தேவையான ஆயுதத் தளபாடங்களைப் பெறுவதற்காகச் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில்தான் இலங்கை தங்கியிருந்தது.

எவ்வாறிருப்பினும் பாகிஸ்தான் மற்றும் சீனாவிட மிருந்து இலங்கை ஆயுதத் தளபாடங்களைப் பெறும்போது இந்தியா பாதுகாப்பு ரீதியிலான அச் சுறுத்தலுக்கு உள்ளாகிறது எனக் கருதிவிட முடி யாது. எனவேதான் இலங்கை தொடர்பான விட யங்களைக் கையாளும்போது இந்தியா மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது அவசியமாகிறது.

# குழப்புவது எப்படி?



இந்த உலகத்தில் தெளிவாகப் பேசிக் குழப்புகிறவர்களும் உண்டு. குழப்ப மாகப் பேசி தெளிவுபடுத்து பவர்களும் உண்டு. அவர்களையெல்லாம் அடை யாளம் கண்டுகொள்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஒரு பெரிய திடலில் ஒருவன் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறான். அங்கே இருக்கின்ற புல்வெளியில் அதிகமான ஆடுகள் மேய்ந்து கொண்டிருக் கின்றன. அவற்றில் கறுப்பு, வெள்ளை நிற ஆடு கள் இருந்தன.

அங்கே ஆடு மேய்க்கிறவன் ''எதிலும் தெளிவாக இருக்க வேண்டும்'' என்று நினைக்கிறான். அதாவது குழப் பப்படுவது, குழம்புவது இரண்டுமே அவனுக்குப் பிடிக்காது. அந்தவேளையில் அந்தவழியாக ஒரு பெரியவர் வந்தார்.

''தம்பி இங்கே வா!'' என்றார். அவனும் வந்தான்.

''நீதான் இங்கே ஆடு மேய்க்கிறவனா''என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றான்.

''உன்னிடம் சில விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா?''என்றார்.

''தெரிந்துகொள்ளலாம். எதுவாக இருந்தாலும் தெளிவாகக் கேளுங்கள். பதில் சொல்கிறேன்...!'' எனப் பதில் கூறினான்.

''இந்த மந்தையில் மொத்தம் எத்தனை ஆடுகள்...?'' எனப் பெரியவர் கேட்டார்.

''பார்த்தீர்களா? குழப்பமாகக் கேட்கிறீர்கள்...!'' என்றான் அவன்.

''வேறு எப்படிக் கேட்க வேண்டும் என நீ நினைக்கிறாய்?'' என்றார் பெரியவர்.

''நீங்கள் கறுப்பு ஆட்டைக் கேட்கிறீர்களா? வெள்ளை ஆட்டைக் கேட்கிறீர்களா? '' என ஆடு மேய்ப்பவன் கேட்டான்.

''கறுப்பு ஆடு எத்தனை?'' என்றார் பெரியவர்.

''அப்படிக் கேளுங்கள்...கறுப்பு ஆடு ஐம்பது இருக் கின்றன'' என்றான் அவன்.

அதற்குப் பெரியவர் ''வெள்ளை ஆடு எத்தனை?'' எனக் கேட்டார்.

''அதுவும் ஐம்பதுதான்!'' என்று பதிலளித்தான் அவன்.

பெரியவர் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

''இந்த ஆடுகளெல்லாம் ஒரு நாளைக்கு எவ்வளவு புல் மேய்கின்றன''

''மறுபடியும் குழப்புகிறீர்கள்!'' எனக் கூறிவிட்டு,

''என்ன சொல்கிறீர்கள் கறுப்பு ஆடா? வெள்ளை ஆடா? எவ்வளவு புல் மேயும் எனக் கேட்கிறீர்கள்''

''கறுப்பு ஆடு எவ்வளவு புல் மேயும்?''என்றார்.

''பத்து கிலோ புல் சாப்பிடும்!'' என்றான் அவன்.

''சரி வெள்ளை ஆடு... எவ்வளவு புல் மேயும்'' என்றார் பெரியவர்.

''அதுவும் பத்துக் கிலோ சாப்பிடும்'' என்றான்.

பெரியவர் மெதுவாகக் குழம்ப ஆரம்பித்தார். அடுத்த கேள்வி ''இதெல்லாம் ஒரு நாளைக்கு எவ்வளவு பால் கறக்கும்?'' எனக் கேட்டார் பெரியவர்.

''மறுபடியும் தெளிவாகக் கேளுங்கள். கறுப்பு ஆடா? வெள்ளை ஆடா? '' என்று கேட்டான் ஆடு மேய்ப்பவன்.

''கறுப்பு ஆடு..! எவ்வளவு பால் கறக்கும்?''

''ஐந்து லீற்றர் கறக்கும்!'' எனப் பதிலளித்தான்.

''வெள்ளை ஆடு...? எவ்வளவு லீற்றர் கறக்கும் '' எனக் கேட்டார்.

''அதுவும் ஐந்து லீற்றர் கறக்கும்'' என்றான்.

பெரியவர் கொஞ்சம் குழப்பத்தோடு யோசிக்க ஆரம்பித்தார். அதன்பின் கேட்டார்.

''தம்பி.. எல்லாவற்றுக்கும் பதில் ஒன்றாகத் தானே இருக்கின்றது'' எனப் பெரியவர் கூறினார்.

''ஆமாம்!''

''அப்படி இருக்கும் போது... எதற்காகப் பிரித்துப் பிரித்துக் கேட்கச் சொன்னாய்...?'' என மீண்டும் பெரியவர் கேட்டார்.

''ஓ... அதைக் கேட்கிறீர்களா?.. இதை ஆரம்பத்திலேயே கேட்டிருந்தால் தெளிவாகச் சொல்லியிருப்பேனே.. எதற்காக அப்படிக் கேட்கச் சொன்னேன் என்றால்....

இங்கே இருக்கும் கறுப்பு ஆடுகள் எல்லாம் எதிர் வீட்டுக்காரனுக்குச் சொந்தமானவையாகும்'' எனக் கூறினான் அவன்.

இதைக் கேட்ட பெரியவர் ''சரி வெள்ளை ஆடுகள், யாருக்குச் சொந்தமானவை'' எனக் கேட்டார்.

''அவையும் எதிர் வீட்டுக்காரனுக்குச் சொந்தம்!'' எனக் கூறினான்.

எப்படியிருக்கிறது குழப்பம்?

தென்கச்சி. கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான்- சைக்கிள் விபத்தில் வயோதிபர் காயமடைந்தார்

தென்மராட்சி, ஜன.15

ஏ-9 வீதி கைதடி நுணாவில் பகுதியில் வானும் - சைக்கிளும் மோதியதில் வயோதிபர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சரவணமுத்து வினாசித்தம்பி (வயது 80) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வீதிக் குழிகளுக்குள் சைக்கிள் சில்லுகள் இறங்கியதில் தூக்கி வீசப்பட்டு மீசாலையைச் சேர்ந்த எஸ். இராசேந்திரம் (வயது60), கொடிகாமத்தைச் சேர்ந்த உதயசூரியன் (வயது 60), அவரது மகளாகிய இராஜேஸ்வரி ஆகியோர் காயமடைந்து சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-207)


### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 20.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

★சுட்டி பாம் சென்ரர் வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர் தொண்டமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944
(109021)


### ஆறாம் ஆண்டு நினைவும் 25ஆவது பிறந்த தினமும்



ஜெயக்குமாரன் தனுசன்

மலர்வு 04★05★1986

உதிர்வு 15★01★2005

ஆண்டாறு ஓடி மறைந்தாலும்-உன் நினைவு
எம் நெஞ்சை விட்டகலாது
கண்ணிமைப் பொழுதெல்லாம் கண்ணெதிரே
நிறைந்தவனே....
கதிகலங்க வைத்துவிட காலம் துணிந்தானே!
நிலையற்ற இவ்வுலகில் எமக்கு நீ-

நிலையான ஒரு செல்வமடா
தந்தையைப் பாராயோ, பெற்ற அன்னையவள்
உதிரத்தின் துடிப்பினைப் பாராயோ-
உடன் பிறப்புக்களின்
உருக்குலைவைப் பாராயோ
உன் அன்பிற்கு எவையும் ஈடாகுமா?

பழனி ஆண்டவர் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.
கஜன் (நண்பன்).

(108782)

## ஜீவனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.15

போலி 'ரிக்கெற்' விற்பனை செய்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரினை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 6ஆம் திகதி யாழ். நகரில் போலி ரிக்கற்றினை விற்பனை செய்த தாகக் கூறப்பட்டுப் பொதுமக்களால் பிடிக்கப்பட்ட ஜீவன் என்பவரை யாழ். பொலிஸார் கைது செய்து யாழ். மாவட்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த நீதிவான் சந்தேக நபரினை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-9)

## முகமாலையில் விபத்து இருவர் படுகாயம்

தென்மராட்சி, ஜன. 15

படையினரின் ட்றக்கும் ஹன்ரர் வாகனமும் மோதிக்கொண்டதில் இருவர் படுகாயமடைந்தனர்.

முகமாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் முழங்காவிலைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி சுஜீதரன் (வயது-20), கரந்தாய், பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கோகுலதாஸ் (வயது -20) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ - 207)

## வினைத்திறன்காண் பரீட்சை பெப்ரவரியில்

யாழ்ப்பாணம், ஜன.15

வடமாகாணத்தில் கடமைபுரியும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சேவையைச் சேர்ந்த சகல பதவியினருக்கும் அடுத்தமாதம் இரண்டாவது வினைத்திறன்காண் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதுவரை இப்பரீட்சைக்கு விண்ணப்பித்திருக்காத முதலாவது வினைத்திறன்காண் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் அனைத்துப் பட்டதாரி உத்தியோகத்தர்களும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என வடமாகாண அரசசேவைப் பட்டதாரி அலுவலர் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

## மீள்குடியமர்ந்தோருக்கு உதவிப் பொருள்கள்

தென்மராட்சி, ஜன.15

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 56 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயத்தினால் மீள் குடியமர்வுக்கான உதவிப்பொருள்கள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் வைத்து இப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. (ம-207)

### விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 12 . 01 . 1966



விண்ணில் 17 . 12 . 2010

அமரர் இராசநாயகம் பிரபைதாஸ் (பிரபு)

உன் வழியை ஆண்டவரிடம்
ஒப்படைத்து விடு அவரையே நம்பி
அவரே உன் சார்பில் செயலாற்றுவார்.

உங்கள் ஆத்மா இறைவனடியில் இளைப்பாறிச் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம். கடந்த (17.12.2010) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்ப உறுப்பினரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அனுதாபச் செய்திகள் மூலம் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

88/4, ஆசீர்வாதம் ஒழுங்கை,
கிழக்குத் தெரு, வல்வெட்டித்துறை.

தாய்- இ.சற்குணமலர்
மற்றும் குடும்பத்தினர்.
(சி/574577)

### 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 03.01.1951



மறைவு 15.01.2009

மரியாம்பிள்ளை யோண்மேரி



தோற்றம் 14.12.1981

மறைவு 22.10.2008

யோண்மேரி லூட்ஸ் சுபாஷினி

தோற்றம் 10.04.1991



மறைவு 15.01.2009

யோண் மேரி யூட் சுஜீவன்



தோற்றம் 03.05.1996

மறைவு 24.01.2009

யோண் மேரி யூட் சுபாஷன்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எங்களைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
என்றும் எங்கள் இதயங்களில் இருக்கும்
எங்கள் அன்புத் தெய்வங்களே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முனை கடற்கரை வீதி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(108785)


## Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

விசேட கட்டணக்கழிவுடன்
O/L பரீட்சை எடுத்த மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள் |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/-
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i -16.01.2011-9am or 3pm
Batch ii -19.01.2011-9am or 3pm
Batch iii -21.01.2011-9am or 4pm
Batch iv -22.01.2011-9am or 4pm

25/01/2011 க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கம்பனிக்கணக்குகளை உள்ளடக்கி முன்னணி Accounting Software களினூடாக
Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Book + MYOB
Tally Accounting Package
Tally Date மாற்றலாமா?? முடியும்.....
Course Fee - 1000/=
ஆரம்பம் : 22/01/2011 23/01/2011 02.00PM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்குரோதத்தை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிடாதீர்கள்

## பத்திரிகையாளர்களிடம் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 15

"இனக்குரோதத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிடாதீர்கள். மாறாக இனச்சமத்துவம், நல்லெண்ணம், சமாதானம் ஆகியவற்றை வளர்க்கக் கூடிய செய்திகளை வெளியிடுங்கள். அதுவே நாட்டுக்கு இன்று நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த சேவை"- என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஊடகவியலாளர்களை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் காலை அலரிமாளிகைக்கு அழைத்து அவர்களுடன் கலந்து உரையாடினார். முக்கியமாகத் தமிழ்ப் பத்திரிகைகளைக் கருத்தில் கொண்டே அவர் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை. பத்திரிகைகள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

"பத்திரிகைச் சுதந்திரம் இருக்கிறது என்பதனால் எடுத்ததற்கு எல்லாம் அரசின் மீது குறை குற்றம் சுமத்திக்கொண்டு இருப்பது சரியல்ல. குறைகள் இருப்பின், அவற்றை முறைப்படி ஆதாரத்தோடு சுட்டிக்காட்டவேண்டும்" என்றார் ஜனாதிபதி.

"பிரபாகரனின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு இன்னமும் சிலர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். உலக நாடுகளுக்குப் பொய்யான தகவல்களைக் கொடுத்து இந்த நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வருகிறார்கள்.

பிரபாகரன் கேட்டதைக் கொடுத்துவிட முடியாது. தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகிறோம். மேலும் கூடிப் பேசி நல்ல முடிவுக்கு வருவோம்" என்று ஜனாதிபதி தெரிவித்தார். (சி)

# வெள்ளத்தால் ரூபா 50 பில்லியன் இழப்பு

கொழும்பு, ஜன. 15

கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவி வந்த மோசமான கால நிலையால் நாட்டின் பொருளாதாரத்திற்கு 50 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் ஏற்பட்ட மழையால் சுமார் ஆறு பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மழை வெள்ளம் காரணமாக பொதுமக்களின் சொத்துகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் சரியான மதிப்பீடுகள் இது வரையில் செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கு மாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, அண்மைய நாட்களில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் இது வரையில் 15 பேர் உயிரிழந்தனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். கிழக்கில் கடந்த இரு நாள்களாக மழை சற்றுத் தணிந்திருந்தது. எனினும் வெள்ளம் வடியும் வீதம் மிக மந்தமாகவே இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

# இந்தியாவுக்கான 'கூகுள்' இணையத்தின் உபதலைவராக வல்வெட்டித்துறைத் தமிழர்

கொழும்பு, ஜன. 15

மக்ரோசொப்ட் நிறுவனத்தின் இந்தியாவிற்கான முன்னாள் முகாமைத்துவ இயக்குநரான ராஜன் ஆனந்தன் கூகுளின் இந்திய விற்பனை மற்றும் இயக்கங்களுக்கான உப தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

ராஜன் ஆனந்தனின் தந்தை வி.எஸ். குமார் ஆனந்தன் இலங்கையைச் சேர்ந்தவராவார். யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குமார்ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிந்தவர் என்பதுடன் பல கின்னஸ் சாதனைகளுக்கும் சொந்தக்காரர் ஆவார்.

கூகுளானது இந்தியாவில் சுமார் 2000 ஊழியர்களைக் கொண்டுள்ளது. இந்தியாவை வேகமாக வளர்ந்து வரும் ஒரு முக்கிய நாடாக இந்தியா கருதுகின்றது. இந்தியாவின் இணையப்பாவனையாளர்களின் விதம் வருடாந்தம் 50 வீதமாக வளர்ந்து வருகின்றது. (சி)

# உல்லாசப் பயணிகளில் இந்தியர்களே அதிகம்

கொழும்பு, ஜன. 15


கடந்த ஆண்டில் இலங்கை வந்த உல்லாசப் பயணிகளில் இந்தியர்களே அதிகம் என்று உல்லாசப் பயணத்துறை அமைச்சு வெளியிட்ட புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2010 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 822 இந்தியர்கள் இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாக வருகை தந்துள்ளனர்.

அடுத்தபடியாக ஒரு இலட்சத்து 5,496 பிரிட்டிஷார்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.2009 ஆம் ஆண்டிலும் இதே நிலைமையே காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் 83 ஆயிரத்து 634 இந்தியர்களும் 81 ஆயிரத்து 591 பிரிட்டிஷாருமே உல்லாசப் பயணிகளாக இலங்கைக்கு வருகை தந்தனர்.

2010 ஆம் ஆண்டு மொத்தமாக 6 இலட்சத்து 54 ஆயிரத்து 476 உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்திருக்கின்றனர். இந்தநிலையில் 2010 ஆம் ஆண்டில் உல்லாசப்பயணிகளின் வருகை 46.1 சதவீதத்தால் அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டு இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
மகிழ்ச்சிகரமான செழிப்புமிக்க தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



சுபிட்சம் மற்றும் பசுமையான சுற்றாடலை நோக்கிய எமது பயணத்தில் பங்காளராகச் சேர்ந்து கொள்வதற்கான இவ்வரிய வாய்ப்பினை நழுவ விடாதீர்கள்

NEEDWOOD
NEEDWOOD EMMAG (PVT) LTD.
N W HOLDINGS
ESTD 1968

எமது விசேட கொடுப்பனவு பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு அத்துடன் எமது விடுமுறை இல்லத்தில் இலவசமாக 2 நாட்களைக் கழிப்பதற்கு அல்லது வியத்தகு பரிசுப் பொதியினைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை அடைந்திட இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூப்பனை அல்லது அதன் பிரதியை நிரப்பி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பெயர்: ....................
விலாசம்: ....................
தொலை: ....................
வயது: ....................
தொழில்: ....................

இல.544B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:+ 94 021 4925670/2 மின்னஞ்சல்:needwoodjaffna@wow.lk

# வரணியில் விழிப்புக்குழு

வரணி- இயற்றாலைப் பகுதியில் விழிப்புக்குழு இயங்கி வருகிறது. கொடிகாமம் பொலிஸாரும் இந்தப் பகுதிப் பொதுமக்களும் இணைந்து விழிப்புக் குழுவை அண்மையில் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை விழிப்புக் குழு வின் செயற்பாடுகளைப் பொலிஸார் மேற்பார்வை செய்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(201-207)

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 194 சீட்டிழுப்புத் திகதி 13.01.2011

வெற்றி இலக்கங்கள்: 50 56 59 61 சுப்பர் இலக்கம்: 02

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 12,296,930/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 60749 | ரூ. 20/= | ரூ. 1,214,980/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 5439 | ரூ. 40/= | ரூ. 217,560/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 4780 | ரூ. 100/= | ரூ. 478,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 450 | ரூ. 200/= | ரூ. 90,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 119 | ரூ. 1,500/= | ரூ. 178,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 11 | ரூ. 3,000/= | ரூ. 33,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 12,296,930/= | |
| மொத்த எண்ணிக்கை | 71548 | | ரூ. 2,212,040/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,482,000/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

## வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 852 திகதி: 13.01.2011

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: Z

வெற்றி இலக்கங்கள்: 13 20 38 69

போனஸ் இல: 40

| கூட்டு | | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 11,608,990.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 310 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15392 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 215395 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 32223 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,611,560.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 11,959,743.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03,
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்காளர் இடாப்புகள் பார்வைக்கு

நெல்லியடி,ஜன.15

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபையின் தேர்தலுக்கான வாக்காளார் இடாப்பினை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என்று வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி நி.அன்னலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்த இடாப்பில் நீக்கப்பட்ட நிரல் சேர்க்கப்பட்ட நிரல் என்பவற்றை பார்வையிடலாம் என அவர் அறிவித்துள்ளார். (ம-319)


## கௌரவித்து ஆசிகூறிப் பாராட்டுகின்றோம்



இலங்கை அரசால்''கலாபூஷண''
கௌரவ விருதுபெற்ற நாதஸ்வர கலாநிதி
**V.K. பஞ்சமூர்த்தி**
(கோண்டாவில்) அவர்களையும்,
சிற்பக் கலாநிதி விஸ்வபிரம்மஸ்ரீ
**பாஸ்கரன்** (யாழ்ப்பாணம்)
அவர்களையும் தைத்திருநாளில்
கௌரவித்து ஆசிகூறி பாராட்டுகின்றோம்.
மேன்மேலும் விருதுகள் பல
பெறவேண்டுமென நயினை நாகபூஷணி அம்பாளையும்,
சுதுமலை புவனேஷ்வரி அம்பாளையும் வேண்டுகின்றோம்.

சர்வதேச இந்து மதபீடாதிபதி
சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்(நயினை - சுதுமலை).


## காணி துப்புரவு செய்த போது பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஜன.15

காணி துப்புரவுப் பணியில் ஈடுபட்ட பெண் பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் பளை, வண்ணார் கேணியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கண்ணப்பமூர்த்தி புஷ்பலதா (வயது-46) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

இவர் பளை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-207)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.15

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தையல் பயிற்சி நெறி நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 24 ஆம் திகதி இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எனவும் 25 ஆம் திகதி நேர்முகத் தேர்வு இடம்பெறும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். இதற்கான விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலகத்தில் பெறலாம் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ம-319)


## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பொஸ்கோ பாடசாலை முன்பாக அமைந்த ஒன்றரைபரப்புக் காணி, வீட்டுடன் விற்பனைக்குண்டு. அறைகள் (4) குளியல் அறை, குசினி, வாகனவசதி உண்டு.

தொடர்பு: 077 3477711

## கடை வாடகைக்கு

கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள (A9 வீதி) 7பரப்புக் காணியுடன் கூடிய புதிதாகக் கட்டப்பட்ட ஒவ்வொன்றும் 720 சதுர அடியுள்ள 2 கடைகள் உடன் வாடகைக்கு (கடை/ அலுவலகம்/ வங்கி ஆகியவற்றுக்கு உகந்தது) உண்டு.

தொடர்பு: 011 233 4923,
077 160 4836,077 933 9694

## முக்கிய அறிவித்தல்

நாளை (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் பளை நகர வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருக்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

பச்சிலைப்பள்ளி வர்த்தக சங்கம்,
பச்சிலைப்பள்ளி, பளை.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்ததும் நடக்கப் போவதும்



2007 ஆம் ஆண்டு ஆவணப் படம்.

யாழ். குடாநாட்டு மக்களின் அமைதியும் நிம்மதியும் மீண்டும் கேள்விக்குறியாக மாறத் தொடங்கியுள்ளது. கடந்த இரு மாதங்களுக்குள் ஐந்து துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுள்ளன.

மூவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் மூவர் காயப்பட்டனர். பத்தாதற்கு நாயொன்றும் சுட்டுக் கொல்லப்பட்டது. சம்பவங்கள் தொடர்பாக இராணுவத்தினர் இருவரும் அவர்களுடைய உதவியாளர்கள் எனக் கூறப்படும் இருவருமாக நான்கு பேர் மட்டுமே இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதே மக்கள் முன்னுள்ள மிகப் பெரிய கேள்வி.

சங்கானையில் பிரதம குருவும் மகன் மார் இருவரும் சுடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் படையினர் தவிர்ந்த ஏனைய இருவரும் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

யாழ்.குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்து பதினைந்து வருடங்கள் ஆகின்றன. இதற்கு முன்னர் இங்கு நடந்த கொலைகளுக்குப் புலிகள் இயக்கம் மீது பழிபோடப்பட்டது. எதிர்ப்பழி இராணுவம் மீது போடப்பட்டது. ஆனால் போர் முடிந்து சுமார் இரு ஆண்டுகளாகி விட்ட நிலையில் இப்போது நடக்கும் கொலைகளுக்கு யார் காரணம் என்பது தெரியவரவில்லை.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை இதற்குமுன் நடந்த இப்படியான நிகழ்வுகளுக்கு என்னதான் நடந்தது எனத் திரும்பிப் பார்ப்பது பொருத்தமானது.

கைதடி மாணவி கிரிசாந்தி படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கோப்ரல் உண்மையைக் கூற 1997, 1998 ஆண்டு பகுதிகளில்கடத்தப்பட்டவர்கள் காணாமல் போனவர்கள் சம்பந்தமாக செம்மணிப் புதை குழி விவகாரம் முளைத்தது. விடயம் வெளியே தெரியவந்ததும் செம்மணிப் புதைகுழிகள் அகலப்பட்டு கண் துடைப்பு விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இப்போது அது கிடப்பில் போடப் பட்டு விட்டது.

தொடர்ந்தும் யாழ். மாநகர சபையின் துரையப்பா விளையாட்டு மைதான மலசலக்குழி விவகாரம் முளைத்தது. அதனைத் தொடர்ந்து தோண்டாது விசாரணை செய்யாது ஓய்ந்த நிலையில் வன்னி யுத்தம் ஆரம்பமாகியது.

இந்த நிலையில் மீண்டும் 2006, 2007, 2008ஆம் ஆண்டில் கடத்தல்கள் காணாமல் போதல் சந்திக்குச் சந்தி, வீட்டுக்கு வீடு கொலைகள் இடம் பெற்றன. இந்தச் சம்பங்கள் இடம்பெற்ற போதும் யாழ். குடாநாட்டில் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினரும் ஏன் முப் படையினரும் பொலிஸாரும் யாழ். குடாநாட்டு மக்களின் ''நல்வாழ்வும் அமைதியும்'' வேண்டிக் கடமையில் ஈடு பட்டிருந்தார்கள்.

புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள்; மக்கள் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்டு விட்டார்கள்; மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் முகமாக எமது படையினர் தமது உயிரையும் மதியாது தமிழ் மக்களைக் காத்து வருகின்றார்கள்; என்று இன்று சொல்லப்படுகிறது. ஆனாலும் கொலைகளும் கொள்ளைகளும் கடத்தல்களும் காணாமல் போதல்களும் தொடர் கதையாகவே இருக்கின்றன.

மீண்டும் யாழ். குடாநாட்டு மக்களின் நிம்மதியும் அமைதியும் போய்விட்டது. சந்திக்குச் சந்தி, வீதிக்கு வீதி படையினர் நின்றும் தமிழ் மக்களுக்கு அமைதியான வாழ்வும் நிம்மதியான வாழ்வும் கிடைக்கவில்லை.

இந்தக் கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் என்ன காரணம்? என்பதை யாராலும் தெளிவாகக் கூறமுடியவில்லை. முன்னாள் போராளிகள்தான் காரணம் என்றார்கள். பின்னர் தனிப்பட்ட பின்னணிகள்தான் காரணம் என்றார்கள். இங்கே எங்களுக்கு ஓர் அமைச்சர் இருக்கிறார். பொலிஸாருக்கும் படையினருக்கும் முன்பாகக் கொலைகளின் காரணத்தை அவர் சொல்லிவிடுவார். மேற்சொன்ன காரணங்களைப் பகிரங்கமாக அவரும் மக்களிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் ஓரிரு நாள்களின் முன் ''சில சம்பவங்களில் சந்தேகம் இருக்கின்றன'' என்று அவரும் ஒத்துக் கொண்டார்.

இப்படி எல்லோரும் ஒரு புறத்தில் குழப்ப யாழ்ப்பாணம் வந்த பொலிஸ்மா அதிபரோ பயங்கரவாதச் செயல்களுக்கும் நடந்த சம்பவங்களுக்கும் தொடர்பில்லை என்று கட்டியம் கூறி இருக்கிறார். ஆனால் யாராலும் உண்மையான காரணம் என்ன என்பதையும் அதற்கான சூத்திரதாரிகள் யார் என்பதையும் சொல்ல முடியவில்லை.

இது எதைக் காட்டுகிறது என்றால் யாழ். குடாநாட்டில் முன்னர் நடந்த கொலைகள், கொள்ளைகள் கடத்தல்களுக்கு உரியவர்கள் எப்படிக் கண்டறியப்படாமல் போனார்களோ அதே போன்றே இப்போதும் நடக்கப் போகிறது.

இதேபோன்று அரச அதிகாரிகளும் சரி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்தூதித் தப்பிவிடமுடியாது. உண்மையில் என்ன நடக்கின்றது என்பதை மக்கள் அறிவார்கள். புரிந்து கொண்டும் உள்ளார்கள்.

மனித உரிமைகள் தினத்தில் வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வில் ஒரு சில பெற்றோர்கள் உண்மையைக் கக்கியதும் அதில் ஒருவர் இருவர் பொதுமக்களினால் சுட்டிக் காட்டப்பட்டமையும் கூட மக்களிடையே ஏற்பட்டுள்ள மனமாற்றத்தையே எடுத்துக் காட்டுகின்றது.


இன்று ஆரம்பமாகியுள்ள கொலைகளைத் திசை திருப்பலாம் என யாரும் கருதிச் செயற்பட்டால் அது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் செயலே அன்றி வேறு ஒன்றும் இல்லை.

ஆகையினால் கொலைகள் ஆரம்பித்துள்ள நிலையிலேயே நிறுத்த வேண்டும். உரியவர்கள் கைது செய்யப்பட வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தப் பட வேண்டும். இதனைக் கைவிட்டு வேடிக்கைபார்த்துக் கொண்டு கைகட்டி இருந்தால்!

வில்லவன்

---

## சிட்டுக் குருவி ஊர்வலம்



யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தின் எதிரே மருதமரத்தில் தனது கூட்டினுள் நுழைகின்றார் சிட்டுக்குருவியார். வளர்பிறைக் காலம் ஆனதினால் அதிகம் இருளாகவில்லை. கூட்டினுள் இருந்தவாறே தனது கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இயற்கைக் காட்சிகளை ரசிக்கின்றார். ஆங்காங்கே பளிச்சிடும் மின்குமிழ்கள், நெளிந்து வளைந்து சென்று கொண்டிருக்கும் பேருந்துகள், சிற்றூர்திகளின் அலங்கார மின் குமிழ்கள் என்று நகரின் இயற்கை வனப்பைப் பார்த்து மெய் மறந்தார் சிட்டுக்குருவியார். கொழும்பில் கறுவாக் காட்டில்தான் இருக்கிறாரோ என்ற சந்தேகம் சிட்டுக் குருவியாருக்கு ஏற்பட்டது. அப்படியே உறங்கி விட்டார்.

மெல்ல மெல்ல இருள் கலைந்து கிழக்கு வெளிக்கிறது. சிட்டுக் குருவியார் துயில் நீங்கிச் சுற்றுச் சூழலை நோட்டமிடுகின்றார். நேரம் காலை 7 மணி. சிட்டுக் குருவியார் தென் கிழக்குத் திசையில் 'ஜம்போ ஜெற்' எனப் பறக்கின்றார். கொழும்புத்துறை மீன் சந்தையில் உடைந்த சிறியதொரு கொங்கிறீற் கல்லின் மீது அமர்கின்றார்.

''துரை அண்ணை இஞ்சை வாருங்கோ. எப்படிப் பொங்கல் புதினங்கள்...''

''ஓம் அடாப்பா ராஜன்! எங்கடை பிள்ளையும் பொங்கலோட வாறன் என்று சொன்னவ. முந்திப் பிந்தியெண்டாலும் பிரான்ஸால வருவா போலை கிடக்குது... நான் இதிலை கறி பார்த்துக்கொண்டு போவம் என்று வந்தனான்''

''குடாநாட்டிலை பொங்கல் பெருவிழாவை அரச விழாவாக் கொண்டாட எல்லா ஏற்பாடும் நடக்கு தாம்.''

''பெரியவரும் வருவாராம்...?''

''ஏற்பாடுகள் விமரிசையாக நடக்குது. ஆனால் மழை, வெள்ளம் என்ற பிரச்சினையாலை அவர் வரமாட்டார் என்றதுதான் லேடஸ்ட் செய்தி. நிலைமை சுமுகமானா சங்குப் பிட்டிப் பாலத்தைத் திறக்கச் சில நேரம் வரக்கூடும்''

''இருந்தாலும் கிழக்கிலை சனம் அல்லோலலப் படும்போது இஞ்ச ஒரு விழா அவசியமோ அண்ணை!''

''தம்பி...! நீ சொல்லுறது சரிதான். வடக்கு, கிழக்கு எண்டு ஏற்கனவே பிரிஞ்சு கிடக்கு. இப்ப இதையும் செய்தால் இன்னும் பிரச்சினைதான் கூடும். தெற்கு அரசியல்வாதிகளுக்கு வடக்கு, கிழக்குப் பிரிஞ்சால் லாபம்தானே. ஆனால் தங்களையும் அரசியல்வாதி எண்டு இஞ்ச வேட்டி கட்டிக் கொண்டு திரியிறவையும் அதுக்குவால் பிடிக்கிறது தான் கவலை. எல்லாம் விதிப் பயன். நாங்கள் உதுகளைக் கதைச்சு அதுகளுக்கு மண்டையில ஏறப் போகுதே! அதை விடு.''

''ஓம் அண்ணை, இவர் பெரியவர் என்ன விழா கொண்டாட வெளிக்கிட்டாலும் மழை , புயல், வெள்ளம் என்று ஏதேதோ பிரச்சினைகள் எல்லாம் வருகுது. அது ஏன் அண்ணை....?''

''அடேய்! என்னை வம்பிலை மாட்டாமல் வந்த வேலையைப் பார்'' என்றபடி அவர் நகர்கிறார்.

''ஹீ... ஹீ...! நீங்கள் இப்ப இந்த விடயங்கள் பற்றி அதிகம் கதைக்கிறதில்லை. ஏன் அண்ணை?''

''காலத்துக்கு ஏற்ற மாதிரி வாழப் பழக வேணும் தம்பி. கொள்கைக்காகப் பேசுகிறவை, கொள்கைக்காகப் பேசட்டும். கொடுக்கல் வாங்கலுக்காகப் பேசுகிறவை, கொடுக்கல் வாங்கலுக்காகப் பேசட்டும். சமாந்தரக் கோடுகள் ஒரு காலமும் சந்திக்காதடாப்பா...!'' அவர் நகர்கிறார்.

துரை அண்ணையைப் பின் தொடர்ந்த குருவியார் அங்கிருந்து வடமேற்கில் பறந்து சங்கானைச் சந்தியில் சந்தை ஓரமாக நிறுத்தப்பட்டி ருந்த ஈருருளி ஒன்றின் மீது அமர்கின்றார்...

சங்கானைச் சந்தையென்றால் அது இந்த நாளில் மினி சிங்கப்பூர்தான்.

''என்ன வாத்தியார் இண் டைக்கு ஒரே சிரிப்போடை நிக்கிறியள்...''

''ஓம்...ஓம்.! சிரிப்பு வருது, சிரிப்பு வருது...! மமதையில் அங்கே மத யானை சிரிக்குது. மடிகளை நிரப்பி மந்திகள் சிரிக்குது. ஏமாற்றி உள்ளூர் நரிகளும் சிரிக்குது. ஓநாய்களும் இடையில் விட்டு விட்டுச் சிரிக்குதுகள். நிறங்களை மாற்றிப் பச்சோந்திகளும் சிரிக்குதுகள். மனிதன் மனம் விட்டுச் சிரிக்கும் நாள் எந்நாளோ?'' என்று பாடியபடியே வாத்தியார் வந்தவரை நெருங்கு கிறார்.

அந்தத் துவிச்சக்கர வண்டியை உரியவர் எடுத்துச் சென்றதனால் அங்கிருந்து சிட்டுக் குருவியார் வட கிழக்குத் திசை நோக்கிப் பறக்கிறார். அங்கே வெங்காயத் தோட்டம் ஒன்றின் மூலையில் ஒரு காவல் கொட்டிலில் மெல்ல அமர்கிறார்.

''விடிஞ்சு போச்சுது... என்ன, விளக்கைக் கையிலை பிடிச்சுச் கொண்டு வாறியள் மணி அண்ணை...?''

''ஓம், ஓம்...! இந்த உலகத்திலை யார் நல்லவன் இருக்கிறான் என்று தேடிப் பார்க்கிறன்...!''

''இது நல்ல பகிடிதான்.''

''என்னடாப்பா உனக்கு எல்லாம் பகிடியாத் தெரியுது. நாங்கள் பொழுது போக்காக இளவயதிலை இருந்து மகாத்மா காந்தியின்ரை 'சத்திய சோதனைகள்' பிறகு 'அர்த்தமுள்ள இந்து மதம்' மாதிரியான புத்தகங்கள் படிச்சனாங்கள். எப்படிப் பார்த்தாலும் யார் நல்லவன் என்பதைக் கண்டு கொள்ள முடியாமல் கிடக்குது.''

வாத்தியார் என்ன சொல்கிறார் என்பது சிட்டுக்குருவியாருக்குப் புரியவில்லை. என்றாலும் நாட்டு நடப்புகளைப் பற்றித்தான் அவர் ஏதோ சொல்கிறார் என்று விளங்கிக் கொண்டு கூடு திரும்புகிறார் சிட்டுக் குருவியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CAS** எலக்றோனிக் டிஜிற்றல் தராசுகள்

தமிழர் திருநாள் பொங்கல் தினத்தை முன்னிட்டு விஷேட கழிவுடன்
உலகப் பிரசித்தி பெற்றதும், அரசாங்க அங்கீகாரமும், ஒரு வருட WARRANTY உத்தரவாதமும், உள்ள CAS 15 கிலோ எலக்றோனிக் டிஜிற்றல் தராசு வகைகள் உடன் விற்பனைக்கு உள்ளன.

**அபிராமி எலக்றிக்கல்ஸ்**
62/34, ஸ்ரான்லி பாக்க வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2227989. (ஜ/572823)

" துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருக இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்"

தைத்திருநாளில் வழிபிறக்கும் உங்களுக்கு கல்வியில் காலடி வைக்க ஏணியாக விளங்கும்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்களுக்கு 10% தொடக்கம் 20% வரையான கழிவு வழங்கப்படும். அப்பியாசக் கொப்பிகள் விசேட கழிவு விலையில் வழங்கப்படும்.

ஏனைய ஸ்ரேசனரிப் பொருள்கள், விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், வைற்போட், கிறீன்போட் வகைகள், over head projector, O.H.P screen, laminator, binding machine உட்பட அனைத்து வகை கல்விசார் உபகரணங்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட இன்றே விரையுங்கள்.

அப்பியாசக் கொப்பிகள் நிங்கலாக ரூ.2000/= இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அழகிய கோப்புகள் வைக்கக்கூடிய றெக்சின் பாக் (Regsin Bag) ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் (16.01.2011) எமது வியாபார நடவடிக்கைகள் நடைபெறும்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 5542

## வெள்ள நிவாரணம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

''ஓயாத கரங்கள்'' செயற்திட்டத்தின் கீழ் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தால் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிகள் கோரப்படுகின்றன.

நிறுவன மாணவர்களே நேரில் வந்து நிவாரணப் பொருள்களைச் சேகரிக்க உள்ளதாகச் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவன மாணவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். (313)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.15

அண்மைய நாள்களில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருள்கள் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தால் வழங்கப்படவுள்ளன.

வலிகாமம் வலயப் பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகள் மற்றும் நலன்புரி விரும்பிகளிடமிருந்து பணமாகவோ, பொருள்களாகவோ உதவிகளை சேகரித்து வழங்கலாம்.

அவற்றை யா/ இராமநாதன் கல்லூரியில் இயங்கிவரும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் விசேட கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (313)

* * *

வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமானச் செயற்பாட்டுப்பிரிவு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

பொதுமக்களும் உதவிகளை வழங்க விரும்பின் இல.43,3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும், தொலைபேசி இல. 021 222 3759இலும் தொடர்பு கொள்ளலாம் எனத் தமிழ்தேசிய மக்கள் முன்னணி மனிதாபிமான செயற்பாட்டுப் பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர். (313)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**சற்குணராசா நாகேஸ்வரி**

மண்ணில் 17★06★1941

விண்ணில் 26★01★2010

ஆண்டொன்று மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் எம்மோடு வாழ்ந்த பசுமை நினைவுகள்
என்றென்றும் எம் மனதில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவன் பாதம் பணிகின்றோம்.

தகவல்:
ச.கெங்காதரன் (மகன்)
ச.கிருஷ்ணமூர்த்தி (மகன்)
ச.சாந்தினி, க.மாலினி (மகள்மார்).

26, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம்.

## ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**போனிந்தம் உமாசுதன்**
(பொட்டோ சுதன்)



ஆகிவிட்டது ஏழாண்டுகள்
ஆறவில்லை எம் துயரம்
நினைவுகளை மட்டும்
நீறையவை தந்து
நிதர்சனமாய் சென்றுவிட்டாயே மகனே!
உம் பிரிவுத் துயரை
எவ்வாறு தாங்குவது?



மலர்வு 11.12.1974
உதிர்வு 15.01.2004

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

என்றும் உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

அனைவருக்கும் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

**ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

- கலைமகள் சர்வதேச கல்லூரி தனக்குத் தேவையான ஆசிரியர்களைத் தனது ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மூலம் உருவாக்கி நியமித்துக்கொள்வது வழமையான நிகழ்வு.
- 2009 டிசெம்பரில் இக்கல்லூரியில் இணைந்த 48 மாணவர்கள் தமது கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து பட்டமளிப்பு நிகழ்வின் பின் எமது பாடசாலைகளில் ஆசியரியர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.
- 2011 ஜனவரி 8ஆம், 9ஆம் திகதிகளில் புதிய பிரிவு மாணவர்களை தேர்வு செய்யும் நோக்கில் நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இதில் தோற்றிய 162 மாணவர்களில் ஆற்றலும் தகுதியும் உடைய 52 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இன்னும் 48 மாணவர்களைத் தெரிவுசெய்து பயிற்சி அளிக்க வேண்டிய தேவை எமக்கிருப்பதால் ஆற்றலும் தகுதியும் உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விண்ணப்பிக்க விரும்புவோர்.

- க.பொ.த (உ/த) ஏதாவது ஒரு பிரிவில் சித்தியெய்தியவராக இருக்க வேண்டும்.
- க.பொ.த (சா/த) அல்லது கா.பொ.த (உ/த) ஏதாவது ஒன்றில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- 2011 ஜனவரியில் 32 வயதைத் தாண்டாதவராக இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு
19.01.2011 புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.
நேர்முகத்தேர்வுக்கு உங்களுடைய உண்மைத் தகவலுடன் போட்டோ பிரதிகளையும் எடுத்துவரவேண்டும்.

இத்திகதி மேலும் நீடிக்கப்படமாட்டாது.
மேலதிக விவரங்களுக்குக்கு

**KALAIMAGAL INTERNATIONAL COLLEGE**
KOKUVIL EAST,
CHURCH LANE, KOKUVIL.
T.P:-0213215705
MOB:- 0778834592

**DOT LINE**
DIGITAL COLOUR LAB
198/6 Navalar Road Jaffna.

**டொட் லைன்**
டிஜிற்றல் கலர் லாப்

- Photo Graphic & Video Graphic
- Photo Printing
- Album Make & Designing
- Photo Frames Making
- Deuro Lamination
- UV Lamination

**198/6, Navalar Road Jaffna.**
Tel - 021 222 8443.
---Dotlinejaffna@yahoo.com---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையால் 152 வீதிகள் சேதம் புனரமைக்க ரூ. 100 கோடி தேவை

கொழும்பு, ஜன.15

தொடர்ந்து பெய்துவரும் கடும்மழையால் 18 மாவட்டங்களிலும் 152 பிரதான வீதிகள் சேதமடைந்துள்ளன. அவற்றைப் புனரமைக்க நூறு கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

துறைமுகம் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல இத்தகவலைத் தெரிவித்தார்.

பல நாள்களாகப் பெய்து வரும் அடைமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மண்ணரிப்பு மற்றும் மண்சரிவுகளால் இப்பாதைகள் பெருமளவு பாதிக்கப்பட்டடுள்ளன.

அவற்றின் ஊடான போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல 'பி' ரகப் பாதைகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சேதத்துக்குள்ளான பிரதான பாதைகளில் அநுராதபுரத்தில் 39, மட்டக்களப்பில் 8, பொலநறுவையில் 9 ,அம்பாறையில் 9, திருகோணமலையில் 5, கண்டியில் 27,மாத்தளையில் 14, நுவரெலியாவில் 18, மொனராகலையில் 6 , பதுளையில் 11, காலியில் 14, யாழ்ப்பாணத்தில் 20, மன்னாரில் 7, மாத்தளையில் 5, முல்லைத்தீவில் 3 ஆகிய வீதிகள் சேதமடைந்துள் ளன.

அநுராதபுரத்தில் மட்டும் சேதமடைந்துள்ள பாதைகளைத் திருத்த ஒரு கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும்.

பாதிக்கப்பட்டுள்ள சகல பாதைகளையும் செப்பனிடத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கான அறிவுறுத்தல்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் பனிச்சங்கேணி பாலம் சிதைவடைந்து விட்டது. கல்லடி பாலம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இவ்வாறு அமைச்சர் நிர்மல கொத்தலாவல கூறினார். (ஐ-5)

## தங்கம் கடத்த முயன்ற பெண் கைது

கொழும்பு, ஜன.15

தங்கக்கட்டிகளை இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முற்பட்ட பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 350 கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகளை இந்தியாவுக்கு கொண்டு செல்ல முயன்றார் எனஅதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் (வயது-42) இந்தியாவைச் சேர்ந்தவர் என்றும், மாதத்தில் சுமார் 6 தடவைகள் இலங்கை வந்து போகின்றவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (சி)

## குடாநாட்டிலுள்ள 19 சபைகளுக்கு 296 பேர் தெரிவுசெய்யப்படுவர்

யாழ்ப்பாணம், ஜன.15

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் இடம்பெறவுள்ள 19 உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிடும் 317 பேரில் 296 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர்.

யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 3 நகர சபைகளுக்கும்,16 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடை பெறவுள்ளது.

317வேட்பாளர்கள் போட்டியிட வேண்டும். தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள், சுயேச்சைக்குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த பிரதேச, நகரசபைகளில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக் கேற்ப மாறுபடும்.

வேட்பாளர்களுக்கான நியமனப்பத்திரங்கள் தற்போது வழங் கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை வேட்பு மனுக்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

## வெள்ளத்தை வைத்து எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சி

கொழும்பு, ஜன.15

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சிகள் அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சிக்கின்றன என இடர் நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:

எமது அமைச்சின் ஊடாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் நிவாரணம் வழங்கவென நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

எதிர்கட்சிகளுடைய நோக்கம் தமது அரசியல் தேவைகளைப் பூர்த்தி செய்தலே.

குறைபாடுகளைக் கூறாது எதிர்கட்சிகளும் இந்த நேரத்தில் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். எதிர்க்கட்சியினரின் கண்கள் திறக்கப்பட்டு மக்களுக்காக - நாட்டுக் காக சேவை செய்ய முன்வந்தால் அவர்களுக்கு எப்போதாவது ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என நான் நினைக்கிறேன். - இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (சி)

## அமெரிக்க டொலர்களைக் கடத்த முயன்ற சீனர் கைது

இலங்கையிலிருந்து 64 லட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்களை சிங்கப்பூருக்குக் கடத்திச்செல்ல முற்பட்ட சீனர்கள் இருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான விமான நிலையத்தில் வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து 63 ஆயிரத்து 100 அமெரிக்க டொலர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




ORGANISED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
A member of SAES SOUTH ASIA EXHIBITION SERVICES network

FOR INFORMATION CONTACT:
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mw, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563
E-mail: rizwan@saexhibitions.com
HOTLINES: 0773959834, 0773959835, 0772614109
www.saexhibitions.com/jitf

SILVER SPONSOR: dimo
CO-ORGANISED BY: FCCISL Sri Lanka
IN ASSOCIATION WITH: CCIY
CO-SPONSORS: Elephant House, Keells, Nilkamal
SUPPORTED BY: SRI LANKA CONVENTION BUREAU
PARTNER COUNTRY: INDIA
OFFICIAL BANKER: BOC
OFFICIAL PRINT MEDIA: Sunday Observer, Daily News
OFFICIAL ELECTRONIC MEDIA: சக்தி
OFFICIAL FREIGHT FORWARDER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு அணிகள் பங்கு பற்றும் வலைப்பந்தாட்டம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.15

அகில இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் ''டயட்ட கிரில'' வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 22ஆம், 23ஆம், திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து 17 வலைப்பந்தாட்ட அணிகள் பங்கு கொள்ளவுள்ளன.

இதில் வவுனியா, மட்டக் களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மாவட்டங்களிலிருந்து தலா இரண்டு அணிகளும், யாழ். மாவட்டத்திலிருந்து ஐந்து அணிகளும் கொழும்பு வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் இரண்டு அணிகளும் இப்போட்டியில் பங்கு கொள்ளவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் மேற்கொண்டுள்ளது. (த-23)

# மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.15

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர் தரம் IV க்கான பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், பரீட்சைக்கான அனைத்து ஒழுங்குகளையும் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் அதன் செயலாளர் தெரிவித்தார். (த-23)

# யாழ்.மாவட்ட அணியிடம் தோல்வி கண்டது மாத்தறை

யாழ்ப்பாணம்,ஜன.15

இலங்கைக் கூடைப்பந் தாட்டச் சம்மேளனம் நடத்தும் 48 ஆவது தேசியமட்ட சிரேஷ்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று கண்டி கிங்வூட்ஸ் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் யாழ். மாவட்ட அணிவெற்றி பெற்றது.

இதில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து மாத்தறை மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி மோதியது.

இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி 80:48 என்ற புள்ளி அடிப் படையில் மாத்தறை அணியை வெற்றி கொண்டது.

இன்று சனிக்கிழமை காலை 6.45மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி காலி மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணியுடனும், மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அனைத்துப் பல்கலைகழகக் கூடைப்பந்தாட்ட அணியுடனும் மோதுகிறது. (த-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்திய லீக்கின் சிரேஷ்ட லீக் அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட கொழும்பு பாதுகாப்பு சிவில் உதைபந்தாட்ட லீக் அணியினர். (23)

# கிங்ஸ் லெவன் அணித்தலைவர் கில்கிறிஸ்ட்

ஆஸ்திரேலியாவின் முன்னாள் விக்கெட் காப்பாளரும், ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஹைதராபாதின் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் முன்னாள் அணித்தலைவருமான அடம் கில்கிறிஸ்ட் கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியின் அணித்தலைவர் என்று அந்த அணியின் பயிற்சியாளர் மைக்கல் பெவன் தெரிவித்தார்.

ஏலத்திற்கு 4 நாள்கள் முன்னர்தான் மைக்கல் பெவன் கிங்ஸ்லெவன் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

கில்கிறிஸ்ட் 39 வயதானாலும் அவரால் சிறப்பாக விளையாட முடியும் என்று மைக்கல் பெவன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் இரண்டாவது வீரர்கள் ஏலத்தில் கிங்ஸ் லெவன் அணியினால் 9லட்சம் டொலர்களுக்கு கில்கிறிஸ்ட் ஏலம் எடுக்கப்பட்டார். (த)




# கரப்பந்தாட்டம் 19 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.15

மஞ்சி பிஸ்கட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் வலமட்டப் போட்டி எதிர் வரும் 19ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணம், நல்லூர், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச்சேர்ந்த ஆண், பெண் அணிகளுக்கான போட்டி யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க மைதானத்தில் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

வலிகமம், தீவகப்பகுதிகளில் ஆண், பெண் அணிகளுக்கான போட்டி எதிர்வரும் ,22ஆம் திகதி அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையில் நடைபெறும் என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் மனேகரன் அறிவித்துள்ளார். (த-23)

# ஊர் சுற்றுப் போட்டி நாளை

யாழ்ப்பாணம்,ஜன.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஊர் சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நவாலி அரசடி மகாவித்தியாலய முன்றலில் காலை 7மணியளவல் ஆரம்பமாகும்.

இந்தப் போட்டியில் பங்கு கொள்வதற்கு பெயர்களைப் பதிவு செய்தவர்கள் காலை 6.30 மணி அளவில் தங்களது வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட மெய்வன்மைப் பயிற்றுப்பாளர் மோகன் மாவட்ட விளையாட்டு அதிகாரி தலைமையில் மேற்கொண்டுள்ளார். (த-23-100)

# கிளைன்ட் மெக்கே சந்தேகம்

காயம் காரணமாக உலகக் கிண்ணத் கிரிக்கெட் தொடரில், ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் கிளைன்ட் மெக்கே இடம் பெறுவது சந்தேகமாக உள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான் 30 பேர் கொண்ட உத்தேச அணியை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை சமீபத்தில் அறிவித்தது. இதில் வேகப்பந்துவீச்சாளர் கிளைன்ட் மெக்கே இடம் பெற்றிருந்தார். ஆனால் கடந்த 3ஆம் திகதி ''பிக் பாஷ் ருவென்ரி-20 தொடரில் விக்டோரியா அணி சார்பில், குயின்ஸ்லாந்து அணிக்கு எதிராக விளையாடிய போது, இவரது இடது கால் பாதத்தில் லேசான எலும்பு முறிவு ஏற்பட்டது. இதனால் இவர், காயத்திற்கு சத்திரசிகிச்சை செய்ய இருப்பதால், சுமார் 10 வாரங்களுக்கு எந்த போட்டியிலும் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர், அடுத்த மாதம் 19ஆம் திகதி தொடங்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே முன்னணி மித வேகப்பந்து வீச்சாளர் ரியான் ஹரிஸ் காயம் காரணமாக உலகக் கிண்ணத் தொடரில் இருந்து விலகியுள்ளார். (த)




# வலைப்பந்தாட்டம் தொடர்பான கூட்டம்

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கான கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல்10 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

எனவே கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து மு.ப. 11 மணியவில் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கூட்டம் இடம்பெறும். இதில் 1997ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ்தர்களையும், 2010ஆம் ஆண்டு மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ்தர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் இதில் புதிய சட்ட விதிகள் தொடர்பாகவும் ''டயட்ட கிரில'' வலைப்பந்தாட்டப் போட்டி தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளதாகவும் மத்தியஸ்தர் சபைத் தலைவி அறிவித்துள்ளார். (த-23)

## வீரம் செறிந்தவர்கள்...



தொடரட்டும்: வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் கடந்த டிசெம்பர் மாதம் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் ஒன்றையர் பிரிவில் இரண்டாமிடத்தைப் பெற்ற சண்முகம் சாமுவேலுக்கு மேசைப் பந்தாட்டச் சம்மேளன செயலாளர் சந்தன பெரேரா சன்றிதழ் வழங்குகின்றார். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்பேர்ணில் வைத்து இங்கிலாந்துக்கு ஆஸி. பதிலடி!

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது 'இருபது-20' போட்டியில் ஆஸி. வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 147 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில், பின்ஜ் (ஆட்டமிழக்காமல்) சிறப்பாக ஆடி 53 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், ஸ்வான், ஜார்டி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், வொக்கஸ், ஷாஹ்லட், பிரெஸ்னன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 148 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 143 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 4 ஓட்டங்களால் ஆஸி. வெற்றிபெற்றது. அத்துடன் 2 போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' தொடர் 1-1 என்ற கணக்கில் சமனானது. இங்கிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் பெல் சிறப்பாக ஆடி 39 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

ஆஸி. சார்பாக பந்துவீச்சில், ஜோன்சன் 3 விக்கெட்டுகளையும், வோட்சன் 2 விக்கெட்டுகளையும், ரைட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஆஸி. வீரர் பின்ஜ் தெரிவு செய்யப்பட்டார்.

## உலகக் கிண்ணத்தை இங்கிலாந்து வெல்லும்?

இங்கிலாந்தின் கிரிக்கட் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர், தமது குழு உலகக் கிண்ணத்தை வெல்ல முடியுமென்றும் ஆனால் ஆஸ்திரேலியாவில் நடைபெற விருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடர்கள் தகுந்த தயாரிப்பு நடவடிக்கை அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து ஆஷஸ் தொடர் மூன்றுக்கு ஒன்று என்று வெற்றி கொண்டதன் பின்னர் பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி நெதர்லாந்து அணியுடன் அதன் உலகக் கிண்ண போட்டியில் மோத விருக்கிறது. (த)

## இந்தியா-தென்னாபிரிக்க 2ஆவது மோதல் இன்று

இந்தியா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெறவுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது. இந்நிலையில், இரண்டாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, கண்ட தோல்விக்கு இந்திய அணி பதிலடி கொடுக்கவேண்டிய நெருக்கடியான நிலையில் களமிறங்குகிறது.

## பாக்.- நியூஸிலாந்து மோதல் வெலிங்டனில் ஆரம்பம்

நியூஸிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட்போட்டி இன்று வெலிங்டனில் ஆரம்பமாகிறது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று கிறது.

இத் தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி இன்று வெலிங்டனில் ஆரம்பமாகிறது.

ஏற்கனவே, ஒரு போட்டியில் வெற்றிபெற்றுவிட்டமையால் பாகிஸ்தான் தொடரைக் கைப்பற்றும் அல்லது சமனிலைப்படுத்தும் நிலை காணப்படுகிறது. மறுமுனையில், நியூஸிலாந்து இன்று ஆரம்பமாகும் போட்டியில் வென்றால்தான் தொடரைச் சமனிலையில் முடிக்கக் கூடிய இக்கட்டான நிலையில் உள்ளது.

## ஆஸ்திரேலிய ஓபன் டெனிஸ் தொடருக்கான தரவரிசையில் நடால், வோஸ்னியாக்கி முதலிடம்

மெல்போர்ண், ஜன. 15

ஆஸ்திரேலிய ஓபன் டெனிஸ் தொடருக்கான தரவரிசையில் ஸ்பெயின் வீரரான நடாலும், டென்மார்க் வீராங்கனையான வோஸ்னியாக்கியும் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபன் டெனிஸ் போட்டி நாளைமறுதினம் திங்கட்கிழமை 17ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமாகிறது. இதையொட்டி இந்தப் போட்டிக்கான தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஆண்கள் பிரிவில் 9 தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்பெயினின் ரபெல் நடால் முதலிடத்தைப் பிடித்துள்ளார். பெடரர் (சுவிட்சர்லாந்து), ஜோகோவிச் (செர்பியா), சோடர்லிங் (சுவீடன்), அன்டி முர்ரே (இங்கிலாந்து) ஆகியோர் முறையே 2 முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளனர்.

பெண்கள் பிரிவில், நடப்பு சம்பியன் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் காயம் காரணமாக ஏற்கனவே விலகியிருப்பதால், டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கிக்கு (வயது-20) முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.



வோஸ்னியாக்கி இதுவரை எந்த ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டமும் வென்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்வோனரிவா (ரஷ்யா) 2ஆவது இடத்தையும், கிம் கிளிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) 3ஆவது இடத்தையும், வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4ஆவது இடத்தையும், சமந்தா ஸ்டோஸர் (ஆஸ்திரேலியா) 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்ஷா உலகத் தரவரிசையில் 145ஆவது இடத்தில் பின்தங்கியிருப்பதால் இந்த முறை ஆஸ்திரேலிய ஓபனில் நேரடியாகப் பங்கேற்கமுடியவில்லை. பிரதான சுற்றுக்கு முன்னேற அவர் தகுதிச் சுற்றில் 3 ஆட்டங்களில் வெற்றி பெற்றாக வேண்டும்.


## ஐ.பி.எல். போட்டிகளில் நடன அழகிகளின் பங்களிப்பு என்ன?

புதுடில்லி, ஜன. 15

ஐ.பி.எல். போட்டிகளின் வளர்ச்சிக்கு நடன அழகிகள் எந்த வகையில் பங்களிக்கிறார்கள் என இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு, சரியான பதில் சொல்ல முடியாமல் இந்தியக் கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் திணறியிருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் அன்னிய செலாவணியைக் கையாண்டதில் பல்வேறு சட்ட மீறல்கள் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்து இந்திய நாடாளுமன்ற நிலைக்குழு விசாரணை நடத்தி வருகிறது.

நாடாளுமன்ற உறுப்பனர்களைக் கொண்ட இந்தக் குழு இந்திய கிரிக்கெட் சபை மற்றும் ஐ.பி.எல். நிர்வாகிகளிடம் கடந்த புதனன்று சுமார் இரண்டரை மணி நேரம்



விசாரணை நடத்தியது.

அப்போது ஐ.பி.எல். போட்டிக்கான பண[illegible] கையாளப்படும் முறை, வீரர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் உட்பட அனைத்து விடயங்கள் குறித்தும் நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் சரமாரியாகக் கேள்வி எழுப்பி விசாரணை மேற்கொண்டனர்.

இதேவேளை, நடன அழகிகளின் பங்கு குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ஐ.பி.எல். கிரிக்கெட் வளர்ச்சிக்கு நடன அழகிகள் எந்த வகையில் பங்களிக்கிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு, கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் சரியான பதில் சொல்ல முடியாமல் திணறியிருக்கிறார்கள்.

மேலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய வீரர்கள் ஏலம் குறித்தும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. ரோமானிய காலத்தில் அரசர்கள் அடிமைகளை, உடல் திறனுக்கு ஏற்றபடி விலைக்கு கேட்டு விற்றதை ஞாபகப்படுத்தும் விதத்தில் ஐ.பி.எல். வீரர்கள் ஏலம் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளனர்.

## சிட்னி டென்னிஸ் கிளிஸ்டர்ஸ், நா லீ இறுதிக்குத் தகுதி

சிட்னி,ஜன. 15

சிட்னியில் நடைபெற்று வரும் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டிக்கு, பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸ், சீனாவின் நா லீ ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் சர்வதேச டெனிஸ் தொடர் நடைபெற்றுவருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதியாட்டம் ஒன்றில் பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸ் - ரஷ்யாவின் அலிசா கிளைபனோவா ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் கிளிஸ்டர்ஸ் 4-6, 6-3, 7-6 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினர்.

மற்றொரு அரையிறுதியாட்டத்தில் சீனாவின் நா லீ 7-6, 6-3 என்ற நேர் செற் கணக்கில் செர்பியாவின் போஜனா ஜோவனோவ்ஸ்கியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்!



திருமண கோட், சூட் வகைகள், புதிய மொடல் ஜீன்ஸ் வகைகள், சேட், ரீ சேட் வகைகள், சேட்டிங், சூட்டிங், தொப்பி, பெல்ற், பேர்ஸ் வகைகள் மற்றும் புதிய மொடல் கோட் வகைகளும் தலைப்பாகை வகைகளும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் தலைப்பாகை, கோட் சூட்களையும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

Juki, Hara, Over Lock Machines மெசின், மெசின் உதிரிப்பாகங்கள், தையல் உபகரணங்கள், நூல்வகைகள் அனைத்தையும் கொழும்பு விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



சிற்றிசன்

போய்ஸ் செலக்சன் - ரெயிலறிங்.
இல.01, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:- இல. 302, பலாலி வீதி,
ஆலடிச்சந்தி, திருநெல்வேலி.

தொ.பே: 0776143301

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு

அமரர் சுவாம்பிள்ளை
செபஸ்தியாம்பிள்ளை
(பப்பா)

மண்ணில்: 26.10.1934
விண்ணில்: 15.01.2009



பாசம் பொழிவதில் மாமழையாய்
வாசம் சிந்தும் பூமலையாய்
இதயம் நிறைந்த தலைவனாய்
உதயம் தந்த தந்தையாய்
வையம் தன்னில் வாழ்ந்து
விண்ணகம் தன்னில் நிறைந்தாய்
உந்தன் நினைவில் உறைகின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

இல.100, பெத்தல்,
உடுவில், சுன்னாகம்.

## மரண அறிவித்தல்கள்

### பிலிப் பவுலினப்பு (மு.இ.போ.ச.சாரதி)



தாளையடியைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் பவுலினப்பு 13.01.2011 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப் - வெரோனிக்கா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பரிபூரணம் - பொன்னரியம் தம்பதியரின் மருமகனும் ராஜ்குமாரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (15.01.2011) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.3/1, அடப்பன் வீதி,
குருநகர்.

தகவல்:
அருளானந்தம் குடும்பத்தினர்,
தாளையடி.

### திருமதி சாரதா பரராசவிருந்தம்



சித்தம்பாதியைப் பிறப்பிடமாகவும், மூத்த விநாயகர் கோயிலடி காவில் வயலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாரதா பரராசவிருந்தம் 13.01.2011 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் பரராசவிருந்தம் (விருந்தம்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் வடிவேலு - ராஜபூபதி தம்பதியரின் மகளும், அமரர் கனகசபை - ஆயிலியம் தம்பதியரின் மருமகளும், வினோதன் (பிரான்ஸ்), விசோந்தன் (பிரான்ஸ்), விஜிதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அருட்செல்வி (பிரான்ஸ்), கலைச்செல்வி (பிரான்ஸ்), ஆகியோரின் மாமியும் சாஜிசன், மிதுனா, தாரிகா, அஜீத் ஆகியோரின் பேர்த்தியும் சாந்தினி, அருள்நந்தன் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் வெள்ளையம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வெல்லன்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/574595)

தகவல்:
விருந்தம் (கணவர்)

## சட்டமாணி நுழைவிற்கான போட்டிப்பரீட்சை ஒத்திவைப்பு

நாவற்குழி, ஜன.15

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நாளை 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெற விருந்த சட்டமாணி நுழைவிற்கான போட்டிப்பரீட்சை அடுத்த மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண வெள்ள அனர்த்தம் காரணமாகத் திறந்த பல்கலைக் கழகத்தின் மட்டக்களப்பு நிலையத்தில் இந்தப் பரீட்சை நடத்த முடியாத சூழ்நிலையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது. (ம-121)

## விளையாட்டு அதிகாரி நியமனம்

நாவற்குழி, ஜன.15

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகர் பிரிவுக்கு புதிய விளையாட்டு அதிகாரியாக செல்வி இ.அகல்யா நியமனம் பெற்று கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இப்பிரிவில் கடமையாற்றிய விளையாட்டு அதிகாரி இலட்சுமி காந்தன் அனுராகாந்தன் வடமராட்சி தெற்கு மேற்கு - கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவிற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

**இப்பொழுது**

வரலாறு தரம்: 9,11 மாணவர்களுக்கானது
(இலவச VCD களுடன்)
வை. தயாளன்

(த-57488)

கிடைக்கும் இடம்:
அன்னை புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை.

**தவறிவிட்டது**

வேலணை மேற்கு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெசுதன் என்பவருடைய தே.அ.அட்டை (903123397V) கே.கே.எஸ். வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 0779480165 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பிற்போடப்பட்டுள்ளது**

மாணவர் முன்னேற்ற நிலைய "கல்வி" மற்றும் அபிவிருத்திக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் பங்குனி மாதம் சிவராத்திரி தினத்தன்று வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

மாணவர் முன்னேற்ற நிலையம்.

**கடை வாடகைக்கு உண்டு**

866, கே.கே.எஸ் வீதியில் (மில்க் வைற் சோப் நிறுவனத்துக்கு அருகில்) 410 சதுர அடி கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0777114110

**ரூம் வாடகைக்குத் தேவை**

திட்டத்தில் பணியாற்றி வரும் உயர் உத்தியோகத்தர் ஒருவர் தங்குவதற்கு யாழ். மாநகர எல்லைக்குள் ரூம் வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:- 0776118082, 0750370676

**காணி விற்பனைக்கு**

சென்.ஜோசப் வீதிக்கு அண்மையில் வளன்புரத்தில் கிணற்றுடன் கூடிய 1¾ பரப்பு காணித் துண்டும். 1½ பரப்பு காணித்துண்டும் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டியது எம்.கிறிஸ்ரியன்,
தொ.பே: 0772367491, 0776176510

**கடை விற்பனைக்கு**

புங்குடுதீவு மெயின் வீதியில் விக்டர் பில்டிங் உடன் விற்பனைக்கு உண்டு. (வட்டாரம்-11).
தொடர்பு:- 0779384809

**PERSANAL CLASSES**

தரம்: 6-11 வரையான வகுப்புக்களில் கற்பவர்களுக்கான கணித வகுப்புக் கள் தனி/குழுவாக தங்கள் இடங்க ளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0775325238 (உரும்பிராய்) (சி-57488)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2Kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 19.01.2011ஆம் திகதி விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ [illegible]
தொ.பே:-
021 222 2867, 077 6090926

## சித்தன்கேணி அருள்மிகு நாககன்னி அம்பாள்





தைப்பொங்கலும் திருத்திப்பு விழாவும்

தை 1 ஆம் நாள் இன்று
(15.01.2011) சனி 12 மணி

அருளாசி உரை :- நல்லை ஆதீனம் குருமகா சந்நிதானம்
சொற்பொழிவு :- சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் M.A
:- சைவப்புலவர் க.நித்தியதசிதரன் (ஆசிரியர்)
தவில், நாதஸ்வரம் :- ஈழநல்லூர் பாலமுருகன் குழுவினர்.
:- சுழிபுரம் சிவகுமார் குழுவினர்

கிரியைகளைச் சிறப்புற நிகழ்த்துபவர்
ஞானகுரு இந்திரன் ஐயா.

நன்றியுரை :- சதாசிவம் ஐங்கரன் M.A

அம்பாளின் பக்தி அடியார்கள்.

(109085)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்கள் தைப்புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

Cey Labs

CeyLabs Solutions (pvt) Ltd
204, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

**பதவி வெற்றிடம்**

அலுவலக உதவியாளர் பதவிக்குத் தகுதியானவர்கள் 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும். தெரிவுசெய்யப்படுபவருக்கு கவர்ச்சிகரமான சம்பளமும் சலுகைகளும் வழங்கப்படும்.

பிரிட்டிஷ் கொலிச் ஒவ் ஹயர் ஸ்ரடிஸ்

இல.15, சிறாம்பியடி ஒழுங்கை(Off Stanly Road)
(ஹொசி ஹோட்டல் மேல் மாடி)
யாழ்ப்பாணம். 021 222 4550

## கண்ணீர் அஞ்சலி



எம்து ஆருயிர் நண்பன்
செல்லையா யசோதரன்

அவர்கள் 13.01.2011 அன்று அமெரிக்காவில் அகால மரணம் அடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு ஆறுதல் தெரிவிப்தோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(109082)

2006 உயர்தரப் பிரிவு நண்பர்கள்




சீட்டிழுப்பு இலக்கம் 716 திகதி 13-01-2011

வெற்றி எண்கள்

08 30 37 58 C

ஜக்பொட் பரிசு ரூ. 21,639,790/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 21,639,790/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 2,000/= | 20,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 415 | 1,000/= | 415,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 697 | 1,000/= | 697,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16449 | 60/= | 986,940/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7723 | 40/= | 308,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 193552 | 20/= | 3,871,040/= |
| | | மொத்தம் ரூ. | 7,098,900/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 700711255-3-03 |
| இரத்தினபுரி | 700703346-3-43 |
| வவுனியா | 700718451-7-37 |
| மாத்தறை | 700702470-0-30 |
| கம்பஹா | 700712793-1-31 |
| கம்பஹா | 700712441-6-26 |
| குருநாகல் | 700700607-2-02 |
| கண்டி | 700703982-8-48 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,498,900/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 22,162,840/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஜனவரி 17 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாறி கஷ்டங்கள் தீர தைத்திருநாள் வழிவகுக்கட்டும்!

-இ.அங்கஜன்-

இன்று மலர்ந்துள்ள தைத்திருநாள் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியையும், சமாதானத்தையும், சுபீட்சத்தையும் நல்ல நம்பிக்கையையும் மற்றும் சகல வளங்களையும் கொண்டு வர உளமார வாழ்த்துவதாக யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் இ.அங்கஜன் விடுத்துள்ள தைப் பொங்கல் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

தற்போது இலங்கையின் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பேரிடர்களினால் சகல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு சுபீட்சமான எதிர் காலத்தை தைத்திருநாளில் உதயமாகும் சூரியபகவான் கொண்டுவர வேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன், அவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவர அனைவரும் தன்னிச்சையாக உதவ மனமுவந்து முன்வர வேண்டும் என்றும் இன் நன்னாளில் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழர்களின் நம்பிக்கை தரும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு இத் தைப்பொங்கல் தினம் வழி வகுக்கும் என்ற எதிர்பார்ப்புடன், இலங்கை வாழ் அனைத்து இந்துக்களுக்கும் எனது மகிழ்ச்சிகரமான தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், எம்மிடையே சமாதானமும் சுபீட்சமும் நல்ல நம்பிக்கையும் நிலைக்கட்டும் என்ற பிரார்த்தனைகளில் நானும் இணைந்து கொள்கின்றேன் - என்றார்.

## ஐ.நா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை நீடித்துள்ளார் என நேற்று முன்தினம் நியூயோர்க்கில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவரது பேச் சாளர் மார்ட்டின் நெசர்கி தெரிவித்தார். (ஒ-சி)

## வனவிலங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு பணியாற்றிவரும் 11 ஊழியர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்ற னர்.

இதேவேளை -

பூங்காவைப் பார்வையிடுவதற்காக நேற்று அங்கு சென்ற 50 உல்லாசப் பயணிகள் காலையில் இருந்து காத்திருந்து ஏமாற்றத்துடன் கொழும்பு திரும்பினர்.

## நீர்வேலியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓலை மட்டையிலான தடுப்பை அகற்றியே அந்த நபர் வீட்டின் உள்ளே புகுந்துள்ளார்.

இதனை வீட்டில் இருந்தவர்களில் ஒருவர் அவதானித்து சத்தமிடவே ஏனை யோரும் கூக்குரல் எழுப்பி பலமாகச் சந்தமிட்டனர். அதையடுத்து அயல் வீட் டுக்காரர்களும் அந்த வீட்டை நோக்கிப் படையெடுத்துச் சென்றனர்.

விபரீதத்தை உணர்ந்த அந்த நபர் தப்பியோட முற்பட்டார். அங்கு கூடியவர்கள் துரத்திச் சென்று குறிப்பிட்ட நபரை மடக்கிப் பிடித்து மரத்துடன் கட்டிவைத்து நையப்புடைத்தனர்.

வேதனை தாங்கமுடியாத நிலையில் தாம் நீர்வேலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் என்பதை அடையாளப்படுத்தியுள்ளார். அதைத் தொடர்ந்து இது குறித்து அப்பகுதி கிராம அலுவலருக்கு உடனடியாகத் தகவல் கொடுக்கப்பட்டது. விரைந்து வந்த கிராம அலுவலர் அந்த இராணுவ சார்ஜன்டை கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத் தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணை நடத்தி சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இதேவேளை -

இந்தச் சம்பவத்தில் மூவர் சம்பந்தப்பட்டபோதும் மற்றைய இருவரும் தப்பிச் சென்று விட்டனர் என்று கூறப்பட்டது.

இதனிடையே நீர்வேலிப் பகுதியில் இரவு வேளையில் வீடுகளுக்குச் செல்லும் சீருடை தரித்த சிலர் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-14-26)

## மரண அறிவித்தல்



**கி.அருள்நேசன்**
(சூரியன்)(ஹார்ட்வெயர் வியாபாரி, கல்வியங்காடு சந்தை)

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கி.அருள் நேசன் நேற்று (14.01.2011) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் நல்லடக்கம் இன்று (15.01.2011) சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் இடம்பெறும்.

குருநகர். தகவல்: குடும்பத்தினர்.

## குடாநாட்டில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 35 லட்சம் ரூபா பெறுமதியான அவசர உலர் உண வுப் பொருள்கள் மூன்று லொறிகளில் நேற்று மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. கடந்த இரு தினங்களாக குடாநாட்டில் பல்கலைக்கழக மாணவர்களால் சேகரிக்கப்பட்ட பொருள்களே நேற்று எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

தண்ணீர்போத்தல்கள், உலர் உணவுப் பொருள்கள், போர்வைகள், பாய்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் யாவும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று மாலை இங்கிருந்து புறப்பட்ட லொறிகள் இன்று அங்கு சென்ற தும் உடனடியாகவே பொருள்கள் விநியோகிக்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்து. (ஒ-ஐ-15-86)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு செய்தியாளர்களுடன் ஜனாதிபதி நேற்று கலந்துரையாடிய போது இத்தாக்குதல் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்படைக்கு உத்தரவிட்டிருப்பதாக ஜனாதிபதி அங்கு தெரிவித்தார். (ஒ-ஐ)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைத்து நேற்று அடையாளம் காட்டினார்.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்திய யாழ். மாவட்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து உரும்பிராய், யோகபுரத்தில் தங்கியிருந்த ம.அமிர்தராஜனின் மனைவி ஏற் கனவே வன்னியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் சிக்குண்டு உயிரிழந்திருந்தார்.

தனது 5 பிள்ளைகளுடன் வசித்து வந்த இவர் கல் அரிவுத்தொழிலில் ஈடுபட்டு வந்தவர். கடந்த முதலாம் திகதி வழமைபோல் தொழிலுக்குச் சென்ற சமயம் இவர் காணாமற்போயிருந்தார்.

இதேவேளை -

ஆரம்ப விசாரணைகளில் இருந்து மரணமானவர் தற்கொலை செய்ததற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்றும் 22 அடி ஆழமும் 6 அடி வரை தண்ணீரும் உள்ள இந்தக் கிணற்றின் அடியில் கற்கள் காணப்படுவதால் தற்கொலைக்காக அவர் கிணற்றில் பாய்ந்திருந்ததால் அவரது தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும் ஆனால் இவரது சடலத்தின் மார்புப் பகுதியில் மட்டும் ஓர் அடிகாயம் இருந்தது என்றும் தெரிய வந்தது.

பிரஸ்தாப நபர் கொலை செய்யப் பட்டதன் பின்னர்தான் கிணற்றுக்குள் போட்டப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-9-86)

# கொழும்பில் கால்பதிக்கும் மற்றொரு சீன நிறுவனம்

கொழும்பு நகரில் மற்றொரு சீன நிறுவனமும் காலடி எடுத்து வைக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகறிது.

காலிமுகத்திடலை அண்டிய பகுதியிலுள்ள காணியை சீனாவின் தேசிய வான் தொழில்நுட்ப ஏற்றுமதி இறக்குமதி கூட்டுத்தாபனத்துக்கு விற்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கொழும்பிலிருந்து நேற்றும் பல லொறிகளில் நிவாரணப் பொருள்கள் கிழக்கு மாகாணத்தைச் சென்றடைந்தன.

மேலும் இந்தியா வழங்கிய நிவாரண உதவிகள் நேற்று மாலையே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன எனக் கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மட்டக்களப்புப் பகுதியில் நேற்று மாலை முதல் சற்றுக் கூடுதலாக மழைபெய்ய ஆரம்பித்தது என்று பிந்திக் கிடைத்ததகவல்கள் தெரிவித்தன. (ஒ-சி)


## VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 07 th February 2011.

**The applicants those who applied for the following posts in response to our advertisement dated 03.10.2010 need not to apply again.**

**FACULTY OF SCIENCE**

Senior Professor/Professor in Mathematics /Statistics/ Physics/ Botany/ Zoology/ Marine Biology/Computer Science /Chemistry (Physical/organic/ inorganic)

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Mathematics/Statistics/ *Physics/ Zoology/ **Chemistry/Computer Science

Notes :

1.* Applications from candidates with **B.Sc. (Eng) degree with specialization in Electronics** can also be considered for the posts in **Physics**

2. ** Preference will be given to applicants with **Specialization in Inorganic Chemistry** for the post of Senior Lecturer in **Chemistry.**

**LIBRARY**

Post of Librarian

Senior Assistant Librarian Grade I/ Senior Assistant Librarian Grade II/ Assistant Librarian

Notes :

1. Preference will be given to those who have **degree in Social Science stream** for the Post of Senior Assistant Librarian Grade I/ Senior Assistant Librarian Grade II/ Assistant Librarian.
2. The Library staff in the University system who are eligible under old scheme of recruitment specified in UGC Circular Nos. 165 & 653 could also apply.

**Salary and Other Benefits**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.57,755 - 11x900 - 67,655/- p.m. |
| Professor | Rs.50,905 - 13x850 - 61,955/- p.m. |
| Librarian | Rs.50,905 - 13x850 - 61,955/- p.m. |
| Senior Lecturer Gr. I / Senior Asst.Librarian Gr.I | Rs.42,650-7x800 - 48,250/-p.m |
| Senior Lecturer Gr. II / Senior Asst.Librarian Gr.II | Rs.37,650-11x700 - 45,350/- p.m. |
| Lecturer (Probationary) / Asst.Librarian | Rs.26,900-10x585-32,750/-p.m |

Note :

In addition to the above salary, the following allowances will also be paid:

i. An academic allowance equivalent to 25% of the basic salary (for permanent academic posts)

ii. Cost of living allowance of Rs.5,250/-p.m

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.

II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.

III. Gratuity payments

IV. Employees' Trust Fund benefits.

V. Free Medical Services.

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments.

Application forms and scheme of recruitment for each position may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the downloading application forms through the University website should be attached a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**14.01.2011**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியமும் கிழக்கு மக்களுக்கு உதவி

கொழும்பு,ஜன.15

கிழக்கு வெள்ள அகதிகளுக்கு உதவுவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் 2.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளது.

மனிதாபிமான பேரவலம் குறித்து கவலையடைவதாகத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான உதவி ஆணையாளர் கிறிஸ்ரினா ஜோர் ஜிவா, வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உதவ முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். (ஒ-ஐ)

யாழ் மக்களுக்கு இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்.

**Galaxy Cabs**

Call us 021- 3201201

யாழ் நகரில் முதல் முதலில் அறிமுகமாக்குகின்றோம்.
Call Cabs சேவையை. 35/= Per Km.

**கணினி புதிய பிரிவுகள் ஆரம்பம்**

O/L & A/L — WORKERS

| | |
|---|---|
| Diploma In Ms Office | 2 Months |
| Diploma In DTP | 2 Months |
| Diploma In Web Design | 3 Months |
| Diploma In Graphic Design | 3 Months |
| Internet & E-mail | 1 Month |
| Kids Programe | 1 Month |

162, Main Street, Jaffna.
T.P.No:-021-222-1417
**Sky Computers (Pvt) Ltd.**
'Today You Learn Tomorrow You Lead'

**A/L 2013**

- KBK -
திரு.பாலசபேஷ் - SKB -

அன்றும்....இன்றும்...என்றென்றும்
யாழ்.நகரின் கணக்கீட்டுக்கு, வணிகக் கல்விக்கு தனித்துவமான ஆசிரியர்கள்
அனைவருக்கும்பொங்கல் வாழ்த்துக்கள்
நம்பினோர் கைவிடப்படார்.

ஆரம்பம்:-16.01.2011 ஞாயிறு

| | | |
|---|---|---|
| Beacon-யாழ். காலை 9மணி | BPI- குருநகர் பி.ப. 3மணி | College of Commerce நல்லூர் பி.ப.3மணி |

**CHEMISTRY**

S.Vasu — A/L 2013

இரசாயனவியல் ஓர் அறிமுகம்
ஆரம்பம்:-15.01.2011 (4.00pm)
இன்று மாலை 4மணி

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. யாழ்நகர்.

**A/L 2013**

NEC
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
யாழ்நகர்.

**STUDY and WORK IN UK**

அனைத்து மாணவர்களிற்கும் எம் நிறுவனத்தின் ஊடாக இனியதைத்திருநாள் வாழ்த்துக்கள்

VISA WITHIN 4 WEEKS

★ G.C.E. O/L உடன், உயர்கல்வியை London இல் தொடர இறுதிச் சந்தர்ப்பம்
★ IELTS கட்டாயம் தேவையில்லை.
★ மிகக்குறைந்த கல்லூரிக்கட்டணங்களுடன் UKBA இனால், அங்கீகாரம் பெற்ற சிறந்த கல்லூரிகளில் சென்று - உங்கள் பட்டப்படிப்பை தொடரலாம்
★ ஆங்கிலம் பேசக்கூடியவர்களுக்கு - மிகவும் இலகுவாக London செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
★ London இல் ஆங்கிலக்கல்வியை (Advance English) தொடர விரும்புவர்களுக்கு நாம் 100% விசாவை உறுதிப்படுத்தி தருவோம் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்.
★ விசாவை 100% உறுதிப்படுத்துவதற்கு முன்னர் எவ்விதக்கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது
★ UK உயர்ஸ்தானிகர் நிலையம் (UKBA) மிகவிரைவாக புதிய நடைமுறையை கொண்டுவருவதன் விளைவாக- இன்றே இணையுங்கள்....
★ எம் நிறுவனத்தின் மேலுமொரு சேவை.

London இருந்து Student Visitor / January 10, 2011 இலிருந்து.

★ ஒரு வருடத்திற்கான Visit visaவை சிறந்த சட்ட நிபுணர்களின் வழிகாட்டலிற்கமைய- பெற்றுத்தருவோம் என்பதை- தெரிவித்து நிற்கின்றோம்...

U.SISIL REMINDAS
Contact Now: 077 9265447 (Jaffna)

COLOMBO HIGHER EDUCATION CONSULTACY
UK Office: Mr.Haris,
28, College Road, Harrow, HA11 BE, London.

**விற்பனைக்கு**

Brand New
1) Lap Top (Sony I3, 320GB, 6Gb Ram, 15-6LED)
2) Pioneer Home Theator Set
Used
1) Video Camera (Sony, JVC)
2) Projector (Sony)
3) Nokia N80i phone.

தொ.பே:- 0711205476

குறிப்பு:- 15ஆம், 16ஆம் திகதிகளில் மட்டும் பார்வையிடலாம்.

LBN முகாமையாளர்கள் மற்றும்வாடிக்கையாளர்களுக்கு
எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

**பொது அறிவித்தல்**
**(PUBLIC NOTICE)**

**For Cable TV Operators**

SUN TV — KTV — SUN MUSIC

ஆகிய சேனல்களின் கேபிள் டிவியில் ஒளிபரப்புவதற்கான அனுமதி பெற்ற ஒரே நிறுவனம்

**LBN**
**Lanka Broadband Networks Ltd.**
மட்டுமே.

எங்களின் அனுமதியின்றி அல்லது வேறு வகையில் கேபிள் டிவியில் ஒளிபரப்புவது தண்டனைக்குரிய குற்றமாகும். இதை மீறுபவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:-

**Lanka Broadband Networks Ltd.**
#241/32, Kirula Road, Narahenpita, Colombo – 05.
Tel: 5 300 300 | Fax : 4 517 220 | Jaffna Tel: 021 320 2000.
E-mail: indika@lbn.lk

வடபகுதி நெற் செய்கையாளரே...!

**"நெல் எரிபந்தம்"**

நோய்க்கு BAYER இன் ஒரே தீர்வு

ஏக்கருக்கு 100 மி.லி. மட்டுமே




**பொலிகர்**
**EW 250**

HAYLEYS AGRO
ஹேலீஸ் அக்ரோ காட்சியறை
72, ராஜா பிளாஸா, கோண்டாவில்.
0777 594992 / 0777 288337

The World Of Hayleys
ஹேலீஸ் காட்சியறை
47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221292

பீடை நாசினிகள் ஆபத்தானவை அவதானமாக கையாளவும்.



தைத்திருநாள் முதல், புத்தம் புது வடிவத்தில், புதுப்பொலிவுடன்...............

சுடச் சுடச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள.........

Online உதயன்

www.onlineuthayan.com

Phone & Fax : 021 222 0549 E - Mail :admin@uthayan.com, online@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# தைப்பொங்கல் திருநாளும் சூரியவழிபாடும்



இந்துக்கள் தமது ஆத்மீக,லௌகீக மேம்பாடு கருதி பல்வேறுபட்ட பண்டிகைகளையும் உற்சவங்களையும் அனுஷ்டித்து வருகின்றனர். இவை யாவும் திதி, நட்சத்திரம், இராசி, வாரம், முக்கிய புராண இதிகாச சம்பவங்களை அடிப்படையாக வைத்தே அமைந்துள்ளன. எனினும் நைவேத்தியப் பொருளின் பெயரே திருவிழாவின் பெயராக அமைந்துவருவது தைப்பொங்கல் திருநாள் ஒன்றே ஆகும். சூரிய பகவான் ஒரு ராசியில் இருந்து இன்னொரு இராசிக்கு மாறுங்காலம் சங்கிராந்தி என்று அழைக்கப்படும். இந்தச் சங்கிராந்தி காலம் புண்ணிய காலமாகக் கருதப்படுவதால் ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்று தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. அயனங்கள் இரண்டு ஒன்று உத்தராயணம்,மற்றையது தக்ஷணாயணம். தக்ஷணாயணம் முடிவுற்று சூரிய பகவான் மகர ராசியில் சஞ்சாரம் செய்யும் நாளே தைப்பொங்கல் திருநாளாகும். இதுவே மகர சங்கிராந்தியும் ஆகும்.

தமிழாண்டுக்காலத் தொடக்க மாக தைமாதத்தைக் கருதுவாரும் உள். வேத, சிவாகம பிரமாணங் களுக்கு அமைவது சித்திரைப் புத்தாண்டே. அதில் எமக்குத் தெளிவு இருக்க வேண்டும்.

மார்கழி மாதத்தின் இறுதி நாள் போகிப் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. இந்தநாளில் பழைய இன்ப துன்பங்களை எண்ணி மகிழ்வதே மரபு. புதியவற்றை புத்துணர்வோடு ஆற்றுவதற்கு ஏற்ற உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்காகத் தைப்பொங்கல் திருநாள் எமக்கு வழிசமைக்கிறது. இத னாலேயேதான் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வாக்கியத்தை நம்முன்னோர் முன்மொழிந்துள்ளனர். போகிப் பண்டிகையில் பழையவற்றை எண்ணி மறப்பதும், தைப்பொங்கலில் புதிய வாழ்வுக்கு எம்மைத் தயார் படுத்துவதும் எமக்கு ஓர் விசேட அனுபவத்தை தந்து நிற்கிறது. சூரிய பகவானே உலக இயக்கத்தின் மூலகாரணன். அத்தகைய பெருமை படைத்த அந்த மூர்த்தியை, பொங்க லிட்டு வழிபட்டு நன்றி செலுத்துவதே இந்த விழாவின் நோக்கமாகும். மறுநாள் உழவுத் தொழிலுக்கு உயிர் நாடியாக விளங்கும் மாடுகளுக்கு பூசை வழிபாடுகளை

**சி.சக்திகிரீவன்**

இயற்றி பொங்கல் செய்து வழிபடுகிறோம். இது பட்டிப் பொங்கல் ஆகும். பசுவைப் பூசிப்பதன் மூலம் அனைத்துத் தெய்வங்களையும் பூசித்த பலன் கிடைக்கிறது, மாடுகளை அபிஷேகித்து விபூதி, சந்தண, குங்கும, அட்சதை, பட்டு, புஷ்பம், புஷ்பமாலைகள், வாசனைத்திரவியங்களைச் சாத்தி பூசித்து பொங்கல் நைவேத்தியத்தை அளித்து வழிபடுதல் வேண்டும். இதன் மூலம் பசுவில் அமர்ந்துள்ள பல்கோடி தேவர்களும், வேதங்களும் பூசிக்கப் பட்டதாகவே போற்றப்படுகிறது. தைப் பொங்கலோடு மூன்று தொடர் விழாக்கள் அமைந்து காணப்படுவது இதன் சிறப்பம் சமாகும். பொங்கலைப் பொங்கி மகிழ்வதால் தெய்வங்கள் பிரீதி அடைவதோடு எமது இன பந்துக்களும் கூடி மகிழ்வதற்கு வழி ஏற்படுகிறது.

## பொங்கும் முறை

பொங்கலன்று அதிகாலை எழுந்து, காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சந்தியாவந் தனம், சூரிய பூஜை, சிவபூஜை ஆகியவற்றை நிறைவு செய்து கொண்டு சாணத்தால் மெழுகிய முற்றத்தில் கோலமிட்டு, நிறை குடம், குத்து விளக்குகளை வைத்து கணபதி, தீப தேவி, உசாதேவி, சாயாதேவி சமேத சிவசூரிய, மூர்த்திகளைப் பூசித்துக் கொண்டு பொங்கலை ஆரம்பிக்க வேண்டு....

புதிய அளவான மண்பானை ஒன்றை எடுத்து சுத்தம் செய்து மஞ்சள் இலை கட்டி, திருநீறு, குங்கும அட்சதைகளைச் சாத்தி புதிய புற்று மண்ணால் உண்டாக்கிய அடுப்பையடுக்கி மண் பானையை நீராலும், பாலாலும் நிறைத்து எம்மால்

ஏற்கனவே ஆவாகித்துப் பூசிக்கப் பட்ட சிவசூரிய மூர்த்தியையும், அடுப்பையும் பொங்கல் பானையுடன் மூன்று தடவை வலம் வந்து அடுப்பில் பானையை ஏற்றி பொங்கலை ஆரம்பிக்க வேண்டும். பொங்கும் போது மகிழ்ச்சி பொங்க ஆரவாரித்து 'பொங்கலோ பொங்கல்' என்று குதூ கலிப்பதும் உண்டு. பொங்கும் முறை, பொங்கும் திசை ஆகியவற்றைப் பார்த்து யோகம் கணிப்பாரும் உள். பின் பானையில் அரிசியை தாரையாக சிவ சூரியனை நினைந்தபடி இறைத்தல் வேண்டும்.

(XV ஆம் பக்கம் பார்க்க...)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்றைய கிராமிய வாழ்வியலில் நம் பாட்டிமாரின் வகிபாகம்

எனது அப்பாச்சி அமரராகி 75 வருடங்களாகிவிட்டன. அவரினுடைய வாழ்வியல்புகளை இன்று யான் அடிக்கடி எண்ணிஎண்ணி வியப்படை வதுண்டு. அப்பாச்சி பின் தூங்கி முன் எழும் ஒரு பேதை. அனைவரும் படுக்கைக்குப் போன பிறகு கடைசியாகவே அவர்நித்திரைக்குச் செல்வதுண்டு. அதுவரை அவருக்கு வீட்டுவேலைகள் நிறைய இருக்கும்.

எனதுவீடு கோண்டாவிலிலுள்ளது. அதிகாலையில் ஸ்ரீ பூதவராஜசுவாமி கோயில் மணியோசை கேட்டதும் அப்பாச்சி துயில்கலைந்து எழும்பிவிடு வது வழக்கம். அப்பொழுதெல்லாம் வீடுகளில் நேரம் காட்டிகள் இருந்த தில்லை. மக்கள் அதிகாலையில் கோயில் மணியோசைகளைக் கொண்டே நேரத்தை அறிந்து கொள்வர். பின்னிரவில் பெத்தப்பு தோட்டத்தில் இறைக்கப்போக வேண்டும் என்றால் வெள்ளி வெளிச்சத்தைக் கொண்டு நேரத்தைக் கணித்துக் கொள்வது வழக்கம்.

### தயிர் கடையும் ஒலி

நித்திரை விட்டெழுந்ததும் அப்பாச்சி முதல் வேலையாக முகம், கை கால் அலம்பிவிட்டு நெற்றியில் பட்டையாக விபூதியை அள்ளிப் பூசியபடி அடுப்படிக்குள் நுழைந்து கொள்வார். பனம் பன்னாடை கொண்டு நெருப்புச் சட்டியின் உதவியுடன் அடுப்பைப் பற்ற வைத்துவிட்டுத் தயிர்கடைய ஆரம்பிப்பார். மத்தினால் தயிர்கடையும் ஒலி சர்..சர்.. சர்..என வீடு முழுவதும் ஒலிக்கப் பெத்தப்புவும் நித்திரை கலைந்து எழும்பிக் கமத்திற்குப் போக ஆயத்தமாவார். அதிகாலைப் பொழுதில் தயிர் கடையாவிட்டால்வெண்ணெய் முழுமையாகத் திரளாதெனப் பாட்டி கூற நான் செவிமடுத்தது இன்றும் எனது ஞாபகத்தில் உள்ளது.

பனங்கட்டியுடன் தாத்தாவுக்குத் தேநீர் கொடுத்து அவரைக் கமத்துக்கு அனுப்பி விட்டுத் தனது அன்றாட மற்றைய வேலைகளைக் கவனிப்பது பாட்டியின் வழக்கம்.

பல சமயங்களில் வீட்டுப்பாடங்களைச் செய்வதற்காக நானும் அண்ணனும் எங்களை நேரத்துக்கு எழுப்பி விடும்படி பாட்டியிடம் கூறிவிட்டே நித்திரைக் குச் செல்வதுண்டு. அவ்வேளைகளில் அவர் சரியான நேரத்துக்கு எங்களை உருட்டி உருட்டி நித்திரையால் எழுப்பி விட்டுவிடுவார். காலையில் பல வேலைகளைப் பாட்டி செய்ய வேண்டியிருக்கும். முற்றம் பெருக்குதல், ஆட்டடி மாட்டடிகளைத் துப்புரவு செய்தல் எல்லாம் அவர் கவனிக்கும் வேலைகளில் அடங்கும்.

### சாமி அரிசித் தோசை

பல பலவென்று விடிந்ததும் அவித்த சிறு கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு, கொம்புவள்ளிக்கிழங்கு அல்லதுமரவள்ளிக் கிழங்குடன் தேநீரும் கையுமாகப் பாட்டாவுக்குச் சாப்பாட்டுடன் செல்லும் பாட்டி கமத்தில் நிற்கும் பசுக்களில் கறந்த பாற்செம்புடனும் கீரைக் காய்கறி வகைகளுடனும் திரும்பி வருவதுண்டு. தோட்ட இறைப்பு நடைபெறும் நாள்களில் துலா மிதிப்பவர்கள், கிணற்று மிதியில் நிற்பவர், தண்ணீர் கட்டுபவர் என எல்லோருக்கும் சேர்த்து சாமி அரிசித்தோசை மிளகாய் பொரித்து இடித்த சம்பலுடன் பாட்டி தயாராவதும் ஒரு சிறப்புக் காட்சி. பாட்டி சுடும் கமகம என மணம் கமழும் தோசைக்கும் சம்பலுக்கும் நிகராக இன்று எவற்றையுமே ஒப்புமை காணமுடியாது.

### மரவள்ளிப்பிட்டு

கமத்தில் விளையும் அத்தனை பொருள்களும் சில வேளைகளில் சந்தைப்படுத்தப்படுவதில்லை. அத்தகைய பொருள்களில் மரவள்ளிக்கிழங்கும் அடங்கும். அத்தகைய உபரியான மரவள்ளிக் கிழங்குகள் அனைத்தையும் சீவிக் கதிர்ப்பாய்களில் காயப்போட்டுக் கூடைகளில் சேமிப்பதும் அப்பாச்சியின் முக்கிய வேலைகளில் ஒன்று. மாரி காலங்களில் இரவுவேளைகளில் மரவள்ளிச் சீவலின் பயன்பாடு மிக மிகஅதிகம். மரவள்ளி மாப்பிட்டு மிகுந்த சுவையுடையது. குளிர்காலங்களில் அந்த உணவை வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் விரும்பி உண்பது வழமை. அன்று கோதுமை மா என்பதையே எவரும் அறியார்.



1960களில் இலங்கையில் பெண்கள் சமையலில் ஈடுபட்டுள்ளனர்

> *தட்டுப்பாடான*
> *காலங்களில்*
> *பாவிப்பதற்கெனக்*
> *காய்கறி வகைகளை,*
> *உணவுவகைகளைச்*
> *சேமித்து வைத்துப் பயன்*
> *பெற்ற குடாநாட்டு*
> *மக்களின் வாழ்வியற் புகழ்*
> *தொலைந்து போன*
> *சோகம். இன்று*
> *தம்புல்லையிருந்து*
> *மரக்கறி வகைகள்,*
> *நுவரெலியாவிலிருந்து*
> *உருளைக்கிழங்கு*
> *போன்றவை*
> *தருவிக்கப்படும் பரிதாப*
> *நிலையில் குடாநாட்டு*
> *மக்கள்.*

### காய்கறி வற்றல்கள்

இராசவள்ளி, கொம்புவள்ளி, சிறுகிழங்கு வகைகள் எல்லாம் அடுத்த போகம் வரும்வரை வீட்டுக் கோர்காலிகளின் கீழ் சேமிப்பில் இருக்கும். அவை வேண்டிய வேளைகளில் உணவாகப் பயன்படுத்தப்படும். உபரியான மரவள்ளிக் கிழங்கைப் போலவே சந்தைப்படுத்தப்படாத பாகற்காய், கத்தரிக்காய், நீற்றுப் பூசணிக் காய்களையும் அப்பாச்சி சீவிக் காயப் போட்டு உப்பிட்டுப் [illegible] வைகளில் வைத்துக் [illegible] எல்லாக் காலங்களிலும் எல்லாக் காய்கறி வகைகளும் கிடைப்பதில்லை. எந்தெந்தக் காலங்களில் எந்தெந்தக் காய்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அவ்வேளைகளில் எல்லாம் வற்றல்கள் அனைத்தும் "யாமிருக்கப் பயமேன்" என முன்னுக்கு வந்து மக்களுக்குக் கை கொடுப்பதுண்டு. எனது அனுபவமொன்றை இவ்விடத்தில் யான் கூறவேண்டும். நீற்றுப்பூசிணிக்காய் வற்றல் சரியாகப் பலாச்சருகு போல இருக்கும். இவ்வற்றலைக் குறுணலாக அரிந்து வெந்தயம், வெங்காயம், மிளகாயுடன் சேர்த்து வதக்கி அப்பாச்சி வைக்கும் வெந்தயக் குழம்புடன் அடம்பிடிக்காமல் யான் சிறு பிள்ளையாக இருக்கையில் சாப்பிடுவது இன்றும் எனது ஞாபகத்தில் பசுமையான நிகழ்வாக உள்ளது. அந்தக் காலத்தில் எங்கள் வளவுகளில் புளி, மா மரங்கள் பல இருந்தன.

அங்காடிகளிலும் புளி மாங்காய்களுக்கு அதிக சந்தைவாய்ப்பு இருந்த காலம் அது. மீன் வாங்கிச் செல்பவர்கள் கட்டாயமாகப் புளி மாங்காய்களைத் தேடித் தேடி வாங்குவர். சைவர்களும் அப்படியே. புளிமாங்காய்கள் தேவைக்கதிகமாக விளைச்சலாகும் போகங்களில் உபரியானவற்றை ஒன்றைத்தானும் அவம் போகவிடாமல் சீவிக்காயப்போட்டு வற்றலாக்கி உப்பிட்டுப் பானைக் குடுவைகளில் சேமித்து வைத்துக் கொள்வார். அப்பாச்சி மாரி காலங்களில் மீன், கருவாடு, சைவக்குழம்புகளுக்கு அவற்றின்பாவனை மிகுந்த உவப்பான தேவையான பண்டமாகக் கொள்ளப்படும்.

### ஒடியற்கூழ், ஒடியற்பிட்டு

பகலில் அப்பாச்சி பலவேளைகளில் அடிக்கடி ஒடியற் கூழ் சமைப்பார். கூட்டுக் குடும்பமுறை நிலவிய அக்காலத்தில் அவரின் சகோதரர்களும் வந்து கூழ் குடிப்பார்கள். சாமி அரிசிச் சாதம் தினசரி ஆக்கப்பட்ட அந்தக் காலத்தில் அதனுடன் சேர்த்துக் கொள்ளத்



தாத்தாவிற்குக் கீரை, மரவள்ளிக்கிழக்குக் கறியுடன் ஒடியற் பிட்டும் கட்டாயம் தேவை. ஒடியற்பிட்டு இல்லாவிட்டால் தாத்தா [illegible] ஒன்றாகக் கடிந்து கொள்வார். அவரது விருப்பப்படி சாப்பாடு அமையாவிட்டால் பொச்சந்தீரவில்லை; பசிக்கிறதென்று அவர் குறை கூறுவதையும் யான் அவதானித்திருக்கிறேன்.

### புளி, இலுப்பை, வேம்பு, மா மரங்களின் பயன்

எங்கள் வளவுகளில் புளியமரங்கள் நிறைய இருந்த காலத்தில் அவை பழுத்துச் சொரியும் போகங்களில் அவற்றைப் பொறுக்கிக் கொடுப்பது எனது கடமைகளில் ஒன்றாக இருந்தது. இதே போன்று எங்கள் வீட்டு வளவிலேயே மூன்று பெரிய இலுப்பை மரங்கள் இருந்த போது அவையும் பழுத்துச் சொரியும் வேளைகளில் வீடுகளில் சின்னப் பிள்ளைகளுக்கு வேலை அதிகம். இலுப்பைக் கொட்டைகளை ஒன்று விடாமல் பொறுக்கித் தினசரி குவிப்பது எங்கள் கடமை. வேம்பு விதைகளை அப்பாச்சிக் கூட்டி அள்ளிக்கொள்வார். அன்றெல்லாம் மகப்பேற்றுத் தாய்மார்களுக்குத் தான் சிறப்பாக எள்ளெண்ணெய் பாவிக்கப்பட்டது. மற்றும்படி வீடுகளில் சகல உணவுத் தேவைகளுக்கோ விளக்கேற்று



செல்லப்பா நடராசா

வதற்கோ இலுப்பை எண்ணெயே பாவிக்கப்பட்டது. வேப்பம் எண்ணெய் சுவாமி அறையில் விளக்கேற்றுவதற்கும் சிறு குழந்தைகள் உறங்கும் இடங்களில் சுட்டி விளக்குகளை எரிப்பதற்கும் பாட்டி பயன்படுத்தியதுண்டு.

### அம்மியில் வைத்து சரக்குக் கூட்டு

தினசரி பகற் சாப்பாட்டிற்கான கறிவகைகளுக்கு வறுக்காத செத்தல் மிளகாய், மல்லி, மிளகு, சீரகம், பூடு, மஞ்சள், தேங்காய்ச் சொட்டு ஆகியவற்றை அம்மியில் வைத்துக் கூட்டு அரைப்பதும் அப்பாச்சியின் வழமையான நடைமுறைதான். இரவில் குரக்கனில் பிட்டோ, பனங்கட்டி சேர்த்த றொட்டியே தயாரிப்பதென்றால் திரிகையில் குரக்கன் திரிக்கப்படும். சாமிஅரிசிச் சாதம் ஆக்கும் வேளைகளில் அதுவும் வறுத்தே உரல்களில் குற்றப்படும்.

(IV ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வழிகாட்ட இனிவரும் தை வழி விடுமா?

''தை'' பிறந்தால் வழி பிறக்கும் என்பர் எம் முன்னோர். அதை இப்பவும் உச்சரித்தபடி எம்மில் சிலர் இருக்கின்றார்கள் தான். இதுவரை எத்தனை ''தை'' எம் வாழ்வில் பிறந்துவிட்டது: இத்தனைக்கும் மாறாக எந்தப் பாதையும் ஒளிமயமான எதிர்காலத்துக்கு வழி விடவில்லை.

எம்மவர்கள் அன்று தொட்டு இன்று வரை தம் வாழ்நாளில், துன்பங்களையும், துயரங்களையும், சொல்லில் அடங்காத சோக உணர்வுகளையும், உறவுகளைப் பிரிந்து, முள்கம்பி வேலிகளுக்குள்ளும், சிறைக்கூடங்களிலும், வதைபட்டும் உதைபட்டும், மனித வாழ்வில் அனுபவிக்கக் கூடாத வற்றையெல்லாம் அனுபவித்துக் கொண்டு, தினமும் கண்ணீரும், சோறுமாய் தம் ஜீவனோபாயத்தை நகர்த்திக் கொண்டு உள்ளனர். சோகங்கள், சொந்தம் கொண்டாட வாழ்ந்து வருகின்றார்களே. இவர்களும் மனித வாழ்வை அனுபவிக்கத் தானே பிறந்தவர்கள். இவர்களுக்கு மட்டுமேன் வாழ்க்கை எட்டாக் கனியாகி விட்டது? தடைகள் அற்ற சுதந்திரக் காற்றை இவர்கள் எப்போது சுவாசிப்பது?. ''கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் தான் எதற்கு'', வாழ வேண்டிய வயது கையசைத்துப் போன பின்னர், வாழ்க்கை பற்றிய நினைப்பெதற்கு...

முடிந்த போதில் பாட்டன், பூட்டன் சிறுகச், சிறுகச் சேர்த்த சொத்தெல்லாம் எரிந்து சாம்பலாச்சு, இனி அதைத் தேட எமக்கெல்லாம் வயது போச்சு, அங்கங்களை இழந்து ஊனமுற்றவர்கள் வாழ்வு கேள்விக் குறியாச்சு?.... கண்மூடி முழிக்க முன்னர் காணமல் போன உறவுகளை தேடிக் களைச்சாச்சு! குண்டு பட்டு குடும்பம், குடும்பமாய் சிதறிப் போனவர்களை நினைத்தால் இப்பவும் வலிக்கிறது எம் இதயம். கணவனை இழந்து, தந்தையை இழந்து, மனைவியும் பிள்ளைகளும் கதறுவதைக் கேளீர். தாய், தந்தையைப் பலி கொடுத்து விட்டு, பதறித் திரியும் பாலகரைப் பாரீர், பாரினில் நிலையற்ற வாழ்வாய் சொத்தென

**து-திலக்**

இருந்த பிள்ளைகளை சொர்கலோகம் அனுப்பிவிட்டு மனநோயால் அலையும் பெற்றோர்கள் தான் எத்தனை?.. சொல்லிக் கொண்டே போகலாம். சொல்லச் சொல்ல வந்து கொண்டேயிருக்கும். எம்மவர் படும் வேதனைகள் இவ்வளவு காலமும் பிறந்த ''தை'' தந்த வழியிது தான்... பட்டாசு வெடிக்குப் பதிலாக, குண்டு வெடியோசைகளே எம் காதில் கேட்டன. இனி வேண்டாம் இவையெல்லாம் விட்டு விடுவோம். புத்தொளியூட்டி, புதுவழிகாட்ட இனி வரும் ''தை'' போர் முடிந்த சூழலில் வழி விடுமா? 'சுதந்திரம் தான் அது ஏட்டில், சுரக்காய் ஆகிவிட்டது.'' பிரிந்தவர்கள் எல்லாம் ஒன்று கூடி மகிழ்ந்துண்ணும் ''தைபொங்கல்'', நத்தார், வருடம் இவை இனி எப்போ வரும்?.. இருப்பவர்களேனும் தடையேதுமின்றி இணைந்துண்டு வாழ, பயமின்றிக் கண்மூடி நித்திரை கொள்ள, மகிழ்வோடு ஊரெல்லாம் சுற்றிவர, பகைமையுணர்வு பாடையேற, பட்டி தொட்டியெல்லாம் புது வாழ்வு மலர, ஊரெல்லாம் புதுவசந்தம் வீச, வருகின்ற தை நாளில் வருந்தியுனை வேண்டுகிறோம். 'இறைவா இழந்தவற்றை கேட்க வில்லை, இருப்பவற்றை மனப்பூர்வமாய் அனுபவத்து நல்ல வாழ்வு வாழ நல்ல வழி காட்டு. இந்தநாளில் வேண்டுகிறோம்.. நாடெங்கும், பொங்கி வரும் பொங்கல் நுரையை அள்ளித் தெளிப்பது போல், துன்பங்கள் இனி எம் வாழ்வில் இருந்து அள்ளி தெளிக்கப்படட்டும். நாடு நலம் பெறட்டும்.














| COMPUTER | INTEL ATOM | INTEL DUAI CORE | INTEL CORE 2 DUO | ACER 5742 Laptop | HP Probook 4520s |
|---|---|---|---|---|---|
| Processor<br>Mother board<br>Memory<br>Hart disk<br>Disk drive<br>Casing<br>Moniter<br>Key board<br>Mouse<br>Speaker | Intel Atom 1.6 GHZ<br>Intel 945 GNL<br>1GB DDR-II, 800MHZ<br>160GB SATA-7200RPM<br>LG DVD Writer<br>ATX 500W E marck<br>15.5 Acer LCD<br>Prolink USB,PS\2<br>Sony Optical USB\Ps2<br>Multimedia Speaker<br>price=36900 | Intel Dual core 3.0GHZ<br>Intel Chipsct G31<br>1GB DDR-II, 800MHZ<br>320GB SATA-7200RPM<br>LG DVD Writer<br>ATX 500W E marck<br>15.5 AeerLCD<br>Prolink USB,PS\2<br>Sony Optical USB\Ps2<br>Multimedia Speaker<br>price=41900 | Intel core 2 Duo 2.93 GH<br>Intel Chipsct G31<br>1GB DDR-II, 800MHZ<br>320GB SATA-7200RPM<br>LG DVD Writer<br>ATX 500W E marck<br>19"LG LED<br>prolink USB,PS\2<br>Sony Optical USB\Ps2<br>Multimedia Speaker<br>price = 50900 | Intel core i3<br>Win7 Home Basic<br>VGA 1GB HD Grap<br>RAM 3GB<br>H.D 500GB<br>DVD super multi<br>Wifi<br>webCamera With Mic<br>LCD 15.6"<br>Price=85900 | Intel core I3<br>Win7 Home pre<br>2GB<br>320GB HDD<br>DVD Writter<br>VGA 1 GB HD Grap<br>web Camera With Mic<br>LCD 15.6"<br>Wifi<br>Price=90900 |

| COMPUTER | INTEL CORE i3 | INTEL CORE i5 | HP Davillon dv6t 3200 | Terms & Contdition | Toshiba mini Laptop |
|---|---|---|---|---|---|
| Processor<br>Mother board<br>Memory<br>Hart disk<br>Disk drive<br>Casing<br>Moniter<br>Key board<br>Mouse<br>Speaker<br>Price | IntelCore i3 3.06Ghz.<br>Intel DH55PJ<br>2GBDDRIII<br>320GB SATA-7200RPM<br>ATX 500W E marck<br>LG DVD Writer<br>Samsung LED Monitor 18.5<br>Prolink. USB,PS\2<br>Sony Optical USB\Ps2<br>Multimedia Speaker<br>price=55900 | IntelCore i3 3.06 Ghz<br>Gigabyte Board<br>2GBDDRIII<br>500GB SATA-7200RPM<br>ATX 500W E marck<br>LG DVD Writer<br>Samsung LED Monitor 18.5<br>Prolink USB,PS\2<br>Sony Optical USB\Ps2<br>Multimedia Speaker<br>price=65900 | Intel core i3<br>Win7 Home pre<br>VGA 1 GB HD Grap<br>RAM 4GB<br>HD 500GB<br>web Camera With Mic<br>Wifi<br>DVD super multi<br>6-cell li -on battery<br>LCD 15.6"<br>104.900 | 1. Warranty-3Years Manufacturer's warranty,1 Year Service Warranty | Atom Intell.6Ghz<br>Dos<br>1GB<br>250GB<br>128MB<br>web Camera With Mic<br>10.1"<br>WIFI Blue Tooth<br>Price=46900 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றைய கிராமிய வாழ்வியலில் நம் பாட்டிமாரின் வகபாகம்

( II ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பனாட்டும், பனங்காய்ப் பணியாரமும்**

பனைகள் பழுத்துச் சொரியும் காலங்களில் அப்பாச்சியின் வேலைச் சுமை மிக மிக அதிகம். எங்களுக்கென இருந்த பெரிய பனம் தோப்பொன்றிருந்தது விடியப் பாடசாலைக்குப் புறப்படுவதற்கு முன்னர் பனம் பழங்களைப் பொறுக்கிக் கொண்டுவந்து வீடு சேர்ப்பது எனதும் தமையனாரதும் வேலை. அப்படிக் கொண்டு வரப்படும் பழங்களைத் தோல் நீக்கிப் பிசைந்து களி எடுத்துப் பனாட்டுப் பாய்களில் ஊற்றிக் காய விடுவதும் பாட்டியின் வேலைதான்.

பனம் களியைப் பாயில் ஊற்றமுன் நுனியில் மூன்றுகெவர் அலகு உள்ள தடி ஒன்றினால் அது தயிர் போலக் கடையப்படும். தடியின் மூன்று அலகுகளிலும் களியிலுள்ள தும்புகள் அனைத்தும் சிக்குப்பட்டு வேறாகிவிடும். பனாட்டுப் பாயில் சில தினங்க்ளுக்கு அடுத்து ஊற்றிக் காயவிடப்படும் களியானது ஈற்றில் நன்கு கெட்டியாகக் காய்ந்ததும் கூரிய ஆயுத மொன்றினால் ஒரு அடிக்குக் குறையாத சதுரத் துண்டுகளாகப் பெயர்ந்து எடுக்கப்பட்டு முதலில் நடுவில் இரண்டாக மடித்து பின் ஒவ்வொரு பக்கத்தையும் உட்பாட்டிற்கு மேலும் இரண்டாக மடித்துச் சேர்ந்து விடப் பனாட்டுத் தட்டுக்கள் நான்கு அடுக்கில் உருவாகிவிடும். அவற்றை ஓலைக் கூடைகளில் பாட்டி அடுக்கி வைத்துத் தேவைக்கேற்றபடி எடுத்துக் கொள்வது வழக்கம். பல வேளைகளில் காலையில் தாத்தாவின் காலை நேர ஆகாரம் பனாட்டும் பழைய சோறும் அதன் தண்ணீரும் தான்.

பாட்டி பனம்பழக் காலங்களில் அடிக்கடி சுடும் பனங்காய்ப் பணியாரத்துக்கு வீட்டில் என்றும் பெரிய வரவேற்பு. சிறு பிள்ளைகளாக இருந்த எங்ககளுக்கெல்லாம் ஒரே குதூகலம். அவ்வளவு சுவை மிகுந்தது அந்தப் பணியாரம். சாப்பிடச் சாப்பிடத் தெவிட்டாதது.

**காமாலை நோய்க்கு மருந்து**

சிறுவயதில் என்னை மஞ்சள் காமாளை எனும் நோய் பற்றிக் கொண்டுவிட்டது. தேகம் எல்லாம் ஒரே மஞ்சள் நிறம். வயிறும் சற்று ஊதல். இந்த நோய்க்குப் பாட்டிதான் எனக்கு வைத்தியம். எங்கள் பனந்தோப்பில் முருகன் என்றொரு சீவற் காரர் சீவற் தொழில் செய்து வந்தார். அவரை ஒரு நாள் கூப்பிட்டு

> ***தினசரி பகற் சாப்பாட்டிற்கான கறி வகைகளுக்கு வறுக்காத செத்தல் மிள காய், மல்லி, மிளகு, சீரகம், பூடு, மஞ்சள், தேங்காய்ச்சொட்டு ஆகியவற்றை அம்மியில் வைத்துக் கூட்டு அரைப்பதும் அப்பாச்சியின் வழமையான நடை முறைதான்.***

பாட்டி சொன்னார் "முட்டி கழுவிக்கட்டி தனி ஆண் பனைக் கள்ளாகக் காலையில் இரு சிரட்டைகள் தினசரி தரவேண்டும்" என்பதாக. தினசரி முருகன் கள் தர ஓடித்திரியும் என்னைக் கலைத்துப் பிடித்துப் பருக்கி வந்தார் பாட்டி. என்னைப் பீடித்திருந்த நோய் திரும்பிப் பார்க்காமலேயே பறந்தோடி விட்டது. தெரியாமலா பாடினார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள்.

**"கற்பகம் பொலியும்
கடவுட் பனை வாழி"**

என்று. கற்பக தருவாம் பனைக்கு நிகராக உலகில் வேறு எந்தந் தருவுமே இருக்க முடியாதென்பது குடாநாட்டு மக்கள் கண்ட அனுபவமாகும்.

**பாட்டி ஒரு வைத்திய நிபுணர்**

எங்கள் காலத்தில் அன்று செருப்புப் போடும் வழக்கம் எங்களிடம் இருந்ததில்லை. மாலையில் இலுப்பை, மா,



புளி, வளவுகளில் விளையாடப் போகும் நாம் காற்பெருவிரவில் கல்லடிபட்டு நகம் கிழிந்த நிலையில் வீடு திரும்புவதுண்டு. இதை அவதானிக்கும் அப்பாச்சி ஒதிகம் பட் டையை எடுத்துத் துவைத்துக் காயமடைந்த விரலுக்கு வைத்துக் கட்டிவிடுவார். விரல் விக்கம், நோ எல்லாம் விரைவில் குணம்கண்டு விடும். இப்படியே எங்களுக்கு வரும் இருமல், தடிமன், காய்ச்சல் எல்லாவற்றுக்கும் அவரிடம் பல கைவைத்திய முறைகள் இருந்துள்ளன. மிளகு வறுத்து, சிரட்டைக்கரி ஒரு துண்டு போட்டு அவித்து ஒரு குடிநீர் குடிக்கத் தருவார் பாட்டி. எமது வயிற்றில் இருக்கக் கூடிய மந்தம், பசியின்மை எல்லாம் அகன்று விடுவ துண்டு. பனங்கற்கண்டு போட்டுப் பால் காய்ச்சிப் பருக இருமல் குணமாகும் என்பார் பாட்டி. கர்ப்பிணித்தாய்மார்களையெல்லாம் துலாக்கொடி பிடித்துக் கிணற்றில் தொங்கித் தொங்கித் தண்ணீர் அள்ளாதே என்று பேசுவார் இப்படியாக ஒரு வைத்திய நிபுணர் போலவும் வீட்டில் பிரகாசித்தவர் எங்கள் பாட்டி.

பனங்கிழங்குக் காலங்களில் பெருந் தொகையான நல்ல கிழங்குகளை அவித்துப் புழுக்கொடியலாகக் காயப்போட்டுக் கூடைகளில் சேமித்து வைக்கும் பாட்டி ஏனையவற்றை ஒடியலாக்கி விடுவார். ஒடியலை இடித்து மாவாக்கிப் பிட்டிற்கும் கூழுக்கும் பயன்படுத்தப்படுவதுண்டு.

**அப்பாச்சியின் சிபார்சும் சின்னமேளமும்**

பாட்டா, பாட்டியை அடிக்கடி மீன் கலந்து ஒடியற்பிட்டு அவிக்கச் சொல்லி வற்புறுத்துவார். அத்தகைய நாள்களில் பாட்டா, பாட்டியுடன் 'வெடு சுடென்று கதைகள் வைத்துக் கொள்ளமாட்டார். அன்னியோன்யமாக நடந்து கொள்வார். நாங்கள் கோயில் திருவிழாக்களுக்கு இரவில் போக வேண்டும் என்றால் முதலில் அனுமதி பெறுவது அப்பாச்சியிடம் தான். முன்னிரவில் நித்திரை செய்து விட்டுப் பின்னிரவில் அதிகாலை இரண்டு மணிக்குச் சின்னமேளக் கச்சேரிகள் தொடங்கக் கோயிலுக்குப் போகத்தான் அனுமதி கிடைக்கும். அப்பாச்சி சிபார்சு செய்தால் அதை மறுதலிக்கும் அதிகாரம் எனது தகப்பனுக்குக் கிடையாது. பெத்தப்புவும் ஒன்றும் பேச மாட்டார்.

மாலையில் தோட்டத்தில் நிற்கும் பசுக்களுக்கு ஓலைகிழித்துப்போடப் பாட்டாவிற்குப் பாட்டி உதவுவார்.

இலுப்பைக் கொட்டைக் காலங்களில் இரவில் அவற்றை உடைத்து பருப்பைத் தனியாக்குவதும் அவரது வேலைதான். இதேபோன்று வேப்பம் விதைகளையும் பருப்புவேறு, கோது வேறாகவும் பிரித்து விடுவார். பாட்டி இல்லாமல் வீடே இயங்காது என்ற நிலை. பாட்டி சொல்வதை எவரும் அசட்டை செய்வதில்லை.

**பாட்டியின் தீர்ப்புக்கு மேன் முறையீடு கிடையாது**

நாடாளுமன்றத்தில் ஒரு சபாநாயகரின் தீர்ப்புக்களுக்கு எப்படி மேன்முறையீடு கிடையாதோ அப்படித்தான் எங்கள் பாட்டியின் தீர்ப்புக்களுக்கும் மேன்முறையீடு கிடையாது. ஆனால் பாட்டியின் தீர்ப்புகளும்சரியானவையாகவே இருப்பதுண்டு.

இரவில் பாட்டி படுக்கைக்குப் போகப் பத்து மணிக்கு மேலாகிவிடும். பாட்டியின் கட்டிலுக்கு மேல் ஒன்றன் மேல் ஒன்றாகப் பல படுக்கை விரிப்புக்கள் இருக்கும் கட்டிலுக்குக்கீழ் வைக்கப்பட்டிருக்கும் உமிச்சட்டியிலிருந்து புகை வெளிவந்தபடி இருக்கும். உமியுடன் வேப்பங்கோதும் கலக்கப்படுவதால் வேப்பம் புகையின் நாற்றமே வீடு முழுவதும் கமழ்ந்தபடி இருக்கும். நுளம்புத் தொல்லைகள், அவற்றின் சங்கீதம் எதுவும் இன்றிப் பாட்டி நாள் முழுவதும் வேலை செய்த அலுப்பு நீங்க நன்றாகத் தூங்குவார்.

இவ்விடத்தில் வாசகர்கள் என்னிடம் கேட்கக் கூடிய ஒரு கேள்வி "அதிகாலை முதல் இரவுவரை ஒரு பாட்டியால் இவ்வளவு வேலைகளையும் தனித்து நின்று செய்து முடிக்க முடியுமா?" என்பது தான். இல்லை, வீட்டிலுள்ள எனது சகோதரிமார் எனது தாயார் எல்லோரும் சேர்ந்து பாட்டிக்கு ஒத்தாசையாகச் சகலவேலைகளையும் கவனிப்பார்கள். பாட்டி ஒரு கிரிக்கெற் அணித்தலைவர் போல (கப்ரின்) அவ்வளவுதான்.

பாட்டி அமரராகும் வரை அவருக்குக் கண்பார்வை மிகமிக நன்றாகவே இருந்தது. 32 பற்களும் அப்படியே ஆரோக்கியமாகவே இருந்துள்ளன. முழுப் பாக்கைக் கொடுப்பில் வைத்துக் கடித்து ஒரு துண்டை எடுத்து வெற்றிலையுடன் மெல்லுவதைப் பார்த்து யான் வியப்படைவதுண்டு. பாட்டி வேப்பங் குச்சியினால் எங்களைப் பல்துலக்கச் சொல்வார். பாட்டியின் மகாத்மியம் இப்படி நீண்டு கொண்டே போகும். அந்தக்கால வாழ்வியல்புகள் பலவற்றைத் துறந்து நாம் வாழக் கற்றுக்கொண்டமைதான் இன்று எமது துன்பங்கள், துயரங்கள் பலவற்றுக்குக் காரணமாகும். இன்று தம்புல்லையிலிருந்து மரக்கறி வகைகள், நுவரெலியாவிலிருந்து உருளைக்கிழங்கு போன்றவைத் தருவிக்கப்படும் பரிதாப நிலையில் குடாநாட்டு மக்கள் இருக்கிறார்கள். ✱

உளம் நிறைந்த இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



Computer Class, Self Practicals, Computer Games, Printing,
CD& DVD Writing, Computer repairing & Sales.
Local: 021 4591761/ 021 4591890
I.D.D.: 0094 21 4591761, 0094 214591890
Fax: 021 4591761.
Computer World
7th Mile Post, Chankanai.
E- mail: computerworld@wow.lk

Multilac
www.multilac.com
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்




Multilac Paints
உங்கள் இடங்களை உங்கள் எண்ணம்
போல் வண்ண மயமாக்குவதற்கு பூசுங்கள்
பிரதேசவாரியாக உள்ள எமது Colour Bank களில்
பெற்றுக் கொள்ளலாம்.
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
கந்தவேலன் ரேடர்ஸ்
இல.110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் பொங்கல்



கலாநிதி
மனோன்மணி
சண்முகதாஸ்



தை மாதம், மாதங்கள் எல்லாவற்றிலும் தனித்துவமானது. இந்த மாதத்துடன் 'பொங்கல்' என்ற சொல் இணைந்து 'தைப்பொங்கல்' என்ற விழா மாதமாக விளங்குகிறது. ஓராண்டின் தொடக்கமான மாதமாகத் தைமாதம் கணிக்கப்பட்டுத் தமிழர் திருநாளாகச் சிறப்பு பெற்றுள்ளது. தைப்பொங் கல் நடைமுறை தமிழரது வாழ்வியலில் சிறப்பாக, விளை பொருள்களுடன் தொடர்புற்றுள்ளது. மனிதனின் உணவுத் தேடல், அவனுடைய வாழ்நாள் கடமையாக உள்ளது. அவன் வேட்டையாடி உணவைத் தேடிய நிலையிலிருந்து வளர்ச்சி பெற்றபோது நிலையாக ஓரிடத்தில் தங்கி விளைபொருள் மூலம் வாழ்வை நடத்தத் தொடங்கினான். இப் பண்பட்டநிலை உலகளாவிய நிலையில் பொதுவானதாக இருப்பினும் தமிழர், ஜப்பானியர்களின் வாழ்வியல்கள் சிறப்பான தொரு நடைமுறையைக் கொண்டதாக விளங்கு கிறது.

### இயற்கையோடு ஒட்டிய வாழ்வியல்

தமிழரும் ஜப்பானியரும் இயற்கையோடு ஒட்டிய வாழ்வியல் நடைமுறைகளைக் கொண்டிருந்தனர். இதற்கு இரு மொழிகளிலும் தோன்றிய இலக்கியங்களே சான்றாக உள்ளன. ஜப்பானிய மொழிக்கும், தமிழ் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற ஆய்வைத் தொடக்கிய ஜப்பானியப் பேராசிரியர் சுசுமு ஓனோ இயற்கையோடு ஒட்டிய வாழ்வியலைத் தமிழரும் ஜப்பானியரும் வாழ்ந்ததை ஒப்பிட்டு ஆய்வு செய்தார். நிலத்திலிருந்து பெறும் விளைபொருள்களை ஆண்டுத் தொடக்கத்தில் கடவுளுக்கு மடையிட்டுப் பொங்கலிடும் மரபு ஜப்பானியரிடமும் இருக்கின்றது. இயற்கையையே தெய்வமாக வழிபடும் ஜப்பானியருடைய வருடத்து விழாக்களில் முதல் விழாவாகத் தைமாதம் 15 ஆம் நாள் புத்தாண்டுப் பிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் ஆங்கிலப் பண்பாட்டுத் தாக்கத்தால் தை மாதம் 1ஆம் நாள் புத்தாண்டுத் தொடக்கமாக மாறிவிட்டது. எனினும் தைமாதம் 15 ஆம் நாள் கொசொகற்சு (KOCHO KATSU) சிறிய புத்தாண்டு என மருவி இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

*ஜப்பானில் அகிதா, அஒமொரி போன்ற பிரதேசங்களில் சிறிய புதுவருடத்தன்று மக்கள் தங்கள் வீடுகளைச் சுற்றி வலம் வந்து ஹொங்கா! ஹொங்கா எனச் சத்த மிட்டபடி அவரை சேர்ந்த விதைகளைத் தூவும் வழக்கம் நிலவுகிறது. ஜப்பானிய நாட்டார் வழக்கியல் முறைகளைத் தொகுத்த யனகித குனியோ என்பவரெழுதிய "வருடாந்த நாட்டார் வழக்குகளின் மொழி" என்னும் நூலில் பின்வரும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.*



ஜப்பானியர்களின் பண்டிகைக் கால விசேட உணவுகளில் ஒன்று

இந்தவிழா பொங்கல் நிவேதனத்துடன் கொண்டாடப்படுவது வியப்பானதாகும். தமிழரும் ஜப்பானியரும் ஒரே விதமாக இவ்விழாவைக் கொண்டாடுவது சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. நிலவேளாண்மை செய்பவர் மட்டுமன்றிக் கடல் வேளாண்மை செய்பவரும் சிறிய புதுவருடத்தைத் தமது விளைபொருள்கள் கொண்டு கொண்டாடுகின்றனர். எனவே இந்நடைமுறை எல்லாத் தொழில் செய்பவரும் புத்தாண்டைச் சிறப்பாக வரவேற்கும் ஒரு விழாவாகிவிட்டது. ஜப்பானியர் தை மாதம் 15ஆம் நாளை சிறிய புத்தாண்டின் தொடக்க நாளாகத் தமது மரபான புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

### விழா நடைமுறைகள்

சிவந்த அரிசி பருப்புடன் பொங்கல் செய்து சிறப்புணவாக அதனை ஏனைய விளைபொருள்களுடன் மடையிட்டு வழிபடல், காக்கைக்குப் பலிகொடுத்தல், பொங்கல் நாளுக்கு முதல் நாள் வீடுகளைத் துப்புரவு செய்து பழைய பொருள்களை நெருப்பிலிட்டு எரித்தல், புதிய விளைபொருள்களைப் புது வருடத்தன்று வாசலில் கட்டித் தொங்கவிடல், பொங்கலைப் பகிர்ந்து எல்லோருமாக உண்ணல் என்னும் நடைமுறைகள் ஜப்பானியரிடம் இன்றும் வழக்கமாக உள்ளது.

ஜப்பானில் அகிதா, அஒமொரி போன்ற பிரதேசங்களில் சிறிய புதுவருடத்தன்று மக்கள் தங்கள் வீடுகளைச் சுற்றி வலம் வந்து ஹொங்கா! ஹொங்கா! எனச் சத்தமிட்டபடி அவரை சேர்ந்த விதைகளைத் தூவும் வழக்கம் நிலவுகிறது. ஜப்பானிய நாட்டார் வழக்கியல் முறைகளைத் தொகுத்த யனகித குனியோ என்பவரெழுதிய "வருடாந்த நாட்டார் வழக்குகளின் மொழி" என்னும் நூலில் பின்வரும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

"அகிதா பிரதேசத்தின் வடபாகத்திலிருந்து ஸ்துகரு, நம்பு போன்ற பகுதிகளில் சிறிய புது வருட தினத்திற்கு முதல் நாள் அல்லது தை மாதம் 15 ஆம் நாளுக்கு முதல் நாள் மாலை சோயா அவரை, கொள்ளுத் தவிடு என்பவற்றையும் சக்கேயின் மண்டி அல்லது ஒகறா (அவரைத் தயிரின் மீதி) என்பவற்றையும் கலந்து தம்முடைய வீட்டைச் சுற்றி மக்கள் தூவுவார்கள். அப்போது ஹொகா, ஹொகா எனச் சொல்லித் தூவுவார்கள். இச் சொற்றொடரால் அந் நடைமுறையும் அழைக்கப்படுகிறது. இவ்வழக்கம் நூறு வருடங்களுக்கு முன்னராகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பின்வரும் பாடல் பல இடங்களில் பாடப்படும் வழக்கமும் இருந்துளது.

**அவரைக் காய்கள் ஹொங்கா! ஹொங்கா!**
**கொள்ளுத் தவிடு ஹொங்கா! ஹொங்கா!**
**ஒகஹா ஹொங்கா! ஹொங்கா!**
**இவையெல்லாம் வா! பறந்து வா!**

இப்பாடலை ஒலிப்பவர்களுக்குப் பாடலின் பொருள் தெரியாது. ஸ்கரு பகுதி வாழ் மக்கள் அரிசித் தவிட்டையும் சக்கே மண்டியையும் ஏனைய பொருள்களையும் அவரையுடன் கலவையாக்கித் தூவுவர். அப்போது பின்வரும் பாடலைப் பாடுவர்.

**"அவரைக் காய்கள் ஹொங்கா! ஹொங்கா!**
**இவையெல்லாம் வா! பறந்து வா!**
**நாணயம், காசு எல்லாம் பறந்து வா!**
**இந்த வருடம் சக்கே காய்ச்சப்படுகிறது!**
**சக்கேயாக மழை பொழி மணம் பரவுகின்றது!**
**அத்தோடு நாங்களும் மனைவியரையும்**
**பணியாள்களையும் பெறுவோம்!"**

இப்பாடல் ஜப்பானியர் புதுவருடத்தன்று விளைபொருள்களை வேண்டி வழிபாடு செய்ததைக் காட்டுகிறது. ஹொங்கா! ஹொங்கா! என்ற ஒலிப்பு தமிழிலுள்ள பொங்கலோ! பொங்கல்! என்ற ஒலிப்புடன் ஒலி, பொருள் என்பவற்றில் தொடர்புற்றிருப்பதாகப் பேராசிரியர் சுசுமு ஓனோ தமது ஒப்பீட்டு மொழியாய்வில் நிறுவியுள்ளார்.

புதுவருடத்தன்று கலைநிகழ்ச்சிகள் நடத்தல், வீடுவீடாகச் சென்று பாடிப் பொருள்கள் பெறல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. தைமாதம் புதியதொரு தொடக்கமாக், வளமான எதிர்காலத்தைக் கொணரும் புத்தாண்டுத் தொடக்கமாக ஜப்பானிய மக்கள் வாழ்வியலில் இணைந்து நிற்கின்றது. புதுவருடத்திற்கு மறுநாள் உறவினர் வீடுகளுக்குச் சென்று உறவாடுவதும் மரபாக உள்ளது. புதுவருட நடைமுறைகள் பயிர்ச் செய்கையோடு தொடர்பு பட்டிருப்பதைப் பிறிதொரு நடைமுறையும் நன்கு விளக்குகிறது. தமிழரிடையே பொங்கலன்று விளைபொருள்கள் நல்காத மரங்களுக்குக் கருங்காலி உலக்கையால் அடித்து காய்ப்பியோ? பூப்பியோ? எனக் கேட்கும் மரபு நிலவுகிறது. இதே வழக்கம் ஜப்பானியரிடமும் உள்ளது. பெரிய தடியினால் மலட்டு மரங்களை அடித்து நறுகா! நறுகா! என்று கேட்பர். இதன் பொருள் காய்ப்பியோ! காய்க்க மாட்டியோ! என்பதாகும். ஜப் பானில் இவ்வாறு மரங்களை அடிக்கும் போது நறிமசு! நறிமசு! என்று இன் னொருவர் அருகிலிருந்து சத்தமிடுவர்.

### ஆசியப் பண்பாட்டில் பொங்கல்

அரிசியைப் பிரதான உணவாகப் பல நாடுகளில் மக்கள் பயன்படுத்தினாலும் தமிழரும் ஜப்பானியரும் அதனை நன்றி கூறும் ஒரு வழிபாட்டு முறையாக வரையறை செய்து வாழ்வது சிறப்பாக உள்ளது. ஆசியப் பண்பாட்டிலே தனித்துவமானதாகவுள்ளது. இத்தகைய நடைமுறைகள் காலகதியில் வழிபாட்டு நடைமுறைகளாக அவர்கள் வாழ்வியலில் நிலைத்துவிட்டன. ஜப்பானியர் கமி எனக் கண்ணுக்குத் தோன்றிய இயற்கைச் சக்திகளையெல்லாம் வழிபடும் மரபைத் தொடக்கி வைத்தனர். அதுபோலவே தமிழரும் கடவுள் எனக் கண்ணுக்குப் புலனாகாத இயற்கையின் பேராற்றலை வழிபடும் மரபை ஏற்படுத்தினர். விளைபொருள் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் சூரியனை வழிபடும் நடைமுறையாகத் தைப்பொங்கல் நாளைக் கொண்டனர். அதனையே ஆண்டின் தொடக்க நாளாகவும் வரித்துக் கொண்டனர்.

சூரியனுக்குப் பொங்கல் செய்து வழிபடும் மரபு தமிழரிடையே ஒரு நேர்த்திக்கடனாக அமைந்துள்ளது. அதுபோல உழவுத் தொழிலுக்கும் ஏனைய விளைபொருள் வளத்திற்கும் பெரிதும் உதவிய காளைகளுக்கும் பொங்கல் செய்து 'மாட்டுப்பொங்கல்' என்ற நடைமுறையை உருவாக்கினர். ஆண்டுத் தொடக்கத்தில் தமது உறவுகளைக் கண்டு மகிழும் நாளாக மூன்றாம் நாளைக் 'காணும் பொங்கல்' எனத் தனித்துவப் படுத்தினர். வேளாண்மைத் தொழில் ஒரு திட்டமிட்ட செயற்பாடாக இயற்கையின் பருவமாற்றங்களோடு இணைந்து நிற்கும் தொழிலாகும். அதனால் தை மாதம் ஆண்டின் தொடக்கமாகக் கருத வேண்டியது இன்றியமையாததாயிற்று.

*ஹொங்கா! ஹொங்கா! என்ற ஒலிப்பு தமிழிலுள்ள பொங்கலோ! பொங்கல்! என்ற ஒலிப்புடன் ஒலி, பொருள் என் பவற்றில் தொடர்புற்றிருப்பதாகப் பேர சிரியர் சுசுமு ஓனோ தமது ஒப்பீட்டு மொழியாய்வில் நிறுவியுள்ளார்.*

இன்று இயற்கையான தொழிலோடு செயற்கையான தொழில்களும் செய்யப்படுகின்றன. ஆனால் அங்கும் ஆண்டின் தொடக்கத்தை நினைவூட்டப் பொங்கல் விழா நடத்தப்படுகிறது. தமிழர் ஜப்பானியர் வாழ்வியலின் இப்பொங்கல் விழாவில் கலையும் இணைக்கப்பட்டுள்ளது. ஆடல், பாடல், கருவிக் கையாட்சி, கவிதையாக்கம், பட்டம் விடல், மாட்டுச் சவாரி, நாடகம் போன்ற பல விடயங்கள் இதனுடன் தொடர்புபட்டன. எனவே தைப்பொங்கல் மனிதவாழ்வியலில் உணவுத் தேட்டத்தை நினைவுபடுத்தும் உன்னதமான நாளாக, ஒரு முயற்சியின் தொடக்கத்திற்கு ஆற்றல் வழங்கும் நடைமுறையாக நிலைத்து நிற்கிறது. உலகம் முழுவதும் வாழும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்வியலைத் திட்டமிடக் கற்றுக்கொடுக்கும் நடைமுறையாகத் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. இக் கொண்டாட்டத்தை நன்கு திட்டமிட்டு வாழ்வியலில் நயம்பட இணைத்துத் தமது தலைமுறைகளை வழிநடத்தும் பணியில் தமிழரும் ஜப்பானியரும் பண்பாட்டு முன்னோடியாக விளங்குகிறார்கள். தைப்பொங்கல் மனிதமுயற்சியின் தொடக்கத்தைக் காட்டும் நன்னாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலம் புரியும் நன் மகளாம் தைமாது வந்தாள்!

விண்ணெழுதும் பாடலுக்கு இசை மீட்டும் காலம்
விரைந்தோடும் ஞால ஒளிவீச்சுழல்வினிலே முதல்நாள்
மண்ணுழுது பயிர் வளர்த்து உயிர் காக்கும் மேலோர்
மனைகளிலே பேரின்பத் தேனமுது பொங்கி

எண்ணமெலாம் தமிழணங்கு எம் தமிழர் வாழ்வில்
இனியொரு நல்விதி செய்யும் இயைபுடனே இன்று
மண்மடியில் சர்க்கரை, தேன், பாலமுது பொங்க
மாமகளாம் தைப்பாவை மகிழ்வுடனே வந்தாள்!

மரந்தளிரும் தேன்மலரும் சேர்ந்தொளிரும் காலை
மையலிலே புள்ளினங்கள் கவிபாடும் வேளை
காத்தளிலே வண்டு வந்து மதுவருந்த வானம்
கண்ணயர்ந்த இரவென்னும் சிறைமீட்க வந்த

வேந்தனெனும் ஆதவனும் விண்ணெங்கும் தன்னை
வெளிக்காட்டிப் பொன்மஞ்சள் பேரொளியாய்த் தோன்ற
பூந்தமிழர் மனைதோறும் புதுப்பொங்கல் பொங்க
புத்தழகுத் தையென்றும் பூம்பாவை வந்தாள்!

மை விழியார் கைவளையல் மெல்லொலிகள் சிந்த
மாவிலை பூந்தோரணம் அப்பேரெழிலை முந்த
மெய்வழியே வாழ்கின்ற மேலவராய் யாரும்
மிளிர்ந்திட நேர்வழி காட்டும் மேதகையாய் என்றும்

செய்தொழில்கள் வளர்ந்தோங்கிச் சிறந்திடவே நாளும்
திருநாளாய் மலர்ந்திடவே திக்கெட்டும் போற்ற
தைமுதலிடல் புதுவிடியற் பொழுதினிலே பொன்னின்
தாரகையின் வடிவாகத் தைநங்கை வந்தாள்!

எந்நாளும் மனிதகுண இயல்நெறிகள் தம்மை
எண்ணும் மனப்பாங்குடனே ஏந்திழையால் எல்லாம்
பொன்னார்ந்த உடல் மூடும் புத்தாடை பூண்டு
புவியெங்கும் ஆபாசக் கீழ்மையினை விட்டு

மின்னார்ந்த விழியசைவில் ஆடவரை வென்று
விளக்கணைய இல்லங்கள் விழிப்புறவே இன்று
நன்நாளாம் தை முதலை நற்றமிழர் வாழ்த்த
நலம் புரியும் நன்மகளாம் தைமாது வந்தாள்!

- வைலாய் ரஞ்சன்.

## பொங்குக பொங்கல்!

சோரர் திருடர் சுடுகலனோடு
வீடு நுழைந்து கொள்ளையிடும்
கொடுமைகள் ஒழியப் பொங்கல் வை
காதணியையும் பிய்த்தெடுக்கும்
பாதகம் அழியப் பொங்கல் வை
நிசமாகவே நெருப்பாற்றில் நீந்தி
கொப்பிழந்த மரங்கள் நிழல் தரமறுத்த
பாலைவெளிகடந்து உயிரை மட்டும் பிடித்து வந்தோரில்
ஆழ வடுக்கள் ஆற ஒரு பொங்கல் வை
கட்டிய மனையில் அத்திவாரத்தின் மேல் அடியுண்டு போக
செத்தை கட்டிக் குடிலில் இருப்பான்
சற்று நிமிரவெனப் பொங்கல்வை
மாதா பிதா இழந்த அந்த இளம் தளிர்கள்
வாடாதிருக்கவெனப் பொங்கல் வை - அன்னவரை
வாடா மகனே, மகளே என அரவணைப்போர்க்குக்
கோடிபுண்ணியம் கிடைக்கவெனப் பொங்கல் வை
வெள்ள அனர்த்தம் - வேண்டாத டெங்கு
போர் தந்த வேதனைகள் - இப்
பள்ளத்தில் வீழ்ந்தார் மெள்ள எழும்ப
புத்தாண்டில் ஒரு பொங்கல் வை

கே.கார்த்திகேசு,
நல்லூர்



## இனிய பொங்கல் என்றுதான் படைப்போம்


பொங்கிப் பொங்கிக் களைத்துப் போனோம்
பொழுது இன்னும் விடிவதாய் இல்லை
எங்கள் நிலையை எண்ணி எண்ணி
இரவு பகலாய்க் கண்ணீர் வடிக்கிறோம்
மங்களம் மலரும் என்று இருந்தோம்
மறுபடியும் துயர் தொடர்ந்து பொங்குது
எங்கள் வாழ்வு என்றுதான் பொங்கும்
இனிய பொங்கல் என்றுதான் படைப்போம்?

- வ.யோகானந்தசிவம்.

## பகலவன் அருள்!

மண்ணும் நீரும் (பஞ்சபூதமும்) பகலவன்
துணையின்றி பயன் தரமுடியாது
மனிதரும் உயிரினமும்
அவனருளின்றி உயிர் வாழ முடியாது
நிலையாமை யென்பது பகலவன்
எமக்கு இடும் பாடம்
அறியாமை அகற்றி இங்கு
நாம் வாழ வேண்டும்
அல்லது அழிவுற்று இப்பூவுலகு
முடிவுக்கு வரக்கூடும்!
நன்றியை நவில்வோம்
பொங்கலிட்டுப் படைப்போம்
போய் அகலும் எம் துயர்
பகலவன் அருள் நமக்கு உண்டு!

- இரா ஜெயபாலன்,
கொக்குவில்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உதயன்

# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2011



## பொங்கல் என்கின்ற பழந்தமிழ்ச் சொல்லுக்கு அர்த்தம்தான் என்ன?



சூரியன் மகரராசியில் பிரவேசிக்கும் நாளான தைமாத முதல் திகதியன்று சூரியனை வழிபட்டுப் பொங்கல் நிவேதனம் செய்யும் திருவிழா-என்ற பொருளும் பொங்கல் என்ற சொல்லுக்குத் தரப்பட்டுள்ளது. இந்தப் பொருளுக்கு உள்ளே பல முக்கியமான விடயங்கள் பொதிந்திருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

அதாவது பொங்கற் திருவிழா என்பது தமிழ் மக்கள் வாழ்வில் வரலாற்று ரீதியாக ஒரு பண்பாட்டு அங்கமாக, அவர்களது வாழ்வியலில் நிகழுகின்ற திருவிழாவாக இருந்து வந்துள்ளது என்பது புலனாகின்றது. அத்தோடு பண்டைத் தமிழர்கள் இயற்கையின் காலக்கணக்கைக் கணித்துச் சரியாக எந்தநாளில் தைத்திருநாளைக் கொண்டாட வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார்கள் என்பதையும் நாம் அறியக்கூடியதாக உள்ளது.

பண்டைத் தமிழர்கள் இயற்கையை வணங்கி, இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ முனைந்தவர்கள் ஆவர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக் காலத்தில் வித்தியாசமான காலப்பருவங்கள் தோன்றுவதையும் அவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருவதையும் அவதானித்தார்கள். ஒரு குறிப்பிட்ட காலச் சேர்வையில் மழை, வெயில், குளிர், பனி, தென்றல் வாடை, ஆகியவை மாறிமாறித் தோன்றித் தமிழரின் வாழ்வை ஆண்டு வந்ததால் இந்தக் காலச் சேர்வைகள் தமிழர் ஆண்டு என அழைக்கப்பட்டுள்ளது .

## பொங்கலோ பொங்கல்....



தைத் திங்கள் பிறந்தாச்சு
தமிழ்ப் புத்தாண்டும் மலர்ந்தாச்சு
அகப் புறத் தூய்மையோடு
அன்பு கொண்ட சுற்றத்தோடு
மஞ்சள், கரும்பு, கிழங்கோடு
புத்தரிசி வெல்லமொடு
புதுப்பானையிற் பொங்கலிட்டு
பொங்கலோ பொங்கல் எனக்கூவி
வணங்கிடுவோம் ஆதவனை
வாழ்த்திடுவோம் இயற்கைதனை
ஆதரித்து மகிழ்ந்திடுவோம்
அதன் அன்புதனைப் போற்றிடுவோம்.
தமிழ்ப் புத்தாண்டு மலரும் நாளில்
தமிழ்த் தாயைப் போற்றிப் பாடி
திக்கெட்டும் தமிழ் பரவத்
திரண்டிடுவோம் பாடு பட.



## சூரியனை வழிபடும் பொங்கல்



தை மாதத்தின் முதல் நாள் அன்றுதான் சூரியன் வடக்கு நோக்கிய பயணத்தைத் தொடங்குகிறான். இதை உத்தராயணம் என்கின்றனர். மிகப் பழங்காலத்திலிருந்து தமிழ்மக்கள் சூரியனை வழி பட்டுவருகின்றனர். முன்னோர் மரபில் நம்பிக்கை உள்ள குடும்பங்களில் பொங்கல் நாளன்று அதிகாலையில், அதாவது சூரியன் உதயமா கும் நேரத்தில் வீட்டு முற்றத்தில் பொங்கிப் படைப் பார்கள் கோயில் களிலும் சூரியனுடைய வடிவம் செதுக் கப்பட்டிருக்கிறது. இவற்றுள் காலத்தால் முந்தியது மாமல்ல புரத்தில் தர்மராஜா ரதத்தில் உள்ளது. 11ம் நூற்றாண்டில் இராஜ ராஜசோழன் கிருக்கி மாவட்டத்தில் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய கலை நுட்பம் நிறைந்த ஒப்பற்ற கோயிலில் சூரிய இயந்திரம் ஒன்றை அமைத்துள்ளான். குலோத் துங்க சோழன் தஞ்சை மாவட்டத்தில் சூரியனுக்கு ஒரு கோயில் கட்டி இருக்கிறான். கன்னியாகுமரி கோயிலில் சூரியனுடைய ஒளி அம்மனின் மூக்குத்தியில் படுகிறது. ஆவுடையார் கோவில், திருப்பாதிரிப்புலியூர், கும்பகோணம் கோயில் ஆகியவற்றில் நாள்தோறும் காலையில் சூரிய ஒளி இறைவன் மீது படுகிறது. இதன் மூலம் கோயில் அமைப்பில் சூரியனுக்கே முதல் முக்கியத்துவம் என்று தெரிகிறதல்லவா?

ஒருநாள் என்பது சூரிய உதயம் தொடங்கி மறுநாள் சூரிய உதயம் வரையுள்ள காலப்பகுதியாகும். உதய நாழிகை என்பதைக் கொண்டே ஒருநாளின் தொடக்கத்தைக் கணக்கிடுகின்றனர். இவ்வாறாகச் சூரியனை முன்னிலைப்படுத்தியே இந்துக்களின் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

## பட்டிப்பொங்கல்



''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு'' என்ற வள்ளுவம் தமிழரிடத்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மனிதர்களிடம் மட்டுமில்லை விலங்குகளுக்கும் அந்நன்றியைக் காட்டியிருக்கிறார்கள் தமிழர்கள். மாடுகள், வயல்கள், பண்ணைகள் உள்ள வர்கள் இந்நாளைக் கொண்டாடுகின்றார்கள்.

கால்நடைகளைக் கௌரவிக்கும் வகையில் பட்டிப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

தாம்பாளத் தட்டுக்களில் தோட்டங்களில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங் காய், பூ, பழம், சர்க்கரை என்பவற்றையும் வைத்து எல்லாம் பூசைக்காக எடுத்து வைப்பார்கள்.

பொங்கல் பொங்கும்போது 'பொங்கலோபொங்கல் மாட்டுப் பொங்கல் ' என்று எல்லோரும் குரல் கொடுக்கச் சிறுவர்கள் சந்தோசத்துடன் குதூகலிப்பார்கள். தொடர்ந்து சாமி கும்பிட்டுக் கற்பூர தீபாராதனை காட்டப்படும். அதன்பின் பசு, காளை, எருமை எனஅனைத்துக் கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் பிரசாதத்தை கொடுப்பார்கள். இவ்வாறு கால்நடைகளுக்கு நன்றிகூறும் நாளைத்தான் பட்டிப் பொங்கலாகக் கொண்டாடுகின்றனர்.

சில வீடுகளில் கால்நடைகளுக்குக் காலையிலேயே பூஜை செய்துவிடுவார்கள். சிலர் மாலையில் விளக்கு வைக்கும் நேரத்தில் பூஜை செய்து அதன்பின் கால்நடைகளைச் சற்று வெளியே கொண்டுபோய்விட்டு வீட்டுக்குக் கூட்டி வருவார்கள். வீட்டுக்குத் திரும்பக் கொண்டுவரும் போது வீட்டு வாசலில் உலக்கையை வைத்து அதைத் தாண்டிப் போகுமாறு அழைத்துச் செல்வது வழக்கம்.

சிறுவர்முதல் பெரியோர்வரை விரும்பிச் சுவைக்கும் விதவிதமான கரும்புகள் வீதி களில் விற்பனையாகும். கரும்பு திண்ணக் கூலியா என்ன ? பல்லில்லாத வயதான மழலை களுக்குக் கூட நாவினில் எச்சில் ஊற வைக்கும் செயற்பாடு ஆகும்.





தொகுப்பு: கல்பனா

## பொங்கவேண்டும் தைப்பொங்கல்

கதிரவனை வரவேற்று
முற்றமதில் கோலமிட்டு
வர்ணம் பல கொண்ட
வண்ண உடை உடுத்தி
இரத்த பந்தம் ஒன்று கூடி
சுற்றம் சூழல் சூழ்ந்திருந்து

புதுப் பானை முகம் சிரிக்க
மாவிலை அலங்கரிக்க
நீரொடு சந்தனமும்
பூவும் பொட்டும் கமகமக்க
சாம்பிராணி புகை பறக்க
ஊதுபத்திச் சுருள் புகைக்க

மணி ஓசையோடு மேளச்
சத்தம்
நாதஸ்வரம் காதினிக்க
இறைவனை வழிபட்டு
இன்னிசை செவி இனிக்க
பொங்கும் மனம் போலவே
பொங்க வேண்டும்
தைப்பொங்கல்!



## தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றும் பாரம்பரியம்மிக்க ஜல்லிக்கட்டு!

இயற்கை இன்னல்கள் பலவற்றையும் தாங்கிக் கொண்டு ஆண்டு முழுவதும் வயல்களில் உழைக்கும் உழவனின் பெருமையையும் விவசாயத்தின் மகத்துவத்தையும் உலகிற்குப் பறைசாற்றும் மகத்தான நாள் தைப் பொங்கல் திருநாள் என்றால் அது மிகையாகாது.

தை பொங்கல் விழா தமிழர்களின் கலாச்சாரத்தை வெளிப் படுத்தும் அதே வேளையில், தமிழரின் வீரத்தை உலகிற்கே வெளிச்சம் போட்டுக் காட்டும். முரட்டுக் காளையை அடக்கும் ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு போன்ற வீர விளையாட்டுகள் தைமாதம் முழுவதும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படும். ஆனால் [illegible] வெளி நாகரிகத்தி[illegible] ஜல்லிக்கட்டு பழக்கத்தில் இருந்துள்ளது. 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கல்முத்திரையில் இதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது.

தமிழ் எழுத்தாளரும் சிந்து சமவெளிக் காலத்திய எழுத்துகளில் வல்லுநருமான ஐராவதம் மகாதேவனும் இதுபற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதை 1977ஆம் ஆண்டு இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியிட்டது. இந்த முத்திரை கி.மு. 2000ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இதைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர். சிந்து சமவெளி நாகரிக காலத்தில் நடைமுறையில் இருந்த ஜல்லிக்கட்டை இந்த முத்திரை பிரதிபலிப்பதாகப் பல ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். இதில் [illegible] இருவிதமான கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. ஒரு சாரார் ஒரு காளை ஒன்றுக்கு மேற்பட்ட ஜல் லிக்கட்டு வீரர்களை தூக்கி வீசுவதாக கூறுகிறார்கள். 2 வீரர்கள் அந்தரத்தில் பறப்பது போலவும் ஒரு வீரர் காளையை மடக்கிப் பிடிக்க முயல்வது போலவும், மற்றொருவரைப்புரட்டி எடுப்பது போலவும், 5-வது நபர் தரையில் விழுந்து கிடப்பது போலவும் இந்தச் சித்திரம் அமைந்திருப்பதாக் கூறுகிறார்கள்.

தமிழர் இலக்கியத்தில் 'கொல்லேறு தழுவல்'என்று பெயர் கூறிக் காளை அடக்குவது வெகுவாக சித்திரிக்கப்பட்டுள்ளது. எதிரேவரும் ஆளைக் கொன்று தூக்கி எறியும் வகையில் வளர்க்கப்பட்ட காளையை, வீரம் செறிந்த காளையர்கள் அடக்குவதைத் தழுவல் என்று வீரத்தையே மென்மையான வார்த்தையைக் கொண்டு தமிழ் இலக்கியம் சித்திரிக்கிறது.

இன்றளவும் இப்படிப்பட்ட முறையில்தான் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கொல்லேறு தழுவல் நிகழ்த்தப்படுகிறது. ஜல்லிக்கட்டில் இறக்கப்படும் காளைகளை அதற்கென்றே வளர்க்கின்றனர். காளையை அடக்கும் காளையர்களுக்கும், அவர்களைத் தூக்கியெறிய முற்படும் காளைக்கும் இடையிலான சம வாய்ப்புடைய வீர சோதனைதான் ஜல்லிக்கட்டு.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டில் ஒரு முறை இறங்கிய காளையர்கள் அடுத்த ஆண்டும் இறங்கித் தங்கள் திறமையைத் தொடர்ந்தும் நிரூபிக்காமல் இருப்பதில்லை.

உடற்பலம் உள்ளவரை ஒவ்வொரு ஆண்டும் ஜல்லிக் கட்டில் கலந்துகொண்டு, தங்கள் உயிரைப் பணயமாக வைத்துத் தமிழரின் வீர மரபைத் தொடர்ந்து வருகின்றனர்.

ஜல்லிக்கட்டு நடக்கும் பல ஊர்களில் ஒரு காலத்தில் தீவிரமாகக் காளை அடக்குவதில் போட்டி போட்டவர்கள், இன்று வயது முதிர்ந்த நிலையிலும் கூட ஜல்லிக்கட்டு நடக்கும் நாளில் பட்டிக்குச் சென்று, சீறிக் கொண்டு பாய்ந்துவரும் காளை ஒன்றைத் தொட்டு விட்டு வீடு திரும்பும் வழக்கம் இன்றும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியின் தனிச் சிறப்பு

தைப்பொங்கல் தமிழர் பண்பாட்டின் முக்கிய ஒரு நாளாக கொண்டாடப்படுகின்றது. தமிழ் மரபு சார்ந்த வழிபாட்டு முறைகளிலும் தைப்பொங்கல் பண்டிகை முக்கியமானது. அதைக் கடைப்பிடித்து வரும் சமூகத்தினர் மத்தியில் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் பரஸ்பர சகோதரத்துவத்தையும் மனிதத்துவத்தையும் , இறைநம்பிக்கை, தெய்வீக சிந்தனை, கலாரசனை என்பனவற்றையும் உருவாக்கும் வலிமை கொண்டதாகும். அந்தவகையில் தைப்பொங்கல் பண்டிகை உலக இயற்கைச் சமநிலையைப் பேணி உயிர்களைப் பசிபட்டினியில் இருந்து பாதுகாத்துவரும் சூரியக்கடவுளை தமிழ் மக்கள் நன்றியுடன் நினைவுகூரும் வகையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இப்பண்டிகை தமிழ் மக்களின் நன்றி பாராட்டும் தன்மையை உலக மக்களுக்கு வெளிப்படுத்தும் சான்றாதாரமாக அமைகின்றது.

இந்தவகையில் இந்தப் பண்டிகையை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் முன்னேற்பாடுகள் பண்டிகை நாளுக்கு முன்னரே ஆரம்பித்து விடுகின்றன. அந்தவகையில் சிறுவர்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் சான்றாதாரமாகப் பட்டம் விடுதலைக் குறிப்பிடலாம்.

தைப்பொங்கல் பண்டிகை நாளின் ஒரு மாதத்திற்கு முன்னரே தைப்பொங்கல் வருவதைக் கட்டியம் கூறுவதைப் போல கண்கவர் பட்டங்கள் வானில் பறக்கத் தொடங்கும். இந்தப் பட்டங்களைச் செய்வதன் மூலம் எமது இளம் சந்ததியினரின் கலை ஆற்றலும் அவர்களின் சிந்தனாசக்தியும் வெளிக் காட்டப்படுகின்றன. வெவ்வேறு கலாரசனை, வெவ்வேறு விதமான வண்ணங்கள் கொண்டு உருவாக்கப்படுகின்றன. இவர்கள் அவற்றை உருவாக்குவதில் வல்லவர்களாக விளங்கி வருகின்றனர். மீன்பட்டம், கொக்குப்பட்டம், குருவிப் பட்டம், மனிதஉருவத்திலான பட்டங்கள், பெரிய பெரிய பட்டங்கள், வௌவால் பட்டம் பாம்புப் பட்டம், பருந்துப் பட்டம் எனப் பல விதமாகப் பட்டங்கள் உருவாக்கப்படும். இந்த வகையில் வடமராட்சி பகுதி பட்டம் கட்டுவதற்கும் ஏற்றுவதற்கும் மிகவும் முக்கியமான இடமாக- பெயர்போன

*உடுப்பிட்டிப் பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு கடந்த பல ஆண்டுகால மாகப் பட்டம் ஏற்றும் போட்டி இடம்பெற்று வருகிறது. காலை, மாலை நேரங்களில் வித்தியாசமான விதங் களில் போட்டிகள் இடம்பெறும்.*

இடமாக விளங்குகின்றது.

குறிப்பாக பொங்கல் பண்டிகைக்காலம் ஆரம்பித்ததும் வடமராட்சிக் கரையோரப் பகுதிகளில் இத்தகைய பட்டங்கள் நூற்றுக் கணக்கில் வானத்தை அலங்கரித்துப் பறக்க விடப்படுகின்றன. வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, வல்லை, வதிரி, கரவெட்டி, துன்னாலை, பருத்தித்துறை, , கற்கோவளம், பொலிகண்டி எனப் பலபகுதிகள் பட்டங்களுக்குப் பிரபல்யம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. குறிப்பாக வல்வெட்டித்துறையின்



கரையோரப்பகுதியில் வெவ்வேறு ரகமான பட்டங்களை ஏற்றுவதில் அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் ஆர்வம் காட்டி வருகின்றமை பார்ப்போரை அவர்கள் பால் ஈர்க்கும். பட்டங்களை மின்குமிழ்களால் அலங்காரம் செய்து இரவு நேரங்களில்

**ஹரிஸ்**

பட்டம் ஏற்றப்படுவதும் உண்டு. இது பட்டங்களுக்கு மேலும் அழகு சேர்ப்பனவாகக் காணப்படும். பட்டங்களில் 'விண்' ஓசைகளும் பூட்டப்பட்டு ஏற்றப்படும். இது காற்றுடன் சேர்ந்து இசை எழுப்பிக் கொண்டிருக்கும்.

உடுப்பிட்டி பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு கடந்த பல ஆண்டு காலமாகப் பட்டம் ஏற்றும் போட்டி இடம் பெற்று வருகிறது. காலை, மாலை நேரங் களில் வித்தியாசமான வகைகளில் போட்டிகள் இடம்பெறுகின்றன. இதை உடுப்பிட்டி நலன்புரிச்சங்கம் திட்டமிட்டு நடத்து கின்றது.

காலை நேரங்களில் ஏற்றும் பட்டங் களில் எந்தப் பட்டம் உயரத்தில் பறக் கின்றது என்பதை வைத்து வெற்றியாளர் கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்களில் முதல் மூன்று வெற்றியா ளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்க ளுக்குப் பணப்பரிசில்கள் வழங்கப் படும். ஏனையயோருக்கு பங்குபற்றியமைக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

மாலை நேரத்தில் அளவுப் போட்டி இடம்பெறும். இதில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். இது திறந்த போட்டி யாக இடம்பெறும். இதில் எவரும் பங்குபற்றலாம். நீண்ட காலமாக நடத்தப்பட்டு வந்த இந்தப் போட்டி

பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக நிறுத்தி வைக்கப் பட்டு தற்போது நடத்தப்பட்டு வருவதாகவும் கடந்த வருடமும் இந்தப் போட்டி இடம்பெற்றதாகவும் இந்த வருடமும் போட்டி இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்கழி - தை மாதங்களில் பட்டங்கள் சில கடைகளில் வியாபாரப் பொருளாகத் தொங்க விடப்படுகின் றன. சிலர் கடைகளில் அவற்றை வாங்குகின்றனர். பெரும்பாலானோர் தமக்கு விரும்பியவாறு பட்டங்களை உருவாக்குகின்றனர்.

இதேவேளை பட்டங்களை ஒளி யேற்றுவதற்கும் பட்டம் ஏற்றுபவர்கள் பெருந்தொகையான பணத்தை செலவிடுவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. அனைத்துப் பட்ட உதிரிப் பொருள்களாகிய கடதாசி, மூங்கில், நூல்கள், ஒளியேற்றுவதற்கான மின்குமிழ்கள், வயர் என் பவற்றுக் கெல்லாம் சேர்த்து 3000/= ரூபாவுக்கு மேல் செலவு உள்ளதாகவும் கூறப்படு கின்றது. இதேவேளை பட்டம் ஏற்று தலானது ஒரு பொழுது போக்காக மட்டு மன்றி இளைஞர்களின், மாணவர் களின் நுண் அறிவு, கலைத்திறன் என்பவற்றை வளர்ப்பதாக அமைகின் றது என்றால் அது மிகையாகாது.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவனின் பெருநாள் அவன் உய்ரும் நாளாகுமா?

மனிதன் உயிர் வாழ்வதற்கு முதற் தேவை உணவாகும். அத்தகைய உணவை உற்பத்தி செய்து அளிப்பவன் விவசாயி. இவர்கள் பயிர்ச் செய்கை செய்து உணவைப் பெறுவதற்கு உறுதுணையாக இருப்பவர் சூரியபகவான்.

அதிக விளைச்சலுக்கு உறுதுணையாக இருக்கும் சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும்முகமாகப் பொங்கல் பொங்கி மகிழும் நன்னாளே தைப்பொங்கற் திருநாளாகும்.

''தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது'' என்னும் வாசகத்திற்கு இணங்க உழவுத் தொழிலின் சிறப்பினை எடுத்துக் காட்டும் இத்திருநாளினை நன்றித் திருநாள், தமிழர் திருநாள், உழவர் திருநாள் என்றெல்லாம் கூறுவார்கள்.

விவசாயிகளின் உழைப்பின் உயர்வினை எடுத்துக்கூறும் நன்னாள் தான் தைத்திருநாள் பண்டிகை என்றால் மிகையாகாது. அவ்வாறான உயர்வுமிக்க விவசாயத்தினை பலர் மேற்கொள்ளாமல் விட்டதே உலகத்தின் பசிக்கு ஆரம்பகாலமாகும்.

யாழ்.மாவட்டம், வன்னி மாவட்டம் எனப் பல பிரதேசங்களில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படாமல் கட்டாந்தரைகளாக விளைநிலங்கள் காட்சியளிக்கின்றன. பார்க்கும்இடமெல்லாம் பச்சைப் பசேலெனக் காட்சியளித்த நிலங்கள் கால்நடைகளுக்கு இருப்பிடமாக மாறிவிட்டது.

யாழ்.மண்ணின் கந்தரோடைப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது தைப்பொங்கல் பற்றிக் கூறினார். பரம்பரையாக விவசாயத் தொழில் செய்யும் இவர் முப்பது வருடகாலமாக வானம்பார்த்து விவசாயம் செய்பவர். ஆரம்ப காலங்களில் தைப்பொங்கல் என்றால் எமக்கெல்லாம் ஒரு தனிக் கொண்டாட்டம்.

''தட்சிணாய காலம்'' எனப்படும் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம்வரையிலான காலப்பகுதியில் நெல்லினைப் பயிரிடுவார்கள்.

ஆடிக்காற்றில் அம்மியும் அசையும் என்பார்கள். ஆடிக்காற்றின் பின் மார்கழிக் கடுங்குளிர் நிலவும். இவ்வாறு கடுமையான காற்று, குளிர்,பனி எனப் பாராமல் உழைத்து பயன்பெறும் அறுவடைக் காலமாகிய தைமாதத்தில் புதிதாக நெல்லினைப் பெறுவார்கள்.

இவ்வாறு புதிதாகப் பெறப்பட்ட நெல்லினை உரலில் குற்றி எடுத்து அரிசியாக்கி அதனைப் புதுப்பானையிற் போட்டு சூரியனுக்குப் படைக்கும் போது விவசாயம் செய்தவருக்கும் இறைவனுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்.

ஆனால் இப்போதெல்லாம் அப்படியா? பொங்கல் கொண்டாடுகிறார்கள். ஏதோ சம்பிரதாய முறைகளுக்காக அதிகாலையில் எழுந்து சூரியனுக்குப் படைத்தால் சரி என்றுதான் கொண்டாடுகிறார்கள் என்கிறார். யாழ்.பிரதேசம் ஒரு பக்கம் இருக்க, வன்னிப்பிரதேச விவசாயிகளின் நிலைதான் என்ன?

கு. நிஸா

மிதிவெடி அபாயத்தினால் விவசாயமே செய்யாமல் அதிகளவான பிரதேசங்களை விவசாயிகள் கைவிட்டுவிட்டார்கள். குறிப்பாகக் கண்டாவளை, பரந்தன், வட்டக்கச்சி போன்ற பிரதேசங்களில் தான் அதிகளவில் நெல் அறுவடை செய்யப்படுவது.

ஆனால் வன்னியில் மக்கள் 'மீள் குடியமர்வு' செய்யப்பட்டார்களே தவிர அவர்களுக்கான தொழில் வாய்ப் புகள் எங்கே பெற்றுக்கொடுக்கப்பட்டன.

வட்டக்கச்சியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகிறார், இவரது குடும்பத்தினர் பரம்பரையாகவே விவசாயம் செய்து பிழைப்பவர்கள். அரிசி விலைக்கு வாங்கிச் சமைப்பதுகூட இல்லை. வயலில் விதைத்துப் பெறப்பட்ட நெல்லைக் கொண்டுதான் உணவு சமைப்பார்களாம். இதனால் மூடைக்கணக்கில் தனி ஓர் அறையில் நெல் சேமிப்பில் இருக்கும் அந்த அரிசியில்தான் 'தைப்பொங்கல்' பொங்கி மகிழ்வார் கள். ஆனால் இந்த வருடம் 'தைப் பொங்கல்' எதற்கு வந்தது என்று உள்ளது. அன்றாட உணவுக்கே அரிசி தட்டுப்பாடாக உள்ள நிலையில் பொங்கல் பொங்கிச் சாப்பிடுவது தேவைதானா?

எப்போது கட்டாந்தரை நிலங்கள் எல்லாம் விளைநிலங்களாக மாறி விவசாயிகளின் வாழ்வில் விடியல் கிடைக்கின்றதோ அன்றுதான் எமக்குத் தைத் திருநாள்.

விவசாயிகளின் இன்னல்கள் தீர்வது அறுவடைக் காலத்தில் தான் என நம்பி விவசாயம் செய்கிறார்கள். வாழ்வில் விடியலை ஏற்படுத்தும் சூரியபகவான் மனமுவந்து கொடையளிக்கும் பெரும் போகக்காலம் எப்போது வந்து சேரும். ''உழுதுண்டு வாழ்பவரே வாழ்வார் மற்றெரெல்லாம் தொழுதுண்டு பின் செல்வார்'' என்று வள்ளுவர் உழவுத் தொழிலின் மேண்மையை விளக்கினார்.

சூரியன் ஒளி பொருத்தியவன். சுறுசுறுப்பை வழங்குபவன். அவன் செய்யும் கடமைக்கு நன்றி செலுத்தும் நாளரகப் பொங்கல் பண்டிகை அமைகின்றது. தை பிறந்தாலாவது வழிபிறக்கும் என ஏக்கத்துடன் காத்திருக்கும் விவசாயிகள் வாழ்வில் ஒளிவீசட்டும்! தொழில் முன்னேற்றம் அடைந்து வாழ்வு வளம் பெற வேண்டும்.

அனைவருக்கும் எமது உளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
கொழும்பில் பெரும் வரவேற்பைப் பெற்ற
JEYA BEAUTY SALOON
யாழ்ப்பாணத்தில்
உரிமையாளர் N.நகுலராணி
Dip in Bthd in Srilinka& India
அவர்களால் அழக்குக்கலை
டிப்ளோமா கற்கை நெறி
ஆரம்பிக்கப்பட்டு
நடைபெற்றுவருகிறது
என்பதோடுசகல
அழகுக்கலை ஓடர்களும்
ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிகவிவரங்களுக்கு:- 0772378724

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
TASTE of JAFFNA Restaurant
Authentic Jaffna Food, Western, Indian, Chinese Food.


101, Main Street, Jaffna.
Tel: 0094 21 222 1322, 0094 21 320 7190. Fax: 009421 222 1323.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.
நியூரோன் எலக்ரிக்கல்


442, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2037

PSB Communication

எங்கள் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
உள்ளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Local Call, Net IDD Calls, Net Browsing, Photocopy, DVD Writting
DVD Movies, Mobile Phone Sales& Parts
337 (555), K.K.S. Road, Jaffna.
T.P: 021 222 7477 Fx: 021 222 4501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபோதும் அழிவில்லை பாரம்பரிய கலைகளுக்கு

ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் ஏற்றாற போல் அவர்களுடைய மரபுவழி சார்ந்ததாகவே பாரம்பரிய கலைகள் அமைந்திருக்கின்றன. அந்தக் கலைகள் அனைத்தும் குறித்ததொரு சமூகத்துக்குரியதாக மட்டுமே இருந்து வந்துள்ளன.

அதுபோன்றே யாழ்ப்பாணத்துக்கான பிரத்தியேகக் கலைகள் உண்டு. கூத்துக்கள் அவற்றில் பிரபலமானவை. அது தவிரவும் நிறையப் பாரம்பரியக் கலைகளை நாம் கொண்டிருந்தோம். ஆனால் இன்று அவை வழக்கிழந்து விழாக்களிலும் பண்டிகைகளிலும் மட்டும் ஆடப்படுபவையாகிவிட்டன.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளில் தமிழர் பாரம்பரியக் கலைகள் பற்றியும் கொஞ்சம் பார்க்கலாம்.

இந்தியாவில் தமிழ் நாட்டின் பாரம்பரியமான மயிலாட்டம், ஒயிலாட்டம், தீப்பந்தம் சுற்றுதல், கரகாட்டம், பொய்க்கால்க் குதிரை, சிந்துக்கூத்துகள், வீரவிளையாட்டுகள் என்பவற்றை இலங்கையில் இருந்து இந்தியாவுடன் தொடர்பு வைத்திருந்த கிராமங்களைச் சேர்ந்தவர்கள் கற்று வைத்திருகின்றனர். அவர்களின் பரம்பரையினர் இன்றும்கூட அந்தக் கலைகளை கொண்டிருக்கின்றனர். இந்தத் தலைமுறைவரை அந்தப் பாரம்பரிய கலைகளைப் பழகி வருவது எமது பாரம்பரியக்கலைகள் அழியாமல் இருப்பதற்கான ஒரு சந்தர்ப்பமே.

இருப்பினும் தைப்பொங்கல் தினத்தில் முன்னர் இருந்துவந்த எமது பண்பாட்டுக்கு ஏற்ற வகையிலான ஆடல், பாடல், கேளிக்கை நிகழ்வுகள் இன்று தற்போதைய நவீன உலகிற்கு ஏற்றவாறு மாற்றப்பட்டுப் பின்பற்றப்படுகின்றது. மாற்றம் ஒன்றுதான் உலகில் மாற்றம் இல்லாதது என்பதற்கேற்ப கேளிக்கை நிகழ்வுகளும் மாற்றலாகி இன்றைய தினங்களில் கொண்டாடப்படுகின்றன.

முன்னைய காலங்களில் தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெறும் போது பாட்டன், பாட்டி முதல் சின்னஞ் சிறிசு வரை அனைவராலும் ஒன்றாகக் கூடி நகைச்சுவை கலந்த அன்பின் பரிமாற்றமாகவே அந்த நிகழ்வுகள் கொண்டாடப்படும்.

சமூக மட்டங்களில் பொதுவான இடங்களில் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெறும்போது தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்வுகள், பாரம்பரியமான விளையாட்டுகள் இடம்பெறுவதன் மூலமாக அந்தச் சமூகங்களுக்குரிய கலைகள் அடுத்த சந்ததியினருக்குச் சென்றடைவதும் சமூக மட்டத்தில் ஒற்றுமையையும் ஏற்படுத்துகின்றது.

இந்தக் கலைகள் பெரும்பாலும் முன்னைய காலங்களில் குரு- சிஷ்ய முறை மூலமாகவே அடுத்த தலை முறையினருக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டதுடன், மக்கள் வேறு துறைகளின் பக்கம் ஈர்க்கப்படாமையினாலும் தொழில் நுட்ப வளர்ச்சி குறைவாக இருந்ததினால் தொலைக்காட்சி, சினிமா என்பவற்றை நாடாமல் இருந்ததினால் பாரம்பரியமான இந்தக்கலை களினையே விரும்பி இரசித்தனர்.

இவற்றின் காரணமாக அந்தக் கலைகள் மற்றும் பாரம்பரியங்கள் என்பன அழியாது பாதுகாக்கப்பட்டதுடன் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கொண்டு செல்லப்பட்டன. அவ்வாறு கொண்டு செல்லப்படுகின்ற போது உலக மாற்றத்திற்கு ஏற்றவாறு சிறிய சிறிய மாற்றங்களுடன் அடுத்த சந்ததிவரை சென்றடைந்தது. இன்றும் எமது மண்ணிலே அந்தப் பாரம்பரியக் கலைகள் பயிலப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. கோயில்களில் இடம் பெறுகின்ற திருவிழாக்களின்போது சில கலைகள் இடம்பெறுகின்றன. குறிப்பாகத் தீப்பந்தம் சுற்றுதல் மற்றும் பொய்க்கால்க் குதிரை, சிலம்பாட்டம் என்பன இடம்பெறுகின்றன.

பிரதேச ரீதியாக வடமராச்சிப் பகுதிக் கோயில்களில் தீப்பந்தம் சுற்றுதலும் தென்மராட்சி மற்றும் வலி.வடக்குப் பிரதேசங்களில் வேட்டைத் திருவிழாக்களின்போது சிலம்பாட்டம், பொய்க்கால்க் குதிரை என்பன இன்றும் இடம்பெற்று வருகின்றன. இன்றைய இளைஞர்கள் மத்தியில் தீப்பந்தம் சுற்றுதலும், சிலம்பாட்டமும் பெரிதும் விரும்பப்படுகின்றன. அதுமட்டுமல்லாது அந்தக் கலையினைப் பயின்றும் வருகின்றார்கள்.

## டிலீப்

இந்தக் கலைகளினை அவர்கள் வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்தளவே இருக்கின்ற போதும் அந்தக் கலைகளினை கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் உச்ச அளவில் பயன்படுத்தி வெளிப்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் மாவட்டச் செயலகத்தால் ஒருங்கமைத்து நடத்தப்பட்ட தேசிய பாதுகாப் புதின வைபவத்தில் எமது பாரம்பரிய கலாசாரங்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

தீப்பந்தம் சுற்றுதல்,சிலம்பாட்டம், கரகாட்டம், பொய்கால்க் குதிரையாட்டம், மயிலாட்டம் என்பன இடம்பெற்றன. இதில் பங்குபற்றிய அனைத்துக் கலைஞர்களும் யாழ்ப்பாணத்து உள்ளூர்க் கலைஞர்களே. பெரும்பாலானவர்கள் இளைஞர்கள் என்பது மட்டுமல்ல பாடசாலை மாணவர்களும் இதில் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

இலங்கையின் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற தேசிய நிகழ்வில் இவ்வாறானதொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதன்மூலம் எமது கலைகளின் பாரம்பரியத்தினை வெளி உலகத்தினருக்கு எடுத்துக் காட்டுவதற்கான சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. வெறுமனே கோயில்களில் மட்டும் இவ்வாறான பாரம்பரியமான கலைநிகழ்வுகளைச் செய்யாமல் இப்படிப்பட்ட தேசிய விழாக்களில் மேற்கொள்வதன் மூலமே அதனைப் பரப்பமுடியும்.

முன்னைய காலங்களில் சமூக மட்ட விழாக்களிலிருந்து அடுத்த சந்ததிக்கு சென்றடைந்த கலைகள் இப்போது இவ்வாறான தேசியமட்ட விழாக்கள் மூலமாக எமது அடுத்த தலைமுறைக்குச் சென்றடைகின்றது. எமது பாரம்பரியக் கலை, கலாசார நிகழ்வுகள் அழியாமல் இருக்கின்றது. அவை காலத்திற்கு ஏற்ற வகையில் உருமாற்றம்பெற்று எமது இரசனைக்கு ஏற்றவாறே இருக்கின்றனவே ஒழிய அழியவில்லை.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Atlas Enterprises & Book Shop
Main Street, Chankanal.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்
பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும் பொருள்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெறுவதற்கு
நாடவேண்டிய ஒரே இடம்
ஜெகன் களஞ்சியம்
இல.475, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அஜந்தாஸ்
ரெக்ஸ் ரைல்ஸ்
புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை
நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்.
54, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
25, 04, குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
நவீன அழகிய தங்க ஆபரணங்களை
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
புதிய
வினோ
நகை மாடம்
22 கரட் தங்க நகைகள் ஓடர்க்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
புதிய வினோ நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை.
(செலான் வங்கிக்கு அருகில்)
தொ.பே: 0215672588, 0776002588.

கிளை நிறுவனம் ..
MOBILE PLAZA
PHONE SHOP
மொபைல் போன்கள் மற்றும் உதிரிப்பாகங்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளவும் மற்றும்
மொபைல் போன்களை உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்.
Mobile Plaza மட்டுமே
பிரதான வீதி, சங்கானை. (HNB Bank அருகில்.)
T.P: 077 9352902.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிற்கு உதவ வாரீர்

ஐயோ! ஐயோ! அதிரடி வெள்ளம்
அள்ளிச் சென்றது ஆருயிர் தமிழரை
பொய்யோ! மெய்யோ! என்று நீவீர்
பொது இடங்களில் புதினம் கேட்கிறீர்
மெய்யாய் அங்கு மேவிய வெள்ளம்
மெதுவாய் அகதிகள் ஆக்கிய தன்றோ
தாயாள் மகவைத் தாங்கிய வண்ணம்
தத்தளித்து தடு மாறியே தவித்தாள்
கூரையில் ஏறிய கணவனிடத்து
குழந்தையைக் கொடுத்து கூக்குரலிட்டாள்
காலடி அண்டை கதறிய குழந்தையை
கரைபுரண்டோடிய வெள்ளம் கவழ்ந்தது
சேயதும் சிற்சில சேற்றினில் வீழ்ந்து
மூச்சுத் திணறி முடித்தது வாழ்வை
பாயதும் தலை அணை படுக்கையும் கூட
பாயும் வெள்ளத்தில் பாய்மரமாச்சு
வாய் விட்டலறி வருந்திடும் மகவிற்கு
தாய்ப்பால் ஊட்ட தாய் வழி அறியாள்
பாய்ந்தே ஓடும் பாதக வெள்ளத்தை
பருகிட அள்ளி கொடுத்து பதறினாள் தாயாள்
நோயால் வாடி நொந்த முதியவர்
நாட் கூலியாகி நாலு காசுழைத்தவர்
தேடி வைத்த சீனியும் பருப்பும்
மாடும் கன்டும் மந்தையு மெல்லாம்
ஓடிய வெள்ளம் உருட்டியே சென்றது.
ஆடுகள் மாடுகள் அடுக்களைப் பூனைகள்
கோழிகள் முட்டைகள் கூண்டோடு ஓடின
தேடிவைத்த தின்பண்டங்களெல்லாம்
பொதி பொதியாக மிதந்தே நகர்ந்தன
நாடி வாங்கிய நற்பெரு நகைகள்
கூறைகள் சேலைகள் குத்துவிளக்குகள்
பட்டப்படிப்பிற்கு வாங்கிய புத்தகம்
படித்தே பெற்ற பட்ட சான்றிதழ்
கூடி வாழ்ந்த குடிசையும் கொட்டிலும்
ஓடிய வெள்ளத்தில் ஓடமாகின
விதியே! விதியே! தமிழர் சாதியை
என் செய நினைத்தாயென்று
அதிரடிப் புலவன் அண்ணல் பாரதியும்
கடிதினில் சினத்துடன் கர்ச்சித்தானன்று
ஓடக் கலைக்கும் விதியினைக் கண்டு
ஒதுங்கி மறைபவன் தமிழனே அல்ல
கோவில் கட்டி குடமுழுக்காட்டி
தேரதும் செய்து திருக்குளம் கட்டில்
ஆண்டவனாரும் அகமகிழ்வாரோ?
துடித்தெழுந்து துரிதமாய்ச் செயற்படு
ஏழை எளியவர் இறைவனின் குழந்தைகள்
அள்ளிக் கொடுக்க ஆற்றல் இல்லையெனில்
கிள்ளிக் கொடுக்கவும் மறுப்பதும் முறையோ
வெள்ள அகதிகள் விம்மி அழுகிறார்
கள்ள மற்ற மனதுடன் நீயும்
உள்ளம் உருகி உதவிட முந்திடு

-விகடகவி

## தீர்வுப் பொதி சுமந்து வருவாய் தைமகளே!

வந்தது பொங்கல் திருநாள்
வழமை போலவே
இம்முறையும்....
சிந்தனைகள் குளிரப் பொங்கி
சிறப்புடனே தைமகளை
வரவேற்க முடியாத
நிலையில்
சொந்தங்களைப் பறி கொடுத்த
சோகத்தில் எம் முறவுகள்!

யுத்தங்கள் ஓய்ந்து
சத்தங்கள் நின்ற பின்னும்
நிழல் யுத்தம் மட்டும்
எம் மண்ணில்
நீண்டு செல்லும்
தொடர் கதையாய்.....!
தட்டிக் கேட்க ஆளில்லை
என்பதால்
தமிழன் தோளில்
துயர் சுமக்கும் அவலம் இங்கு!

விலைவாசி உயர்வால்
நாளும் வெதும்பிடும்
மக்கள் கூட்டம் ஒருபுறம்
புனர்வாழ்வு முகாம்களில்
நாளும் புழுங்கிடும்
ஒரு கூட்டம் மறுபுறம்
இங்கிதம் துறந்த
இயற்கையின் சீற்றம் கண்டு
ஏங்கித் தவிக்கும்
இதயங்கள் எத்தனையோ...!!

இத்தனை துயர்களுக்கு
மத்தியில்
எம்மிடையே இன்று
மலர்கின்ற தைப்பாவாய் நீ
என்ன மாற்றத்தை
எமக்குப் பரிசாக
நீ தரப் போகின்றாய்?
சொல்லு தை மகளே
நீ சொல்லு?

இங்குற்ற கொடுமைகள்
யாவும் அகல;
இனமொழி மத வேறுபாடு
யாவும் நீங்கி
ஏற்றம் பெற்று நாமுய்ய;
தீர்வுப் பொதி சுமந்து
நீ வருவாய் தைத்தோழியே!
எம் தேசமெங்கும்
அமைதி மேவிடச் செய்திடுவாய்
நீ தைத்தோழியே!

- செ.ரவிசாந், குப்பிளான்



## பொங்கலோ! பொங்கல்!...



வண்ண வண்ண கோலங்கள்
வகை வகையாய் போட்டு - நாங்கள்
வந்தாகிப் பொங்கலினை
வரவேற்று மகிழ்கின்றோம்...

பொங்கிய பொங்கலினை
சூரிய பகவானுக்கு மடையிட்டு
உறவுகள் நாம் கூடிநின்று
பகிர்ந்துண்டு மகிழ்ந்திடுவோம்...

பாலகர்கள் நாமெல்லாம்
பட்டாசு வெடி கொளுத்தி
பட்டாடை அணிந்து நின்று
வந்தோரை மதித்து வயது முதிர்ந்தோரைப் போற்றி
பொல்லாப் பேதுமின்றி பொங்குகின்ற பொங்கல்...

தைத்திருநாளே
இல்லமெல்லாம் செழிக்க
பொங்கட்டும் புதுப் பானைப் பொங்கல்
பொங்கலோ!... பொங்கல்!!

து.திலக்,
யாழ்ப்பாணம்.

## வரம் தந்திடு தைமகளே

துப்பாக்கிச் சூடுகள் அகன்று
துக்கங்கள் விலகிட
தைமகளே நீயும்
தளராமல் பிறந்திடு

பொருள்களின் விலையேற்றம்
அனைத்தும் குறைந்து
உணவுண்டு மக்கள் வாழ
வழியைத் தா தைமகளே

யாழ்ப்பாண நாகரிகம்
சீர்கோலப்படுவதைத் தடுக்க
ஓடோடி வந்து நீயும்
வழிப்படுத்துவாய் தைமகளே

இரத்தங்கள் சிந்தாது உலகம்
சாந்தங்களைக் கொண்டமைய
சுதந்திர வேட்கையை நீயும்
உதித்தளிப்பாய் தைமகளே

மருதங்கேணியூர்
லோ.அகிலேஸ்வரன்


அனைவருக்கும் எமதுஇனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

ராஜா கிறீம் ஹவுஸ்



குளிர்ச்சியின் சிகரம் ராஜா! அறு சுவைகளின் சின்னம் ராஜா!

சுகாதார முறைப்படி, தரமான சுவைகுன்றாத தயாரிப்புக்களே ராஜாவின் இத்தனைகால சேவையின் முத்திரை! கொழுத்தும் வெய்யிலிலும் உங்களைக் குளிர்ச்சியில் மூழ்கடிக்க புத்தம் புதிய வகைத் தயாரிப்புக்களுடன் உங்களை வரவேற்கின்றது.



ராஜா கிறீம் ஹவுஸ்
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



முக்கிய அறிவித்தல்

மருத்துவ ஆய்வுகூடம்
மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்
(இணுவில் ஆஸ்பத்திரி)

அமெரிக்க வைத்திய நிபுணர்களால் 1898ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட மிகவும் பழமைவாய்ந்த, புகழ்பெற்ற இணுவில் மக்லியோட் வைத்திய சாலையின் மருத்துவ ஆய்வுகூடத்தில் அதி நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட இயந்திரங்களின் மூலம் Bio Chemistry Analyzer Full automated Hoematology Analyzer) சகலவிதமான இரத்தப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வேலூர் கிறிஸ்தவ மருத்துவக்கல்லூரியின் நிர்வாகத்தின் கீழ் (christian Medical College, Vellore, South Indian) நன்றாகப் பயிற்றப்பட்ட M.L.T அவர்களினால் இப் பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்பதை அறியத்தருகின்றேன்.

காசநோய் (சளி), பால்வினை நோய் (Aids, VDRL), டெங்கு நோய்க்குரிய இரத்தப்பரிசோதனைகள் சலம் மற்றும் மலப் பரிசோதனைகளும் இவைகளில் அடங்கும் தேவையான நோயாளிகள் இந்த ஆய்வுகூடத்துக்கு வருகைதந்து பயன் பெறலாம்.

தொலை பேசி:
021 222 7669, 0776171451.

Medical Superintendent
வைத்திய மேலதிகாரி.



உளம் கனிந்த தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள் உங்களுக்கு உரித்தாகட்டும்!

நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

சிங்கப்பூர் ஜுவல்லறி
SINGAPORE JEWELLERY

22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.



இல.36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 4590260



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமம் VS நகரம்

## ஒரு பொங்கல் பார்வை

தை மாதம் முதலாம் திகதியில் சூரியன் மகரராசியில் பிரவேசிப்பதால் இதனை மகரசங்கிராந்தி என்பர். இத் தினத்திலே விசேட சூரிய பூசை வழிபாடுகள் இடம்பெறும். தைப் பொங்கலும் சூரியனுக்குரிய வழிபாடே.

நெல்விளைச்சலுக்கு உறுதுணை புரிந்த இயற்கைச் சக்திகளுக்கும் முக்கியமாகச் சூரியனுக்கும் தம்மோடு சேர்ந்து உழைத்த கால் நடைகளுக்கும் உழவன் நன்றி சொல்லும் நாள் தைப் பொங்கல் ஆகிறது. தைமாதம் மங்களகரமான மாதம். மாங்கல்யம் பூணுவதற்கு மகத்தான, மகோன்னதமான மாதம்.

தமிழர்கள் எத்தனையோ விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடினாலும் பொங்கல் விழா, தமிழர்களின் தனிப் பெரும் விழாவாக அன்றும் இன்றும் என்றென்றும் கொண்டாடப்படும் ஓர் அற்புதமான விழாவாகும்.

தைப்பொங்கல் நாளில் தமிழர்கள் அனைவரும் பொங்கி உண்டு மகிழ்கிறார்கள் என்பது சரி. ஆனால் எல்லா வீடுகளிலும் ஒரே மாதிரியாகவா பொங்கல் நடக்கிறது? பொங்கல் உழவர் திருநாள் என்றாலும் தமிழர்கள் எல்லோரும் குறிப்பாக இந்து சமயத்தவர்கள் எல்லோரும் பொங்கலைக் கொண்டாடுகிறார்கள். அவர்களில் பலருக்கு வயல்கள் கிடையா. சிலர் வயல்பக்கமே போயிருக்க மாட்டார்கள். ஆனால் எல்லோரும் பொங்கிப் படைக்கிறார்கள்.

கிராமத்தில் பொங்கல் கொண்டாடப்படும் விதமே அலாதிதான்.

தைமாதத்தின் விசேடங்களும் அற்புதங்களும் அதன் மகத்துவங்களும் அதிகம் கிராமத்தவர்களுக்கே தெரியும். ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' எனக் கூறுவார்கள். திருமணம், காது குத்தல், வித்தியாரம்பம், புதிர் எடுத்தல், புதுமனை புகுதல், புதுக்கணக்கு ஆரம்பித்தல், தைப்பூசம் என்று தைமாதத்தில் ஆற்றப்படும் விசேட நிகழ்வுகளின் பட்டியல் நீள்கிறது.

கிராமங்களில் பொங்கலுக்கான ஆயத்தமே தனி. ஒரு நாள் முன்னதாகவே அவர்கள் தயாராகத் தொடங்கி விடுவார்கள். தங்கள் வீட்டு மண் முற்றத்திலே கோலமிட்டு சாணத்தினால் அல்லது மஞ்சளினால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல் வைத்து வழிபடும் மரபை இன்றும் கிராமங்களில் காணமுடியும். பொங்கலை ஒட்டி கோலம் போடுவதும் ஒரு தனிக் கலை.

மார்கழி மாதத்தில் அதிகாலையில் காற்றில் உடலுக்கு நன்மை பயக்கும் 'ஓசோன்' வாயு கலந்திருப்பதால் விடிகாலை எழுந்து கோலம் போடுவது நல்லது. நல்ல உடற்பயிற்சியும் சுவாசத்திற்கும் நல்லது. முற்றத்தில் கோலம் போட்டால் அதனை அழித்து விளையாடுவதற்கு குழந்தை வேண்டியும், போட்ட கோலத்தினை சுவாமி தேரினால் அழித்தால் புண்ணியம் கிடைக்கும் என்றும் மழை வேண்டியும் கோலமிடுவார்கள் கிராமத்துப் பெண்கள்.

புனிதம், தெய்வீகம், கைத்திறன், அழகு அத்தனையும் நிறைந்த மனதிற்கு மகிழ்ச்சியையும் புந்துணர்வையும் தரும் கோலங்கள் மார்கழி மாதம் முழுவதும் போடப்பட்டு பொங்கலன்று வீடு முழுவதும் கோலம் போடுவதுடன் நிறைவடையும்.

பொங்கலன்று போடப்படும் கோலத்திற்கு விசேடமுண்டு. சூரியன் பகவான் தேரிலே ஆரோகணித்து வருவது போல முற்றத்திலே கோலமிடுவார்கள்.

கிராமங்களில் பொங்கல் செய்யும் பானை புதுமண்பானையாகவே இருக்கும். தென்னம் பூம்பாளை வைத்துப் பொங்குவார்கள். வயலில் உள்ளவர்களாயின் புதிதாக அறுவடை செய்து நெல்லில் இருந்து குற்றியெடுத்த அரிசியிலேயே பொங்குவார்கள். அதிலே சர்க்கரை, நெய், ஏலக்காய் போன்ற வாசனைப் பொருள்களையும் சேர்த்துப் பொங்குவார்கள். பொங்கல் பால் கிழக்குத் திசையிலே வழிந்தால் நல்லதென்பர்.

சிறுவர்கள் புத்தாடை அணிந்து பட்டாசுகளை வெடித்து மகிழ்வார்கள். பொங்கல் தயாரானதும் கதிரவனுக்குப் படைத்து விட்டு தாமும் உண்டு சுற்றத்தாருக்கும் பங்கிட்டுக் கொடுத்து மகிழ்வார்கள்.

மார்கழி மாதம் முழுவதுமே கோலம் போட்டு அதில் சாணத்தால் பிடித்து வைத்த விநாயகரைக் கொண்டு சென்று குளத்திலே கரைத்து பொங்கிய பொங்கலையும் கரைத்துவிட்டு வழிபடுவார்கள்.

இத்தனையும் கிராமங்களில் தவறாமல் பொங்கலன்று நடக்கும். ஆனால் இன்றைய இயந்திரகதியான வாழ்க்கையில் தமிழர்களுக்கு இதற்கெல்லாம் எங்கே நேரமும் இடமும்?

காஸ் அடுப்பும் ஒரு சில்வர் பானையும் இருந்தால் காலையில் 8 மணிக்கு எழுந்து அடுத்த ஒரு மணி நேரத்தில் பொங்கலைப் பொங்கி முடிப்பதே நகரத்தின் இன்றைய பொங்கல் ஆகிவிட்டது. அதுவும் கொழும்பு போன்ற பெரு நகரங்களில் புறாக்கூண்டுகள் போன்ற தொடர் மாடிகளில் வசிப்பவர்களால் தோரணங்களையும் கோலங்களையும் சாணத்தால் பிடிக்கப்பட்ட பிள்ளையாரையும் எப்படி நினைத்துப் பார்க்க முடியும்?

மற்றைய எல்லா சமய சம்பிரதாயங்களையும் போலவே இப்போது பொங்கலும் வெறும் ஒரு சடங்காக நகரத்து மக்களுக்கு மாறிவிட்டது. அதிகபட்சமாக ஒரு நாள் ஓய்வு அவர்களுக்குக் கிடைக்கும். அதுவே பொங்கல் என்பதன் நகரத்து அர்த்தம் என்றாகி விட்டது.

நகரத்து மக்களில் சிலர் பொங்கலை எவ்வளவு சிறப்பாகக் கொண்டாட நினைத்தாலும் சூழலும் நேரமும் அவர்களுக்கு ஒத்துழைப்பதில்லை.

பழைய காலத்தில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக இருந்தார்கள், அதனால் பொங்கலைக் கொண்டாட வேண்டி இருந்தது. இன்றிருப்பவர்களோ நான்கு தலைமுறைக்கு முன்னரே விவசாயத்தைக் கைவிட்டவர்கள், அவர்களுக்கு எதற்குப் பொங்கலும் விழாவும் என்று கேட்போரும் இல்லாமல் இல்லை.

தமிழர்கள் நகர வாழ்விற்குள் ஆட்பட்டுப்போன பின்பு பாரம்பரியமும் பண்பாடும் பேணப்படமுடியா அம்சங்களாகி விட்டன. நகரத்து வாழ்வில் பொங்கலுக்கும் அதே இடம்தான்.

பொங்கல் திருநாளினை அடுத்து வரும் மாட்டுப் பொங்கலை கிராமங்களில் வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள். செல்வமாகிய கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக மாடுகளை குளிப்பாட்டி கொம்புகளுக்கு வர்ணம் பூசி மாலை மணிகள் பட்டுகள் அணிவித்து அதனை கடவுளாக எண்ணி வழிபட்டு அதற்குப் பொங்கி, பொங்கலைப் படைத்து மகிழ்வார்கள்.

நகரவாசிகள் விரும்பினால் அவர்களுடைய கார்களையும் மோட்டார் சைக்கிள்களையும் வைத்துத்தான் பொங்க வேண்டும்.

**வாணி**


அனைவருக்கும் தித்திக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்



அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கள் கொண்ட தங்க நகைகளை உங்கள் எண்ணம்போல தெரிவுசெய்து நீங்கள் விரும்பும் தினத்தில் பெற்றிட

ரூபி நகைப்பூங்கா

இல.227, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2828.

அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

WESTERN UNION MONEY TRANSFER

வெளிநாட்டிலிருந்து ஒரு சில நிமிடங்களில் பாதுகாப்பாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள இலகு வழி

வெளிநாட்டிலிருந்து உறவினர்கள் Western Union மூலம் பணம் அனுப்பிய பணப் பரிமாற்ற இலக்கம் (Mtcn 10 இலக்கங்கள்) கிடைத்து விட்டதா? ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

No. 303, K.K.S. Road, Jaffna. T.P: 021 222 2670, 5392. Fax: 021 222 3214.

E-mail: srimurugan@eureka.lk.

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

செல்வி நகையகம் Selvi Jewellery

(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)



நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2229441

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

தங்க நகைகளை வாங்கிச் சென்றிட கைராசியானதும் நம்பகரமானதும் ராசியான நகைக்கடை



சாஙகா நகைமாடம்

200G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வசீகரத் தோற்றத்திற்கு!

சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)



வெண்சந்தனம், மரமஞ்சள், கும்குமப் பட்டை, கஸ்தூரி மஞ்சல், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமவரட்சி அடைதலைத்தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகரமுக அழகைத்தரும் உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம்சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சர்மநோய்களை பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்தபின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரதோற்றத்தைத்தரும்.

"சிவாநறுமணப்பூங்கா"

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகலபார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)

MANUFACTURED BY; SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS, VEYANGODA, SRI LANKA, AYY PRO NO: REG NO. A/L 250



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்துவம் மிக்க மார்கழியும் தையும்

தை மாதம் முதல் ஆனி மாதம்வரையிலுள்ள காலம் உத்தராயன காலம். அது தேவர்களின் பகற் காலம். ஆடி முதல் மார்கழிவரை சூரியனுடைய தட்சணாய காலம். அது தேவர்களின் இரவுக்காலம். மனிதர்களுக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒருநாள். ஆகவே உத்தராயன காலம் தேவர்களின் இரவுக்காலம். தட்சணாய காலம் தேவர்களின் பகற்காலம்.

மார்கழி மாதம் தேவர்களின் பிரம்ம முகூர்த்த காலம். இதனால் தேவர்கள் மார்கழி மாதமாகிய பிரம்ம முகூர்த்த காலத்தில் சிவவழிபாடு, தியானம், ஜெபம், தவம் முதலியவற்றில் ஈடுபட்டிருப்பர். மார்கழி மாதம்மட்டும் தவக்கால மாதமாக ஆன்றோரால் மட்டுமல்ல வேதகாலந்தொட்டு வாழ்ந்து வந்தோராலும் அப்படிக்கணிக்கப்பட்டுள்ளது. திருப்பாவை பாடிய ஆண்டாள், கண்ணன் மீது கொண்ட மீளாக்காதலால் பாவை நோன்பிருந்து திருப்பாவையில் 'மார்கழி மாதம் மதி நிறைந்த நன்னாள்' எனப் பாடுகின்றார். கிருஷ்ண பகவான் தன்னை, 'மாதங்களில் மார்கழியாவேன்' என்று அருளியுள்ளார். காலையிலும் மாலையிலும் இருபொழுதும் சந்திக்கும் பிரம்ம முகூர்த்தம் கல்வி கற்க, இறை வழிபாடு செய்ய நல்ல நேரமாகும்.

மார்கழிமாதம்பனியும்மழையும்நிறைந்த நாளானாலும் மார்கழி மாதம் முழுவதும் வீடுகளில் உள்ள முற்றங்களை அலகிட்டு, மொழுகி, அரிசி மாவினால் வண்ணக் கோலங்களைப் பெண்கள் இட்டு சாணியோ அல்லது சந்தனம், மஞ்சள் என்பவற்றினாலோ பிள்ளையார் பிடித்து, அறுகம்புல், பூ வைத்து வணங்குவார்கள். இது பண்டைக்காலச் சைவ வைணவ மரபாகும். இப்போதும் பல இடங்களில் இம் மரபு காணப்படுகின்றது.

இறைவன் ஒருவனையே பற்றுக்கோடாகக் கொண்ட சைவ வைணவ மக்கள் மார்கழிமாதம் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து நித்தியகரும விதிகளை முடித்து, சேமக்கலம், மணி, சங்கு போன்ற சிவசின்னங்களுடன் வீதிகள் தோறும் திருவெம்பாவை, திருப்பாவை பாடிவந்தனர். அதனாலேதான் அக்கால மக்கள் அரசபயம், மரணபயம், பகை, பிணி இன்றி அமைதியென்னும் பெருவாழ்வு பெற்றனர். மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரம் சிவபெருமானுக்குரிய நட்சத்திரமாகையால் அன்றைய நாள் அதிகாலை இரண்டு மணிக்கே நடராசப் பெருமானுக்கு மகா அபிடேகம் நிகழ்த்தத் தொடங்கி வைகறைப் பொழுதில் தரிசனம் செய்யப்படும்.

இதனைவிடக் கன்னிப் பெண்கள் தாம் விரும்பிய சிறந்த கணவனை அடைந்து, நல்வாழ்வு பெறவும் நல்ல மழை பெறவும் பாவை நோன்பு மணிவாசகர் காலத்துக்கு முன்பே அனுஷ்டித்த வரலாற்றை, அதன் இலக்கணங்களை மணிவாசகப் பெருமான் எழுத்தோவியமாகத் திருவாசகத்தில் திருவெம்பாவையாகப் பக்தி நனி சொட்டச் சொட்டப் பாடினாலும் அகத்துறையாகவே காணப்பட்டமை

மாதாஜீ, குப்பிளான்.

யும் எம்பெருமானாகிய சிவபெருமான் 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என மாணிக்கவாசகப் பெருமானைப் பணித்தருளிய தன்மையும் மார்கழி மாதத்துக்குரியதாகும்.

### தைப் பொங்கல்

தேவர்களின் இரவாகிய ஆடிமுதல் மார்கழிவரை காலம் நீங்கி மறுநாள் சூரியன் தட்சணாய காலத்தை நெருங்கித் தெற்கே திரும்பும்போது மனிதர்களுக்குத் தைமாதம் உதயமாகின்றது. "தை பிறந்தால்வழி பிறக்கும்" என்பது முன்னோர் அனுபவத்தில் கண்ட அருளமுத வாக்காகும்.

இதனாலேதான் தைமாதத்தை மங்கள நிகழ்வுகளுடன் சைவப் பெருமக்கள் வரவேற்பதைச் சாதனைகள் மூலம் காணக்கிடக்கின்றது.



*உழவரின் திருநாள் மாட்டுப் பொங்கல். மாடு என்பது செல்வம். வயலில் அக்காலத்தில் எருது மாடுகளே உழுது வந்தன. பால், தயிர், மோர், நெய், கோமயம், கோசலம் முதலிய பஞ்ச கவ்வியங்கள் அபிடேகப் பொருள்களைப் பசுமாடு களே தந்தமையால் மாட்டுப் பொங்கலைப் பெருவிழாவாக உழவர்கள் பண்டைக்காலந் தொட்டுக் கொண்டாடி வந்தனர்.*

அதிகாலை வைகறைப் பொழுதில் வீடு வாசலைச் சுத்தம் செய்வர். முற்றத்தில் பெரிய கோலம் அரிசிமாவினால் போடுவர். பால், பழம், பூ முதலியவற்றுடன் நிறைகுடம் வைப்பர். அக்கினி மூலையில் சூரிய பகவானுக்குப் பொங்கலிட்டுச் சூரிய பகவானை மங்கள தீப தூபங்களுடன் வரவேற்பர்.

பொங்கலை பெரிய தலைவாழை இலையில் முக்கனிகளுடன் படைப்பர். பிள்ளையார் பொங்கல் செய்யும் முன்பே விக்கினம் ஏதும் உண்டாகாமல் பிடித்து வைக்கப்படும். பழங்களுடன் படைக்கப்பட்ட பொங்கலுக்குத் தூப தீபம் காட்டிச் சூரியபகவானை வலம்வந்து வணங்குவர். பின்னர் சுற்றம் முதலிய உறவினருடன் அதனை உண்பர். இவ் வழக்கம் சைவ சமயத்தலைவர்களிடையே பண்டைக் காலந் தொடக்கம் இருந்து வந்தது.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்றால் நீண்ட காலம் கன்னியாக இருந்த பெண்களுக்குத் திருமணப் பேச்சுக்கள், திருமணம் முதலியன நிகழும். தைமாதத்தில் வருகின்ற பூரணையுடன் கூடிய தைப்பூசநாள் தூய புனித நாளாகவும் தைப் பொங்களின் மறுநாளை மாட்டுப் பொங்கல் நாளாகவும் கொண்டாடுவர்.

உழவரின் திருநாள் மாட்டுப்பொங்கல். மாடு என்பது செல்வம். வயலில் அக்காலத்தில் எருது மாடுகளே உழுது வந்தன. பால், தயிர், மோர், நெய், கோமயம், கோசலம் முதலிய பஞ்ச கவ்வியங்கள் அபிடேகப் பொருள்களைப் பசுமாடுகளே தந்தமையால் மாட்டுப் பொங்கலைப் பெருவிழாவாக உழவர்கள் பண்டைக் காலந் தொட்டுக் கொண்டாடி வந்தனர்.

பசுக்களுக்கு நீராட்டி குங்குமத் திலகமிட்டுப் பட்டு மணி கழுத்திற் கட்டி சவாரிக்கு விடுவர். சவாரிக்கு விடும் முதற்பசுவில் பட்டில் பணம் முடிந்து விடுவார்கள். யார் அந்தப் பசுவைப் பிடிப்பார்களோ அவர்களுக்கு அந்தப்பணம். அத்துடன் வண்டிச் சவாரி செய்யும் வழக்கமும் இருந்து வந்தது.

தைப்பூச நாள் வியாக்கிரமபாதருக்கு சிவபெருமான் நடராஜப் பெருமானாக இருந்து தில்லையிலுள்ள சபா மண்டபத்தில் திருநடனத் தரிசனம் கொடுத்த நாளாகையால் அன்றைய நாளில் காது குத்துதல், ஏர் பூட்டல் இவ்வாறு நல்ல காரியங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

**கஜசங்கவி சென்ரர் அன்ட் கஜசங்கவி பிறிண்டேர்ஸ்**

டீலர் இன் இந்தியன் வெடிங் காட்ஸ் அன்ட் ஒவ்செற் அன்ட் ஸ்கிறீன் பிறிண்டிங் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட் திருமண அழைப்பிதழ்கள், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்தநாள் அழைப்பிதழ்கள் மற்றும் Cakebox, Wedding Bag மற்றும் Gift வகைகள், குங்குமச் சிமிழ், மஞ்சள் குங்குமம், குபேரன் சிலைகள் மற்றும் ஐசிங்கிற்குத் தேவையான பொருள்கள் (டம்மி செற், ஸ்ராண்ட், கப்பிள்) அனைத்துடனும் திருமண வைபவத்திற்குத் தேவையான அனைத்துவிதமான பொருள்களையும் பெறுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

கஜசங்கவி சென்ரர் அன்ட் கஜசங்கவி பிறிண்டேர்ஸ்
இல.237, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7885.

"ஜீவாகாரம்"
தேகஆரோக்கியத்துக்குப் போஷாக்கு நிறைந்த ஜீவாகாரம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எங்கள் உளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

அண்ணா தொழிலகம் இணுவில்

அண்ணா கறிமிளகாய்த்தூள்
அண்ணா கோப்பி
அண்ணா அப்பம் மா
அண்ணா பற்பொடி
அண்ணா அரிசி மா
அண்ணா தோசை மா

★ குமரன் விபூதி
★ துர்க்கா பத்தி
★ சாயி சுகந்தா
★ ரோஸ் பத்தி

ANNA COFFEE

JEEVAKARAM

இல்லத்தரசிகளே!..
அண்ணா கோப்பி தயாரிப்புக்களை வாங்கிப் பாவித்து இன்புறுங்கள்!
★ வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
★ கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
★ போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்

தொ.பே: 021 222 3565, 021 7200 800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொங்குமா? பொங்கல்



பொங்கல் வைடதானுண்டு
எத்தனை காலமாச்சு
இந்தமுறை பொங்கிடவே
சொந்த நிலத்துக்கு நாம் வந்தோம்

வீடற்ற எமக்கெல்லாம்
தறப்பாள் கூடாரமாக
கொட்டியமாரியையும்
திட்டியே கண்ணீர் விட்டோம்

சொந்தமான காணிகளில்
வந்தவளின் குடியிருப்பு
அடர்ந்த பற்றைக் காடுகளே
அளந்து கொடுக்கப் பட்டதே.

நீரூற்றில் அகப்பட்டு
வெள்ளத்தில் கலந்தோடி
பஞ்சத்தில் தவழ்ந்தோமே- பலநாள்
பசியோடு கிடந்தோமே!

இந்தமுறை பொங்கல் திருநாள்
இனிதாக அமையுமா?
உறவுகளை இழந்த நிலத்தில்
எமக்கெங்கே வழி பிறக்கும்.

- வே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணி.



# உழவர்க்கு நன்றி

ஏரில் எருது பூட்டி
ஊரின் நிலமுழுது
பாருக்குச் சோறு
போட்ட பாரிகள்...
பயிர்கள் தழைத்து
நெல்மணிகள் சிரிக்க
உடல் வலிகள் மறந்து
மகிழ்வார்கள்...
உலையில் ஏறும்
சோற்றின் சரிதமும்
உழவன் வியர்வையின்
மகிமை கூறிடும்
உணவு அளித்த அவர்
உழைப்பின் திறனறிந்து
தரணி போற்றிடும்
தைப் பெரு நாளினில்
உணர்வுடன் நின்று
நன்றி கூறுவோம்.

- கூடலூர் சரிதன்.




Digitized by noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் திருநாளும் சூரியவழிபாடும்

( I ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனுள் சர்க்கரை, பால், பயறு, ஏனைய வாசனைத் திரவியங்களையும் நெய், தேன் போன்றவற்றையும் நிறைத்து பதந் தவறாது பொங்கிக் கொள்ளல் வேண்டும். பொங்கல் எரிந்து கொள்ளா தபடி பார்த்துக் கொள்ளல் அவசியமாகும். பொங்கல் எரிவதாலும், அரிசி அவியாது விடுவதாலும் பிழையான பலன்களை எமக்கு ஏற்படுத்திவிடும், பொங்கல் பானையை இறக்கியதும் மீண்டும் பொங்கல் பானையைப் பூசித்து சந்தண, குங்கும, அட்சதைகளைச் சாத்தி, மஞ்சள் இலை கட்டி, பொங்கல் பானையை வணங்குவது வழக்காக இருந்து வருகிறது. இவ்விதம் நைவேத்தியத்தையே பூசிக்கும் சிறப்பு தைப்பொங்கலிலே தான் சிறப்பாகக் காணப்படுகிறது.

**சூரிய பகவானின் பூர்வீகம்**

சிறந்த சக்திகளையுடைய சூரியபகவான் சிம்ம இராசிக்கு அதிபதியாவார். அதிதியின் புதல்வன். காசிபகோத்திரத்தைச் சேர்ந்தவன். குரு, சந்திரன், அங்காரகன் ஆகியோரின் நண்பன். சுக்கிரனுக்கும் சனிக்கும் பகைவன். கலிங்க தேசத்தைச் சேர்ந்தவன்.

ஆடுதுறையில் சூரியனார் கோயிலில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிப்பவன். பன்னிரு மாதங்களிலும் வைகர்த்தனன், விவஷ்வரன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகப் பிரகாஷன், லோகசாஷி, திரிவிக்கிரமன்,ஆதித்தன், சூரியன், அம்சுமாலினி, திவாகரன் எனும் நாமங்களோடு காட்சி கொடுப்பவன். செந்தாமரை, வில்வம் போன்றவற்றால் அர்ச்சிக்கும் போது மகிழ்பவன். இவனை ஞாயிற்றுக் கிழமைகளில் விசேடமாகப் பூசிப்பதால் நல்ல பலனைப் பெற்றுக் கொள்ள முடியும். வில்வம், கோதுமை, வெற்றிலை, பாக்கு, பழம் போன்றவற்றிலும் கடுகு, காரம் சேர்ந்த நெய்ச்சாதம், கோதுமை சேர்ந்த பலகாரம், சர்க்கரைச் சாதம்

*தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வாக் கியத்தை நம்முன்னோர் முன்மொழிந் துள்ளனர். போகிப் பண்டிகையில் பழைய வற்றை எண்ணி மறப்பதும், தைப்பொங் கலில் புதிய வாழ்வுக்கு எம்மைத் தயார் படுத்துவதும் எமக்கு ஓர் விசேட அனு பவத்தை தந்து நிற்கிறது.*

போன்றவற்றிலும் பிரியமானவன்.

**சூரிய வழிபாடு துன்பத்தை நீக்க உதவும்**

எமக்கு வருகின்ற துன்பங் களிலிருந்து விடுபடுவதற்கு சிவாகமங்கள் பல வழிகளைச் செப்புகின்றன. அவற்றை அந்தவழியில் நிறைவு செய்வோர் துன்பங்களிலிருந்து விடுபடுகின்றனர். சூரிய வழிபாடு துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு மாபெரும் சாதனமாக அமைந்துள்ளது. சிவபூஜை பற்றி ஆகமங்கள் கூறுகின்றபோது சிவபூஜையின் முன் சூரிய பூஜையை நிறைவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவ



திலிருந்து சூரியவழிபாட்டின் முக்கியத்துவம் தெளிவாகிறது. அண்டத்தில் சூரியன் சிவனாகவும், சந்திரன் சக்தியாகவும் பூசிக்கப்படுவது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சூரிய பூஜையின் முக்கியத்துவத்தை விளங்க வைக்க பல்வேறு புராணக்கதைகள் சான்றாக விளங்குகின்றன. காலவ முனிவர் கைலாய மலையில் கடுந்தவம் செய்து வந்தார். அவர் திரிகாலங்களையும் உணர்ந்தவராகக் காணப்பட்டார். எனினும் அவர் ஒரு நாள் மிகுந்த சோகத்துடன் இருந்தார். முக்காலமும் உணர்ந்த முனிவர் ஏன் கவலையுடன் காணப்படுகிறார்? என்ற கேள்வி இவரது நண்பர்களிடம் தோன்றியது. நண்பர்கள் இவரை அணுகி முனிவரே தாங்கள் சோகமாக இருப்பதன் காரணம் யாது என்று வினவினர். அதற்கு முனிவர் விரைவில் எனக்குத் தொழுநோய் வரப்போகிறது என்று அறிவதால் மனம் வெதும்புகிறேன் என்றார். அதற்கு அவர்கள் கவலையை விட்டு விடுங்கள் நவக்கிரக நாயகர்களை நோக்கி கடுந்தவம் செய்யுங்கள் என்றனர். முனிவர் பஞ்சாக்கினியின் நடுவே கடும் தவத்தை நோற்றார். சூரிய பகவான் நவநாயகர்களுடன் அருணன் என்ற தேர்ச்சாரதி ஓட்டும் ஏழு குதிரைகள் கொண்ட ஏக சக்கரத் தேரில் வருகிறான். அப்போ காலவ முனிவரின் தவத்தை மெச்சி வேண்டும் வரத்தைக் கேட்டுக்கொள் என்று தெரிவிக்கிறான். முனிவர் தனக்கு ஏற்படவிருக்கும் தொழுநோயை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். அதன்படி சூரிய பகவான் அனுக்கிரகம் செய்கின்றான். இவ்விதம் பல்வேறு பட்ட புராணக்கதை கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இவற்றை அறிந்து நாமும் பலன்பெறுவோமாக!













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்
2011
பண்டிகைக்கால அதிர்ஷ்டம்
15.12.2010 இல் இருந்து 14.04.2011 வரை ரூபா ஆறாயிரத்துக்கு (6000/-) மேல் தங்க நகைகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளரில் 15.04.2011 ஆம் திகதியன்று குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும்
அதிர்ஷ்டசாலிகளுக்கு..
முதலாவது பரிசு T.V.
இரண்டாவது பரிசு துவிச்சக்கரவண்டி
மூன்றாவது பரிசு C.D. பிளேயர்
என்பன பரிசாக வழங்கப்படும் என்பதை எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.



நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
சிறி சிவாஞ்சனா நகையகம்
இல.149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 9227

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் தெரிவுசெய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்குத் தருபவர்கள்
நிஷானந்தா ஜுவல்லறி
இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 2227985

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்
செ.இராசரத்தினம்
S.R.P. பம்புகள்
கே.கே.எஸ்.வீதி, கொண்டாவில், தாவடி.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 2224135, 2229165.
V.S.P லஞ் ஒயில்



உணவுத் தேவைகளுக்குச் சுத்தமாக தயாரிக்கப்படுகிறது
எமது நிறுவனத்தின் VSP லஞ் ஒயில் கொழும்பு வாழ் மக்களின் நலன்கருதி கொழும்பிலும் விற்பனையாகிறது.

புதுமைகள் பூத்துக் குலுங்க மனங்களில் குதூகலம் குடியிருக்க பொங்கலே நீ பொங்குக
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.....
LG 1 No Dealer in SriLanka
LG JAFFNA ELECTRICAL
Show Rooms :
141, Power House Road, Jaffna. T.P: 021 222 8378, 5766.
No: 04, New Market, Chavakachcheri. T.P: 0213008702
No.13-9 Road, Kilinochchi. T.P: 021 492 5289.
Authorized Dealer for Abans
Cool Line: 0777725258
94 (6), Stanley Road, Jaffna. 021 222 2353

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்களின் உளம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்...
பிறேம் நகைமாடம்
No.171, Prem Plaza, Jaffna Road, Manipay.
T.P: 0213209167, 0777241485, 0773039572.
உரிமையாளர்: இ.பிரேம்குமார்.






வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அலுமினியம் பிறேம், அனைத்து அளவிலான படம் பிறேம் போடுதல் மற்றும் பல சேவைகளை எம்மிடம் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
கண்ணாடி வகைகளின் ஏக விநியோகஸ்தர்
பட்டாபி படமாடம்
64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 7821
இல.225, 227, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 4351

எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.
பண்டிகைக் காலத்தினை முன்னிட்டும், எமது நிறுவனத்தின் 6 மாதகாலப் பூர்த்தியினை முன்னிட்டும் சிறப்பு விலைக் கழிவுடன் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட உதிரிப்பாக விற்பனை முகவர்
சில்வியா மோட்டர்ஸ்
SILVIA MOTORS
இல - 440, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். sureshpulsar200@yahoo.de தொ.பேசி: 077-3715344, 021-3210245.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்துபோன சவாரி



"புதுமைகள் பூத்துக் குலுங்கிட"
எங்கள் ஏக்கங்கள் கரைந்திட
இனிமைகள் இங்கிதம் இசைக்க
புதியவளாய் புகுந்திருக்கிறாள் தை மகள்"

உழவர்களின் உயிரூட்டமான, உன்னதம் நிறைந்த திருநாளாம் தைத் திருநாள் இன்று புதுப்பொலிவுடன் எல்லோரது மனங்களிலும் மகிழ்ச்சிப் பிரவாகத்துடன் புலர்ந்திருக்கிறது.

பொங்கல் பொங்கி வருகின்ற போது எம் மனங்களிலும் இன்ப அலைகள் பொங்கிப் பிரவாகிக்கும்- அதனால் துன்பங்கள் நீங்கி எங்கும் மங்கலம் தங்கும் என்ற நம்பிக்கை எல்லோர் இதயங்களிலும் இனிதே நிறைந்த தத்துவமாகும்.

பகிர்ந்துண்ணல்- நன்றிக்கடன்- சமூக உறவுகளின் மேம்பாடு எனப் பல்வேறு பாரம்பரிய அம்சங்களை உள்ளடக்கியதான பொங்கல் பண்டிகையின்போது மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கும் மக்கள் மாட்டுவண் டிச் சவாரி, தயிர் முட்டியடித்தல், கரகாட்டம் எனப் பல்வேறு எமது பாரம்பரிய விளையாட்டுக்களிலும் அன்றைய தினம் ஈடுபட்டு மகிழ் வுடன் பொழுதைக் கழித்து வருகிறா ர்கள்.

இதில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியென்பது எல்லோரும் ரசனையுடனும் ஆர்வத்துடனும் பார்த்து மகிழ்ந்து வருகின்ற ஒரு நிகழ்வாகும்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவில' என்று தத்துவம் பேசினாலும் சில விடயங்களில் அது சாத்தியப்படாது என்று சொல்லிக் கொள்ளலாம். ஏனெ னில் சில பாரம்பரியங்கள் எமது இனத்தின் அடையாளங்கள். அதை யெப்படி மறைப்பது- மறப்பது.

இன்றைய சூழலில் மாட்டுவண்டி என்றவொரு போக்குவரத்துச் சாதனத்தைக் கண்ணால் கூட காணமுடியாமல் உள்ளது. அந்தக் காலத்துச் சினிமாப் படங்களில் வருகின்ற கதாநாயகர்களை முதலில் காட்சிப்படுத்தும் போது அவர்கள் மாட்டு வண்டியில்தான் தோன்றுவார்கள்.

குறிப்பாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் ''பெரிய இடத்துப் பெண்'' என்ற படத்தில் ''பாரப்பா பழனியப்பா, பட்டணமாம் பட்டணம்...'' என்று பாடிக்கொண்டு வருகின்றபோது திரைக்கு முன்னால் இருக்கும் ரசிகர்கள் புல்லரித்துப் போவார்களாம்.

கால ஓட்டத்தில் மாட்டு வண்டியும் ஓடிவிட்டது. அந்த மாட்டு வண்டியின் சிறியளவிலான அமைப்புத்தான் ''திருக்கை வண்டில்'' (சவாரி வண்டி) அதனைத் தான் சவாரிப் போட்டிகளுக்கு பயன்படுத்துவார்கள்.

இந்தப் போட்டியை ஆரம்ப காலங்களில் கிராமப் புறங்களில் குறிப்பாக அராலி, வட்டுக்கோட்டை, ஏழாலை, சண்டிலிப்பாய் எனப் பல்வேறு பகுதிகளிலும் வடமராட்சியில் துன்னாலை, கரவெட்டி போன்ற இடங்களிலும் தென்மராட்சியில் கச்சாய், கொடிகாமம், மிருசுவில் போன்ற இடங்களிலும் சிறப்பாக நடத்தினார்கள்.

தற்போது ஒருசில இடங்களில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் ஆரம்ப காலங்களில் இதற்கு இருந்த ரசனையும், ரசிகர்களும் இப்போது வெகுவாகக் குறைந்துள்ளனர் என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

ஒரு காலத்தில் 'சவாரி' என்று அடைமொழியுடன் கூறினால்தானாம் சிலரது பெயர்கள்கூட தெரியுமாம். அந்தளவிற்கு இதற்குப் பெரும் மவுசிருந்திருக்கிறது.

*'பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் வழுவில' என்று தத்துவம் பேசினாலும் சில விடயங்களில் அது சாத்தியப் படாது என்று சொல்லிக் கொள்ளலாம். ஏனெ னில் சில பாரம்பரியங்கள் எமது இனத்தின் அடையாளங்கள். அதை யெப்படி மறைப்பது- மறப்பது.*

சவாரிப் போட்டி குறித்து அதன் பழம் பெரும் ரசிகர் சி.சின்னத்தம்பி என்பவர் இவ்வாறு விவரித்தார்?

''முந்தியெல்லாம் காலையில் பொங்கிப் போட்டு பின்னேரம் தோளிலே ஒரு துண்டையும் போட்டுக் கொண்டு சவாரித்திடலுக்குப் போய் வருவோம்.. அங்க போனால் சொல்லவா வேணும்? நான் முந்தி, நீ முந்தியென்று போட்டா போட்டி போட்டுக்கொண்டு 'ஏ' பிரிவு மாண்டுவண்டிச் சவாரிப் போட்டியில் தீவிரமான விருப்பம் கொண்டு அதில் அதிகளவில் ஈடுபாடு காட்டுவார்கள்.

இப்போட்டி பற்றிச் சண்டிலிப்பாயைச் சேர்ந்த ப.பரமன் என்ற பெரியவர் தனது அனுபவங்களை பின்வருமாறு பகிர்ந்து கொள்கிறார்.

''சுமார் 25 வருடங்களுக்கு முதல் எல்லாக் கிராமங்களில் இருந்தும் சவாரிப் போட்டியாளர்களை அழைத்து யாழ். முற்ற வெளிப்பகுதியில் பிரமாண்டமான போட்டியொன்றை நடத்துவார்கள். அதில் நீ.. நான்.. என்று எல்லோரும் ஆர்வத்துடன் பங்கு பற்றினார்கள்.

குறிப்பாகத் துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்.முற்றவெளி மைதானம் போன்ற பரந்த வெளிகளில் 'சி'பிரிவு, 'டி' பிரிவு என்று மாட் டுவண்டில்கள் வரிசையில் நிற்கும்...

போட்டியில் எந்த மாட்டுவண்டி வெற்றிபெறும் என்று பார்வையாளர்கள் தங்களுக்கிடையில் காசு கட்டிச் சவால்கூட விடுவார்கள். கொடி காட்டி விசில் அடிச்சாக் காணும் சவாரித்திடலில் புழுதி கிளம்பும்...

இதில் கனபேர் தங்கட உயிரைக்கூட விட்டிருக்கிறார்கள், சிலர் காயப்பட்டு இருக்கிறார்கள். அப்படி பின்னேரப் பொழுதை சந்தோஷமாய்க் கழிச்சிட்டு இரவு எம்.ஜி.ஆர். படம் பார்க்க போயிடுவம்.. அங்கேயும் அவர் திருக்கை வண்டிலிலைதான் வருவார்? அதுவொரு வசந்தகாலம். அதை இபபோது நினைச்சுக் கூடப்பார்க்க முடியாது..

இப்பத்தைப் பொடியளிட்ட வாங்கோடா சவாரி பார்ப்பமென்று கேட்டால் ஒரு தடவை ஏறெடுத்துப் பார்த்திட்டு எங்களைப் பழசுகள் எண்டுட்டுப் போகுதுகள்''- என்றார்.

எமது பாரம்பரிய நிகழ்வுகளில் ஒன்றான இந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியினை அழியவிடாது பாதுகாத்து அதன் ஆரம்பகால வளர்ச்சி நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற அவா பல ரசிகர்களின் மத்தியில் உள்ளது. இதனை மேன்மைப்படுத்த இத்தகைய போட்டிகளை வயல் வெளிகள், குளக்கரைகள் போன்ற இடத்தில் நடத்தி ஒரு குறுகிய வட்டத்துக்குள் நின்றுவிடாது, எல்லோரும் பார்க்கக் கூடிய பொதுவான, விலாசமான மைதானங்களில் நடத்தினால் ரசிகர்களைக் கவரலாம்.

''இப்பவெல்லாம் ஒரு சில இடங்களில் மாட்டு வண்டிச் சவாரி நடத்துறாங்கதான். ஆனால், சனம் பெரிசாய் பார்க்கப்போகிறதில்லை. காலம் மாறிப் போய்ச்சு ம்..ம்..'' என்று பெருமூச் செறிகிறார் பரமன். அது போன்ற நிகழ்வுகளை பண்டிகைக் காலங்களிலாவது நடத்தினால்.. இந்தப் பாரம்பரிய நிகழ்வினை மேலும் பரவலாக்கம் செய்து அதில் ரசிகர்கள் பலரை இன்னும் அதிகளவில் கவர்ந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

அதனால் இந்தக் கலை மீட்சிபெறும் என்ற நம்பிக்கை சமூகப் பாரம்பரிய ஆர்வலர்கள் மனங்களில் ஆழமாக உண்டு. வெறுமனே பொங்கினோம் உண் டோம், மகிழ்ந்தோம் என்று இல்லாம ல்.. அதுசார்ந்த கட்டமைப்புகளையும்- கூறுகளையும் உணர்ந்து அவற்றி னையும் பின்பற்றினோம் , பாதுகாத் தோம்- அதனால் மகிழ்ந்து கொண் டோம் என்று இருக்கவேண்டும்.

**கவிநேசன்**


COLOMBO PEST CONTROL SERVICE

உங்கள் இல்லங்களுக்கு கறையான்கள் நுளைவதற்கு அனுமதிக்காதீர்கள்.



நிலக்கறையான், எலி, கரப்பெத்தான்நுளம்பு, இலையான் ஆகியவற்றிலிருந்து விடுதலை வேண்டுமா இன்றே நாடுங்கள்.

COLOMBO PEST CONTROL SERVICE
இல. 527 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 0213207007
0777666684

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!

ரமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்

சகல விதமான கட்டடப் பொருள்களையும் நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

525, 523, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9296.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொங்கும் அனுபவம்

சொர்க்கத்தில் சென்று கொண்டிருந்த எனது தூக்கம் திடீரெனக் கலைக்கப்பட்டது. எப்படி... எங்கிருந்து.. எனப் விழித்த போது தொட்டியிலிருந்து வந்த கலவரக் குரல்களின் எதிர்விளைவு தான் என புரிந்தது. அடக்கடவுளே... மணி ஏழாகி விட்டதா எனத் திடுக்கிட்டுத் திரும்பினால் கடிகாரம் இன்னும் அதிகாலை மூன்றைத் தான் காட்டிக்கொண்டிருந்தது. பின் எப்படி.. புரியாது விழித்த போது எதிரே இருந்த நாள் காட்டி ஜனவரி 15 ஐக் காட்டியது. அடடா... புரிந்தது. இன்று பொங்கற் திருநாள்.

படுக்கையிலிருந்து எழுந்து தொட்டிக்குச் சென்றேன். அதற்குள் அங்கே அத்தனையும் நின்றன. நான் தான் கடைசி வரவு. தொட்டி அமர்க்களப்பட்டது. என் தோழி ஒருத்திக்கும் தொட்டிக்கும் சுயம்வரமாம். நடத்தி வைத்தவள் இன்னொருத்தி. தண்ணீர்க் குழாய் அவளை நீராட்ட.. அதிலிருந்து நீரெடுத்து அவள் மறுபடியும் தண்ணீர் குழாயை நீராட்ட சுயம்பரம் தொடர்ந்து கொண்டிருந்தது. அந்த நேரம் யாருர்க்கும் தெரியாமல் 'நைஸா'கப் பின்னால் சென்று நான் நீராட முயல்கையில் ஆயிரம் தேள் ஒன்றாய் கொட்டியது. கத்தியபடி திரும்பினேன். அத்தனை பேரும் கையில் வெறும் வாளியுடன் பின்னால் நின்றார்கள். நீர் என் முதுகை நனைத்திருந்தது. இனி என்ன செய்வது. சிரித்தபடி திரும்ப வேண்டிதாயிற்று. நீராடியவர்கள் செல்ல மற்றவர்கள் தொடர சத்தம் மட்டும் ஓய்வதாயில்லை. பாவம்... தொட்டிதான் என்ன செய்யும். கையிருந்தாலாவது காதுகளைப் பொத்திக் கொண்டிருக்கும். நீராடிவிட்டு அறைக்குத் திரும்பி ஆடை மாற்றிக் கொண்டு முற்றத்திற்கு வந்தோம். நேரம் நான்கு மணியைத் தொட்டிருந்தது.

இனி என்ன செய்வது.. வீட்டில் என்றால் அம்மா.. அப்பா.. அண்ணா.. அக்கா.. எல்லோரும் எல்லாம் செய்து முடித்து விட ஆறுதலாக எழும்பி முழுகி 'நைஸாக' அருகில் போய் நின்றுவிடலாம். இங்கு... அம்மா, அப்பா, அண்ணா,அக்கா எல்லாமும் நாமே... என்ன செய்வது.. விழித்துக் கொண்டு நின்றபோது ஒருத்தி முன் வந்தாள். இன்றுவரை அவளது செல்லப் பெயர் அம்மாதான்.

எங்கே மூன்று கல்லெடுத்துக் கழுவி வந்தாள். அடுப்பு ரெடி. ஆனால் அதற்கு முன் கோலமும் நிறைகுடமும் வைக்க வேண்டுமே. அதற்கு மட்டும் அத் தனை பேரும் வந்தார்கள். கோலமும் போட்டாயிற்று. அந்த இடத்தை மெழுகியவள் சாணியை, விடுப்புப் பார்த்துக் கேலி செய்தவர்களிற்கு வீசியது வேறுகதை. இப்போ கோலம் தயார். நிறைகுடம் வைக்க செம்பில் பழம், பாக்கு வெற்றிலை இன்னும் பிறபொருட்கள்எல்லாம் தயார். மாவிலைக்கு போனவளை மட்டும் காணவில்லை. பின்னால் தேடிப் போன ஒருத்தி மாவிலையோடு சேதியும் கொண்டு வந்தாள். அவள் மாங்காயை மென்று கொண்டிருப்பதாக. ஒருவாறு நிறைகுடம் வைத்தாயிற்று. இனி பொங்க வேண்டியதுதான் பாக்கி என நினைத்து அடுப்பை மூட்டியபோது மெழுகியவள் ஓடி வந்தாள். விஷயம் என்னவென்றால் பிள்ளையார் வைக்கவில்லை. பிறகு அறுகம்புல் தேடிப் பிள்ளையார் வைத்து அடுப்பும் எரித்தாயிற்று.

*ஒரே அமர்க்களம். அந்த*
*அமர்களத்தின் நடுவே*
*'படீர்' என ஒரு சத்தம்.*
*மொத்தமாய் அத்தனை*
*பேரின் இதயங்களும்*
*ஒருமுறை நின்றுபோக*
*திடுக்கிட்டு திரும்பி*
*பார்த்தால் ஒரு பட்டாசு*
*வெடித்திருந்தது.*

புதுப்பானை வந்தது. அதற்கு திருநீறு பூசி, பொட்டுவைத்து, மாவிலை கட்டி அந்த நேரம் அப்பாவானால் மற்றவள். பானையில் நீர் விட்டு அடுப்பில் உலையில் போட்டுமாயிற்று. பால்க்காரர் வந்து 'பெல்' அடித்தார். பால் வாங்கவெனப் போட்டிக்கு என்னோடு ஓடி வந்தாள் இன்னொருத்தி நான் பால் வாங்கிக் கொண்டு திரும்பினேன். வந்தவளைக் காணவில்லை. பார்த்தால் கொய்யாமரத்தோடு முட்டிக் கொண்டு நின்றாள் பாவம்... பால் வந்தாயிற்று. நேற்றே பயறு வறுத்து உடைத்தாயிற்று, கச்சான் வறுத்து எடுத்தாயிற்று; பிளம்ஸ், ஏலம் எல்லாம் தயார்; சக்கரையை சிறிதாக உடைத்துமாயிற்று.

அம்மாவாக நின்றவள் அரிசி வெந்ததும் பாலை விட்டு பொங்கல் ஆக்கினாள். அதற்குள் தோழிகளின் குணம் தெரிந்து எங்கேயோ ஒளித்து வைத்திருந்த பட்டாசுகளை எப்படியோ கண்டுபிடித்து எடுத்துவிட்டாள் ஒருத்தி. எல்லோரும் அவளை சூழ்ந்து கொண்டார்கள். நானும் கூடத் தான் பின் அம்மாதான் வந்து பிரித்துத் தந்தாள். கூடவே ஒரு நிபந்தனையும் பொங்கும் போது தான் வெடி சுட வேண்டும். சரி அத்தனை பேரும் காத்துக்கொண்டிருந்தோம். பால்பொங்க, வெடி வெடிக்க தேயாத சந்தோஷம். ஒருவாறு பொங்கல் தயார். பயறு, கச்சான், ஏலம் எல்லாம் மணக்க மணக்கப் பொங்கியாயிற்று அதற்குள் கச்சான் பருப்புகளில் பாதியை தன் சொந்த தேவைக்கு எடுத்து வைத்துக் கொண்டாள் இன்னொருத்தி என்பது பின்னர் தான் தெரியவந்தது. வாழையில் இலை வெட்டி பொங்கலைப் படைக்கும் போது யார் பாடுவது?....நீண்ட நேர விவாதத்தின் பின் எந்த ஆக்கபூர்வமும் இல்லாததால் எல்லோரும் பாடுவதென முடிவாகி எல்லோரும் பாடினோம். இனி என்ன... படைத்துமாயிற்று.....இனி எங்களிற்குத் தானே... எல்லோர்க்கும் வாழை இலையில் பொங்கல் பரிமாறப்பட்டது. பொங்கிய பொங்கல் இனித்ததோ....இல்லையோ... தைப்பொங்கல் திருநாள் இனித்தது....குடும்பம் கடந்த பொங்கலிலும் குதூகலம் இருக்கலாம், ஒற்றுமை இருந்தாலெனத் தெரிந்தது.

பொங்கல் பரிமாற என வரிசையாய் அமர்ந்தோம்.சரி..யார் பரிமாறுவது... எல்லோரும் பொங்கலிற்காகக் காத்திருப்பு. பொங்கல் பானையோ எங்களிற்காகக் காத்திருப்பு. இறுதியில் இப்போதும் அம்மா தான் எழுந்தாள். எல்லோருக்கும் பரிமாறினாள். அத்தனைபேரும் வரிசையாக ஆறுதலாகத் தரையில் அமர்ந்திருந்து பொங்கலை ஒன்றாக உண்ட போது ஒரு அமானுஸ்ய உணர்வாக இருந்தது. மீண்டும் ஒரு பாலர் பருவமா?... என்றொரு ஆச்சர்யம் கூடத் தோன்றியது.

பொங்கலோடு இருந்தவர்கள் ஒவ்வொருவராக மெல்ல மெல்ல எழுந்து சென்று வந்துகொண்டிருந்தார்கள். அப்போது எனக்குப் புரியவில்லை. இறுதியாக நானும் எழும்பி அவர்கள் பின்னால் சென்றுபார்த்தேன்.அங்கே வேறொரு சமாச்சாரம் நடந்துகொண்டிருந்தது. என்னவென்று பார்க்கிறீர்களா?...வாழைக் குலையிலிருந்து ஒவ்வொரு பழமாகக் காணாமல் போய்க்கொண்டிருந்தது. நான் மட்டும் என்ன விதிவிலக்கா... பறித்த வாழைப்பழத்தோடு வந்து பந்தியில் அமர்ந்தேன். திகைத்துப் போனேன்.

பொங்கலில் கச்சான் பருப்புக்கள் இருக்கினறனவா என எண்ணத் தொடங்கினேன். ஏனெனில் எதிரே இருந்தவளின் பொங்கல் இலையின் ஓரமாய் முழுசிக் கொண்டிருந்தன அவை. எப்படி எனக் கேட்டபோது விஷயம் பிடிபட்டது. அவள் தோழி திருடியதை இவள் கண்டுவிட்டதால் அதை மறைக்க அவள் இவளிற்கு கொடுத்த சன்மானம் அது. ஆக மொத்தத்தில் காட்டிக் கொடுக்காததற்காகவென்று கொடுத்த சன்மானமே அவளைக் காட்டிக்கொடுத்துவிட எல்லோரும் அவளைப் பிய்க்கத் தொடங்கினார்கள். ஆனால் என்ன பலன்... அவளிடம் தான் எதுவுமே இல்லையே. பிய்த்துக் கொண்டிருந்தவர்கள் தங்களிற்கும் வேண்டுமென்றார்கள். ஒரே அமர்க்களம். அந்த அமர்களத்தின் நடுவே 'படீர்' என ஒரு சத்தம். மொத்தமாய் அத்தனை பேரின் இதயங்களும் ஒருமுறை நின்றுபோக திடுக்கிட்டு திரும்பி பார்த்தால் ஒரு பட்டாசு வெடித்திருந்தது. வெடிக்க வைத்தவள் சிரித்துக் கொண்டு நின்றாள். அவ்வளவு தான். இவள் தப்பிக்க அவள் மாட்டிக்கொண்டாள். பிறகென்ன... ஆளுக்கு கொஞ்ச பட்டாசுகளோடு அவள் விலகிவிடப் பட்டாசுகள் படபடத்தன.

ஆளாளுக்குப் பயமுறுத்தவென ஒளிந்து இருந்து பட்டாசுகள் வெடித்தன. சில தோழிகள் பட்டாசுகளை நூலில் கோர்த்து கொழுத்தி விட்டார்கள். வெடித்த பட்டாசுகளிற்கு நிற்க மனமில்லை போலும். வெடித்துக் கொண்டேயிருந்தன. வீடுகளில் மட்டுமல்ல வீடுகள் தாண்டிய எங்கள் மனங்களிலும் பொங்கல் பொங்கியது.

**மதுவிழி**

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த தைப் பொங்கல் நல் வாழ்த்துக்கள்

Harini
Harini Net Cafe
* 3D Games
* CD, DVD Wiriting
* Photo Copy
* Scaning& Printing
* Net 2 Phone, Video Call
* Local/ IDD Call, Fax
* Reload, Top up Cards
* Stationary

High Speed internet Browsing
K.K.S Road, Kokuvil Junction, Kokuvil.
Ph: 0779456528.

Airtel Dialog Etisalat Mobitel Sri Lanka Telecom HUTCH

2011

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

JAYAM ELECTRONICS
மலிவு விலைகளில்
TV, DVD Player, Ampli, SpeaKer Box மற்றும் சகலவிதமான Electronics பொருள்களும் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.
339, K.K.S.Road, Jaffna. T.P: 0774041910


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தை பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அசல் 22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
ஆசைப்பிள்ளை
அன் சன் நகைமாடம்
இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை. தொ.பே: 021 321 2399

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
சீலன் அலுமினியம் பிற்றிங்
DOHA, DUBAI இல் 10வருட அனுபவம் உள்ளவர்.
Seelan Aluminiyam Fitting
No:54, K.K.S. Road, Kokuvil Junction. Tel: 021 4902561, 0778050918, 0778011 9220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தைப்பொங்கல் சிறப்பு மலர் 2011
15-01-2011 பக்கம் VIII C

# தமிழுணர்வுக்கு முதன்மை வழங்கும் தைப் பொங்கல்



சூரிய வழிபாடும் ஈழவரும்

சூரியன் என்பது ஒரு நட்சத்திரம். சூரியனில் இருந்து பிரிந்து வந்த குழம்புப் பொருள்களே குளிர்ந்து ஏனைய கிரகங்களாக மாறின என்பது விஞ்ஞான நம்பிக்கை. இக்கிரகங்கள் சூரியனது ஈர்ப்பு விசைக்கு உட்பட்டவை. அதன் ஒளியில் தங்கியிருப்பவை. இந்த ஒளியே எமக்கு வாழ்வுதரும் சக்தி. இதனால் சூரியனைக் கடவுளாகப் போற்றும் பண்புடையோர் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். இந்தியர்கள், எகிப்தியர்கள், சுமேரியர்கள், கிரேக்கர்கள் போன்றோர் இவ்வழிபாட்டை மேற்கொண்டோருள் முதன்மையானவர்கள். எல்லி என்ற சொல் சூரியனைக் குறிப்பது. சூரிய வழிபாடாற்றும் மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பு முன்னாள்களில் எல்லம் எனப்பட்டது. இந்த எல்லமே பின்னாள்களில் ஈழம் என்றாயிற்று என்பர்.

### காலக்கணிப்பில் சூரியன்

சோதிட ரீதியிலும் சூரியன் முக்கியத்துவமுடையவர். சுபக் கிரமாகவும், சாத்வீககுணமுடையவராகவும் சோதிடர்கள் சூரியனைச் சுட்டுவர். மாதம் ஒரு ராசி வீதம் பன்னிரண்டு ராசிகளில் 12 மாதங்கள் சூரியன் சஞ்சாரம் செய்கிறார். ஒவ்வொரு தமிழ் மாதத்தின் முதல் திகதியிலும் அடுத்த ராசிக்குச் செல்கிறார். சூரியனின் முதன்மையை உணர்ந்த நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" எனக் குறிப்பிடுகின்றார். "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" எனச் சிலப்பதிகாரம் சூரியனைப் போற்றுகின்றது.

சூரியன் மகர ராசியில் புகும் காலம் உத்தராயண புண்ணிய காலம் எனப்படுகின்றது. இதன் பொருள் வடக்கு வழி என்பதாகும். (உத் தரம்-வடக்கு, அயன்ம்-வழி) தை மாத முதல் நாளே உத்தராயண காலத்தின் ஆரம்பநாள் ஆகும். உத்தராயண காலம் பல புது முயற்சிகளின் தொடக்க காலமாகவும் அமைகின்றது. தை,மாசி மாதங்கள் இளவேனில் காலம் எனவும் கொள்ளப்படுகின்றன.

### தமிழ்ப் புத்தாண்டு

நம் வாழ்வியலில் இரண்டு வேளாண்மைகள் முக்கியமானவை.அவை நில வேளாண்மையும் கடல்வேளாண்மையுமாம். நிலவேளாண்மையில் நெற் பயிர்ச் செய்கையே முதன்மையானது. இக்

*திருவள்ளுவர் ஆண்டுக் கணக்குப்படி பார்த்தால் இன்று தி.பி. (திருவள்ளுவரின்பின்) 2042 ஆம் ஆண்டின் முதல் நாளாகும். சூரிய இயக்கத்தின் அடிப்படையிலேயே காலக்கணக் கீடு அமைவதால் ஒருமாதம் என்பது ஒரு இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் கால அளவாக அமைகிறது. இந்து வருட மாயினும் தமிழ் வருடமாயினும் சூரியனை அடிப்படையாகக் கொண்டே அமைந் திருக்கின்றன. சூரியன் மீன இராசியில் இருந்து மேட இராசியினுள் புகும் காலமே இந்துப் புதுவருடமாகக் கொள்ளப்படுகின்றது.*

காலத்தைப் போலச் சிறுபோகம், பெரும் போகம் என்ற வசதிகள் அன்று இருந்ததில்லை. பருவகால மழையை நம்பிய பயிர்ச் செய்கையாக நெற்பயிர்ச்செய்கை அமைந்திருந்தது. உழைப்பின் பயனைப் பெற்ற களிப்பில் புதிய நம்பிக்கையாகத் தைத்திருநாளைக் கருதும் வழக்கம் ஏற்பட்டது. இதன் அடிப்படையில் கட்டியெழுப்பப் பட்டதே 'தை பிறந்தால் வழி [illegible] யாகும். இது [illegible]

வருடப் பிறப்பென்பது புதுவாழ்வின் ஆரம்பமாக அமைவது. ஜனவரி மாதத்தின் முக்கியத்துவத்தைக் கருதிய மேனாட்டவர் அதன் முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டனர். இது வணிகப் புத்தாண்டாக (Comm ercial New Year) உலகமக்களால் அனுட்டிக்கப்படுகின்றன. ஆரிய மற்றும் வடமொழிச் செல்வாக்கிற்கு உட்பட்ட நம்மவர் சித்திரைத் தொடக்க நாளைப் புது வருடமாகக் கொள்ளத் தலைப்பட்டனர். இது இந்துப் புத்தாண்டு எனக் கொண்டாடப்படுகின்றது. இந்நிலையில் தமிழ் வருடப்பிறப்புப் பற்றிய பிரக்ஞை தமிழ் ஆர்வலர் மத்தியில் தலையெடுத்தது.

தமிழ் ஆண்டுத் தொடக்கநாள் என்பது திருவள்ளுவர் ஆண்டின் ஆரம்ப நாளே எனத் தமிழார்வலர்கள் பிரகடனப்

ச.லலீசன்
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை.



படுத்தியுள்ளனர். 1921 ஆம் ஆண்டில் தமிழாண்டு பற்றிய எண்ணம் உருவானது. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனக் கொள்ளப்படுகின்ற மறைமலையடிகள் தலைமையில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி ஆய்வு மேற்கொண்ட தமிழறிஞர்கள் திருவள்ளுவர், இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன் பிறந்தவர் என முடிவு கட்டினர். திருவள்ளுவர் பெயரால் ஆண்டுகளைக் குறிப்பிடலாம் எனவும் முடிவெடுத்தனர். இவ்வாறு எடுக்கப் பட்ட முடிவை 1971ஆம் ஆண்டில் தமிழக அரசு ஏற்றுக் கொண்டது. ஆயினும் ஆரிய ஆதிக்கம், தமிழ்ப் புத்தாண்டு பற்றிய உணர்வெழுச்சிக்குப் போதிய ஊக்கத்தைக் கொடுத்ததாகத் தெரியவில்லை. திருவள்ளுவர் ஆண்டுக் கணக்குப்படி பார்த்தால் இன்று தி.பி. (திருவள்ளுவரின்பின்) 2042 ஆம் ஆண்டின் முதல் நாளாகும். சூரிய இயக்கத்தின் அடிப்படையிலேயே காலக்கணக் கீடு அமைவதால் ஒருமாதம் என்பது ஒரு இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் கால அளவாக அமைகிறது. இந்து வருடமாயினும் தமிழ் வருடமாயினும் சூரியனை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றன. சூரியன் மீன இராசியில் இருந்து மேட இராசியினுள் புகும் காலமே இந்துப் புதுவருடமாகக் கொள்ளப்படுகின்றது. தமிழ்ப் புதுவருடமும் சூரியனை அடிப்படையாகக் கொண்டதே.

மாதங்களை,நாள்களைத் தமிழ்ப் பெயரால் அழைக்கும் முறைமை பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். தை தொடக்கம் மார்கழி வரையுள்ள மாதங்கள் முறையே சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை என அழைக்கப்படுகின்றன. ஞாயிறு முதல் சனி வரையான நாள்கள் முறையே ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி என அமையும்.

புதிய காரியத் தொடக்கத்திற்கு தை மாதத்தைக் கொள்வதும் சித்திரையை விலக்குவதும் நம்மவர் மரபு. இது தமிழ்ப் புத்தாண்டின் பொருத்தப்பாடு பற்[illegible]கான முக்கிய ஆதாரமா[illegible]

### தைமாதச் செயற்பாடுகள்

தை மாதச் செயற்பாடுகளில் போகிப் பண்டிகை, சூரியப் பொங்கல், தென்புலத்தார் வணக்கம், பட்டிப் பொங்கல், காணும் பொங்கல், ஜல்லிக்கட்டு, தைப்பூசம் போன்றவை முக்கியமானவை. தமிழகத்தில் இச்செயற்பாடுகள் அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன எனினும் ஈழத்தில் இவற்றுள் சிலவே வழக்கில் உள்ளன. இப் பண்டிகைகளின் உள்ளீடாக நம்முன்னோர் கருதிய செயற்பாடுகளை நினைத்துப் பார்ப்பதும் இத் தினத்திற்குப் பொருத்தமானதே.

### போகிப் பண்டிகை

ஜப்பானியர் அறிமுகப்படுத்திய 5 எஸ் முகாமைத்துவம் உலகளாவிய ரீதியில் பிரபலமானது. இதன் முதலாவது எஸ்,செய்றி என்பதாகும். தேவையற்ற பொருள்களை அகற்று தலையே இது குறிக்கிறது. மார்கழி மாதத்தின் இறுதி நாளில் போகிப் பண்டிகை என்ற பெயரில் துப்பரவாக்கல் தொழிற் பாட்டை நம்முன்னோர் மேற்கொண் டனர். உள்ளத்திலும் உடற்சூழலிலும் உள்ள வேண்டாதவைகளை நீக்கும் செயற்பாடு இங்கு இடம் பெறுகின்றது. இதனை ஆரியப் பண்டிகையாகவே

*இக் காலத்தைப் போலச் சிறுபோகம், பெரும் போகம் என்ற வசதிகள் அன்று இருந்ததில்லை. பருவ கால மழையை நம்பிய பயிர்ச் செய்கையாக நெற்பயிர்ச் செய்கை அமைந்திருந்தது. உழைப்பின் பயனைப் பெற்ற களிப்பில் புதிய நம்பிக்கையாகத் தைத்திருநாளைக் கருதும் வழக்கம் ஏற்பட்டது.*

கொள்வர். போகி என்பது இந்திரனுக்குரிய பெயர் ஆகும். ஆயினும் தமிழர் தம் விவசாய விருத்திக்காக இந்திரனை வணங்கும் முறையாக இதனை மிக நீண்ட காலமாகக் கைக்கொள்கின்றனர்.

### சூரியப் பொங்கல்

தமிழரது நன்றி உணர்வை வெளிப்படுத்தும் நிகழ்வாக இதனைப் பார்க்க முடியும். புதுப்பானையில் புதுப் பச்சையரிசியில் பொங்கும் பொங்கல் புத்தின்பத்தை அளிக்கவல்லது. கோலமிடுவதில் இருந்து படையலிடுவது வரை அரிசிப் பண்பாட்டிற்கு முதன்மை வழங்கி அதன் விளைச்சலுக்குக் காரணமாக இருந்த சூரியனை வணங்குவதாக இந் நிகழ்வு அமைகின்றது. பொங்கல் இன்பத்தைப் பொங்க வைப்பதாகையால் வருடப்பிறப்பின் தொடக்கத்தைப் பொங்க லிட்டு வரவேற்பது சிறப்பானதாகும்.

### தென்புலத்தார் வணக்கம்

பொங்கல் நாளன்று தென்புலத்தார் வழிபாடு மேற்கொள்ளப்பட வேண்டும். ஏர்த் தொழிலைச் சந்ததி வழியாகத் தந்த முன்னோரை நன்றியுடன் நினைவு கூரும் செயற்பாடாக இது அமையும். சிலர் ஊன் உணவுகளைப் படைக்கும் வழக்கத்தையும் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலும் மாலை வேளைகளிலேயே இப்படையல் செய்யப்படும்.

(VIII F ஆம் பக்கம் பார்க்க..)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சத்தியம் சாத்தியமாகட்டும்....

''பாவம் அந்த மனுசன் கனநேரமாய் அலைஞ்சு திரியுது .... அந்த அலுவல் இன்றைக்காவது முடிச்சுப் போட வேணுமெண்ட ஆதங்கத்துடன்....'' ''லீவு எடுத்து வந்திருக்கிறன்; எனக்கு இன்றைக்காவது 'மோட்டசைக்கிள் ராண்ஸர் போம் தாங்கோ'' என்ற கோரிக்கையுடன் அந்தப்பிரதேச செயல கத்தில் கால்கடுக்கக் காத்திருக்கிறார்.

''ஐயா இஞ்ச ராண்ஸர் போம்'' முடிஞ்சுது. நல்லூர் டி.ஸ். ஒவ்விசிலே கேட்டுப் பாருங்கோ...'' அந்தப்பதிலை ஏந்தியவாறு அங்கு போறார் அந்தப் பெரியவர்.

அங்கும் 'போம்' முடிஞ்சுதாம் கச்சேரி யிலே கேட்டுப் பாருங்கோ.......

விறு-விறுவெனக்..கச்சேரியை நோக்கி ஓடுகிறார்....

அங்கு போனதும் அந்தப் பெரியவர் திகைத்துப் போனார்.

மோட்டார் திணைக்கள அலுவலகத்தைச் சுற்றி ஏராளமாகச் சனக்கூட்டம். இருப்பினும் அங்குள்ள அதிகாரிகள் தம்மால் முடிந்த வரை தாராள மனப்பாங்குடன் சேவைபுரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைத்து அவர் மனதுக்குள் புளகாங்கிதம்.....

அங்கு நிற்கின்ற சனக்கூட்டங்களையெல்லாம் பொருட்படுத்தாது... ஒருமாதிரி நைஸாக நுளைந்து பெரிய அதிகாரியொருவரைச் சந்தித்து.....

''ராண்ஸர் போம் எடுக்கலாமோ?'' என்று கேட்டார்..

அந்த அதிகாரியும் வேலைப்பளுவினால் அவர் மீது சீறிச் சினக்காமல் ....

''இஞ்ச ராண்ஸர் போம் இப்ப கொடுக்கிறேல்ல. எல்லாம் டி.எஸ். ஒவ்விசிலதான் எடுக்கிறது. மக்களை அலைக்கழிக்கக்கூடாதென்று சில சேவைகளை விஸ்தரிச்சி ருக்கிறம் '' என்று தந்திரமாக நிலைமையை எடுத்துச் சொன்னார்.




''இரண்டு டி.எஸ். ஒவ்விசுக்கு இப்ப ஒரு கிழமையா.. திரியுறன்.. போம் முடிஞ்சுது என்று சொல்லுறாங்கள்..'' என்று மீண்டும் பரிதாபத்துடன்... கூறினார் அந்தப் பெரியவர்.

''டி.ஸ்.ஒவ்விசில போம் முடிஞ்சா..அங்கிருக்கின்ற அதிகாரிகள் கச்சேரிக்கு வந்து எடுத்துக் கொண்டுபோக வேண்டியதுதானே...'' என்று... அந்த உயர் அதிகாரி கூறியது என் காதில் கேட்டது....

பார்த்தீர்களா? சம்பவத்தை......

இப்படிப் பல மக்கள் சுலபமாகப்பெற வேண்டிய தமது தேவைகளைச் சுற்றிச் சுழன்று, அலைஞ்சு திரிஞ்சு பெற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையினைச் சில அதிகாரிகள் ஏற்படுத்திவருகின்றனர்.

**கவிநேசன்**

ஆனால்....

புத்தாண்டு- மலர்ந்திருப்பதால் மக்கள் சேவைக்கு மகத்தான பங்களிப்பு நல்குவோம் என்ற சிந்தனையுடன் ''25/2010 அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் கடந்த 3 ஆம் திகதி திங்கள்கிழமை முற்பகல் 9 மணியளவில் அனைத்து அரச திணைக்களங்களிலும் மனிதநேயத்துடன் மக்களுக்குச் சேவையாற்றுவோம்''... என்று சபதம் எடுத்து... பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

இதைப்பற்றியும் எனது நண்பன் ஒருவனிடம் கூறினேன்.

''அரச உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணியாற்றுபவர்கள் அவ்வளவும்தான்... அதைப்போலதான் இந்த மனிதநேயப்பணிகளை முன்னெடுப்பு... என்ற சபதம்...'' என்று நக்கலாகக் கூறினான்.

சுயமாக எதையும் செய்பவர்கள் இல்லைத்தானே ! சுற்றறிக்கையின் பிரகாரம் சுழன்று கொள்பவர்கள் என்று எனக்குள்ளும் நினைத்துக் கொண்டேன்.

இனிமேலாவது மக்களின் பணிகளில் அதிகாரிகள் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள். பாவம்....மக்கள் ''நேரடியாகத் தொடவேண்டிய மூக்கை ஏன் சுற்றி வளைத்துத் தொட வைக்கிறீர்கள்?''

சும்மா சுமக்க வேண்டிய பாரத்தை ஏன்? நனைச்சுச் சுமக்க வைக்கிறீர்கள்? உங்கள் மனிதநேய சேவையென்பது ...வெறும் சத்தியப்பிரமாணத்தில் மட்டுமா? செயலில்........ சாத்தியமாகாதா?

# அழிவை நோக்கிச்



விடைபெற்ற 2010ஆம் ஆண்டு, என்றுமில்லாத வகையில் உலகம் காட்டுமிராட்டித்தனம் நிறைந்த தாகப் போய்விட்டதற்குச் சான்று பகர்கின்றது. இதனால் மனிதராகிய எம்மத்தியில் சந்தோசம் தோன்று வதற்குப் பதிலாகச் சங்கடம் தோன்று வதற்குத்தான் இடமுண்டு.

ஐந்தறிவு மிருகங்களில் இருந்து மனிதர்களை வேறுபடுத்திய முக்கிய காரணிகளிலொன்றான மனிதாபிமானம் தொலைந்து மனிதர்கள் மனிதத்தன்மையை வேகமாக இல்லாதொழித்துக் கொண்டிருப்பது ஒரு புறம் நடக்க, இயற்கையும் தன் கோரமுகத்தைக் காண்பித்து ருத்ரதாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது.

இயற்கையின் சீற்றத்திற்கும் மனிதர்களின் நடவடிக்கைகளே மூலகாரணமாக இருப்பது நிரூபணமாகியிருப்பதே சங்கடத்துக்கு வழிகோலுகின்றது.

இன்றைய நிலையில் பெரும்பாலான நாடுகள் தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்வதற்காக மனிதர்களைக் காவுகொடுக்கவே தயங்காத நிலையில் இயற்கையின் கதியை எண்ணினால் கவலைகொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

ஆனால் இயற்கையை மனிதன் தன்செயற்பாடுகளால் அழிக்க முனையும்போது மனிதர்களது வேகத்திற்கு மேலாகப் பன்மடங்கு அசுரத்தனமாக இயற்கை பதிலடி கொடுத்துவருவதற்கு ஆதாரம் தேடுவதற்கு வரலாற்றில் நாம் பலவருட காலத்திற்குப் பின்னோக்கிப் பயணிக்க வேண்டியதில்லை.

எம்மிடமிருந்து அண்மையில் விடைபெற்ற 2010ம் ஆண்டிலேயே இதற்கான பதிலைத் தேடிவிட முடியும்.

பூமி அதிர்ச்சிகள்- வெப்பக் கதிர்வீச்சுக்கள் -வெள்ள அனர்த்தங்கள் -எரிமலைச் சீற்றங்கள்- அசுர சூறாவளிகள் -கடும்பனிப்புயல் -நிலச்சரிவுகள் -வரட்சிகள் என இயற்கையின் கோரத்தாண்டவத்தில் 2010ஆம் ஆண்டில் ஆகக்குறைந்தது 5 லட்சம் மக்கள் கொல்லப்பட்டதான, உறுதிப்படுத்தப்பட்ட சான்றுகள் வெளியாகியுள்ளன


கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலான காலப்பகுதியில் கடந்த வருடமே மிகவும் பயங்கரமான ஆண்டாக அமைந்ததுடன் கடந்த 40 வருடங்களில் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட மக்களின் ஒட்டுமொத்தத் தொகையிலும் பார்க்க அதிமான மக்கள் 2010ஆம் ஆண்டிலே் இயற்கை அனர்த்தத்தினால் கொல்லப்பட்டுள்ளதாக அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது

இயற்கை அனர்த்தங்கள் எதிர்பாராத வகையில் நிகழும் போதிலும் அதனால் ஏற்படும் மோசமான அழிவுகளுக்கு அனேக சந்தர்ப்பங்களில் மனிதர்களையே குறைகூறவேண்டும் என விஞ்ஞானிகளும் அனர்த்த நிபுணர்களும் சுட்டிக் காட்டுகின்றனர். இதற்கு உதாரணமாக ஹெய்ட்டி மற்றும் சிலி ஆகிய நாடுகளில் கடந்தாண்டு இடம்பெற்ற பூகம்பங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஹெய்ட்டியில் 2010 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற பூகம்பத்தில் இரண்டு லட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அதைவிட அளவில்பெரிய - 500 மடங்கிற்கும் - அதிகமான பெரிய பூகம்பம் சிலியில் இடம்பெற்றபோது அதில் 1000 இற்கும் குறைவானவர்களே கொல்லப்பட்டிருந்தனர்.

திட்டமிடப்படாத வகையில் அமைந்திருந்த அடர்த்திமிக்க மக்கள் குடியிருப்புக்களும் மிகவும் மோசமான முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டடங்களுமே

# க ர்ந ண



கர்நாடக சங்கீத இசைத் துறையில் எந்தத் துறைபோன விற்பன்னராகட்டும், ஆரம்பகட்ட இசைப்பயிலுனராகட்டும், எல்லோரது வாய்களிலும் உச்சரிக்கப்படும் ஒரு வார்த்தை 'கணக்கு வழக்கு' என்னும் வார்த்தை. சில கலைஞர்களைப் பார்த்து இவர் கணக்கு வழக்குகளில் மேதை என்கிறார்கள் சில கலைஞர்களைப் பார்த்து 'இவருக்குக் கணக்கு வழக்குக் காணாது' எனக் கணிக்கின்றனர். சில கலைஞர்களைப் பார்த்து இவருக்கு கணக்கு வழக்குகள் நன்குபுரியும். ஆனால் (Practical) இல்லை என்கின்றனர். இந்தக் கட்டுரையினது நோக்கம், கணக்கு வழக்கு என்றால் என்ன? கர்நாடக சங்கீத அவைக்காற்றுகையில் (performance) அதன் முக்கியத்துவம் என்ன? எல்லோரும் அறிந்த எமது ஈழத்து வித்துவான்கள் எவ்வாறு கணக்கு வழக்குகளில் சிறந்து விளங்கினார்கள்,எமது வளரும் இளங்கலைஞர்கள் கணக்கு வழக்குகளில் சாதனை பண்ண என்ன செய்ய வேண்டும்? என்பதுபற்றி இந்தக் கட்டுரையின் கொள்ளளவுக்கு ஏற்ப சிறு குறிப்புக்கள் வரை வதேயாகும். ஆழம் காணமுடியாத இந்த விடயத்தை விரிவாக எடுத்துக்கூற ஆரம்பிப்பின்,வாழ் நாளும்,தாள்களும் போதாது என்பேன்.

தமது தவில் வாசிப்புத் திறனினால் எமது ஈழவள நாட்டிற்குப் பெரும்புகழ் ஈட்டித்தந்த லயஞான குபேர பூபதி அளவையூர் உ.தட்சணாமூர்த்தி அவர்களைக் கணக்கு வழக்கில் புலி எனப்போற்றுவர். இணுவையூர் தவில் இசைச்சிகரம் திரு.N.R.சின்னராசா, அளவையூர் N.K.பத்மநாதன் (நாதஸ்வரம்), கோண்டாவில் M.பாலகிருஷ்ணன் (நாதஸ்வரம்) ஆகியோருடன் தற்சமயம் வாழும் கலைஞர்களாகிய கோண்டாவில் திரு. V.K.பஞ்சமூர்த்தி,திரு. K.R.சுந்தரமூர்த்தி, கலாநிதி திரு.பஞ்சாபிகேசன், திரு.பி.நாகேந்திரன் ஆகியோர் நாதஸ்வரத்திலும், இணுவையூர் திரு.உ.இராதாகிருஷ்ணன் (வயலின்) திரு.K.R. புண்ணியமூர்த்தி(தவில்) ஆகியோரும் கணக்கு வழக்குகளில் சிறந்தோராய்ப்

# க னகரும் ன சங்கதியும்



பொன்.சுகந்தன்

**வெளிநாட்டுப் பிள்ளைகள் காசு அனுப்ப**
**வேலையும் இல்லாதே விழலும் அளக்க**
**புளியமரக் கூட்டத்தில் கலந்து கொண்டு**
**புதுக்கதைகள் பிறர்பாட மகிழ்ந்து பேசி**
**களிப்போடு கண்ணுறங்கித் துயிலும்**
**கொள்ள**
**கள்ளடித்தே மிதிவண்டி மீது வந்த**
**களியாட்டப் பொடியளுமோ கீழே கிடந்த**
**கனகரோடு மோதுண்டு விழுந்தார்**
**வெருண்டு!**

***(அடுத்த சனியும் கனகர் கலக்குவார்...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ச் செல்லும் உலகில் நம் வகிபாகமென்ன?

ஹெய்ட்டியின் பயங்கர அழிவுகளுக்கு வித்திட்டதாகச் சொல்லப்படுகின்றது. அதேவேளையில் சிலியில் மக்கள் தொகை அடர்த்திகுறைவாகக் காணப்பட்டமையும் பாதுகாப்பான முறையில் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களுமே மிகக்குறைவான இழப்புக்களுக்குக் காரணமென விஞ்ஞானிகளும் அனர்த்த நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர்.

பொருளாதார வளர்ச்சி என்பதையே மையமாகக்கொண்ட மனிதர்களின் கட்டற்ற வேட்கையின் விளைவால் உருவான பூகோள வெப்பமயமாதல் காரணமாகப் பூமியின் காலநிலை வழமையிலும் பார்க்க முரணானதாக மாறிக்கொண்டிருப்பதாகப் பூகோள விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதனால் கடுமையான காலநிலை மாற்றங்கள் கடந்தாண்டில் பதிவு செய்யப்பட்டன. இதனால் வெப்பக் கதிர்வீச்சு மற்றும் வெள்ளப்பெருக்கு என்பவை ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

கடந்தாண்டு கோடைகாலத்தில் ரஷ்யாவில் ஏற்பட்ட கடுமையான வெப்பக்கதிர்வீச்சில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர் . ரஷ்யாவில் ஏற்பட்ட வெப்பக்கதிர்வீச்சு 111 டிகிரி வெப்பம் கொண்டதெனவும் இது ரஷ்யாவின் வரலாற்றில் மிகமோசமானதென்பதுடன் நூறாயிரம் ஆண்டுகளுக்கு ஒருதடவையே இவ்வாறான அசாதாரணமான வெப்பக்கதிர்வீச்சு நிகழ்வதாகவும் வரலாற்றுச்சான்றுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் பூகோள வெப்பமயமாதல் காரணமாகத் தற்போது இப்படியான நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெறும் நிகழ்வுகளாக மாறியிருப்பது கவலைக்கிடமானது. இது மட்டுமன்றி 18 நாடுகளில் கடந்தாண்டிலேயே அந்த நாடுகளின் வரலாற்றில் வெப்பமான நாள்கள் பதிவாகியிருக்கின்றன. கடந்தாண்டில் ஏற்பட்ட தனியொரு வெப்பக்கதிர்வீச்சுபுயல் காரணமாக 17000 பேர் வரையில் கொல்லப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை கடந்த 15 ஆண்டுகாலத்தில் உலகில் நிகழ்ந்த ஒட்டுமொத்த விமான விபத்துக்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிடவும் அதிகமெனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. கடந்தாண்டு ஒரு பக்கம் வெப்பக்கதிர்வீச்சென்றால் மறுபக்கம் பாகிஸ்தானில் இடம்பெற்ற வரலாறுகாணாத வெள்ளப்பெருக்கில் 62,000 சதுரமைல்கள் [illegible]தேசம் மனிதர்கள் பிரவேசிக்கமுடியாதவாறு வெள்ளத்தால் துண்டாடப்பட்டது. இலங்கையின் பரப்பளவை விடவும் இரண்டுமடங்கிற்கு அதிகமான பிரதேசம் பாகிஸ்தானில் வெள்ளத்தால் துண்டாப்பட்டதென்றால் வெள்ளத்தின் பரிமாணத்தை விளங்கிக் கொள்ள முடியும் .

மனிதர்கள் ஏற்படுத்தும் அழிவுகளால் இயற்கை சீற்றமெடுத்த மேற்குறிப்பட்ட நிகழ்வுகள் எமது நாட்டுக்கு வெளியில் இடம்பெற்றவை என்பதால் அவற்றின் தாக்கங்களை விளங்கிக் கொள்ள முடியாதவர்கள், கடந்தாண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி இரவுமுதல் அதிகாலை வரையில் கொழும்பில் பெய்த கடும் மழைவீழ்ச்சியையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் எண்ணிப்பார்த்தால் காத்திருக்கும் அபாயத்தின் பயங்கரம் புரிந்துவிடும்.

ஒருநாள் பெய்த மழையிலேயே நாடாளுமன்றம் உட்படத் தலைநகரின் பலபகுதிகள் மூழ்கிவிட்டதென்றால் பாகிஸ்தானில் பெய்ததைப் போன்று தொடர்ச்சியாக வாரக்கணக்கில் மழைபெய்தால் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பது புலனாகிவிடும்

தனிமனிதர்களாகிய நாம் பொலித்தின் பாவனையைக் குறைத்தல், வீடுகளிலும் நாம் வாழும் சூழலிலுமுள்ள கழிவுநீர் வழிந்தோடும் பகுதிகளை நேர்த்தியாக வைத்திருத்தல் போன்ற சிறிய செயற்பாடுகளூடாகவே சுற்றாடலைச் சிறப்பாக வைத்திருப்பதற்குப் பங்களிக்கமுடியும்.

நாம் வாழும் இந்த உலகம் மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாக வேகமாக அழிவுப் பாதையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பதனை உணர்ந்து அதனைத் தவிர்க்க முடியாவிட்டாலும் தாமதிப்பதற்கு எம்மால் செய்யக்கூடிய சிறிய செயற்பாடுகளையேனும் செய்தாக வேண்டும் என்பதைச் சிந்தனையில் நிறுத்திச் செயற்படவேண்டும்.

# புரியாத புதிரும் சரியான பதிலும்

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

காலைப்பொழுதில் நேரமோ ஆறரை மணி கடந்த நிலையில், வழமையான 753 இலக்கப் பேருந்தில் இருக்க இடம் கிடைத்தது, மூடியிருந்த ஜன்னல் கதவைத் திறந்து விட்டு, மப்பும் மந்தாரமுமான காலநிலையில் வேகமாக வரும் குளிர்காற்றினை உள்ளுக்கு இழுத்து சுவாசித்தபடி நவாலிப் பாதையில் வெளியே நீண்டு கிடக்கும் பச்சை வயல்வெளியினை பார்த்து ரசித்தபடி பயணிப்பது, இரசிக்கத் தெரிந்தவர்களுக்கு உற்சாகமான விடயம் தான்.

இன்றும் வழமைபோல் வேலைக்கு சென்று கொண்டிருக்கிறேன். பயணச்சீட்டு எடுத்தாகிவிட்டது. இன்று திங்கட்கிழமை 'பெரிய டொக்டர் வரும் நாள். புதிதாக நோயாளர்கள் நேற்று வந்திருந்தால் இன்று குறைத்துக் குறிப்பெடுத்து வைப்பது உதவிகரமாக இருக்கும். நான் வழமைபோல் ரசிப்போடு சிந்தனையில் இருந்ததால் பக்கத்தில் ஒருவர் இருப்பதை இப்போதுதான் உணர்ந்தேன். வழமைபோல இப் பேருந்தில் அனுபவந் தான் பரஸ்பரம். வெறும் புன்முறுவலுடன் எமது ''தொடர்பாடல்'' இருந் தது. இன்று, கதை தொடங்க... பேருந்து வேகம் பிடிக்கத் தொடங்கியது.

''உங்களை இதே பஸ்சிலதான் காணுறனான், கதைக்க வேணு மெண்டு நினைக்கிறது... சரிவரேல்லை...' நீங்கள் எங்கே வேலை செய்யிறியள்? சுன்னாகத்தில் இறங்கி தெல்லிப்பழைக்குப் போற பஸ்சில் ஏறிப் போறதைக் கண்டனான்.'' நான் பதில் சொல்வதை கேட்பதற்கு அவர் ஆர்வத்துடன் இருப்பது தெரிந்தது. அவருக்கு வயது முப்பதுக்குள் இருக்கும். அதிகமில்லை.

நான் வேலை செய்யும் இடத்தையும் தொழிலையும் கூறினேன். அவர் சற்று, துள்ளலுடன் பின்னால் சாய்ந்து கண்களை அகல விரித்து ஆச்சரியம், அதிர்ச்சி கலந்த முகபாவனையோடு கேட்டார்.

எ..ன்..ன.... அங்கேயோ வேலை செய்யிறியள்? உங்களுக்கு பயமில்லையோ? அங்க இருக்கிறவை மூளை குழம்பின ஆக்களெல்லே. ஏதாவது செய் தெல்லோ போடுவினம்...

பேருந்து பள்ளத்தில் விழுந்து அனைவரையும் குலுக்கி பின் விரைந்து ஓடியது. நான் மனதைத் தளர்த்திக் கட்டுப்படுத்தினேன். அவருடைய வினாவுக்கு - அது அவருடையதல்ல. எமது சமூகத்தில் எழுந்து வருகின்ற வினா... என்னால் விளங்கிக்கொண்ட அளவுக்கு விடை சொல்லவேண்டும்.

ஏன் நீங்கள் அங்க வேலை செய்யிறது பயமெண்டு நினைக்கிறியள்? அவரிடம் வினாத்தொடுத்தேன். மூளை பிசகின ஆக்களோட இருக்கிறது பயம்தானே; உந்த ஆக்கள் கதைக்கிறவை பயங்கரமாய் அவையளுக்குக் கோபம் வருமாம். வந்தா அடக்கேலாதாம், அடிப்பினமாம், கையில கிடைச்சதாலை வெட்டியும் போடுவினமாம்... மூட்... மாறிக் கொண்டு இருக்குமாம் உந்தச் சினிமாப் படங்களிலையும் பார்த்தனான்... மோசமாய்த்தான் காட்டுறாங்கள்.

''அட அதுவோ பிரச்சினை ... உங்களுக்கு ஒருக்காலும் கோபம் வரேல்லையோ, மூட் மாறிப் போறதில்லையோ...

எப்பவும் ஒரே மாதிரி இருக்கிறதில்லை. சில நேரங்களில் மூட்மாறிப் போறதுதான். அண்டைக்கு வேலை செய்யிற இடத்தில ஒருத்தர் தேவையில்லாமல் கதைச்சார், சரியான கோபம் வந்தது. கைவைக்க வேணு மெண்டு யோசிச்சனான்.

அண்டைக்கு உங்களுக்கு கோபம் வந்தது. அடிக்க வேணுமெண்டு நினைச்சிருந்தன் என்கிறீர்... இப்ப நான் உம்மை மூளை பிசகின ஆள் எண்டால் ஒத்துக் கொள்ளுவீரா? அவர் சற்று மௌன மாகிப் பின் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று தலையாட்டினார். ''சரி பிறகு வந்த கோபத்திற்கும் அடிக்க வேணுமெண்ட செய்கைக்கும் என்ன நடந்தது?

''பிறகென்ன யோசிச்சுப் பார்த்தன். அவர்தான் விளங்காத் தன்மையில கதைக்கிறார். நானும் கோபப்பட்டுக் கதைச்சா இரண்டு பேருக்கும் பிறகு வித்தியாசமில்லாமல் போயிடும்...அதோட பேசாமல் விட்டிட்டன்'' இப்ப என்ன நினைக்கிறியள்?

மனிதருக்கு வாற இயல்பான விசயங்கள் எல்லோருக்கும் பொதுவாகத்தான் இருக்கு.

பார்த்தீரே உமக்கு கோபம் வந்தபிறகு யோசிச்சு உப்பிடி செய்யக் கூடாதெண்டு தீர்மானிச்சு... பிரச்சினை வராமல் தடுத்துப் போட் டீர்... நீங்கள் சொல்கின்ற மனிதருக்கும் இதுதான் நடக்குது... உங்களுக்கு நான் செய்யிறது பிழையெண்டு எண்ண உள்ளுணர்வு சரியாக இருக்குது. விளக்கம் தெரியுது. சரி, பிழை விளங்கிக் கொள்ளுது. தப்பித்துக் கொள்கிறம்.. பாவம் இந்த மனிதர்களுக்கு இந்த விடயம் பிரச்சினைக் குரியதாகக் காணப்படுகுது. இதில நீங்கள் சொல்லுற மாதிரி எல்லாருமே மூர்க்கமான மனிதர்களாக இல்லை. மிதமான உளநோய் உள்ளவர்களாக வும், தீவிர உளநோய் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். மருத்துவச் சிகிச்சையும் உளவளத் துணையும் தேவைக்கேற்ப அளிக்கப்படுகுது.

''பேருந்து இப்போது மருதனார்மடச் சந்தியில் நின்றது. இப்ப... என்ன... சொல்லலாம் என நினைக்கிறியள்.'' இப்ப விளக்கம் தெரியுது. இந்த மனிதர்கள் தொடர்ந்து மருந்துக் குளிசைகள் பாவிச்சுக் கொண்டு இருக்க வேணுமோ. ஓம் மருத்துவர் சொன்னபடி மருந்து மாத்திரைகள் பாவிச்சுக் கொண்டுதான் இருக்கவேணும். இவைதான் நோயினைக் கட்டுப்பாடாக வைத்திருந்து வாழ்க்கையை மேலும் கொண்டு செல்ல உதவும்.

தொடர்ந்து இந்தச் சேவையில் இருக்கிற படியா நீங்கள் இப்ப ஒரு பயமும் இல்லாமல் சேவை செய்யிறியள்? எனக்கும் பயமிருக்கு. எதுக்கு ஐயா? அங்கே வார்ட்டில இருக்கிற ஆக்களைவிட வெளியில இருக்கிற ஆக்களை நினைச்சாத்தான் பயமாகக் கிடக்கு. ராவில படுத்த பிறகு எந்த நேரத்தில என்ன நடக்குமெண்டு, என்ன செய்வினம் எண்டு தெரியாமல் கிடக்கு. நான் இறங்க வேண்டிய இடமும் நெருங்கியது.

# ...ர்நாடக சங்கீதக் கலைஞர்களும் ...ணக்கு வழக்குகளும்

யாழ்ப்பாண நல்லூர் G.கண்ணதாஸ் B.FA

புகழப்படுகின்றனர். இன்னும் புதிது புதிதாக நிறைய இளம் தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் தமது தேடல், ஆர்வம்,துடிப்பான வாசிப்பு மூலம் கணக்கு வழக்குகளில் சாதித்து வருகின்றனர். இன்னும் தென்னிந்தியா, அகில உலகமெங்கும் அனேக உன்னதமான கலை ஞர்கள் தமது இசைவெளிப்பாடுகளில், கணக்கு வழக்குகளில் அரும்பெரும் சாதனை புரிந்து வருகின்றனர்.குறிப்பிட்டளவில் அவர்களினது பெயர் விவரங்களையும் பின்னர் சேர்த்துக் கொள்வோம். அதுசரி, கணக்கு வழக்கு என்றால் என்ன? என்று சொல்லப்புறப்பட்டு விட்டு அதில் சாதிப்பவர்கள் பற்றியும், அதிலும் குறிப்பாக தவில்நாதஸ்வரக் கலைஞர்களையே உதாரணமாகச் சொல்கிறேன் என்று எண்ணுவீர்கள். அதற்கு விடை இந்தக் கட்டுரையின் பின்னால் உண்டு. சங்கீதத்திற்கு 'சுருதி மாதா, லயம் பிதா' என்று சொல்வார்கள். சுருதியானது எவ்வாறு தனது ஸ்வர, ஸ்தாயி அமைப்பில் அமைந்த ஆதார ஸ்சுருதி அமைப்பில் இசையினது ஒலி அளவினைச் சீராகப் பேணுகிறதோ, அதேபோன்று லயமானது தாள அமைப்புக்களினது, தாள தசப்பிராணன் களினது அடிப்படையில் இசையின் கால அளவினைப் பேணுகிறது. ஒரு தேர்ந்த இசைக்கலை விற்பன்னன் இந்த தாள, லய அறிவை வைத்துக் கொண்டு, ஜதி உருவத் திலோ,ஸ்வர உருவத்திலோ புதியன பலவற்றை உருவாக்குவதையே லய விவகாரங்கள் என் கின்றோம். இந்த லய விவகாரங்களே 'கணக்கு வழக்குகள்' என அழைக்கப்படுகின்றது. ஆகவே, கணக்கு வழக்குகள் என்றால் 'தாளங்களினது முழுஅறிவையும், தாள தசப்பிராணன்களினது தெளிவையும் பெற்ற ஒருவரினால்,சிறந்த நுணுக்க மான கற்பனைத் திறனுடன், வாய்ப்பாட்டு,வாத்திய, நடனத் துறைகளில் செய்யப்படும் லய நுணுக்கங்கள் என வரை யறுத்து விடலாம். தாள, தசப் பிராணன்கள் என்பது காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், களை , ஜதி, ஜாதி, கதி, பிரஸ்தாரம் ஆகிய பத்தும் ஆகும். இவை தாளத்தினது பத்து உயிர் நிலைகளாகும். கணக்கு வழக்குகளிற் சிறந்து விளங்கு வதற்கு, இவைகளிற் தெளிந்த அறிவும் என்றும் இடையறாத ஆர்வம், தேடல், பயிற்சி, அர்ப்பணிப்பு என்பன மிகமுக்கியமானதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுணர்வுக்கு முதன்மை வழங்கும் தைப் பொங்கல்



(VIII C ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மாட்டுப்பொங்கல்-பட்டிப் பொங்கல்**

மாடு என்பது முற்காலத்தில் பெரும் செல்வமாகவே கொள்ளப்பட்டது. மாடு என்பதற்குச் செல்வம் என்று ஒரு பொருள் உண்டு. முற்காலக் கொள்ளையர்கள் மாட்டைக் கூட்டமாகக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

வாழ்வின் வளத்திற்கு ஆதாரமாக அமையும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வாகப் பட்டிப் பொங்கல் அமைகின்றது. தற்காலத்தில் பசுவதை மேலோங்கியுள்ளது. மனுதர்ம சாஸ்த்திரங்கள் பசுவதையை மாபாதகமாகக் கருதின. தமிழர் காப்பியமாகிய பெரியபுராணத்தின் ஆரம்பத்தில் பசுவதைக்குப் பரிகாரம் நரபலியே எனக் காட்டப்படுவதும் இங்கு சிந்திக்கத்தக்கது.

நம்மவர் வாழ்வியலில் மாடு பெற்ற முக்கியத்துவத்தையும் நன்றி வெளிப்பாட்டையும் இவை சுட்டி நிற்கின்றன.

**ஜல்லிக்கட்டு**

மஞ்சிவிரட்டு, காளை அடக்கல், ஜல்லிக்கட்டு என்ற பெயர்களால் அழைக்கப்படும் வீரவிளையாட்டு காளை மாட்டுடன் நாம் கொண்டிருந்த உறவுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. தமிழகத்தில் இவ்வீர விளையாட்டு இன்றும் கைக்கொள்ளப்படுகின்றது. நம்மண்ணில் காளைகளுக்கான ஓட்டப்போட்டியே நடக்கின்றது. சவாரி என்ற பெயரில் கிராமங்களில் இது இடம்பெற்று வருகின்றது. சவாரியில் முதன்மை பெற்ற காளைகளின் சொந்தக்காரர், சமூக முதன்மை பெறுவதும் அக்காளைகள் பல லட்சம் ரூபாவுக்கு விலை போவதும் இன்றும் கிராமங்களில் இடம்பெறும் நிகழ்வுகளாகும்.

**காணும் பொங்கல்**

தம்மைப்போன்று மற்றவர்களும் மகிழ்ச்சியில் திளைப்பதைக் கண்டு மகிழ்வதற்காக ஏற்படுத்தப்பட்டதே இச் செயற்பாடு ஆகும். தமிழகத்தில் இது கைக்கொள்ளப்பட்டாலும் ஈழத்தில் இந்நடைமுறை சில பிரதேசங்களிலேயே உள்ளது. அதிலும் குறிப்பாகப் புதிதாகத் திருமணம் செய்த தம்பதியர் கொழுக்கட்டை அவித்து உறவினர் வீடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு ஆசி பெறுவதாக இந்நடைமுறை காணப்படுகின்றது. ஆனால் தமிழக நடைமுறையில் மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் வீடுகளில் இருந்து வெளிவந்து பொது இடங்களில் ஒன்று கூடிப் பொங்கி மகிழும் செயற்பாடும் நிலவுகிறது. காணும் பொங்கலைக் கன்னிப் பொங்கல், பூப் பொங்கல் எனக் கூறும் வழக்கமும் உள்ளது.

> *தைப்பொங்கலுடன்*
> *பட்டமேற்றும் சீசன்*
> *ஆரம்பமாவதும் காலநிலை*
> *மாற் றத்தின் விளைவாகும்.*
> *காற்று வள முள்ள*
> *ஊரவர்கள் பட்டம் ஏற்றும்*
> *போட் டிகளை நடத்துவர்.*
> *கிராம வாழ்வின்*
> *இனிமையை இச்செயற்*
> *பாடுகள் பறை சாற்றி*
> *நிற்கும்.*

**பட்டமேற்றும் சீசன்**

தைப்பொங்கலுடன் பட்டமேற்றும் சீசன் ஆரம்பமாவதும் காலநிலை மாற்றத்தின் விளைவாகும். காற்று வளமுள்ள ஊரவர்கள் பட்டம் ஏற்றும் போட்டிகளை நடத்துவர். கிராம வாழ்வின் இனிமையை இச்செயற்பாடுகள் பறை சாற்றி நிற்கும்.

**தைப்பொங்கல் கண்ட நடைமுறை மாற்றங்கள்**

தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பாகவும் நன்றி வழிபாடாகவும் அமையும் தைப் பொங்கல் நிகழ்வுகளில் நம்மவர்கள் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது. காலத்தின் கட்டாயத்தால் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் நம்மவரின் விழிப்புணர்வின்மையே மாற்றங்களுக்கான அடிப்படையாகும்.

**பொங்கல் தாத்தா**

கிறிஸ்துமஸ் தாத்தாவின் வரவைக் கண்ட இளையோர் பொங்கல் தாத்தா எனப் புதுவகை வேடப் புனைவை மேற்கொண்டு 'குத்துப்பாட்டுகளுக்கு' ஆட்டம் போடுவதுடன் கலக்ஷனில் ஈடுபடும் கலாசாரமும் இன்று சில பிரதேசங்களில் தொற்றிக் கொண்டுள்ளது. இது கட்டற்ற இளையோரின் களியாட்டமாகவே கொள்ளத்தக்கது.

**சமையலறைப் பொங்கல்**

நகர்ப்புற வாழ்வில் ஏற்பட்டுள்ள நிலப் பற்றாக்குறை பொங்கல் செயற்பாட்டை அடுப்படிக்கு நகர்த்தி விட்டது. தொடர் மாடி வீடுகளில் வசிப்பவர்கள் பெரும்பாலும் சமையலறைப் பொங்கலையே மேற்கொள்கின்றனர். இது தவிர்க்க முடியாததே ஆயினும் இதற்குரிய மாற்றுவழிகள் பற்றி இவர்கள் சிந்திக்க வேண்டும்.

**மரபு பேணல்**

வீட்டு முற்றத்தில் பொங்கிப் படையலிடும் போது பாரம்பரிய மரபுகளைப் பேணுவதே நமது இருப்பின் நிலவுகைக்கு வலுச் சேர்ப்பதாக அமையும். குறிப்பாகப் பொங்கலில் ஈடுபடும்போது வேட்டி, சேலை முதலிய ஆடைகளை அணிவதும் பழைய மரபுகளைக் கைக்கொள்வதும் அவ்சியமானது. அடுத்த சந்ததியினர் அனுபவ அறிகையில் பெறும் பாடமாக இவை அமைகின்றன. எனவே இவ் விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டியுள்ளது.

**அலுவலகப் பொங்கல் வைபவங்கள்**

பாடசாலைகள், அலுவலகங்கள் பொங்கல் கொண்டாட்டத்தைப் பெரும்பாலும் பிறிதொரு நாளில் கைக்கொள்ளும் நடைமுறை காணப்படுகின்றது. குறித்த நாளில் வீட்டில் பொங்கிப் படையலிடும் தேவையிருப்பதால் இது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. ஆயினும் கிறிஸ்துவ, இஸ்லாமிய பண்டிகைகள் பதிலீடாக வேறொரு நாளில் கைக் கொள்ளப்படுவதில்லை என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது

**தேசிய விழாவாகும் பொங்கற் செயற்பாடுகள்**

தைப்பொங்கல் நிகழ்வு சமயம் கடந்த நிலையில் நோக்கப்படும் சூழல் தற்போது மெல்ல மெல்லக் கனிந்து வருகின்றது. தமிழ்ப் புத்தாண்டு என்ற உணர்வுடன் சமயம் கடந்த நிலையில் பொங்கலில் ஈடுபடுவோர் பலர் உளர். இவர்களுள் கத்தோலிக்கர்கள் குறிப்பிட்டுக் காட்டத்தக்கவர்கள் இச் செயற்பாடுகள் பொங்கற் பண்டிகையை ஒரு தேசிய விழா என்ற தளத்தை நோக்கி நகர்த்துகின்றது.

தமிழ்ப் புத்தாண்டு என்ற உணர்வுடன் இக்கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்படுவது தமிழை வாழ வைக்கும் செயற்பாடுகளுள் முக்கியமானதாக அமையும். அரசியல் பேதங்களுக்கு அப்பால் தமிழ் என்ற உணர்வொன்றிப்பு நம்மனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தியாக விளங்கும். சூரியனால் அமையவல்ல இச்சக்தியின் எழுச்சி, பொங்கலாகப் புது வாழ்வை ஏற்படுத்தும். புத்தாண்டுப் பொங்கல் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் அல்லவா?


அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஆர்.வி.ஜி மருந்தகம்

ஆங்கில மருந்து வகைகள் ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

R.V.G ஸ்தாபனம்

504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D. முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2129

58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 68.

உளம் கனிந்த தைப் பொங்கல் நல் வாழ்த்துக்கள்

கஜன் குறாப்

காகிதாதிகள், உள்ளூர், வெளியூர் தினசரி, வார, மாத, புதினப் பத்திரிகைகள் மற்றும் அறிவியற் பத்திரிகைகள், தேசியலொத்தர் சபை அபிவிருத்தி சபை ரிக்கற்றுக்கள், பான வகைகள், குளிர்பான வகைகள் விற்பனையாளர்.

76.B, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

எலெக்ரிக்கல்ஸ் பொருள்கள், (பிற்றிங் பொருள்கள்)
வயறிங் வேலைகளுக்கான பொருள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
அனைத்து கொம்பனிகளின் பெயின்ட் வகைகள்
(ஒயில் பெயின்ட், வாட்டபெயின்ட்), அழகுசாதனப் பொருள்கள்
யாவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

கஜமுகன் ஸ்ரோர்ஸ் சொப்

Main Street,
Vankalavady, Velanai.
T.P: 0217903208, 0774010622.

பிரதான வீதி,
வங்களாவடி, வேலணை.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

அற்புதா ரேடிங் கொம்பனி
மலர்ப் பிளேஸ்

சகலவிதமான ஆடம்பரப் பொருள்கள், துவிச்சக்கரவண்டி அதன் உதிரிப்பாகங்கள்
வீட்டுத் தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் உபகரணங்கள் அனைத்தையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உதயன்
# தைப்பொங்கல் சிறப்பு மலர் 2011

15-01-2011



## பால் பொங்கியதா?



தைப்பொங்கல் அன்று பொங்கல் பொங்கியதா? பால் பொங்கியதா? என ஒருவருக்கொருவர் கேட்பது வழக்கம் ஆகும். பொங்கலில் பால் சேர்க்கப்படுகிறது. பாலைத் தவிர பாலில் இருந்து பெறப்படும் பொருள்களான தயிர், வெண்ணெய், நெய், மோர், யோகர்ட் எனப்படும் இனிப்புத் தயிர், பனீர், கோவா, சுவீட் லெஸ் கோவா, ஸ்ரீகண்ட், சீஸ் எனப்படும் பாலாடைக்கட்டி, ஐஸ்கிரீம் போன்றவற்றையும், வடமாநில மக்கள் அதிகம் பயன் படுத்துகின்றனர்.

பால் உற்பத்தியில் இந்தியா உலகிலேயே முன்னணியில் உள்ளது. ஆனால் உலகளவில் தனி மனிதனுக்குக் கிடைக் கக்கூடிய பாலின் அளவு 250 கிராம் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவில் தனி மனிதனுக்கு கிடைக்கக் கூடிய பாலின் அளவு ஒரு நாளைக்கு 178 கிராம் மட்டுமே ஆகும்.

## வெள்ளை அடிக்காதீர்...



வீடுகளுக்குத் தைப் பொங்கலை வரவேற்கும் வகையில், வெள்ளை அடிப்பர். டிஸ்டம்பரும், எமல்ஷனும் வந்து விட்ட பிறகு, மார்கழி மாத வெள்ளையடித்தல் சீசனில் மாற்றங்கள் வந்துவிட்டன. புதிய வீடு கட்டியவுடன் சுண்ணாம்போ, டிஸ்டம்பரோ, எமல்ஷனோ உடனடியாக அடிக்கக் கூடாது எனக் கட்டடக்கலை நிபுணர்கள் கூறுகின்றனர். அதுவரை மேற்புறத் தில் ஒயிட் சிமென்ட்டை அடிக்கப் பரிந்துரை செய்கின்றனர். ஏனெனில் வீடு கட்டும்போது, கியூரிங்க்காக பயன்படுத்திய நீரின் ஈரப்பதன் முழுவதும் கட்டடத்தின் உள்ளே உள்ளது. இது மெல்ல மெல்ல வெளியே வரும். ஈரப்பதம் வெளியேறும் போது அது அடிக்கப்பட்ட சுண்ணாம்பை உதிர்த்து விடும். வீடு கட்டியவுடன் ஒரு கோடைகாலம் முடிந்த பிறகே வெள்ளையடிக்க வேண்டும். ஓர் ஆண்டு இடைவெளி நல்லது என அவர்கள் கூறுகின்றனர்.

## புதிய கிரகம் கண்டுபிடிப்பு




விண்வெளியில் கிரகங்களை ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவில் நாசா விஞ்ஞானிகள் கெப்லர்-10 என்ற செயற்கை கோளை விண்ணில் செலுத்தியுள்ளனர்.அதில் பொருத்தப்பட்டுள்ள சக்திவாய்ந்த டெலஸ்கோப் விண் வெளியில் உள்ள கிரகங்களை போட்டோ எடுத்துப் பூமிக்கு அனுப்பி வருகிறது.

சமீபத்தில் கெப்லர்-10 செயற்கைக் கோள் ஒரு புதிய கிரகம் இருப்பதை கண்டுபிடித்து அனுப்பியுள்ளது. அது சூரிய குடும்பத்தை விட்டு வெளியே உள்ளது. பூமியை போன்று தோற்றம் கொண்டது. இது முழுவதும் பாறைகளால் ஆனது. அது நட்சத்திர கூட்டங்களை சுற்றிவருகிறது.


இந்த கிரகத்துக்கு கெப்லர்-10 என்று பெயரிடப் பட்டுள்ளது. இங்கு கடுமையான வெப்பம் நிலவுகிறது. அதாவது 1371 டிகிரி சென்டி கிரேடுக்கு மேல் வெப்பம் உள்ளது. எனவே இங்கு மனிதர்கள் வாழ முடியாது. எனவே தான் இது உயிரினங்கள் வாழத் தகுதியற்றது.

இந்தத் தகவலை நாசா விஞ்ஞானிகள் நாசா விண்வெளி நிறுவனத்தின் கெப்லர் திட்ட விஞ்ஞானி டக்ளஸ் ஹட்ஜின் தெரிவித்துள்ளார். மேலும் இந்த கிரகத்தில் கார்பன் உள்ளிட்ட இரசாயன பொருள்கள் இல்லை.

எனவே இங்கு ஆர்.என்.ஏ. மற்றும் டி.என்.ஏ. மூலக்கூறுகள் தோன்ற வாய்ப்பு இல்லை. ஆகவே பூமியை போன்று இங்கு உயிரினங்கள் வாழ முடியாது. என்று நாசாவின் மற்றொரு விஞ்ஞானி நடாலி படால்கா தெரிவித் துள்ளார்.




## மண்டையோட்டில் 8000 வைரக் கற்கள்



வித்தியாசமாகச் சாதனை படைக்க நினைப்பவர்கள் பலர். அந்த வகையைச் சேர்ந்தவர் இங்கிலாந்தை சேர்ந்த கலைப் படைப்பாளி டேமியன் ஹர்ஸ்ட் (45). வில்லங்கமாய் சிற்பங்கள் படைப்பதிலும் ஓவியங்கள் வரைவதிலும் வல்லவர். இறந்த மாடு, ஆடு, சுறா ஆகியவற்றை வைத்துப் பல சிற்பங்களைப் படைத் துள்ளார். இந்நிலையில், சமீபத்தில் இவர் படைத்திருக்கும் படைப்பு பெரும் சர்ச் சையை ஏற்படுத்தியிருக்கிறது.

மண்டையோட்டில் 8 ஆயிரம் வைரக் கற்களைப் பதித்திருப்பதுதான் அந்தப் படைப்பு. இது பிறந்து 2 வாரம் ஆவதற்குள் இறந்துபோன குழந்தையின் மண்டையோடு. வெள்ளை வைரம், பங்க் நிற வைரம் என 8 ஆயிரம் கற்களை இதில்தான் பதித்திருக்கிறார் டேமியன். ஃபார் ஹெவன்ஸ் சேக் என்று இந்தப் படைப்புக்குப் பெயர் வைத்திருக்கிறார். மண்டையோட்டில் வைரக்கல் பதிப்பது டேமியனுக்கு புதிதல்ல. 2007ல் பெரிய ஆள் மண்டையோட்டிலும் இவ்வாறு செய்தார்.

அது ரூ.450 கோடிக்கு ஏலம் போனது. அவரது பழைய படைப்புகளை வரவேற்றவர்கள் இப்போதும் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொருள்கள் சேகரித்தபோது இந்த ஓடும் கிடைத்தது. அதை அழகாக மாற்றியது டேமியனின் திறமை என்று பாராட்டுகிறது ஆதரவு வட்டாரம். ஆனால் இங்கிலாந்து மற்றும் சில நாடுகளில் இதற்குக் கடும் கண்டனம். குழந்தையின் மண்டையோடு எந்த கோணத்திற் பார்த்தாலும் அழகிய கலையாகத் தெரியாது. கொடூரமாகத்தான் தெரியும் என்கின்றனர் எதிர்ப்பாளர்கள். ஹொங்ஹொங்கில் விரைவில் இது காட்சிக்கு வைக்கப்படும்.

## இனி நீங்களும் புத்திசாலி



(சென்றவார தொடர்ச்சி)

சாதாரண பொழுதுபோக்கு நாவல்கள், ஜனரஞ்சக பத்திரிகைகள், மிகச் சாதாரண விடயங்களைப் பற் றி மேலோட்டமாக எழுதப்பட்ட புத்தகங்கள் போன்றவைகள் மூளையின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் துணை புரியாதவை. அவற்றைச் சிறிதுநேரம் பொழுது போக்காக வேண்டுமானால் படிக்கலாம்.

மாறாக, உங்களுக்குப் பிடித்த துறையிலிருந்து எழுதப்பட்டிருக்கும் ஆராய்ச்சிப் புத்தகங்களையோ, அல்லது வேறு துறைகளைச் சேர்ந்த பகுப்பாய்வு புத்தகங்களையோ படிக்கலாம். படிப்பதோடு இல்லாமல் ஏதாவது பத்திரிக்கைகளுக்குத் தரமுள்ள கட்டுரைகளும் எழுதி அனுப்பலாம். படித்த விடயங்களை யாரிடமாவது விவாதிக்கலாம்.

பொதுஅறிவுப் புத்தகங்களைப் படித்து விடயங்களை மனனம் செய்து பழகலாம். பள்ளி மாணவர்களுடன் அது சம்பந்தமான வினாடி-வினாப் போட்டியில் ஈடுபடலாம். ஆங்கில மொழியின் வார்த்தைகளையும் அதன் அர்த்தங்களையும் படித்து மனனம் செய்யலாம். இதுபோன்று பலவித பயன்மிகுந்த செயற்பாடுகளால் மூளையானது சுறுசுறுப்பாகவும், திறன்மிக்கதாகவும் மாறும்.

**தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்த்தல்**

பொதுவாக நம்மைச் சாந்தப்படுத்திக் கொள்ளத் தொலைக்காட்சி பார்ப்பதை ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளோம். அதை ஒரு பொழுதுபோக்காகவோ அல்லது வேறு காரணத்திற்காகவோ எடுத்துக் கொண்டாலும், தொலைக் காட்சி பார்ப்பதால் உங்களின் மூளைத்திறன் மேம்பாடு அடையாது. தொலைக்காட்சி [illegible] சக்தி பெரு[illegible] க்கப்படுகிறது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். தொலைக்காட்சி பார்ப்பதற்கு பதிலாக ஏதாவது முக்கிய பத்திரிக்கைகளைப் படிக் கலாம் அல்லது நல்ல நண்பர்களுடன் அமர்ந்து பயனுள்ள விவாதங்களில் ஈடுபடலாம்.

**ஒரு புதிய மொழியைக் கற்றல்**

மொழியைக் கற்கும் செயலானது மூளையின் திறனை அதிகரிப்பதிலும் அதை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதிலும் முக்கியபங்கு வகிக் கிறது. எனவே பயனுள்ள வகையில் ஒரு வெளிநாட்டு மொழியைத் தேர்வுசெய்து அதைக் கற்கத் தொடங்க வேண்டும். அதன் மூலம் நமக்கு இரட்டை நன்மை கிடைக்கிறது.

**மூளைக்கான பயிற்சி**

மூளைக்குப் பயிற்சி கொடுத்தலில் இரண்டு வகைகள் உள்ளன. அவை உடல்ரீதியிலான பயிற்சி மற்றும் பகுப்பாய்வு ரீதியிலான பயிற்சி. உடல் ரீதியிலான பயிற்சியில் யோகா உள்ளிட்ட சில உடற்பயிற்சிகள் [illegible] மூளைக்கு ஒட்சிசனும், [illegible]மும் மிகவும் முக்கியம். எந்தளவிற்கு இந்த இரண்டும் கிடைக் கிறதோ அந்தளவு மூளை சக்தி வாய்ந்ததாக மாறும். மேற்சொன்ன பயிற்சிகள் இந்த இரண்டையும் அதிகளவில் மூளைக்குத் தருகின்றன. எனவே முறையான நபர்களின் ஆலோசனைகளைப் பெற்று அந்தப் பயிற்சிகளைச் செய்யத் தொடங்கவும். பகுப்பாய்வு ரீதியான பயிற்சிப் படம் வரைதல், வண்ண வேலைபாடுகளில் ஈடுபடுதல், எண் விளையாட்டுக்களில் ஈடுபடுதல், தோட்ட ம் வளர்த்தல், கைவினைப் பொருள் தயாரிப்பில் ஈடுபடுதல், நுணுக்கமான வேளைகளில் பங்கெடுத்தல் போன்று பலவகைப்படும். இவற்றில் நமக்குப் பிடித்தமானவற்றிலோ அல்லது வாய்ப் பிருந்தால் அனைத்திலுமோ ஈடுபடலாம். மேற்கூறிய பயிற்சிகளையும் வழிமுறைகளையும் தொடர்ந்து பின்பற்றும்போது நமது மூளை புதிய சக்திபெற்று, நாம் புத்தி சாலி என்ற பெயரை வாங்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தைத் திருமகளே நீ என்றும் வருக...

கணினி வடிவமைப்புக்கள் ஓ(F) செட் அன் ஸ்கிறீன் பதிப்புக்கள் மற்றும் பொலிமர் இறப்பர் முத்திரைகளையும் நீங்கள் விரும்பியவாறு வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள



**ஷாம்பவி பதிப்பகம்**

No.276, Kasthuriar Road, Kannathiddy, Jaffna.

Branch: Karanthan Road, Neervely.

Tel: 0212224143 Mobile: 077 6184425.

E-mail: shampavi2009@gmail.com

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

சகலவிதமான நுட்ப வேலைகளுக்கும் சிறந்த இடம்

**தர்சினி**

மரத்தளபாட இயந்திரத் தொழிற்சாலை



காளிகோயிலடி சங்கானை. உரிமையாளர் வ.திருநாவுக்கரசு.

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

**ரஞ்சன்ஸ் ஹாட்வெயர்ஸ்**

**RANJAN'S HARDWARE STORES**

மருதடி விநாயகர் கோயிலடி, யாழ்ப்பாண றோட், மானிப்பாய்.



அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



**அம்பாள்**



Nal/ DS/ 842 மரக்காலை

இல.261, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்பாள் கோயிலடி,நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 4921012, 0777111147.

அனைவருக்கும் தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**வஜிதா**





மோட்டார் சைக்கிள் திருத்தகமும் சேவிஸ் சென்ரரும்

300/1, நாவலர் வீதி, ரயில்வேச் சந்தி, யாழ்ப்பாணம். உரிமையாளர் M.வசந்தன்

தொ.இல. 0778097741, 0215672218.

300/1,Navalar Road, Railway Junction, Jaffna.

அனைவருக்கும் தைப் பொங்கல் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

இன்றைய நவநாகரிக பாதணிகளின் தரமான தெரிவுகளுக்குத் தனிச்சிறப்புப் பெற்ற ஒரே ஸ்தாபனம்



**நாதன்ஸ் சூ பலஸ்**

இல.17, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சப்பாத்துக்கள், உடுப்புவகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட

**அபிராமி மல்ரி சென்ரர்**

இல.127/3, யுப்ளி பசார், மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே: 021 2222858, 0776615973.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

தரமான 22கரட் தங்க நகைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம்



**S.N.கிருஷ்ணா ஜுவல்ஸ்**

அன் நகைத் தொழிலகம்



தொ.பே: 021 222 1112, 0776082228.

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு

**கிருபா லேணர்ஸ்**

Reg No: D9/589 அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப்பாடசாலை

ஆண், பெண் இருபாலருக்கும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் மும்மொழிகளிலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தலைமைக்காரியாலயம்: 22G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2224353, 0777225292, 0715364822.

கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி. தொ.பே: 0213006550, 0718799190.

கிளை: ஐயனார் வீதி, கச்சேரி அருகில், கிளிநொச்சி. தொ.பே: 0212285505, 0777238600.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

தங்கப்பவுண் வியாபாரத்தில் உங்கள் இளமைக்கு மேலும் மேலும் மெருகூட்டும் கண்கவர் 22 கரட் நகைகளைப் பெற்றிடச் சிறந்த ஸ்தாபனம்

**உதயா ஜுவல்லர்ஸ்**

**Uthayaa Jewellerss**



81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**TRACTOR SPARES**

*Importers and Dealers in Tractor Spare Parts, Specialist in Massy. Ferguson Engineers & Tipping Course Pressure Pipe fitting.*

7, Kannathiddy Road, Jaffna. T.P: 021 2225055



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org